100/2002

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

மார்ச் 30, 2000

(தொகுதி 92 எண் 1)

©

V211, 1 P00
P0 .92.1
2726

வெளியீடு 9-11-2000 | Issued 9-11-2000

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

வியாழக்கிழமை, மார்ச் 30, 2000 – தொகுதி 92 – எண் 1

**Thursday the 30th March, 2000 – Volume 92 – No. 1**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009*

**Legislative Assembly Secretariat, Fort St. George, Chennai-600 009**

விலை ரூ. *3.00*] | **[Price Rs. 3.00**

100
2002

30-3-2000

## உள்ளடக்கம்


*பக்கங்கள்*

தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும் — v-viii

Personnel of the Government of Tamil Nadu — ix-xiii

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் பட்டியல் — xv-xvi

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி) — xvii-xxvii

*1. வினாக்கள்-விடைகள்—*

உடுக்குறியிட்ட வினாக்கள் — 1-41

*2. சிறப்புக் கவன ஈர்ப்பு—*

கோவை மதுக்கரை அருகே வழுக்குப்பாறை கிராம விவசாயத் தொழிலாளி மனைவி மரணம் — 41-51

திரு. சி. ஞானசேகரன் — 41-43

திரு. கே. சுப்பராயன் — 44-45

திரு. டி. மணி — 46

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி — 47-51

*3. தகவல் கோரல்—*

(அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள் — 51-53

(ஆ) பேரவை புறவாரத்தில் உளவுத் துறையினர் அமர்தல் — 53-54

| | பக்கங்கள் |
|---|---|
| 4. அறிக்கைகள் அளித்தல்— | |
| பொதுக் கணக்குக் குழு | 54 |
| 5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)— | |
| (அ) தமிழ்நாடு நிதி ஒதுக்க (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு, 2000 | 54-56 |
| (ஆ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, 2000 | 56-58 |
| (இ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000 | 138-140 |
| மாண்புமிகு திரு. ஆலடி அருணா | 138,139,140 |
| (ஈ) தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000 | 140-145 |
| மாண்புமிகு திரு. கோ.சி. மணி | 140,144 |
| திரு. ஜே. ஹேமச்சந்திரன் | 140-141 |
| திரு. சோ. பாலகிருஷ்ணன் | 142 |
| மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி | 142-143 |
| திரு. கே. சுப்பராயன் | 143 |
| 6. வரவு-செலவுத் திட்டம், 2000-2001, பொது விவாதம்—தொடர்ச்சி | |
| டாக்டர் தே. குமாரதாஸ் | 58-72 |
| *திரு. கே. சுந்தர் | 74-80 |
| *திரு. லா. சந்தானம் | 80-88 |
| *திரு. என்.எஸ். ராஜ்குமார் மன்றாடியார் | 88-93 |





| | பக்கங்கள் |
|---|---|
| 6. வரவு-செலவுத் திட்டம், 2000-2001, பொது விவாதம்—தொடர்ச்சி | 94-101 |
| டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் | 101-105 |
| திரு. வி. அய்யலுசாமி | 106-111 |
| *திரு. ம. சண்முகம் | 111-119 |
| டாக்டர் அ. மணி | 119-125 |
| *திரு. சி. அன்பரசன் | 125-132 |
| *திரு. இரா. பெர்னார்டு | 132-138 |
| *திரு. க. மணிவர்மா | 145-146 |
| 7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்— | |

## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

### ஆளுநர்—நீதிபதி செல்வி மீ. பாத்திமா பீவி

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

| | |
|---|---|
| 1. **முதலமைச்சர்** | : **மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, மாவட்ட வருவாய் அதிகாரிகள், உள் துறை, நிதி, திட்டம், தொழில்கள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, சிறுபான்மையினர் நலன், கடவுச் சீட்டு, வணிக வரிகள் மற்றும் சுற்றுச்சூழல் மாசுக் கட்டுப்பாடு. |
| 2. **கல்வி அமைச்சர்** | : **மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** தொழிற்கல்வி உள்ளிட்ட கல்வி, சட்டமன்றம், தேர்தல்கள், மின்னணுவியல், அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் மற்றும் முன்னாள் இராணுவத்தினர். |
| 3. **மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்** | : **மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலம் மற்றும் மின்சாரம். |
| 4. **வருவாய்த் துறை அமைச்சர்** | : **மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:** வருவாய், வருவாய் வாரியம், மாவட்ட வருவாய் நிருவாகம் மற்றும் மாவட்டத் துணை ஆட்சியாளர்கள். |
| 5. **ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்** | : **மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** நகராட்சி நிருவாகம், சமுதாய வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் ஊரகக் கடன்கள், நகர்ப்பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல். |

6. **வேளாண்மைத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:**
வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக் கலை, கரும்புத் தீர்வை மற்றும் கரும்புப் பயிர் மேம்பாடு.

7. **பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. துரைமுருகன்:**
பொதுப் பணிகள், சிறு பாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டம், செயற் திட்டப் பணிகள், வனம் மற்றும் சின்கோனா.

8. **போக்குவரத்துத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:**
போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம் மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்.

9. **நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:**
நெடுஞ்சாலைகள் மற்றும் துறைமுகங்கள்.

10. **தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:**
தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை.

11. **உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. கா.நா. நேரு:**
உணவு, விலைக் கட்டுப்பாடு மற்றும் குடிமைப் பொருட்கள் வழங்கல், பொது விநியோக முறை, கூட்டுறவு மற்றும் புள்ளிவிவரங்கள்.

12. **பால்வளத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. க. சுந்தரம்:**
பால், பால்பண்ணை வளர்ச்சி, குடிசை மாற்றுத் திட்டம் மற்றும் இடவசதிக் கட்டுப்பாடு.



13. **தொழிலாளர் நலத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:**
தொழிலாளர் நலன், மக்கள் தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, இரும்பு மற்றும் எஃகுக் கட்டுப்பாடு, பத்திரிகை அச்சுக் காகிதக் கட்டுப்பாடு மற்றும் இசுலாமிய அறக்கட்டளை (வக்ஃப்).

14. **சட்டத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. ஆலடி அருணா:**
சட்டம், நீதிமன்றங்கள், சிறைச் சாலைகள், எடைகள் மற்றும் அளவைகள் குறித்த சட்டம், கம்பெனிகள் பதிவு, கடன், வழங்கல் பற்றிய சட்டமியற்றல் உள்பட கடன் நிவாரணம் மற்றும் சீட்டு நிதி பற்றிய சட்டம் இயற்றுதல்.

15. **கைத்தறித் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி :**
கைத்தறி, துணித் தொழில்.

16. **பிற்படுத்தப் பட்டோர் நலத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:**
பிற்படுத்தப்பட்டோர் நலன், மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலன் மற்றும் சீர் மரபினர் நலன், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டோர்.

17. **விளையாட்டு மற்றும் இளைஞர் பணிப் படைத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:**
விளையாட்டு மற்றும் இளைஞர் பணிப்படை.

18. **வீட்டு வசதித் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி:**
வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி, நகர அமைப்புத் திட்டமிடல் மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சி.

| | |
|---|---|
| 19. ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் | : **மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** *கிராமக் குடிசைத் தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள், பதிவுத் துறை, முத்திரைத் தாள் சட்டம் மற்றும் சத்துணவு.* |
| 20. செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் | : **மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்:** *செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல் மற்றும் திரைப்படச் சட்டம், எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை மற்றும் அரசு அச்சகம்.* |
| 21. கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் | : **மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** *கால்நடை பராமரிப்பு.* |
| 22. சமூக நலத் துறை அமைச்சர் | : **மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குண பாண்டியன்:** *மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உட்பட சமூக நலன், இரவலர் காப்பு இல்லம், அனாதை இல்லங்கள், குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டம்.* |
| 23. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் | : **மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:** *ஆதிதிராவிடர் நலன், மலைவாழ் பழங் குடியினர் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர்.* |
| 24. சுற்றுலாத் துறை அமைச்சர் | : **மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன்:** *சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்.* |
| 25. கதர்த் துறை அமைச்சர் | : **மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு:** *கதர் வாரியம், பூமிதானம் மற்றும் கிராமதானம்.* |
| 26. மீன் வளத் துறை அமைச்சர் | : **மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்:** *மீன் வளம் மற்றும் மீன் வளர்ச்சிக் கழகம்.* |



## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

## GOVERNOR—Justice Selvi M. FATHIMA BEEVI

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

| | |
|---|---|
| 1. **Chief Minister** | .. **The Hon. Kalaignar M. Karunanidhi:** Public, General Administration, Indian Administrative Service, District Revenue Officers, Home, Finance, Planning, Industries, Prohibition and Excise, Minorities Welfare, Passports, Commercial Taxes and Environmental Pollution Control. |
| 2. **Minister for Education** | .. **The Hon. Prof. K. Anbazhagan:** Education including Technical Education, Legislature, Elections, Electronics, Science and Technology and Ex-servicemen. |
| 3. **Minister for Health and Electricity** | .. **The Hon. Thiru Arcot N. Veerasamy:** Health, Medical Education and Family Welfare and Electricity. |
| 4. **Minister for Revenue** | .. **The Hon. Thiru Nanjil K. Manoharan:** Revenue, Board of Revenue, District Revenue Establishment and Deputy Collectors. |
| 5. **Minister for Rural Development and Local Administration** | .. **The Hon. Thiru Ko.Si. Mani:** Municipal Administration, Community Development, Panchayats, Panchayat Unions and Rural Indebtedness and Urban and Rural Water Supply. |

| | | |
|---|---|---|
| 6. | **Minister for Agriculture** | .. **The Hon. Thiru Veerapandi S. Arumugam:** Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess and Sugarcane Development. |
| 7. | **Minister for Public Works and Forest** | .. **The Hon. Thiru Duraimurugan:** Public Works, Irrigation including Minor Irrigation, Programme Works, Forest and Cinchona. |
| 8. | **Minister for Transport** | .. **The Hon. Dr. K. Ponmudi:** Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Chennai Metropolitan Development Authority. |
| 9. | **Minister for Highways** | .. **The Hon. Thiru Pasumpon Tha. Kiruttinan:** Highways and Ports. |
| 10. | **Minister for Tamil Official Language, Tamil Culture and Hindu Religious and Charitable Endowments.** | .. **The Hon. Dr. M. Thamizhkudimagan:** Tamil Official Language, Tamil Culture and Hindu Religious and Charitable Endowments. |
| 11. | **Minister for Food, Public Distribution System and Co-operation** | .. **The Hon. Thiru K.N. Nehru:** Food, Price Control and Civil Supplies, Public Distribution System, Co-operation and Statistics. |
| 12. | **Minister for Milk** | .. **The Hon. Thiru K. Sundaram:** Milk and Dairy Developement, Slum Clearance and Accommodation Control. |



| | | |
|---|---|---|
| 13. | **Minister for Labour** | .. **The Hon. Thiru A. Rahman Khan:** Labour, Census, Employment and Training, Iron and Steel Control, Newsprint Control and Wakf. |
| 14. | **Minister for Law** | .. **The Hon. Thiru Aladi Aruna:** Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money Lending and Legislation on Chits. |
| 15. | **Minister for Handlooms** | .. **The Hon. Thiru N.K.K. Periasamy:** Handlooms, Textiles. |
| 16. | **Minister for Backward Classes** | .. **The Hon. Thiru M.R.K. Panneerselvam:** Backward Classes, Most Backward Classes and Denotified Communities, Indian Overseas, Refugees and Evacuees. |
| 17. | **Minister for Sports and Youth Service Corps** | .. **The Hon. Thiru Pongalur N. Palanisamy:** Sports and Youth Service Corps. |
| 18. | **Minister for Housing** | .. **The Hon. Thiru K. Pitchandi:** Housing, Rural Housing Development, Town Planning and Urban Development. |
| 19. | **Minister for Rural Industries and Registration** | .. **The Hon. Thiru I. Periasamy:** Rural Industries including Village and Cottage Industries, Registration and Stamp Act and Nutritious Meals. |
| 20. | **Minister for Information, Publicity and and Printing** | .. **The Hon. Thiru V. Mullaivendan:** Information and Publicity, Film Technology and Cinematography Act, Stationery and Printing and Government Press. |

21. **Minister for Animal Husbandry** .. **The Hon. Pulavar P.M. Senguttuvan:**
Animal Husbandry.

22. **Minister for Social Welfare** .. **The Hon. Tmt. S.P. Sarkunapandian:**
Social Welfare including Women's and Children's Welfare, Beggars Home, Orphanages and Correctional Administration and Integrated Child Development Services Scheme.

23. **Minister for Adi-Dravidar and Tribal Welfare** .. **The Hon. Thiru Samayanallur S. Selvarasu:**
Adi-Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour.

24. **Minister for Tourism** .. **The Hon. Thiru N. Suresh Rajan:**
Tourism and Tourism Development Corporation.

25. **Minister for Khadi** .. **The Hon. Thiru Andhiyur P. Selvarasu:**
Khadi Board, Bhoodan and Gramdan.

26. **Minister for Fisheries** .. **The Hon. Tmt. S. Jenefer Chandran:**
Fisheries and Fisheries Development Corporation.



# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

*பேரவைத் தலைவர்*

**மாண்புமிகு திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்**

*பேரவைத் துணைத் தலைவர்*

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி**

*மாற்றுத் தலைவர்கள் பட்டியல்*

1. **திரு. அ.லெ. சுப்பிரமணியன்**
2. **திரு. சி.டி. தண்டபாணி**
3. **திரு. குத்தாலம் பி. கல்யாணம்**
4. **டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்**
5. **திரு. நா. பெரியசாமி**

*செயலாளர்*

**திரு. வெ. இராசாராமன்**

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் பட்டியல்

| | | |
|---|---|---|
| 1. | திருமதி பானுமதி ஆனந்தராஜன், பி.எஸ்.சி., பி.ஜி.எல். | .. கூடுதல் செயலாளர் |
| 2. | திரு. செ.ஏ. துரைபாண்டியன், பி.ஏ., பி.எல். | .. இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 3. | திரு. இரா. வெங்கடேசன், எம்.ஏ., எல்.எல்.பி. | .. இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 4. | திரு. கி. சாயிநாதன், பி.ஏ., பி.ஜி.எல். | .. இணைச் செயலாளர் |
| 5. | திருமதி பவானி சுப்பையா, பி.ஏ., பி.ஜி.எல். | .. இணைச் செயலாளர் |
| 6. | திருமதி வீ.நா. உமா, பி.ஏ. | .. குழு அலுவலர் |
| 7. | திரு. சா. கணேசன், பி.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| 8. | திரு. தி. திருமாவளவன், பி.எஸ்சி., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| 9. | திரு. வெ. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.எல். | .. பேரவைத் தலைவரின் சிறப்புத் தனிச் செயலர் |
| 10. | திரு. மு. ஆறுமுகப்பெருமாள், எம்.ஏ., பி.லிட். | .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 11. | திரு. சு. ராஜகுரு | .. குழு அலுவலர் |
| 12. | திரு. சௌரி அய்யாத்துரை | .. பேரவைத் தலைவரின் சிறப்பு நேர்முக உதவியாளர் |
| 13. | திரு. க. சம்பத்ராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| 14. | திரு. கோ. ஸ்ரீராமன், பி.காம். | .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 15. | திரு. எம். ஜோபாய், பி.காம்., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| 16. | திரு. இரா. முருகானந்தம், பி.எஸ்சி., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| 17. | திரு. இல. மாரியப்பன், பி.ஏ. | .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 18. | திரு. கோ. ஞானப்பிரகாசம், எம்.ஏ., பி.எல். | .. துணைச் செயலாளர் |

19. திரு. ஜி. அனீஸ் அகமத், எம்.ஏ., பி.ஜி.எல். .. துணைச் செயலாளர்
20. திரு. மா. செல்வராஜ், பி.எஸ்சி., பி.எல். .. துணைச் செயலாளர்
21. திரு. வெ.கி. சுப்பிரமணியன், எம்.ஏ., பி.எல். .. சார்புச் செயலாளர்
22. திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். .. சார்புச் செயலாளர்
23. திருமதி என். துளசிபாய், பி.ஏ. .. சார்புச் செயலாளர்
24. திரு. கோ. ரவீந்திரன், எம்.ஏ., பி.ஜி.எல். .. சார்புச் செயலாளர்
25. திரு. ஊ.கு. சுப்பிரமணியன், எம்.ஏ. .. சார்புச் செயலாளர்
26. திரு. டி. கோவிந்தராஜு, எம்.ஏ., பி.எல். .. சார்புச் செயலாளர்
27. திரு. ஏ.எம்.பி. ஜமாலுதீன் எம்.எஸ்.சி., பி.எல். .. சார்புச் செயலாளர்
28. திரு. ம. பிலிப், எம்.ஏ., பி.ஜி.எல். .. தலைமை நிருபர்
29. திருமதி சீ. கனகவல்லி, டி.சி.பி. .. தலைமை நிருபர்
30. திரு. வெ. வெங்கடேசன், எம்.ஏ. .. தலைமை நிருபர்
31. திரு. ச. பாலகிருஷ்ணன் பி.எஸ்.சி., பி.எல். .. சார்புச் செயலாளர்
32. திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். .. சார்புச் செயலாளர்
33. திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். .. சார்புச் செயலாளர்
34. திரு. நா. நடராஜன், பி.ஏ. பி.ஜி.எல். .. தலைமை நிருபர்
35. திருமதி என். மீனாட்சி, எம்.ஏ., பி.ஜி.எல். .. சார்புச் செயலாளர்
36. திரு. மு. பொன்னுரங்கம், எம்.ஏ., பி.எல். .. தலைமை நிருபர்
37. திரு. தி. உமாபதி, பி.ஏ. .. தலைமை நிருபர்
38. திருமதி ப. சரஸ்வதி, எம்.ஏ., பி.ஜி.எல். .. சார்புச் செயலாளர்
39. திரு. கோ. தேவராஜன், பி.ஏ. .. சார்புச் செயலாளர்
40. திருமதி இரா. கஸ்தூரி, பி.ஏ., பி.ஜி.எல். .. சார்புச் செயலாளர்



## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி)

## பெயர்களும் தொகுதிகளும்

1. அசோகன், திரு. அ. .. திருவாரூர் (செ.வ.)
2. அந்தியூர் ப. செல்வராசு, திரு. .. அந்தியூர் (செ.வ.)
3. அபுல்ஹசன், திரு. எம்.எம்.எஸ். .. மயிலாடுதுறை
4. அப்துல் லத்தீப், திரு. ம. .. வாணியம்பாடி
5. அப்பாவு, திரு. மு. .. ராதாபுரம்
6. அமரமூர்த்தி, திரு. டி. .. அரியலூர்
7. அய்யலுசாமி, திரு. வி. .. கோவில்பட்டி
8. அருண்குமார், திரு. பா. .. மேட்டுப்பாளையம்
9. அழகராஜா, திரு. என்.ஆர். .. தேனி
10. அழகிரி. திரு. ச. .. சிதம்பரம்
11. அழகுவேலு, திரு. ச. .. கண்டமங்கலம் (செ.வ.)
12. அன்பரசன் திரு. சி. .. அறந்தாங்கி
13. அன்பழகன், திரு. வ. .. செய்யார்
14. அன்பழகன், பேராசிரியர் க. .. துறைமுகம்
15. அன்பில் பெரியசாமி, திரு. .. திருச்சிராப்பள்ளி-2
16. ஆசையன், திரு. பெ. .. ஆண்டிப்பட்டி
17. ஆண்டமுத்து, திரு. வெ.அ. .. பவானிசாகர்
18. ஆருண் ரஷீத், திரு. ஜே.எம். .. வில்லிவாக்கம்
19. ஆலடி அருணா, திரு. .. ஆலங்குளம்

| | | | |
|---|---|---|---|
| 20. | ஆவுடையப்பன், திரு. இரா. | .. | அம்பாசமுத்திரம் |
| 21. | ஆறுமுகம், திரு. தி.ப. | .. | திருச்செங்கோடு |
| 22. | ஆற்காடு நா. வீராசாமி, திரு. | .. | அண்ணா நகர் |
| 23. | ஆனந்தன், திரு. பால. | .. | வந்தவாசி (செ.வ.) |
| 24. | இரகுமான்கான், திரு. அ. | .. | இராமநாதபுரம் |
| 25. | இராசமாணிக்கம், திரு. க.வெ.வீ. | .. | மேலூர் |
| 26. | இராசமாணிக்கம், திரு. பி. | .. | ஒரத்தநாடு |
| 27. | இராசன், திரு. வி.பி. | .. | ராஜபாளையம் (செ.வ.) |
| 28. | இராசேந்திரன் என்கிற தீரன், திரு. ஆ | .. | ஆண்டிமடம் |
| 29. | இராமசாமி, டாக்டர் வை. | .. | பண்ருட்டி |
| 30. | இராமசாமி, திரு. கே.ஆர். | .. | திருவாடனை |
| 31. | இராமச்சந்திரன், திரு. ஓ.ஆர். | .. | கம்பம் |
| 32. | இராமச்சந்திரன், திரு. சி.இரா. | .. | தொண்டாமுத்தூர் |
| 33. | இராமச்சந்திரன், திரு. மா. | .. | திருவோணம் |
| 34. | இராமலிங்கம், திரு. ஏ. | .. | காட்டுமன்னார்கோவில் (செ.வ.) |
| 35. | இராமலிங்கம், திரு. செ. | .. | திருவிடைமருதூர் |
| 36. | இராமன், டாக்டர் இ.எஸ்.எஸ். | .. | பள்ளிப்பட்டு |
| 37. | இராமஜெயம், திரு. ந.பூ. | .. | மயிலாப்பூர் |
| 38. | இராஜ ரெட்டி, திரு. ச. | .. | தளி |
| 39. | இராஜேந்தர், திரு. டி. | .. | பூங்கா நகர் |
| 40. | இளங்கோ, திரு. கோ. | .. | அவினாசி (செ.வ.) |



| | | | |
|---|---|---|---|
| 41. | ஈஸ்வரன், திரு. ரா. | .. | வாசுதேவநல்லூர் (செ.வ.) |
| 42. | உதயசூரியன், திரு. தா. | .. | சங்கராபுரம் |
| 43. | உபயதுல்லா, திரு. எஸ்.என்.எம். | .. | தஞ்சாவூர் |
| 44. | கணேசன், திரு. ஐ. | .. | எடப்பாடி |
| 45. | கணேசன், திரு. கே.சி. | .. | ஜெயங்கொண்டம் |
| 46. | கருணாநிதி, கலைஞர் மு. | .. | சேப்பாக்கம் |
| 47. | கருப்பசாமி, திரு. சொ. | .. | சங்கரநயினார்கோவில் (செ.வ.) |
| 48. | கருப்பண்ண உடையார், திரு. ந. | .. | பாபநாசம் |
| 49. | கருப்புசாமி, திரு. டி. | .. | உப்பிலியாபுரம் (ஆவா.) |
| 50. | கன்னையன், திரு. க. | .. | தொட்டியம் |
| 51. | காஞ்சனா கமலநாதன், டாக்டர் | .. | கிருஷ்ணகிரி |
| 52. | காந்தி, திரு. ஆர். | .. | இராணிப்பேட்டை |
| 53. | கிருஷ்ணசாமி, டாக்டர் க. | .. | ஒட்டப்பிடாரம் (செ.வ.) |
| 54. | கிருஷ்ணன், திரு. எஸ்.வி. | .. | நாங்குநேரி |
| 55. | கிருஷ்ணன், திரு. சீ.வெ. | .. | வேடசந்தூர் |
| 56. | குண்டன், திரு. டி. | .. | உதகமண்டலம் |
| 57. | குத்தாலம் பி. கல்யாணம், திரு. | .. | குத்தாலம் |
| 58. | குமாரதாஸ், டாக்டர் தே. | .. | கிள்ளியூர் |
| 59. | கும்மிடிப்பூண்டி கி. வேணு, திரு. | .. | கும்மிடிப்பூண்டி |
| 60. | குழந்தை தமிழரசன், திரு. | .. | விருத்தாசலம் |
| 61. | கோதண்டம், திரு. ஏ. | .. | ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.) |
| 62. | கோபால், திரு. பா. | .. | மேட்டூர் |

63. கோபு, திரு. சி. .. அணைக்கட்டு
64. கோமதி சீனிவாசன், திருமதி .. வலங்கைமான் (செ.வ.)
65. கோவிந்தன், திரு. ப. .. தாரமங்கலம்
66. கோவிந்தன், திரு. வெ. .. பேரணாம்பட்டு (செ.வ.)
67. சக்ரபாணி, திரு. ஆர். .. ஒட்டன்சத்திரம்
68. சண்முகம், திரு. கோ. .. திருப்பத்தூர்
69. சண்முகம், திரு. சி. .. ஆலந்தூர்
70. சண்முகம், திரு. ம. .. கிணத்துக்கடவு
71. சண்முகம், திரு. வி.சி. .. நெல்லிக்குப்பம்
72. சந்தானம், திரு. லா. .. சோழவந்தான்
73. சந்திரசேகரன், திரு. சி. .. சேந்தமங்கலம் (ஆவா.)
74. சந்திரசேகரன், திரு. துரை. .. திருவையாறு
75. சமயநல்லூர் எஸ். செல்வராசு, திரு. .. சமயநல்லூர் (செ.வ.)
76. சம்பத், திரு. ஏ.ஜி. .. முகையூர்
77. சரஸ்வதி, திருமதி ஆர். .. தாராபுரம் (செ.வ.)
78. சற்குணபாண்டியன், திருமதி எஸ்.பி. .. டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்
79 சாமிநாதன், திரு. மு.பெ. .. வெள்ளக்கோவில்
80 சிங்காரவேலு, திரு. வி.பி. .. வால்பாறை (செ.வ.)
81. சிவபுண்ணியம், திரு. வை. .. மன்னார்குடி
82. சிவராமன், திரு. ஆர். .. திருப்பத்தூர்
83. சிவராஜ், திரு. சு. .. ரிஷிவந்தியம்
84. சிவலிங்கம், திரு. எஸ்.ஆர். .. பனமரத்துப்பட்டி



85. சிவானந்தம், திரு. ஆர். .. ஆரணி
86. சிவாஜி, திரு. இ.ஏ.பி. .. திருத்தணி
87. சின்னய்யா, திரு. வெ. .. திருமயம்
88. சீனிவாசன், திரு. ஏ.ஆர்.ஆர். .. விருதுநகர்
89. சுகவனம், திரு. இ.ஜி. .. பர்கூர்
90. சுடலைமுத்து, திரு. அ. .. போடிநாயக்கனூர்
91. சுதர்சனம், திரு. டி. .. பூந்தமல்லி
92. சுந்தரம், திரு. க. .. பொன்னேரி (செ.வ.)
93. சுந்தரம், திரு. ந. .. காரைக்குடி
94. சுந்தரம், திரு. பி.ஆர். .. ராசிபுரம்
95. சுந்தர், திரு. கே. .. உத்திரமேரூர்
96. சுப்பராயன், திரு. கே. .. திருப்பூர்
97. சுப்பிரமணி என்கிற சி.சு. மணி, திரு. சி. .. திருவள்ளூர்
98. சுப்பிரமணி, திரு .பி.என். .. ஆற்காடு
99. சுப்பிரமணியன், திரு. அ.லெ. .. திருநெல்வேலி
100. சுப்புலட்சுமி செகதீசன், திருமதி .. மொடக்குறிச்சி
101. சுரேஷ் ராசன், திரு. என். .. கன்னியாகுமரி
102. செங்குட்டுவன், புலவர் பூ.ம. .. மருங்காபுரி
103. செங்கை சிவம், திரு. .. பெரம்பூர் (செ.வ.)
104. செல்லக்குமார், டாக்டர் அ. .. தியாகராய நகர்
105. செல்வம், திரு. ரெ. .. குளித்தலை
106. செல்வராஜ் என்கிற கவிதைப்பித்தன், திரு. .. கொளத்தூர் (செ.வ.)

107. செல்வராஜ், திரு. து. .. உடுமலைப்பேட்டை
108. சேகரன், திரு. ஆர்.ஆர். .. ஓமலூர்
109. சேதுநாதன், திரு. ரா. .. திண்டிவனம்
110. சைதை கா. கிட்டு, திரு. .. சைதாப்பேட்டை
111. சொக்கர், திரு. ஆர். .. சிவகாசி
112. சொக்கலிங்கம், திரு. ஜி. .. திருப்போரூர் (செ.வ.)
113. ஞானசேகரன், டாக்டர் ஆ .. மேல்மலையனூர்
114. ஞானசேகரன், திரு. சி. .. வேலூர்
115. டேவிட் செல்வின், திரு. எஸ். .. ஸ்ரீவைகுண்டம்
116. தங்கமணி, திரு. கே. .. மானாமதுரை (செ.வ.)
117. தங்கம் தென்னரசு, திரு. .. அருப்புக்கோட்டை
118. தங்கவேலன், திரு. சுப. .. கடலாடி
119. தங்கவேல், திரு. அ.ல. .. சேலம்-2
120. தண்டபாணி, திரு. சி.டி. .. கோயம்புத்தூர் மேற்கு
121. தமிழ்க்குடிமகன், முனைவர் மு. .. இளையான்குடி
122. தமிழ்ச்செல்வன், திரு. ஆர். .. அரக்கோணம் (செ.வ.)
123. தமிழ்மணி, திரு. வீ. .. செங்கல்பட்டு
124. தளபதி, திரு. கோ. .. சேடப்பட்டி
125. தனபாலன், திரு. கே.ஆர்.ஜி. .. சேலம்-1
126. தனபால், திரு. வி.ஜி. .. குடியாத்தம்
127. தாமரைக்கனி, திரு. இரா. .. ஸ்ரீவில்லிபுத்தூர்
128. திசைவீரன், திரு. உ. .. பரமக்குடி (செ.வ.)
129. திருஞானசம்பந்தம், திரு. எஸ்.வி. .. பேராவூரணி



130. திருவேங்கடம், திரு. பெ.சு. .. கலசப்பாக்கம்
131. துரைசாமி, திரு. பா. .. வரகூர் (செ.வ.)
132. துரை. திரு. கே. .. திருவெறும்பூர்
133. துரைமுருகன், திரு. .. காட்பாடி
134. தெய்வநாயகம், திரு. எ. .. மதுரை மத்தி
135. தேவராஜன், டாக்டர் மு. .. பெரம்பலூர் (செ.வ.)
136. நடராசன், திரு. ஆ .. பேரூர்
137. நடராஜன், திரு. த. .. செஞ்சி
138. நயினா முகமது, திரு. கோ. .. கடையநல்லூர்
139. நன்னன், திரு. கொ.வீ. .. செங்கம் (செ.வ.)
140. நாகரத்தினம், திரு. ச. .. கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
141. நாசர், திரு. ஏ.வி.ஏ. .. புவனகிரி
142. நாஞ்சில் கி. மனோகரன், திரு. .. திருவல்லிக்கேணி
143. நிஜாமுதீன், திரு. ஜி. .. நாகப்பட்டினம்
144. நேரு, திரு. கா.நா. .. லால்குடி
145. பசும்பொன் தா. கிருட்டிணன், திரு. .. சிவகங்கை
146. பத்மா, டாக்டர் .. நன்னிலம் (செ.வ.)
147. பரணிகுமார், திரு. பா. .. திருச்சிராப்பள்ளி-1
148. பரிதி இளம்வழுதி, திரு. .. எழும்பூர் (செ.வ.)
149. பழனிசாமி, திரு. ஜி. .. திருத்துறைப்பூண்டி (செ.வ.)
150. பழனிவேல் ராஜன், திரு. பி.டி.ஆர். .. மதுரை மேற்கு
151. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. .. குறிஞ்சிப்பாடி
152. பன்னீர்செல்வம், திரு. மு. .. சீர்காழி (செ.வ.)

153. பாண்டுரங்கன், திரு. ந. .. பெரணமல்லூர்
154. பாலகிருஷ்ணன், திரு. சோ. .. முதுகுளத்தூர்
155. பாலசுப்பிரமணியன், திரு. எஸ்.என். .. பவானி
156. பாலசுப்பிரமணியன், திரு. ப. .. பட்டுக்கோட்டை
157. பிச்சாண்டி, திரு. கு. .. திருவண்ணாமலை
158. புகேழந்தி, திரு. இ. .. கடலூர்
159. புரட்சிமணி, திரு. ச. .. மங்களூர் (செ.வ.)
160. பூவேந்தன், திரு. த. .. பழனி (செ.வ.)
161. பெரியசாமி, திரு. இ. .. ஆத்தூர்
162. பெரியசாமி, திரு. என். .. தூத்துக்குடி
163. பெரியசாமி, திரு. என்.கே.கே. .. ஈரோடு
164. பெரியசாமி, திரு. நா. .. பெருந்துறை
165. பெருமாள், திரு. வி. .. ஏற்காடு (ஆ.வா.)
166. பெர்னார்டு, திரு. இரா. .. குளச்சல்
167. பொங்கலூர் நா. பழனிசாமி, திரு. .. சிங்காநல்லூர்
168. பொன்முடி, டாக்டர் க. .. விழுப்புரம்
169. பொன்முடி, திரு. எஸ்.எஸ். .. பல்லடம்
170. பொன்னம்மாள், திருமதி ஏ.எஸ். .. நிலக்கோட்டை (செ.வ.)
171. மகேந்திரன், திரு. இரா. .. நாட்ராம்பள்ளி
172. மணிக்கண்ணன், திரு. ஆ.செ. .. திருநாவலூர்
173. மணி, டாக்டர் அ. .. உளுந்தூர்பேட்டை (செ.வ.)
174. மணி, திரு. கோ.சி. .. கும்பகோணம்
175. மணி, திரு. டி. .. விளவங்கோடு



176. மணி, திரு. ஜி.கே. .. பெண்ணாகரம்
177. மணி நாடார், திரு. எஸ்.எஸ். .. சாத்தான்குளம்
178 மணிமாறன், திரு. இரா. .. திண்டுக்கல்
179. மணிவர்மா, திரு. க. .. தண்டராம்பட்டு
180 மதிவாணன், திரு. இரா. .. இராயபுரம்
181. மதிவாணன், திரு. செ. .. அச்சரப்பாக்கம் (செ.வ.)
182. மனோகரன், திரு. கு. .. தருமபுரி
183. மாயவன், திரு. தி.ப. .. ஸ்ரீரங்கம்
184. மாரி, அய்யா, திரு. பே. .. புதுக்கோட்டை
185. மாரிமுத்து, திரு. அ. .. வானூர் (செ.வ.)
186. முகம்மது இஸ்மாயில், திரு. எஸ்.எஸ். .. அரவக்குறிச்சி
187. முகம்மது கோதர் மைதீன், திரு. .. பாளையங்கோட்டை
188. முத்து, திரு. வி. .. சங்கரி (செ.வ.)
189. முத்துராமலிங்கம், திரு. ம. .. திருமங்கலம்
190. முபாரக், திரு. பா.மு. .. கூடலூர்
191. முருகேசன், திரு. பொ. .. காஞ்சிபுரம்
192. முல்லைவேந்தன், திரு. வ. .. மொரப்பூர்
193. முனிரத்தினம், திரு. ஆ.மு. .. சோளிங்கர்
194. மூக்கப்பன், திரு. இரா. .. சின்னசேலம்
195. மூக்கையா, திரு. எல். .. பெரியகுளம்
196. மோகனதாசன், திரு. கோ. .. பூம்புகார்
197. மோகன் கந்தசாமி, திரு. ப. .. பொங்கலூர்

| | | |
|---|---|---|
| 198. மோசஸ், டாக்டர் எம். | .. | நாகர்கோவில் |
| 199. ரங்கநாதன், திரு. எம். | .. | குன்னூர் (செ.வ.) |
| 200. ரங்கநாதன், திரு. ப. | .. | புரசைவாக்கம் |
| 201. ரவி அருணன், திரு. கே. | .. | தென்காசி |
| 202. ரவிசங்கர், திரு. கு. | .. | விளாத்திக்குளம் |
| 203. ராசேந்திரன், திரு. ஏ. | .. | போளூர் |
| 204. ராணி, செல்வி க. | .. | தலைவாசல் (செ.வ.) |
| 205. ராமசாமி, திரு. ஏ.எம். | .. | ஆத்தூர் |
| 206. ராமச்சந்திரன், திரு. செ. | .. | திருப்பரங்குன்றம் |
| 207. ராஜு, திரு. எஸ். | .. | பொள்ளாச்சி |
| 208. ராஜேந்திரன், திரு. எஸ்.கே. | .. | சத்தியமங்கலம் |
| 209. ராஜ்குமார் மன்றாடியார், திரு. என்.எஸ். | .. | காங்கேயம் |
| 210. லட்சுமணன், திரு. வி.கே. | .. | கோயம்புத்தூர் கிழக்கு |
| 211. வல்லரசு, திரு. பி.என். | .. | உசிலம்பட்டி |
| 212. வாசுகி முருகேசன், திருமதி | .. | கரூர் |
| 213. விசுவநாதன், திரு. இரா. | .. | நத்தம் |
| 214. விஜயகுமார், திரு. கே.எம். | .. | சாத்தூர் |
| 215. விஜயன், திரு. டி.சி. | .. | திருவொற்றியூர் |
| 216. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், திரு. | .. | வீரபாண்டி |
| 217. வீரப்பன், திரு. கே.கே. | .. | கபிலர்மலை |
| 218. வெங்கடசாமி, திரு. பி. | .. | ஓசூர் |
| 219. வெங்கடாசலம், திரு. அ. | .. | ஆலங்குடி |



| | | |
|---|---|---|
| 220. வெங்கடாசலம், திரு. ஜி.எல். | .. | பாலக்கோடு |
| 221. வெங்கடேசன், திரு. ச.க. | .. | மதுராந்தகம் |
| 222. வெங்கடேசன், திரு. பி.வி.எஸ். | .. | காவேரிப்பட்டினம் |
| 223. வெங்கிடு, திரு. ஜி.பி. | .. | கோபிச்செட்டிப் பாளையம் |
| 224. வேடம்மாள், திருமதி ஏ.ஆர். | .. | அரூர் (செ.வ.) |
| 225. வேதரத்தினம், திரு. எஸ்.கே. | .. | வேதாரண்யம் |
| 226. வேலாயுதன், திரு. சி. | .. | பத்மநாபபுரம் |
| 227. வேலுசாமி, திரு. வ. | .. | மதுரை கிழக்கு |
| 228. வேல்சாமி, திரு. க. | .. | நாமக்கல் (செ.வ.) |
| 229. வேல்துரை, திரு. பா. | .. | சேரன்மகாதேவி |
| 230. வைதியலிங்கம், திரு. மீ.அ. | .. | தாம்பரம் |
| 231. ஜெனிபர் சந்திரன், திருமதி எஸ். | .. | திருச்செந்தூர் |
| 232. ஜோதிகண்ணன், திரு. மு.ந. | .. | முசிறி |
| 233. ஸ்டாலின், திரு. மு.க. | .. | ஆயிரம் விளக்கு |
| 234. ஹேமச்சந்திரன், திரு. ஜே. | .. | திருவட்டாறு |
| 235. ஆன் டி' மான்டி, திருமதி | .. | நியமனம் |

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

திரு. கே.வி. வெங்கடபதி .. அரசு தலைமை வழக்கறிஞர்

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**பங்குனி 17, பிரமாதி - திருவள்ளுவர் ஆண்டு 2031**
**2000 மார்ச் 30, வியாழக்கிழமை**

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்** அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"ஆற்றின் அளவறிந்து கற்க அவையஞ்சா*
*மாற்றங் கொடுத்தற் பொருட்டு".*

அவையில் பேசும்பொழுது குறுக்கீடுகளுக்கு அஞ்சாமல் மறுமொழி சொல்வதற்கு ஏற்ற வகையில் இலக்கணமும், தருக்கமெனப்படும் அளவைத் திறமும் கற்றிருக்க வேண்டும்.

## 1. வினாக்கள்-விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள். வினா எண் 141, திரு. ஆர்.ஆர். சேகரன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**141—**

**தொழிற்சாலைகளின் எண்ணிக்கை**

***13199—திரு. ஆர்.ஆர். சேகரன்:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், காடையாம்பட்டி ஒன்றியம், தொழில் துறையில் பின்தங்கிய பகுதியாக அறிவிக்கப்பட்ட பின் தொடங்கப்பட்ட தொழிற்சாலைகளின் எண்ணிக்கை எவ்வளவு?

[2000 மார்ச் 30

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

காடயாம்பட்டி பஞ்சாயத்து ஒன்றியம் தொழில் துறையில் பின்தங்கிய பகுதியாக அறிவிக்கப்பட்டபின் தொடங்கப்பட்ட தொழிற்சாலைகளினுடைய எண்ணிக்கை 22.

**திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்நிய நாட்டு முதலீட்டுடன் தொடங்கப்படக்கூடிய பெரிய தொழிற்சாலைகள், குறிப்பாக ஹூண்டாய், ஃபோர்டு, போன்ற தொழிற்சாலைகள் எல்லாம் சென்னையைச் சுற்றியே தொடங்கப்படுகின்றன. ஏற்கெனவே ஜனநெருக்கடி மிகுந்த சென்னைக்கு இது மேலும் அதிக சிக்கலை தோற்றுவிக்கக்கூடும். எங்களுடைய ஓமலூர் தொகுதி, தேசிய நெடுஞ்சாலையிலே உள்ளது. தென் மாவட்டங்களை வடமாநிலங்களோடு இணைக்கும் இணைப்புச் சாலையாக இருக்கின்றது. அதுமட்டுமல்ல, அங்கே விமான நிலையமும் இருக்கிறது. அதுமட்டுமல்ல, ஏராளமான மனித சக்தியும் அங்கே கிடைக்கின்றது. இவற்றையெல்லாம் கருத்தில்கொண்டு ஒரு பெரிய தொழிற்சாலையை அந்தப் பகுதியிலே தொடங்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, காடயாம்பட்டியிலே பெரிய தொழிற்சாலையைக் கொண்டு வருவதற்கான வசதி வாய்ப்புகள் இல்லை. மாவட்டத்தைப் பொறுத்தவரையில், பெரிய தொழிற்சாலையைக் கொண்டு வருவதற்கான வசதி வாய்ப்புகளை எண்ணிப் பார்த்து அரசு அது குறித்துப் பரிசீலனை செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 142, திரு. கு. மனோகரன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**142—**

**கலைக் கல்லூரியில் கணினி படிப்புகள்**

***30249—திரு. கு. மனோகரன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2000 மார்ச் 30]

தருமபுரி அரசினர் கலைக் கல்லூரியில் பி.சி.ஏ. மற்றும் எம்.சி.ஏ. போன்ற படிப்புகளை வரும் கல்வியாண்டில் தொடங்கிட அரசு முன்வருமா?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

**திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை என்ற சொல்லே இருக்கக்கூடாது என்று தமிழக அரசு பாடுபட்டுக் கொண்டிருக்கும் இந்த நல்ல வேளையிலே, தருமபுரி அரசு கலைக் கல்லூரியில் எம்.சி.ஏ. பாடப் பிரிவை வழங்க முடியாவிட்டாலும், தபால் வழியாகப் பயின்றுவரும் எம்.ஏ. பாடப் பிரிவை Regular Course ஆக ஆக்குவதோடு, Regular Course ஆக 25 இருக்கைகள் மட்டுமே அனுமதிக்கப்பட்டு, இன்றைக்கு மாணவர்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ள B.Sc. Computer Science-ஐ மாலை நேர சுயநிதி அடிப்படையில் நடத்திக்கொள்ள மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி அரசு கலைக் கல்லூரியில் 1998-99-ஆம் ஆண்டு முதல் பி.எஸ்.சி. கணிப்பொறி அறிவியல் பாடம் தொடங்கப்பட்டு நடைபெறுகிறது. கணிப்பொறி அறிவியல் வகுப்பு 10 கல்லூரிகளுக்கு வழங்கப்பட்டு தருமபுரிக்கும் ஒன்று, வழங்கப்பட்டிருக்கிறது. தபால் வழி பாடத் திட்டம் என்பதைக் கல்லூரிகளிலே நடைமுறைப்படுத்துவதற்கு வாய்ப்புக் கிடையாது. மாலை நேரக் கல்லூரி என்பது அந்த ஆசிரியர்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட நேரத்தில் போதுமான அளவுக்கு மிச்சம் இருக்குமானால், அதிலே படிப்பதற்கு மாணவர்கள் இருப்பார்களேயானால் அதுபற்றிப் பரிசீலிக்கலாம்; உறுதி தரமுடியாது.

**திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு 25 இருக்கைகள் அனுமதிக்கப்பட்டு B.Sc. Computer Science நடைபெற்று வருகிறது. தருமபுரி மாவட்டம் பொருளாதாரத் துறையிலும், கல்வித் துறையிலும் ஒரு பின்தங்கிய மாவட்டம்.

மாணவர்கள் இப்போது கணினிப் படிப்பை படிக்க அதிக அளவில் முன்வருவதால் தருமபுரி அரசு கலைக் கல்லூரிக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து கம்ப்யூட்டர் படிப்பை மாலை நேர சுயநிதி வகுப்புகளாக நடத்த மீண்டும் மறுபரிசீலனை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபற்றித்தான் பரிசீலிக்க வேண்டுமென்று நான் காரணம் சொன்னேன். ஒன்று, கணிப்பொறித் துறையிலே உள்ள ஆசிரியர்களால் அந்த வகுப்புகளை நடத்தக்கூடிய வாய்ப்பு இருக்க வேண்டும். இரண்டாவது, சுயநிதி வகுப்புகளாக தனியாக வகுப்புகளைத் தொடங்குவதைப் பல்கலைக்கழகம் அதனுடைய கொள்கை முடிவின்படி ஏற்றுக்கொள்ளவில்லை. எனவே, பல்கலைக்கழகத்தோடு மாறுபட்டு சுயநிதி வகுப்புகளை மிக அதிகமாகத் தொடங்குவது என்பது அவ்வளவு முறையும் அல்ல. ஆகவே, அதுபற்றிப் பரிசீலிக்கப்படும்.

*முற்பகல் 9-35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 143, திரு. ரா. ஈஸ்வரன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**143—**

**கிளை மின் நிலையம் அமைத்தல்**

***28845—திரு. ரா. ஈஸ்வரன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வாசுதேவநல்லூர் தொகுதி, சிவகிரி நகரில் புதிய கிளை மின் நிலையம் அமைக்க அரசு உத்தரவிட்டும் வேலை நடைபெறவில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், விரைவாக வேலையைத் தொடங்க அரசு முன்வருமா?



**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) 2000-2001-ஆம் ஆண்டில் மின்நிலையம் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

(ஆ) இந்த வேலை திட்டமிட்டபடி செய்து முடிக்கப்படும்.

**திரு. ரா. ஈஸ்வரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகிரி பகுதியில் அடிக்கடி Voltage drop ஏற்படுவதால் விவசாயிகளின் மோட்டார்களில் அடிக்கடி coil பழுதாகிறது. அதனை நீக்க அந்தப் பகுதியில் ஒரு Sub-station ஏற்படுத்த வேண்டுமென்று அரசினுடைய கவனத்திற்கு கடந்த ஆண்டிற்கு முன்னாலே கொண்டு வரப்பட்டது. இதுவரையில் அதற்குரிய நிலம் தேர்வு செய்யப்படவில்லை. சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் முயற்சி எடுக்கிறார்கள். ஆனால் இதுவரையில் நிலத்தை தேர்வு செய்ய முடியாத நிலை இருக்கிறது. ஆகவே, கூடிய விரைவில் நிலத்தைத் தேர்வு செய்து அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய விவசாயிகளுக்கு Sub-station வழங்கினால்தான், விவசாயிகளின் மோட்டார் பழுதில்லாமல் இயங்குவதற்கு வாய்ப்பிருக்கும். அதே நேரத்தில் நெல்லை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் விவசாயிகள் பெரும்பாலும் மோட்டாரைப் பயன்படுத்தித்தான் விவசாயம் செய்து வருகிறார்கள். 6 மணி நேரமாக இருந்த மின்சார விநியோகம் தற்போது 4 மணி நேரமாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. அதனால் இந்தப் பகுதியில் உள்ள விவசாயிகள் விவசாயம் செய்ய முடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டு விவசாயம் பாதிக்கப்படுகிறது. தற்போது வழங்கப்படும் 4 மணி நேர மின் விநியோகம் என்பதை மீண்டும் 6 மணி நேரமாக அதிகரித்துத் தருவதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் எழுப்பிய இரண்டு வினாக்களுக்கும் நான் விடையளிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். அவர் குறிப்பிட்ட வாசுதேவநல்லூர், சிவகிரி நகரில் 110 கிலோவாட் துணை மின்நிலையம் அமைப்பது குறித்து இதே அவையிலே அவர் பேசி, நானும் வாக்குறுதி தந்து, மின்சார வாரிய ஆணை எண் 124, நான் 29-6-1998-இலேயே ஆணை பிறப்பிக்கப்பட்டு, அந்தத் துணை

மின்நிலையம் அமைப்பதற்கான இடத்தைத் தேர்வு செய்ய அதிகாரிகள் எவ்வளவோ முயற்சி செய்தும்கூட இடம் கிடைக்கவில்லை. ஆனாலும் அதிகாரிகள் தொடர்ந்து முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள். இன்னும் ஒரு மாதத்திலே இடம் கிடைத்துவிடும் என்றும் உறுதி அளித்திருக்கிறார்கள். அந்த இடம் கிடைப்பதற்கு மாண்புமிகு உறுப்பினரும் ஒத்துழைப்புத் தந்து, அந்த நிலத்தை வாங்கித் தருவாரேயானால்—ஒரு துணை மின்நிலையம் அமைக்க ஓராண்டு காலம் ஆகும். ஆனால் திரு. ஈஸ்வரன் அவர்களுடைய வேண்டுகோளை ஏற்று—இடம் கிடைத்த 8 மாதங்களிலேயே அந்தத் துணை மின் நிலையத்தைக் கட்டித் தருவதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது. ஏனென்றால் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு எங்கும் Voltage drop இருக்கக் கூடாது என்று சொல்லி, அதுகுறித்து முதல் கவனம் செலுத்தச் சொல்லியிருக்கிறார்கள். எனவே, அதற்கு உரிய நிதியும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. நிதியொதுக்கத்திலே எந்தவிதமான பிரச்சினையும் இல்லை. இரண்டாவது, விவசாயிகளுக்கு பகல் நேரத்திலே 4 மணி நேரம் மட்டும் மின்சாரம் தருவதால், விவசாயிகள் கஷ்டப்படுகிறார்கள் என்று சொன்னார்கள். பல ஆண்டுகாலமாக தமிழகத்திலே கோடைக்காலத்தில் இரண்டு மாதங்களுக்கு பகலிலே 4 மணி நேரமும் இரவிலே 8 மணி நேரமும் மின்சாரம் வழங்கிக் கொண்டிருக்கிறோம். தமிழ்நாட்டில் மின்சாரப் பற்றாக்குறை 300 மெகாவாட்டாக இருக்கின்ற காரணத்தினால் இந்த நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அடுத்த ஆண்டிலே, நிச்சயமாக இப்படிப்பட்ட சூழ்நிலை இருக்காது. மே மாதம் 15 ஆம் தேதி வரையில் விவசாயிகள் அரசாங்கத்தோடு ஒத்துழைத்து இரவு நேரத்திலே கிடைக்கின்ற 8 மணி நேர மின்சாரத்தைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ரா. ஈஸ்வரன்.

**திரு. ரா. ஈஸ்வரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் இரவில் 8 மணி நேரம் கொடுக்கக்கூடிய மின்சாரத்தை 6 மணி நேரம் மட்டும் கொடுத்து, பகலில் 2 மணி நேரம் கூடுதலாகக் கொடுத்தால் நலமாக இருக்கும். விவசாயிகள் இரவுநேரங்களில் காட்டில் போய், விடியவிடிய பாம்பு, பல்லி இருக்கும்போது அலைய வேண்டியிருக்கிறது. அதைக் கருத்தில் கொண்டு மாண்புமிகு முதல்வர் அவர்களும், அமைச்சர் அவர்களும் இரவில் அளிக்கப்படும் 8 மணி நேர மின்சாரத்தை 6 மணி நேரமாகக் குறைத்து, பகலில் அளிக்கப்படும்



4 மணி நேர மின்சாரத்தை 6 மணி நேரமாக உயர்த்திக் கொடுப்பதற்கு முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்களுக்கும் தமிழ்நாடு மின்சார வாரியத்தினுடைய நிலைமை நன்றாகத் தெரியும். எல்லோரும் கலந்துதான் இந்த முடிவை எடுத்திருக்கிறோம். எனவே மே மாதம் 15 ஆம் தேதி வரையில் பகலிலே விவசாயிகளுக்கு 6 மணி நேரம் மின்சாரம் கொடுப்பதற்கான சாத்தியக்கூறுகள் நிச்சயமாக இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 144, திரு. குத்தாலம் பி. கல்யாணம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**144—**

### எரிவாயு மின் சுழலித் திட்டம்

***32593—திரு. குத்தாலம் பி. கல்யாணம்.**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், குத்தாலத்தில் எரிவாயு மின் சுழலித் திட்டம் ரூ.300 கோடி நிதி ஒதுக்கீட்டில் 100 மெகாவாட் மின்சாரம் தயாரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள திட்டத்திற்கு மருத்தூர் கிராமத்தில் தேர்வு செய்யப்பட்டுள்ள நன்செய் நிலத்தை எடுக்க நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியரின் பரிந்துரை அரசுக்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், உடனடியாக ஆணை வழங்க ஆவன செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) மாவட்ட ஆட்சியரின் பரிந்துரை, சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையர் மூலம் அரசிற்கு வந்துள்ளது. மேற்படி செயற்குறிப்பு அரசின் பரிசிலனையில் உள்ளது.

*[2000 மார்ச் 30*

*முற்பகல் 9-40*

**திரு. குத்தாலம் பி. கல்யாணம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் என்னுடைய தொகுதியில் மாண்புமிகு முதல்வர் அவர்களால் வழங்கப்பட்டிக்கிற வரப்பிரசாதமான ஒரு திட்டம். இதிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதைப் போல, நில எடுப்புச் செய்கிற அனுமதியும் அரசிடமிருந்து கிடைக்கப் பெற்றுவிட்டது. ஆனால், அந்த நிலத்தைக் கையகப்படுத்துகிற நிலையில், ஒரு தேக்கமான நிலை ஏற்பட்டிருக்கிறது. அந்த நிலத்தைப் பொறுத்த அளவில், நம்முடைய மாசுக் கட்டுப்பாடு வாரியத்தினுடைய நிபந்தனையின்படி, காவிரி ஆற்றிலிருந்து 5 கிலோ மீட்டர் இடைவெளியிலும், அதனுடைய கிளை நதியான வீரசோழன் ஆற்றிலிருந்து 1 கிலோ மீட்டர் இடைவெளியிலும், ஒரு narrow escape என்பார்களே, அப்படி ஒரு இடம் கிடைத்திருக்கிறது. அந்த இடத்தைக் கொடுத்த நிலச் சொந்தக்காரர்கள் கொஞ்சம் கூடுதலான விலையை எதிர்பார்க்கிறார்கள். அவர்கள்கூட நம்முடைய அரசுக்கு அனுப்பியிருக்கிற விண்ணப்பத்தில், எங்களுடைய மாவட்ட அமைச்சர், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் நேரில் வந்து நிலத்தைப் பார்வையிட்டு, இந்தத் திட்டத்திற்கு வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொண்ட காரணத்தினால், "ஓராண்டு காலமாக நாங்கள் நடவு செய்யாமலே இருக்கிறோம்" என்று சொல்லி, ''எடுத்துக்கொள்ளலாம்'' என்ற அனுமதியையும் அவர்கள் வழங்கியிருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்வது, இந்தத் திட்டத்தினுடைய அனைத்துப் பணிகளும் முடிந்து, நிலம் கையகப்படுத்துகின்ற நிலையிலே இருக்கிற இந்தத் திட்டத்திற்கு, ஒரு கூடுதலான தொகை அவர்களுக்குக் கிடைக்கக்கூடிய அளவிற்கு அரசு ஒரு விதிவிலக்கு அளித்து, இந்த நிலத்தைக் கையகப்படுத்துமா என மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் முதலில் அவர்களுடைய தொகுதியில் 100 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யக்கூடிய ஒரு Gas Turbine வேண்டும் என்று சொன்னார். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், நாட்டிலுள்ள மின்சாரப் பற்றாக்குறையைக் கருத்திற்கொண்டு, அதற்கு அனுமதி வழங்கினார்கள். பிறகு மின்சார வாரியம் அதற்காக நிதியை ஒதுக்கி, ஏறக்குறைய 300 கோடி ரூபாய்



*2000 மார்ச் 30]*

ஒதுக்கி அந்தத் திட்டத்தை அமல்படுத்த முன்வந்தது. நிலம் தேர்வு செய்கின்ற நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் குறிபிட்டதைப்போல ஏறக்குறைய 14.4 ஹெக்டேர் நிலத்தை மருத்தூர் கிராமத்திலே தேர்வு செய்தார்கள். அந்த நிலத்தை வாங்கச் செல்கின்ற நேரத்தில் "அங்கே இருக்கக்கூடிய Guideline value-வை விட 1½ மடங்கு விலையை நாங்கள் தருகிறோம்" என்று மின்சார வாரியம் சொன்னது. "500 ரூபாய் என்றால் 750 ரூபாய், ஒரு சென்ட்டுக்கு நாங்கள் விலையாகக் கொடுக்கிறோம்" என்று மின்சார வாரியம் தாராளமாக முன்வந்தது. அப்போது ஆயிரம் ரூபாய் வேண்டும் என்று முதலிலே கேட்டார்கள். பிறகு ஆயிரம் ரூபாய் கொடுப்பதற்குத் தயாராகும்போது, யாரோ பக்கத்தில் இருக்கக்கூடிய நிலச்சொந்தக்காரர் ஒரு சென்ட்டுக்கு 1,500 ரூபாய் என்று விற்றிருக்கிறார். எனவே, "அந்த விலை வேண்டும்" என்றார்கள். அதுபற்றிப் பரிசீலிக்கும்போது, மறுபடியும் அந்த விவசாயிகள் "நாங்கள் ஓராண்டு காலம் விவசாயம் செய்யாமல் இருந்த காரணத்தினாலே ஏற்பட்ட நஷ்டத்தையும் சேர்த்து ஒரு சென்ட்டுக்கு 2,000 ரூபாய் வேண்டும் என்று கேட்கிறார்கள். அரசாங்கப் பணத்தை அப்படி—அவர்கள் கேட்கிற நேரத்திலேயெல்லாம் விலையை உயர்த்திக் —கொடுத்தால், மாண்புமிகு உறுப்பினரே எதிர்க்கட்சியாக இருந்தால், குற்றம் சாட்டுவார். எனவே, இதையெல்லாம் எண்ணிப்பார்த்துத்தான் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களிடத்திலே நான் இன்று காலையிலேகூடத் தெரிவித்திருக்கிறேன். மறுபடியும் அந்த நிலச் சொந்தக்காரர்களிடம் பேசி, ஒரு நியாயமான விலையை நிர்ணயிக்கும்படி சொல்லியிருக்கிறேன். அவரும் ஆவன செய்வதாக வாக்குறுதி தந்திருக்கிறார். மாண்புமிகு உறுப்பினரும் அவர்களோடு சேர்ந்து பேசி உடனடியாக அந்த நிலத்தை வாங்கித் தந்தால், திட்டத்திற்கு அடுத்த மாதமே கால்கோள் விழா நடத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்யலாம்.

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நாகப்பட்டினத்தில் உங்களுக்கு என்ன?

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்சாரம், மின்சாரம் சார். Please allow me, Sir.

[2000 மார்ச் 30

**HONOURABLE SPEAKER:** No. No. Please sit down. I won't allow you. நாகப்பட்டினத்தைப் பற்றிக் கேட்பதாக இருந்தால் கேட்கலாம்.

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** மின்சாரம் சார். உங்களுக்கும் வேண்டும், எங்களுக்கும் வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வேண்டாம். வேண்டாம். எனக்கு வேண்டாம். திரு. ச. அழகிரி.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலத்தைக் கையகப்படுத்துகிறபோது, guideline value என்பதைவிட market மதிப்பைப் பார்த்து விலையை முடிவு செய்தால் உடனடியாக நிலத்தைக் கையகப்படுத்தலாம். ஆனால், அரசாங்க அதிகாரிகள் அந்த விஷயத்தில், குறிப்பாக வருவாய்த் துறை அதிகாரிகள் ஒத்துழைப்பதே கிடையாது. அவர்கள் guideline value-வைப் பற்றியே பேசிக் கொண்டிருக்கிறார்களேயொழிய, விவசாயிகளுக்கு market மதிப்பு என்பது மிக முக்கியம். தங்களுக்கு பக்கத்தில் இருக்கிற நிலம், ஒரு சென்ட்டிற்கு 1500 ரூபாய் போகிறபோது, இவரால் எப்படி ஆயிரம் ரூபாய்க்குத் தர முடியும்? பல இடங்களில் இந்தப் பிரச்சினை இருக்கிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் market மதிப்பின் அடிப்படையில் நிலங்களைக் கையகப்படுத்த முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 9-45*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அதைத்தான் குறிப்பிட்டேன். Market விலை என்றால், கடந்த மாதம் யாரோ ஒரு விவசாயி, ஒரு செண்ட் 1,500 ரூபாய்க்கு விற்றிருக்கிறார், அந்த விலையைக் கேட்டால்கூட பரவாயில்லை. "ஓராண்டு காலம் இந்தத் திட்டம் வருமென்று நான் விவசாயம் செய்யாமல் இருந்தேன்; அதனால் எனக்கு இவ்வளவு நஷ்டம் ஏற்பட்டது" என்று அதையெல்லாம் கணக்குப் போட்டு, ஒரு செண்டுக்கு 2,000 ரூபாய் கேட்கிறார்கள். எனவே, இப்படிப்பட்ட சூழ்நிலையிலேதான், market விலை கொடுத்து வாங்குவற்கும்—ஏனென்றால், இந்தத் திட்டம் முக்கியமான திட்டம் என்ற காரணத்தால் — மின்சார வாரியம் தயாராக இருக்கிறது. ஆனால், அவர்கள் நஷ்டஈட்டையும் கேட்கிறார்கள். இதிலே, அரசாங்கம் எந்தவிதமான முடிவும் எடுக்க முடியவில்லை. பேச்சுவார்த்தை



2000 மார்ச் 30]

மூலம்தான் சுமுகமான தீர்வு காண வேண்டும். அந்தப் பொறுப்பை, மாண்புமிகு அமைச்சர் திரு. கோ.சி. மணி அவர்கள் எடுத்துக் கொண்டிருக்கிறார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 145, திரு. ப. பாலசுப்பிரமணியன், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறை அமைச்சர்.

**145—**

**பாதாளச் சாக்கடை**

***24195—திரு. ப. பாலசுப்பிரமணியன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பட்டுக்கோட்டை நகருக்குப் பாதாளச் சாக்கடை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) பட்டுக்கோட்டை நகரில் பாதாளச் சாக்கடை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**திரு. ப. பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டுக்கோட்டை நகரம், வளர்ந்து வருகிற ஒரு நகரம். கிட்டத்தட்ட 60 ஆயிரம் பேர் வசிக்கிறார்கள். 1996-ஆம் ஆண்டு கழக அரசு வந்த பிறகு எல்லா அடிப்படை வசதிகளையும் பூர்த்தி செய்த இந்த அரசு, அங்கு பாதாளச் சாக்கடை அமைக்கும் திட்டத்தினையும் செயல்படுத்த முன்வருமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாதாளச் சாக்கடைத் திட்டம் அமைப்பதற்குண்டான சாத்தியக்கூறுகள் அல்லது விதிமுறைகள் என்பதில், அந்தப் பகுதி

ஓரளவுக்கு ஒரு மாவட்டத்தின் தலைமையிடமாகவோ, அல்லது ஒரு இலட்சம் மக்களுக்குமேல் அதிகம் வாழ்கின்ற பகுதியாகவோ இருக்க வேண்டும் என்பது முதல் கட்டம். இரண்டாவது கட்டம், அதை நிறைவேற்றுகிற தருவாயில், அதற்குரிய தொகையை யார்மூலம் பெறுவது; அதற்கான டேவணித் தொகை, இவற்றையெல்லாம் நிர்ணயித்துச் சொல்கிறபோது, அதை மக்கள் ஏற்பார்களா என்பதையெல்லாம் கருத்திற்கொண்டுதான் இந்தத் திட்டம் எடுக்கப்பட வேண்டும். ஆனால், தற்போது, பட்டுக்கோட்டை நகரத்தினுடைய மக்கள் தொகை, *1991* ஆம் ஆண்டுக் கணக்குப்படி, *57,909* பேர்தான் இருக்கிறார்கள். எனவே, இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் இதிலே இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *146*, திருமதி வாசுகி முருகேசன், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**146—**

**பேருந்து நிலையம்**

***26295—திருமதி வாசுகி முருகேசன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரூரில் புதிதாகப் பேருந்து நிலையம் ஆரம்பிக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது பணி தொடங்கப்படும்?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருத்திய விடையைத் தங்கள் அனுமதியோடு படிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) தற்போதுள்ள மத்திய பேருந்து நிலையத்துடன், நகரப் பகுதிகளுக்காக மட்டும் புதிதாகப் பேருந்து நிலையம் அமைக்க நகராட்சியால் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்கான நில உரிமை மாற்றல் ஆணை, நகராட்சி ஆணையரிடமிருந்து பெறப்பட்டு, விரிவான மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு வருகின்றன. மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு, ஒப்புதல் பெற்றவுடன், பேருந்து நிலைய விரிவாக்கப் பணிகள் தொடங்கப்படும்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *147*, திரு. க. மணிவர்மா, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**147—**

**கசிவுநீர்க் குட்டை**

***22998—திரு. க. மணிவர்மா:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தண்டராம்பட்டுத் தொகுதியில், புன்செய் நிலப் பகுதிகளில், கசிவுநீர்க் குட்டைகள் அமைக்கும் திட்டம், அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஊரக வளர்ச்சித் திட்டத்தின் சார்பாக, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை வழங்கிய நிதி ஒதுக்கீட்டில், கசிவுநீர்க் குட்டைகள் அமைக்கும் பணி, வேளாண்மைப் பொறியியல் துறையால் செயல்படுத்தப்படுகிறது. திருவண்ணாமலை மாவட்டத்தில், கடந்த *1998-99*-ம் ஆண்டும், நடப்பு *1999-2000* ஆண்டும் புதிய கசிவுநீர்க் குட்டைகள் அமைக்கப்படவில்லை. ஆயினும், கடந்த ஆண்டு *1998-99*-இல் சிறு பாசன ஏரிகள், கிராமக் குளங்கள், கோயில் குளங்கள் போன்ற *59* நீர் சேகரிப்புப் பணிகள், ரூ.*116.69* இலட்சம் செலவிலும் நடப்பு ஆண்டு *1999-2000*-இல், *52* பணிகள், ரூ.*13.32* இலட்சம் செலவிலும் செயல்படுத்தப்பட்டுள்ளன.

**திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தண்டராம்பட்டுப் பகுதி முழுமையும், விவசாயத்தை நம்பியிருக்கிற மக்கள் வாழ்கிறார்கள். குறிப்பாக, புன்செய் நிலங்கள் நிறைந்த பகுதியாகவே அது இருக்கிறது. நிலத்தடி நீரையே நம்பி, விவசாயத்தைச் செய்து வருகின்ற அந்த விவசாயப் பெருங்குடி மக்கள், அங்கு கசிவுநீர்க் குட்டை அமைத்து, அதன்மூலம் நீரைத் தேக்கி, நிலத்தடி நீரைப் பெருக்குவதற்குண்டான வாய்ப்புகளை அதிக அளவிலே எதிர்பார்க்கிறார்கள். விவசாயப் பெருங்குடி மக்கள் எதிர்பார்க்கின்ற வகையிலே, இரண்டு, மூன்று ஆண்டுகளாக, அங்கு கசிவுநீர்க் குட்டைகள் அமைப்பது செயல்படுத்தப்படவில்லை என்று மாண்புமிகு அமைச்சர்

[2000 மார்ச் 30

அவர்கள் சொன்னார்கள். ஒரு ஊராட்சிக்கு ஒரு கசிவுநீர்க் குட்டை மூலம் நீரைத் தேக்கி, நிலத்தடி நீரைப் பெற்றாவது, விவசாயம் செய்வதற்கு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இந்த ஆண்டாவது மறுபரிசீலனை செய்து, அதற்கான நிதியை ஒதுக்கித் தருவார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-50

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தண்டராம்பட்டு தொகுதியை உள்ளடக்கிய திருவண்ணாமலை மாவட்டத்தில் 1984-85 ஆம் ஆண்டு முதல் 1997-98 ஆம் ஆண்டு வரை 733 கசிவுநீர்க் குட்டைகள் ரூபாய் 8.54 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ளன. இப்போது மத்திய அரசாங்கம் வேலைவாய்ப்பு உறுதி அளிப்புத் திட்டத்தின்கீழே நிதி ஒதுக்கீடு செய்வதிலே காலதாமதம் ஏற்பட்டிருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம் வேளாண்மைப் பொறியியல் துறைக்கு அதற்கான நிதியை ஒதுக்கீடு செய்தால், இத்தகைய பணிகளை எடுத்துக்கொள்வது பற்றிப் பரிசீலிக்கலாம்.

**திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வேளாண்மைத் துறை மூலம் NWDPRA போன்ற பல்வேறு திட்டங்களை முழுமையாக மக்களுக்குச் சிறப்பாகச் செயல்படுத்த முடியவில்லை என்றாலும், அந்த நிதிகளை எல்லாம் ஒவ்வொரு ஊராட்சிக்கும் ஒரு கசிவுநீர்க் குட்டை அமைப்பதற்காக வேளாண்மைத் துறையே எடுத்துச் சிறப்பாகச் செய்து தந்தால்தான் விவசாயத்தைப் பெருக்குவதற்கு வாய்ப்பாக இருக்கும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்தில் கொண்டு, வேளாண்மைத் துறை மூலமே இந்தக் கசிவு நீர்க்குட்டை அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முயற்சி செய்வார்களா எனத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மைப் பொறியியல் துறைக்கு இதுபோன்ற கசிவுநீர்க் குட்டை அமைப்பதற்கு என்று மாநில அரசாங்கம் தனி நிதி ஒதுக்கீடு செய்வது இல்லை. E.A.S. திட்டத்தின்கீழே வழங்கப்படக்கூடிய நிதியிலிருந்துதான் இத்தகைய பணிகளை நாம் மேற்கொள்கிறோம். மாண்புமிகு உறுப்பினர்கள் DWCRA அல்லது NWDPRA திட்டம் பற்றிச் சொல்கிறார், அந்த நிதியை இதிலே பயன்படுத்தலாம் என்று.



2000 மார்ச் 30]

அது வேறு திட்டம். இதுபோன்ற கசிவுநீர்க் குட்டைகளுக்கு அதைப் பயன்படுத்த முடியாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 148, திரு. கோ. நயினா முகமது, மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்.

**148—**

**ஓய்வு விடுதி**

***29438—திரு. கோ. நயினா முகமது:**

மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், கடையநல்லூர் தொகுதியில் முந்தல் என்னுமிடத்தில் வனத் துறை ஓய்வு விடுதி கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்போது கட்டப்படும்?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

**திரு. கோ. நயினா முகமது:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கடையநல்லூர் தொகுதியில் முந்தல் என்னும் இடம் உள்ளது. வருடம் முழுவதும் தண்ணீர் வரக்கூடிய நீர்நிலைகள் உள்ளன. மிகவும் பசுமையான மழை வளம் கொண்ட இடம். கோடை காலத்தில் நல்ல வெயில் அடிக்கும்போது கூட அங்கே குளுமையாக இருக்கும். அங்கே ஒரு பிரசித்திபெற்ற கோயிலும் உள்ளது. வருடம் முழுவதும் சுற்று வட்டார மக்கள் ஓய்வு எடுக்கச் செல்லும் இடமாகவும் உள்ளது. எனவே, வனத் துறையின் சார்பாக ஓர் ஓய்வு விடுதி கட்டித் தர அரசு மறுபரிசீலனை செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனத் துறையில் நிலைமைக்கேற்ப, தேவைக்கேற்ப விடுதிகள்

கட்டப்படுகின்றனவே தவிர, உல்லாசப் பயணத்தைப் பெருக்கிக்கொள்வதற்கு அல்ல. பெரும்பாலும் ஜன சஞ்சாரமற்ற இடமாகக் காட்டை ஆக்குவதுதான் இவ்விலாக்காவின் முக்கிய நோக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 149, திரு. எஸ்.வி. கிருஷ்ணன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**149—**

**விரைவுப் பேருந்து**

***25029—திரு. எஸ்.வி. கிருஷ்ணன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாங்குநேரி தொகுதி, வள்ளியூரிலிருந்து ஏர்வாடி வழியாகச் சென்னைக்கு விரைவுப் பேருந்து விட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தற்போது வழித்தடம் எண் 198 எக்ஸ் மூலம் நாகர்கோவிலிலிருந்து சென்னைக்கு வள்ளியூர், ஏர்வாடி வழியாக இரண்டு பேருந்துகள் 2 ஒருவழிப்பாதைப் பயணமாக இயக்கப்பட்டு வருகின்றன. மேற்படி பேருந்து வசதியை வள்ளியூர், ஏர்வாடி பயணிகள் பயன்படுத்திக்கொள்ள வசதியாக உள்ளதாலும், இவ்வழித்தடத்தில் பயணிகள் அடர்வு மிகவும் குறைவாக உள்ளதாலும், வள்ளியூரிலிருந்து சென்னைக்கு ஏர்வாடி வழியாக விரைவுப் பேருந்து இயக்க சாத்தியக்கூறுகள் இல்லை. மேலும், வள்ளியூரிலிருந்து ஏர்வாடி 6 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளதால் ஏர்வாடி மக்கள் வள்ளியூர் வந்து நாகர்கோவில்-சென்னை வழித்தடத்தைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

**திரு. எஸ்.வி. கிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் விளக்கம் சொன்னார்கள். நாகர்கோவில், கன்னியாகுமரியிலிருந்து வருகின்ற பேருந்துகளில் சில நேரங்களிலே





வள்ளியூர் பகுதியில் ஏறுகின்ற மக்களுக்கும் ஏர்வாடி பகுதியிலே ஏறுகின்ற மக்களுக்கும் இடம் இல்லாமல் இருக்கின்ற நிலை ஏற்படுகிறது. மேலும், பொருட்களை அவர்கள் அங்கும் இங்குமாக எடுத்துச் செல்லவேண்டிய நிலை இருக்கிறது. ஆகவே, மக்களுக்கு வசதியாக வள்ளியூரிலிருந்து புறப்பட்டு ஏர்வாடி வழியாக சென்னைக்கு வருவதற்கு ஒரு பேருந்தை ஏற்பாடு செய்தால் நன்றாக இருக்கும். ஆகவே, அமைச்சர் அவர்கள் மறுபரிசிலனை செய்து மக்களுக்குப் பேருந்து விடுவதற்கு ஏற்பாடு செய்வாரா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-55

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வள்ளியூருக்கும் நாகர்கோவிலுக்கும் இடையே உள்ள தூரம் 33 கிலோ மீட்டர்தான். அதுவும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப் போல வள்ளியூரிலே அந்த அளவிற்கு அடர்வு இருப்பதாகவும் தெரியவில்லை. உதாரணமாக, 1999 ஆம் ஆண்டு ஜூன் மாதத்திலே வள்ளியூரிலிருந்து சென்னைக்குப் பயணம் செய்த பயணிகளினுடைய எண்ணிக்கை 6 பேர்தான்; ஒரு மாதம் முழுவதும். அப்படி இருக்கையிலே வள்ளியூரிலிருந்து தனியாகச் சென்னைக்கு பேருந்துகள் இயக்குகிற சாத்தியக்கூறுகள் பொருளாதார ரீதியாகவும் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராதாபுரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கரச்சித்தவுவரியிலிருந்து, வரதனூரி, இடையங்குடி, திசையன்விளை வழியாக ஒரு விரைவுப் பேருந்து விடுவதற்கு......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் வள்ளியூர் என்ற காரணத்தால் உங்களைத் துணைக் கேள்வி கேட்க அனுமதித்தேன். நீங்கள், வேறு எதையோ கேட்டுக்கொண்டு இருக்கிறீர்கள்.

**திரு. மு. அப்பாவு:** திசையன்விளை, வள்ளியூர் வழியாக ஒரு விரைவுப் பேருந்து விடுவதாக ஏற்கெனவே அமைச்சர் அவர்கள் உறுதி அளித்தார்கள். துறையிலேயும் அதற்கான முயற்சிகள் உறுதி செய்யப்பட்டு, விரைவிலேயே பேருந்தை விடுவதாக உறுதி

அளிக்கப்பட்டும் இன்னும் அந்தப் பேருந்து விடப்பட்டவில்லை. ஆகவே, கடற்கரை கிராமமான சுயம்புலிங்க சுவாமி இருக்கின்ற, கரச்சித்தவுவரி, புனித அந்தோணியார் ஆலயம் இருக்கின்ற வரதனூரி வழியாக, திசையன்விளை, வள்ளியூர் வழியாக சென்னைக்கு விரைவுப் பேருந்து விடப்படுமா எனத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகுறித்த சாத்தியக்கூறுகளை பொருளாதார ரீதியாக ஆய்வு செய்து பரிசிலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ.லெ. சுப்பிரமணியன்.

**திரு. அ.லெ. சுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது வழித்தடங்களிலே செல்கின்ற பேருந்துகள், நாகர்கோவிலிலிருந்து நாங்குநேரி, திருநெல்வேலி வழியாக சென்னைக்கு வருகிறது. நாகர்கோவிலிலிருந்து நாங்குநேரிக்கு பை-பாஸ் வழியில் சென்று விடுவதால், பக்கத்து ஊர்களுக்குப் பலன் இல்லை. ஆகவே, சில வழித் தடங்களையாவது, நாகர்கோவிலிலிருந்து வருகிறபோது வள்ளியூர், ஏர்வாடி, திருக்குறுங்குடி, களக்காடு, சேரன்மகாதேவி, தலைவர் அவர்களுக்கு விருப்பமுள்ள செவல், பாளை, நெல்லை வழியாக சென்னைக்குச் செல்ல, சில வழித் தடங்களை மாறுதல் செய்ய அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முன்பே குறிப்பிட்டதுபோல ஏர்வாடி வழியாக இரண்டு பேருந்துகள் சென்னையிலிருந்து இயங்கிக் கொண்டிருக்கின்றன. அது மட்டுமின்றி கன்னியாகுமரி-சென்னைக்கு 18 பேருந்துகள், நாகர்கோவில்-சென்னைக்கு 24 பேருந்துகள், மார்த்தாண்டம்-சென்னைக்கு 18 பேருந்துகள், திருவனந்தபுரம்-சென்னைக்கு 18 பேருந்துகள், திருநெல்வேலி-சென்னைக்கு 20 பேருந்துகள் மொத்தம் 98 நடைகள் இந்த வழியாக, வள்ளியூர் வழியாக இயங்கிக் கொண்டிருக்கின்றன. ஆகவே வள்ளியூர் வழியாக அதிகமாகப் பேருந்துகள் இயங்கிக் கொண்டிருக்கின்ற காரணத்தால் அங்கே மேலும் அதிகமான பேருந்துகள் விடுவதற்கான சாத்தியக்கூறுகள் இப்போது இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 150, திரு. செ. மதிவாணன், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

**150—**

### ஆற்றின் குறுக்கே மேம்பாலம்

***18217—திரு. செ. மதிவாணன்:**

**மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—**

(அ) காஞ்சிபுரம் மாவட்டம், அச்சரபாக்கம் தொகுதியில் கிளியாநகர் ஆற்றின் குறுக்கே மேம்பாலம் கட்டித் தர அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும்?

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) இப்பணியை வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சிக்கான தேசிய வங்கியின் நபார்டு ஊரக உள்கட்டமைப்பு வளர்ச்சி நிதி 4-ல் செயல்படுத்த அரசாணை நிலை எண் 292, நெடுஞ்சாலைத் துறை, நாள் 30-11-1998-ல் நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டு பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

**திரு. செ. மதிவாணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வினா பழைய வினா. இந்தப் பணி இப்போது நடைபெறுகிறது. அதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றி கூறி விடைபெற்றுக்கொள்கிறேன்.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தாமரைக்கனி, உங்களுக்கு என்ன கேள்வி இதிலே? (குறுக்கீடு) திரு. இரா. தாமரைக்கனி.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நபார்டு வங்கி உதவியுடன் இந்த ஆண்டு, 2000-2001 ஆம் ஆண்டில் எத்தனை மேம்பாலங்களைக் கட்டுவதற்கு அரசு உத்தேசம் செய்துள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே, நபார்டு வங்கியின் மூலமாக 54 பாலங்களும், மறுபடியும் 106 பாலங்களும் எடுத்துக்கொள்ளப்பட்டு இப்போது கட்டப்பட்டு வருகின்றன. 2000-2001 ஆம் ஆண்டில் எடுத்துக்கொள்ளப்படுபவை குறித்து இனிமேல்தான் நபார்டு வங்கிக்கு நம்முடைய வேண்டுகோளை அனுப்ப இருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 151, திரு. பி. வெங்கடசாமி, மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

**151—**

## RAILWAY OVERBRIDGE

***26773—THIRU B. VENKATASAMY:**

Will the Hon. the Minister for Highways be pleased to state—

(*a*) Is there any proposal with the Government to construct overbridges to Bangalore--Chennai NH-7 in place of the Railway crossing near Natrampalli, Pachakuppam, Ambur etc; and

(*b*) If so, when ?

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சென்னைக்கும் பெங்களூருக்கும் இடையே தேசிய நெடுஞ்சாலை 46-ல் கி.மீ. 73/6-ல் பச்சகுப்பம் அருகே ஒரு இரயில்வே மேம்பாலம் அமைப்பது கி.மீ.49/6-ல் உள்ள பாலத்தை மறு கட்டுமானம் செய்வது ஆகிய பணிகள் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இவை தவிர, ஆம்பூர் மற்றும் நாட்ராம்பள்ளி ஆகிய ஊர்களில் இரயில்வே மேம்பாலங்கள் அமைக்கும் உத்தேசம் இல்லை.



**THIRU B. VENKATASAMY:** Hon. Speaker, Sir, I am very happy that the Government have taken steps to construct an overbrige at Pachakuppam. Construction of overbridges at Natrampalli and Ambur is also most important. If you construct only one bridge, all traffic will be through that bridge and there will be traffic jam. Already, there is traffic congestion and lot of accidents have taken place in that road. So, may I request the Hon. Minister for Highways to see that Natrampalli—Ambur Road overbridge is also constructed simultaneously. If you construct only one overbridge it will be of no use. Almost all traffic will be on one road. So, I would like to know whether the Hon. Minister for Highways would take steps to construct all the bridges simultaneously.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய விருப்பத்தை நிறைவேற்ற வேண்டுமென்ற ஆவல் அரசுக்கு உண்டு. என்றாலும் ஒரு செய்தியை இந்த மன்றத்திலே தெரிவிக்க விரும்புகிறேன். கடந்த காலத்தில், 5 ஆண்டு கால ஆட்சியில் இரயில்வே மேம்பாலங்கள் மூன்றே மூன்றுதான் எடுத்துக்கொள்ளப்பட்டு இருந்தன. ஆனால், இந்த 4 ஆண்டு காலத்தில் 52 மேம்பாலங்கள் நம்முடைய அரசு மூலமாக, இரயில்வே துறையின் மூலமாக எடுத்துக்கொள்ளப்பட்டு இருக்கின்றன. சென்ற ஆண்டு 16 மேம்பாலங்கள்; இந்த ஆண்டு, வருகிற ஆண்டில் 24 மேம்பாலங்கள் கட்டுவதற்கு இரயில்வே துறை ஒப்புதல் அளித்துள்ளது. அது தமிழ்நாட்டிற்குக் கிடைத்த மிகப்பெரிய மகத்தான வெற்றி என்றுகூட நாம் சொல்லமுடியும். அதிலே நாட்ராம்பள்ளி, ஆம்பூர் இல்லை என்பது வருத்தத்திற்குரியதுதான். இது குறித்து இரயில்வே துறைக்குப் பரிந்துரை செய்து அனுப்பலாம். அவர்கள் ஒரு கணக்கை வைத்து இருக்கிறார்கள். 1,00,000 யூனிட்டுகள் (PCU) இருந்தால்தான் அந்த இரயில்வே கடவில் ஒரு மேம்பாலம் அமைப்பது என்று கணக்கு வைத்திருக்கிறார்கள். அந்த கணக்கிலே ஆம்பூர், நாட்ராம்பள்ளி வரவில்லை என்று நான் கருதுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. மகேந்திரன்.

**திரு. இரா. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை, பெங்களூர் தேசிய நெடுஞ்சலையில் நாட்ராம்பள்ளி அருகில்

புத்துக்கோவிலில் இருந்து கொடையாஞ்சி வழியாக வாணியம்பாடி வரையில் சுமார் 7 கி.மீ. புற வழிச்சாலை அமைத்தால் புத்துக்கோயில், நெற்குந்தி, வாணியம்பாடி ஆகிய மூன்று இரயில்வே கேட்டுகள் தவிர்க்கப்படும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் புற வழிச்சாலை அமைக்க ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய ஆலோசனை பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. ப. கோவிந்தன்.

**திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓமலூரில் இருந்து சங்ககிரி செல்லும் சாலை, ஓமலூரில் இருந்து மேட்டூர் செல்லும் சாலை, சேலத்தில் இருந்து மேட்டூர் செல்லும் சாலை ஆகிய சாலைகளின் குறுக்கே இரயில்வே பாதைகள் இருக்கின்ற நிலையில், மேட்டூருக்கு, அனல் மின் நிலையத்திற்கு சரக்கு இரயில் மெதுவாகச் செல்லுகின்ற காரணத்தைக் கருத்திற்கொண்டு ஓமலூரிலேயே மேம்பாலம் அமைக்கும் திட்டம் இந்த ஆண்டு செயல் திட்டத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு 24 இரயில்வே மேம்பாலங்களை எடுத்துக்கொள்வதற்கு மத்திய அரசின் இரயில்வே துறை ஒப்புதல் அளித்திருக்கிறது என்று சொன்னேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்பது சேலம் மேட்டூர் Dam section. அதிலே ஒரு மேம்பாலம் அமைப்பதற்கு அனுமதி வந்து இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.வி.எஸ். வெங்கடேசன்.

**திரு. பி.வி.எஸ். வெங்கடேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன்னுடைய பதிலுரையில் பச்சைக்குப்பத்தில் மட்டும் மேம்பாலம் கட்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்டு இருக்கிறது என்று சொன்னார்கள், நன்றி. இருந்தாலும் கேட் திறந்து இருக்கின்றபோது சாலையில் போக்குவரத்து அதிகமாக இருக்கின்ற காரணத்தால், பஸ்களும், லாரிகளும் ஒன்றை ஒன்று



முந்திக் கொண்டு கேட் அருகிலே வருகின்றன. அப்போது இயற்கையாகவே அங்கே ஒரு இடைஞ்சல் ஏற்படுகிறது. அந்தப் பக்கம் இருக்கின்ற வண்டிகளும், இந்தப் பக்கம் இருக்கின்ற வண்டிகளும், ஒழுங்காகப் போவதில்லை. எனவே, அதைத் தவிர்க்கும் பொருட்டு கேட்டில் இருந்து 15 மீட்டர் அளவுக்கு Centre-ல் Barricade கட்டி, பாதையை ஒழுங்குபடுத்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரயில்வே மேம்பாலங்கள் கட்டும்போது, இரயில்வே தண்டவாளங்கள் இருக்கிற அந்தப் பகுதியில் மேம்பாலம் அமைக்கிற பணியை இரயில்வே துறையினர் மட்டும்தான் மேற்கொள்கிறார்கள். தண்டவாளத்தின் அப்புறத்திலே இருக்கக்கூடிய அணுகுசாலைப் பகுதியின் இருபுறங்களிலும், நெடுஞ்சாலைத்துறை பணியை மேற்கொள்கிற பொறுப்பை எடுத்துக்கொள்கிறது. அதிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லக்கூடிய அந்தப் பாதுகாப்பு விதிகள் எல்லாம் அனுசரிக்கப்படுகின்றன, கணக்கில் எடுத்துக்கொள்ளப்படுகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 24 மேம்பாலங்கள் என்று அறிவித்தவுடனே, 50 பேர் கையைத் தூக்குகிறார்கள். அந்த 24 பாலங்களுடைய பட்டியலைப் படித்துவிட்டால் நல்லது. அமைச்சரிடம் அந்தப் பட்டியல் இருக்கிறதா? இருந்தால் அதைக் கொஞ்சம் படித்துவிடுங்கள்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** இந்த ஆண்டு 24 மேம்பாலங்கள் அனுமதிக்கப்பட்டிருக்கின்றன என்று தெரிவித்தேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுடைய விருப்பத்தின்படி, அவற்றைப் படிக்கின்றேன்.

1. ஊத்துக்குளி
2. மகுடஞ்சாவடி
3. ஓமலூர்
4. இருவூர்

[2000 மார்ச் 30

5. நெய்க்காரன்பட்டி
6. திருப்பத்தூர் - மோளக்காரன்பட்டி
7. ஊத்துக்குளி - சிவதாபுரம்
8. திருப்பத்தூர் - மோளக்காரன்பட்டி
9. கூடல்நகர் - மதுரை சந்திப்பு
10. சமயநல்லூர்
11. மீளவிட்டான்
12. கோவில்பட்டி - நள்ளி
13. கோவில்பட்டி - குமாரபுரம்
14. கோவில்பட்டி - குமாரபுரம்
15. பட்டாபிராம் - திருநின்றவூர்
16. எண்ணூர் - சத்தியவாக்கம்
17. அரக்கோணம் - திருத்தணி
18. குடியாத்தம் - மேளத்தூர்
19. பெருங்களத்தூர் - வண்டலூர்
20. பட்டாபிராம் - திருநின்றவூர்
21. திருவலம் - சேவூர்
22. தஞ்சாவூர் - திட்டை
23. சீர்காழி
24. பிச்சாண்டார்கோயில்

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு கேள்வி......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடிந்து போய் விட்டது.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதையெல்லாம் ஒன்றும் demand பண்ண முடியாது. உட்காருங்கள்.



2000 மார்ச் 30]

**திரு. சி. ஞானசேகரன்:** என்னுடைய area-வைப் பற்றி........

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதல் வரிசையில் உட்கார்ந்து கொண்டு நீங்கள் தினமும் பேச வேண்டும் என்று நினைத்தால் முடியாது.

**திரு. சி. ஞானசேகரன்:** என்னுடைய area-வைப் பற்றி ஒரே ஒரு clarification. என்னுடைய area பற்றி......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதெல்லாம், உங்களுடைய area-வில் கிடையாது. நாட்ராம்பள்ளி பற்றி கோவிந்தன், மற்றவர்கள் எல்லாம் கேட்டாகிவிட்டது.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு clarification. இப்பொழுது ஒரு இடத்திலே, பச்சூர் என்ற இடத்திலே மட்டும் எடுக்கப்படுவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பச்சூர்-பச்சைக்குப்பம், அதைப்போல வாணியம்பாடி-புதூர், இந்த மூன்று இடங்களிலே, இந்தப் பாலங்களைக் கட்டியாக வேண்டும். இதிலே சென்ற முறை, கடந்த 5 ஆண்டு காலத்தில் சொன்னபோது, B.O.T. இல் எடுக்கப்பட்டதாகச் சொன்னார்கள். பிறகு, அந்த B.O.T. Agreement போடுகிறபோது, ஒரு வாகனத்திற்கு எவ்வளவு ரூபாய் என்று அதிலே ஒரு condition வராத காரணத்தால் நிறைவேற்ற முடியாமல் சென்ற அரசு போய்விட்டது. இப்போது, எந்தத் திட்டத்திலே அது எடுக்கப்பட்டிருக்கிறது. அந்தத் திட்ட மதிப்பீடு என்ன? அது எப்போது செய்து முடிக்கப்படும்? அதுபோல, வாணியம்பாடி-புதூர் கேட்டிற்கும் அமைச்சர் அவர்கள் ஏதாவது கருத்துரு அனுப்பியிருக்கிறார்களா? அது எப்போது கட்டப்படும் என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பாரா என்பதை கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பச்சைக்குப்பம், வாணியம்பாடி இரண்டு இடங்களிலேயும் இரயில்வே மேம்பாலம் கட்டுவதற்கு தேசிய நெடுஞ்சாலை மத்திய தரைவழிப் போக்குவரத்துத் துறை அமைச்சகம் முடிவு எடுத்திருக்கிறது. அந்த இரண்டு பாலங்களையுமே கட்டுதல், இயக்குதல், நிர்வகித்தல், ஒப்படைத்தல் என்ற அந்த B.O.T. திட்டத்திலே கட்டுவது என்றுதான் மத்திய அரசு முடிவு செய்தது. அது குறித்து, Concessional Agreement என்று சொல்லக்கூடிய, மாண்புமிகு உறுப்பினர்

[2000 மார்ச் 30

அவர்கள் குறிப்பிட்ட, அந்த ஒப்பந்த ஷரத்துகள் தயாரிப்பதிலே ஒரு சிக்கல் இருந்தது. மத்திய அரசினர் அது குறித்து அமைச்சரவை அளவிலே முடிவு எடுத்திருக்கிறார்கள். நூறு கோடிக்கு மேல் மதிப்பீடு உள்ள திட்டங்களுக்கு அமைச்சரவை ஒப்புதல் தந்திருக்கிறது. நூறு கோடிக்குக் குறைவாக இருக்கக்கூடிய திட்டங்களுக்கு அமைச்சரின் துறையே முடிவு எடுக்கலாம் என்று வைத்திருக்கிறார்கள். துறை அது குறித்து ஆலோசித்துக் கொண்டிருக்கிறது. விரைவில், இன்னும் ஒரு மாதத்திற்குள்ளாக அல்லது ஒரு சில வாரங்களுக்குள்ளாக முடிவு எடுக்கப்படும் என்று மத்திய தரைவழிப் போக்குவரத்துத் துறை அமைச்சர் என்னிடத்திலே தெரிவித்து இருக்கிறார்கள். இந்த இரண்டு பாலங்களும் நூறு கோடி ரூபாய்க்குக் குறைவான திட்டத்திலே வரும் என்று நான் நினைக்கின்றேன். இன்னும் மதிப்பீடு தயாரிக்கப்படவில்லை.

**திரு. சி. ஞானசேகரன்:** வேலை நடக்கவில்லை; ஆனால் வேலை நடக்கிறது என்று சொல்கிறார்........

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என் அனுமதி இல்லாமல் இப்படி எழுந்து கோபித்துக் கொண்டு பேசிக் கொண்டிருக்கிறீர்கள். இது முறையல்ல.

**திரு. சி. ஞானசேகரன்:** ஒரு clarification...............

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதுமுறையல்ல. நீங்கள் கேட்கிற முறை சரியாக இருக்கவேண்டும்.

**திரு. சி. ஞானசேகரன்:** அனுமதியோடுதான் கேட்கிறேன்...........

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. முறையாக இல்லாவிட்டால் நிச்சயமாக நான் நடவடிக்கை எடுப்பேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** ஒரே ஒரு கேள்வி.........

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் ஒழுங்காகப் பேசுங்கள். கேள்வி நேரத்திலே அமைச்சர் பதில் சொன்னால், எழுந்து கோபமாகப் பேசிக் கொண்டு இருக்கிறீர்களே.

**திரு. சி. ஞானசேகரன்:** பதில் ஒத்து வரவில்லை........



2000 மார்ச் 30]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒத்து வரவில்லை என்றால், நீங்கள் அடுத்தாற்போல் தனியாகப் போய்க் கேட்டுக் கொள்ளுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** வேலை நடக்கிறது என்று சொல்கிறார். வேலை நடக்கவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது தேவையில்லை. உங்களுக்கு வாய்ப்புக் கொடுக்க வேண்டுமென்ற தேவையில்லை.

**திரு. சி. ஞானசேகரன்:** வேலை நடக்கிறது என்று சொல்கிறார். வேலை நடக்கவில்லை.......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி வேலை நடக்கவில்லை, உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** பணி நடக்கிறது என்று சொல்லவில்லை. பாலம் கட்டுவதற்கான பணிகள் நடைமுறையிலே இருக்கிறது என்று சொன்னேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 152, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம், மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

**152—**

### தொழில் நுட்பக் கல்லூரி

***21252—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:**

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, ஆத்தாலூரி அருள்மிகு வீரமாகாளியம்மன் ஆலயத்தில் அறநிலையத்துறையின் மூலமாக ஒரு தொழில் நுட்பக் கல்லூரி தொடங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியிலுள்ள பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட ஏழையெளிய மாணவர்கள், தொழில் நுட்பக் கல்வி பயில வெளியூருக்குச் செல்ல வேண்டியுள்ளது. மேலும், அருள்மிகு வீரமாகாளியம்மன் கோவில் அறநிலையம் மூலமாகத் தொழில் நுட்பக் கல்லூரி தொடங்குவதற்குப் போதுமான இடமும் இருக்கிறது. மேலும், போதுமான நிதியாதாரம் இருப்பதாகவும் சொல்லப்படுகிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து, அங்கே ஒரு தொழில் நுட்பக் கல்லூரியைத் தொடங்க ஆவன செய்வாரா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-10

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய உறுப்பினர் சொன்ன அந்தக் கோயிலின் மொத்த வருமானம் ஒரு ஆண்டிற்கு 3,62,410 ரூபாய்தான். இதை வைத்துக் கொண்டு அந்தக் கோயிலின் திருப்பணிகளை அல்லது அன்றாடப் பணிகளைத்தான் செய்ய முடியுமே தவிர, ஒரு தொழில் நுட்பக் கல்லூரி தொடங்கி நடத்த முடியாது.

இரண்டாவதாக, 10 ஆண்டுகளுக்கு முன்னால் வரை அறநிலையத் துறையில் கல்வி நிறுவனங்கள் அரசு உதவி பெறும் நிறுவனங்களாகத் தொடங்கப்பட்டன. அதற்குப் பிறகு தொடங்கப்படுகிற எந்த ஒரு நிறுவனமும் சுயநிதி நிறுவனமாகத்தான் தொடங்கப்பட வேண்டும் என்ற சூழ்நிலை எழுந்துள்ளது. எனவே, சுயநிதி என்ற நிலை வருகின்றபோது, அறநிலையத்துறை அப்படிப்பட்ட நிறுவனங்களைத் தொடங்கினால் பல்வேறு சிக்கல்களை உருவாக்கிவிடும் என்பதாலும் இதற்குமேலும் கல்வி நிறுவனங்களை இந்தத் துறையில் தொடங்குவதற்கு நடைமுறைச் சாத்தியம் இல்லை என்பதாலும் இந்தத் திட்டத்திற்கு எப்போதுமே வாய்ப்பில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 153, திரு. வி.கே. லட்சுமணன், மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.



153—

## விருந்தினர் விடுதி

***17173—திரு. வி.கே. லட்சுமணன்:**

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை தீவுத்திடலில் கூட்டுறவாளர்களுக்கு எப்பொழுது விருந்தினர் விடுதி கட்டப்படும்?

**மாண்புமிகு திரு கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சென்னையில் தீவுத் திடலுக்கெதிரில், தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்திற்குச் சொந்தமான பழைய கட்டடத்தை இடித்து விட்டு அந்த இடத்தில் புதிய கட்டடம் கட்டுவதற்குத் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1962 ஆம் ஆண்டு திரு. என்.எஸ். மன்றாடியார் அவர்கள் கூட்டுறவுத் துறை அமைச்சராக இருந்தபோது, அந்தக் கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டது. தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்திற்காகவும், கூட்டுறவாளர்கள் தங்குவதற்காகவும் அது கட்டப்பட்டது. தமிழ்நாட்டினுடைய மிகச் சிறந்த கூட்டுறவாளர்களான திரு. எம். எஸ். பழனியப்ப முதலியார், திரு. சி.எஸ். இராமநாதன் செட்டியார் திரு. நடேசன், திரு. டி.என். பழனிச்சாமி கவுண்டர், திரு. மணி கவுண்டர் ஆகியோர் அங்கு வந்து தங்குவது வழக்கமாக இருந்தது. நாளடைவில் அது பழுதுபட்டு, பராமரிக்கப்படாமல் போய்விட்டது. ஆனால் கூட்டுறவு ஒன்றியத்திற்கு மட்டும் எழும்பூரில் கட்டடம் கட்டப்பட்டிருக்கிறது. ஆனால் கூட்டுறவாளர்கள் வந்து தங்குவதற்கு கட்டடம் கட்டப்படவில்லை. இன்றைக்கு சென்னை நகரிலே தங்குவதற்கு ஓட்டல்களிலே அதிக வாடகை கொடுக்க வேண்டியிருக்கிறது. இதனை, கூட்டுறவாளர்களுக்கு அளிக்கப்படுகிற T.A. D.A.-ஐ வைத்துக் கொண்டு, சமாளிக்க முடியாது. எனவே, விரைவாக சென்னை நகரிலே கூட்டுறவாளர்கள் வந்து தங்குவதற்கு எல்லா வசதிகளுடன் கூடிய ஒரு நவீன விருந்தினர் விடுதியைக் கட்டித் தர அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

[2000 மார்ச் 30

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கூட்டுறவு ஒன்றியத்திற்குச் சொந்தமான விருந்தினர் மாளிகை 1964-லேயே கட்டப்பட்டு, அதைத் திருத்தியமைக்க வேண்டுமென்று 13-8-1996-லே சட்டமன்றத்திலே அறிவிக்கப்பட்டது. பின்னர் இதற்கான விண்ணப்பம் C.M.D.A. வுக்கு 17-4-1998-ல் அனுப்பப்பட்டது. அந்த விண்ணப்பம் அனுப்பப்பட்டபோது, அந்த இடத்தைச் சுற்றி மாநகராட்சி, பொதுப் பணித் துறை மற்றும் பாதுகாப்புத் துறைக்குச் சொந்தமான இடங்கள் இருக்கின்றன. இப்படி இருக்கின்ற இடத்திற்கான வரைபடத்தில் உள்ளவாறு 1964-இல் அதில் கட்டப்பட்ட கட்டடம் அரசாங்கத்தால் வழங்கப்பட்டதாகும். ஆனால், அதற்கான பட்டா வழங்கப்படவில்லை. இதற்கு பொதுப் பணித் துறை, அனுமதி பெறவேண்டும். பாதுகாப்புத் துறை அனுமதி பெற வேண்டுமென்று, 20-5-1998-லே அந்த விண்ணப்பம் திருப்பி அனுப்பப்பட்டது. இப்போது திருத்தியமைக்கப்பட்டு, வரைபடம் புதியதாக வரையப்பட்டு அந்த இடத்திற்குச் சொந்தமான 1153 சதுர மீட்டரிலே ஒரு புதிய வரைபடம் வரையப்பட்டு 15-3-2000-ல் புதிய விண்ணப்பம் அனுப்பப்பட்டிருக்கிறது. அதற்கு C.M.D.A.யின் அனுமதி கிடைத்தவுடன் அந்தப் பணி உடனடியாகத் தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 154, திரு. உ. திசைவீரன், மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர்.

**154—**

### அடுக்கு மாடி வீடுகள்

***29754—திரு. உ. திசைவீரன்:**

மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பரமக்குடி நகராட்சியில் வாழும் ஏழை மக்களுக்கு, குடிசைகளை மாற்றி அடுக்கு மாடி வீடுகள் கட்டித் தரும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால்வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.



2000 மார்ச் 30]

**திரு. உ. திசைவீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரமக்குடி நகரம் ஒரு வளர்ந்து வருகிற நகரமாகும். இங்கு வைகை ஆற்றின் இரு கரைகளிலும் ஏழையெளிய மக்கள் குடிசைகளைப் போட்டு வாழ்ந்து வருகின்றார்கள். வெள்ளம் வருகின்ற நேரத்தில், இந்த மக்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு நிவாரணத் தொகையாக பல இலட்சம் ரூபாய் ஆண்டுதோறும் அரசுக்குச் செலவாகிற சூழ்நிலை உள்ளது. எனவே, மாநகராட்சிப் பகுதியிலே மட்டும் செயல்படுகின்ற இந்தத் திட்டத்தின் அடிப்படையிலே பரமக்குடியில் வாழ்கின்ற ஏழையெளிய மக்களுக்கு அடுக்குமாடி வீடுகள் கட்டித் தர அரசு பரிசீலனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-15

**மாண்புமிகு திரு. க. சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரமக்குடி நகராட்சிக்குச் சொந்தமான 2.30 ஏக்கர் பரப்பளவு நிலத்தை தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திற்கு மாற்றித் தர பிரேரணைகள் பரமக்குடி நகராட்சிக்கும், மாவட்ட ஆட்சியருக்கும் அனுப்பப்பட்டுள்ளன. இந்நிலத்தை தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திற்கு மாற்றம் செய்தபின் இப்பகுதி குடிசைவாழ் மக்களுக்கு வாரியத்தின் நிதி ஆதாரத்தைப் பொறுத்து அடுக்குமாடி குடியிருப்போ அல்லது மேம்பட்ட மனையோ அமைத்துத் தர நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 155, திரு. டி. மணி, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**155—**

### ஓமியோபதி மருத்துவப் பிரிவு

***14329—திரு. டி. மணி:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தொழிலாளர் ஈட்டுறுதிக் கழக மருத்துவமனைகளில் 9-வது திட்டக் கமிஷன் பரிந்துரைப்படி ஓமியோபதி மருத்துவப் பிரிவு ஏற்படுத்த அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

[2000 மார்ச் 30

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தொழிலாளர் கூட்டுறவு ஈட்டுறுதிக் கழக மருத்துவமனைகளில் மத்திய அரசினுடைய பங்குத் தொகை அல்லது மத்திய அரசினுடைய உதவி பெறுகின்றபோது, அந்த உதவியை வைத்துக் கொண்டு இந்த E.S.I. திட்டம் இருக்கின்ற அனைத்து மருத்துவமனைகளிலும் ஓமியோபதி மருத்துவத்தைக் கொண்டு வருவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓமியோபதி பிரிவை, பிற தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளில் தொடங்குகின்ற நிலை தற்சமயம் இல்லை. ஆனால், அதே நேரத்திலே சித்தா பிரிவு இங்கே கோவையிலும், அதைப்போலவே சென்னையில் அயனாவரத்திலும் இருக்கிறது. மேலும், 6 இடங்களில் தொடங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது.

**திரு. டி. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சித்தா பிரிவு வருகின்றபோது, ஏற்கெனவே மாநிலத்தினுடைய பல்வேறு E.S.I. திட்டங்கள் செயல்படுகின்ற, குறிப்பாக விளவங்கோடு தாலுகாவில் சமீபத்திலே ஆரம்பிக்கப்பட்ட அந்த மருத்துவமனைகளில் இந்த சித்தா பிரிவை நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா? அதேபோல, அந்த மருத்துவமனைகளிலே இதற்கான மருத்துவர்கள் பஞ்சம் இருந்து வருகிறது. அந்த இடங்களில் நிரந்தரமான மருத்துவர்களைத் தந்து உதவ அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, E.S.I. மருத்துவமனைகளைப் பொறுத்தமட்டில், தொழிலாளிகளுடைய பிரதிநிதிகள், அதைப்போலவே மருத்துவமனைகளில் பணியாற்றுகிற பிரதிநிதிகள், அரசு பிரதிநிதிகள் எல்லோரும் கூடி, ஒரு கண்காணிப்புக் குழு போடப்பட்டு, அதனுடைய நடைமுறையைப் பற்றி ஆராய்ந்து வருகிறார்கள். மருத்துவர்கள் பஞ்சம் எங்கு ஏற்பட்டாலும் அங்கு அவர்கள் பணிக்காக அமர்த்தப்படுவார்கள். அடுத்து, புதிதாக இந்த சித்தா பிரிவு போன்ற பல பிரிவுகள் இப்போது கொண்டு வரப்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் சொல்கின்ற இடத்திலும் அதைக் கொண்டு வருவதற்கு வாய்ப்பு இருக்கிறதா என்பது குறித்து அரசு ஆயும்.



2000 மார்ச் 30]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர்களைப் பொறுத்த அளவில் ஓமியோபதி மருத்துவம் செலவு குறைவாக இருக்கிற மருத்துவ வசதி என்ற எண்ணம் இருக்கிறது. அது மட்டுமல்ல, சில நோய்களைப் பொறுத்த அளவிலே ஓமியோபதியிலே நல்ல மருந்து கிடைக்கிறது என்ற ஒரு எண்ணமும் உண்டு. மேலும், இந்த E.S.I. திட்டத்திற்குச் செலவாகிற ஓமியோபதி வசதிக்கு மத்திய அரசு நிதி உதவி கொடுக்கிறது என்ற காரணத்தினால், தொழிலாளர்களுடைய இந்த எண்ணத்தை நிறைவேற்றக்கூடிய முறையிலே E.S.I. மருத்துவமனைகளில் ஓமியோபதி பிரிவையும் ஏற்படுத்துவதற்கு அரசு பரிசீலிக்குமா?

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கருத்தும் பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 156, திரு. எம். ரங்கநாதன், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**156—**

### நீதிமன்ற வளாகம்

***22332—திரு. எம். ரங்கநாதன்:**

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குன்னூர் நகரில் நீதிமன்ற வளாகம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) குன்னூர் நகரில் நீதிமன்ற வளாகம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

[2000 மார்ச் 30

**திரு. எம். ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குன்னூர் மாநகரிலே பழைமை வாய்ந்த ஒரு கட்டடத்திலே நீதிமன்றம் நடந்து கொண்டிருக்கிறது. மழை, வெயில் காலங்களிலும், அதேபோல காற்றுக் காலங்களிலும் அங்கு மக்களுக்கு மிகவும் பெரிய பாதிப்பாக இருக்கிறது. ஆக, 100 ஆண்டுகளுக்கு மேலாகவே அந்த வளாகத்தில் நடந்து கொண்டிருக்கும் நீதிமன்றக் கட்டடத்தைப் புதுப்பித்து, அதே இடத்திலே கட்ட அரசு முன்வருமா? ஏறக்குறைய 2 ஆண்டுகளுக்கு முன்பு, உயர் நீதிமன்ற நீதிபதிகள் கூட அந்த இடத்தை வந்து பார்த்தார்கள். பார்க்கின்ற நேரத்திலே நாங்கள் அத்தனை பேரும் அந்த ஊரிலே இருக்கின்ற எல்லோரும் சேர்ந்து அதே இடத்திலே கட்ட வேண்டும் என்று கூட வற்புறுத்திச் சொன்னோம். ஆக அந்த ஊரின் நிலைமையைக் கருதி மக்களுக்குப் பாதுகாப்பு அளிக்கவும், வழக்குகளுக்கு வருகின்ற வழக்கறிஞர்கள் அத்தனை பேருக்கும் பாதுகாப்பு அளிக்கும் வகையிலும் அந்த நீதிமன்றத்தைப் புதுப்பித்துத் தர அரசு முன்வருமா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-20

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர்நீதிமன்றத்தின் பதிவாளரிடத்திலேயிருந்து 24-11-1998-ல் ரூ.1.16 கோடி மதிப்பில் வளாகம் அமைப்பதற்கான பரிந்துரை வந்திருக்கிறது. அரசு அதனுடைய தேவையை உணர்ந்திருக்கிறது. ஆனால் நிதி நெருக்கடியின் காரணமாகத் தற்போது அதைச் செயல்படுத்த முடியவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 157, திரு. ப. கோவிந்தன், மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.

**157—**

**சத்துணவுக் கூடம்**

***14803—திரு. ப. கோவிந்தன்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2000 மார்ச் 30]

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, பெரியேரி ஊராட்சி வகுத்தலூர் மற்றும் தானம்பூசாரி வளவில் சத்துணவுக்கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாரமங்கலம் தொகுதியில் பெரியேரி ஊராட்சி, வகுத்தலூர் மற்றும் தானம்பூசாரி ஆகிய அந்தப் பகுதிகளிலே மிகப் பிற்படுத்தப்பட்ட விவசாயக் குடிமக்கள் வாழ்கின்றனர். அந்தப் பகுதியிலே இருக்கின்ற குழந்தைகளுக்குச் சத்துணவுக் கூடம் ஒன்றை அமைப்பதற்கு, அந்த குழந்தைகளின் நலன் காக்க, நமது அமைச்சரவர்கள் மறுபரிசீலனை செய்வார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு சத்துணவு மையம் அமைப்பதற்குக் குறைந்தபட்சம் 3 வயதிலிருந்து 5 வயது வரை உள்ள குழந்தைகள் 25 பேர் இருக்க வேண்டும். மக்கள்தொகை 1000-ஆவது இருக்க வேண்டும். ஆனால் வகுத்தலூர், தானம்பூசாரி வளவுப் பகுதியில் மொத்த குழந்தைகள் 19 பேர் தான் இருக்கின்றனர். ஜனத்தொகை மொத்தம் 500 தான் இருக்கின்றது. ஆகவே அங்கே சத்துணவு மையம் ஏற்படுத்த வாய்ப்பில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 158, திரு. சீ.வெ. கிருஷ்ணன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

**158—**

**கால்நடை மருத்துவமனை**

***30626—திரு. சீ.வெ. கிருஷ்ணன்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2000 மார்ச் 30

(அ) வேடசந்தூர் தொகுதி. வடமதுரை ஒன்றியம், குளத்தூர் ஊராட்சி, காளணம்பட்டியில் கால்நடை மருத்துவமனை அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) வேடசந்தூர் தொகுதி, வடமதுரை ஒன்றியம், குளத்தூர் ஊராட்சி, காளணம்பட்டியில் கால்நடை மருத்துவமனை அமைத்துத் தர தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**திரு. சீ.வெ. கிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய வேடசந்தூர் தொகுதியில் நான் சுற்றுப்பயணம் மேற்கொண்ட நேரத்திலே, நூற்றுக்கணக்கான மனுக்கள் தரப்பட்டன. அவற்றில் "கால்நடைகளைப் பாதுகாக்க வேண்டும், கால்நடைகளை வெறிநாய் கடித்து விடுகிறது, கால்நடை மருந்தகத்தில் வெறிநாய்க் கடிக்கான மருந்துகள் வேண்டும்" என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளார்கள். அந்தக் கோரிக்கை மனுவை நம்முடைய தமிழக முதல்வர் அவர்களிடத்திலும், கால்நடைத் துறை அமைச்சரிடத்திலும் நேரடியாகக் கொடுத்த நேரத்தில், இப்போது அந்தக் கோரிக்கையை ஏற்று, கால்நடை மருத்துவமனைகள் அனைத்திற்கும் வெறிநாய்க் கடிக்கான மருந்துகள் அனுப்பியதற்காகத் தமிழகத்தினுடைய முதல்வர் அவர்களுக்கும், கால்நடைத் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றி தெரிவிப்பதோடு, வடமதுரை ஒன்றியத்தில், காளணம்பட்டியிலே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது என்ன வினாவா?

**திரு. சீ.வெ. கிருஷ்ணன்:** மருத்துவமனை அமைக்க அமைச்சரவர்கள் மறுபரிசீலனை செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் தொகுதி, வடமதுரை ஊராட்சி ஒன்றியம், குளத்தூர் ஊராட்சி, காளணம்பட்டி கிராமத்தில் கால்நடை மருந்தகமோ அல்லது கால்நடை கிளை



2000 மார்ச் 30]

நிலையமோ தற்போது இல்லை. எனினும் வடமதுரை ஊராட்சி ஒன்றியத்தில் இரண்டு இடங்களில் கால்நடை மருந்தகங்களிலும் ஐந்து இடங்களில் கால்நடை கிளை நிலையங்களிலும், அவற்றுக்கு இணையாக ஐந்து கால்நடை பார்வை கிளை நிலையங்களிலேயும் தற்போது கால்நடைகளுக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றன. காளணம்பட்டி கிராமத்தில் கால்நடை மருந்தகமே இல்லாத நிலையில், அக்கிராமத்தில் முதன்முதலாக கால்நடை மருத்துவமனை அமைக்க தற்போது சாத்தியக்கூறுகள் ஏதும் இல்லை. என்றாலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ள சிறப்புக் கால்நடை பாதுகாப்புத் திட்டத்தின் மூலம் மாவட்டங்களிலே கால்நடை மருத்துவமனை இல்லாத ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியப் பகுதிகளிலேயும் பல்வேறு இடங்களிலே ஒவ்வொரு மாதமும் கால்நடை மருத்துவ சிகிச்சை முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன. அதன்மூலம் காளணம்பட்டி பகுதியிலுள்ள கால்நடைகளுக்கு சிகிச்சை அளித்து பயன் கிடைக்க வாய்ப்பு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஏ.வி.ஏ. நாசர்.

**திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வடமதுரை ஒன்றியம், குளத்தூர் ஊராட்சி, காளணம்பட்டியிலே கால்நடை மருந்தகம் இல்லை என்று சொன்னார்கள். எனவே மருந்தகம் இருந்தால்தான் மருத்துவமனை உருவாகும் என்ற சூழ்நிலை இருக்கும்போது அங்கு மருந்தகமாவது அமைக்க அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வோர் ஆண்டும் மருந்தகங்களை அமைப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிதி ஒதுக்கீடு செய்து அறிவிப்பார்கள். சென்ற ஆண்டு 10 கால்நடை மருந்தகங்கள் தொடங்குவதற்கு அரசின் மூலம் அனுமதி அளித்திருந்தார்கள். இந்த ஆண்டு அது மானியக் கோரிக்கையில் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 159, திரு. கே. சுப்பராயன், மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்.

**159—**

**பனியன் ஆலைகள்**

***22694—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பூரில் தாட்கோ மூலம் அமைக்கப்பட்டுள்ள பனியன் ஆலைகள் உற்பத்தியைத் தொடங்கி விட்டனவா?

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம். இதுவரை 35 தொழிற்கூடங்கள் உற்பத்தியைத் தொடங்கியுள்ளன.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மொத்தம் 100 தொழிற்கூடங்கள் கட்டப்பட்டன. அவற்றில் 35 தான் உற்பத்தியைத் தொடங்கியிருக்கின்றன என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். மீதியுள்ளவை முழு வீச்சில் உற்பத்தியைத் தொடங்க எவ்வளவு காலம் ஆகும் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 35 தொழிற்கூடங்கள் உற்பத்தியைத் தொடங்கியுள்ளன. மொத்தம் 100 அலகுகள் முதலிபாளையத்தில் அமைக்கப்பட்டன. அதற்குக் கடந்த ஆண்டு நேர்முகத் தேர்வு நடந்து, 75 அலகுகள் ஒதுக்கப்பட்டன. ஒதுக்கப்பட்டவற்றில் உற்பத்தி தொடங்கப்பட்ட தொழிற் கூடங்கள் 35; நாணய உறுதிப் பத்திரக் கடிதம் பெறப்பட்டது 8; சிற்றுண்டிச்சாலைக்கு ஒதுக்கப்பட்டது 1; தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் கடன் மனுக்கள் மீது மறு மதிப்பீட்டிற்காக தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தில் பல்வேறு செயல் முறைக்காக ஒதுக்கப்பட்டது 12; தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தில் நடைமுறைக் கடன் ஒப்புதல் அளித்து இன்னும் பணம்பெற விண்ணப்பிக்காதவர்கள் 19; ஆக மொத்தம் 75 கூடங்கள் தொழில் தொடங்குவதற்கு ஆயத்தமான நிலையில் இருக்கின்றன. மீதம் உள்ள 25 கூடங்களுக்கு 19-2-2000-ல் தேர்வு நடந்து, இறுதிப் பணியை எட்டிக் கொண்டிருக்கின்றன. விரைவில் அந்த 25 கூடங்களிலும் தொழில்



தொடங்குவதற்கு வாய்ப்பு இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்;** திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலிபாளையத்தைப் போலவே பெருந்துறை தொழில் வளர்ச்சி மையத்தில் தாட்கோவின் மூலம் 200 தொழிற்கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த 200 தொழிற்கூடங்களும் பனியன் உற்பத்திக்காக மட்டுமே ஒதுக்கப்பட வேண்டும் என்று வரையறை செய்து ஒதுக்கினார்கள். பட்டியல் சாதியினர் சமுதாயத்திலே அப்படி பனியன் தொழில் மட்டுமே செய்யக்கூடியவர்கள் அதிகமாக இருக்க மாட்டார்கள் என்பதைக் கருத்தில் கொண்டு, அது தொடர்புடைய எந்தத் தொழிலுக்காகவாவது அவர்களுக்கு ஒதுக்கீடு செய்ய அமைச்சர் அவர்கள் ஆய்வு செய்வாரா, விரைந்து முடிவு எடுப்பாரா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கான நேர்முகத் தேர்வும் 17-2-2000 அன்று நடைபெற்றிருக்கிறது. இதற்குரிய வேலை வாய்ப்புகள்; 200 கூடங்கள் இருக்கின்றன. அதாவது 200 கூடங்களிலும் எந்தெந்தத் தொழில் செய்வதற்கு சாத்தியக்கூறுகள் இருக்கின்றனவோ அவற்றை ஆய்ந்து, அரசு முடிவு எடுத்து அதற்கேற்ப, அந்த விற்பனையாகக்கூடிய பொருட்களுக்கான உற்பத்தியைச் செய்து கொடுப்பதற்காகவும், அதே நேரத்தில் அந்த முன்மொழிவுகள் வரப்பெற்றால் அவர்களுக்குரிய தொழில்களைத் தேர்ந்தெடுத்துக் கொடுப்பதற்கும் நாங்கள் முடிவு எடுத்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 160, திரு. ந. கருப்பண்ண உடையார், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

**160—**

**பயணிகள் விடுதி**

***17711—திரு. ந. கருப்பண்ண உடையார்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2000 மார்ச் 30

தமிழ்நாடு சுற்றுலா வாரியம் நடத்தும் பயணிகள் விடுதிகளில் தங்கும் அறைகளின் வாடகையைக் குறைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன், சுற்றுலாத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி வாரியம் நடத்தும் பயணிகள் விடுதிகளில் தங்கும் அறைகளின் வாடகையைக் குறைக்கும் கருத்துரு தற்போது தமிழ்நாடு சுற்றுலா வாரியத்தில் எதுவுமில்லை.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் 1996 ஆம் ஆண்டுக்குப் பிறகு எத்தனை இடங்களில் சுற்றுலா மையத்தின்மூலம் பயணிகள் விடுதிகள் கட்டப்பட்டு இருக்கின்றன. தற்போது என்ன வாடகை அதில் வசூலித்துக் கொண்டு இருக்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன். சுவாமிமலை போன்ற பிரசித்திபெற்ற கோயில் இருக்கும் இடங்களிலே தினமும் ஆயிரக்கணக்கான மக்கள் வருகின்ற இடங்களிலே சுற்றுலாத் துறைமூலம் பயணிகள் தங்கும் விடுதிகளையும், அதைப்போல மற்ற இதர வசதிகளையும் செய்து கொடுக்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தைப் பொறுத்தமட்டில் சுற்றுலா வளர்ச்சிக் கழகம் சார்பாக 36 விடுதிகள் நல்ல முறையில் இயங்கிக் கொண்டிருக்கின்றன. குறைந்த வாடகைகளில் தங்குவதற்காக இளைஞர் விடுதிகளும் தமிழகத்தில் 8 இடங்களில் நல்ல முறையில் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. புதிதாக விடுதிகள் கட்டக்கூடிய செயற்குறிப்புகள் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை. தனியார் யாராவது முன்வருவார்களேயானால், அவர்களை இந்த அரசு ஊக்கப்படுத்தக்கூடிய விதத்திலே மானியங்கள் கொடுக்கக்கூடிய அளவிற்கு வசதி வாய்ப்புகளை உருவாக்கியிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன் அனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. திரு. டி. சுதர்சனம்.



2000 மார்ச் 30]

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு நடத்துகின்ற சுற்றுலா விடுதிகளிலே வசதிகள் மிகக் குறைவாக இருக்கின்றன. தரம் குறைந்த அறைகளாகக் காணப்படுகின்றன. அவற்றைத் தரம் உயர்ந்த அறைகளாக மாற்றுவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த நிதிநிலை அறிக்கையின்போது மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய ஆலோசனையின் அடிப்படையில், தரத்தை உயர்த்த வேண்டுமென்ற எண்ணத்தின் அடிப்படையில் கடந்த ஆண்டு 2½ கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டு, தரத்தை உயர்த்தக்கூடிய அளவிற்கு விடுதிகளில் பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. சிறப்புக் கவன ஈர்ப்பு

### கோவை, மதுக்கரை அருகே வழுக்குப்பாறை கிராம விவசாயத் தொழிலாளி மனைவி மரணம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து (குறுக்கீடு) வினா நேரம் முடிந்தது என்று சொன்னவுடனேயே எழுந்து நிற்க வேண்டுமா? இது என்ன தினமும் மாமூலா?

கோவை மாவட்டம், மதுக்கரை, வழுக்குப்பாறையைச் சேர்ந்த விவசாயக் கூலித் தொழிலாளியின் மனைவி கொல்லப்பட்டது குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. டி. மணி, திரு. ஜே. ஹேமச்சந்திரன், திரு. கே. சுப்பராயன், டாக்டர் க. கிருஷ்ணசாமி, திரு. சி. ஞானசேகரன் ஆகியோர் அறிவிப்புக் கொடுத்திருக்கின்றார்கள். சுருக்கமாகப் பேசுமாறு முதலில் திரு. சி. ஞானசேகரனை அழைக்கின்றேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டம், மதுக்கரை அருகேயுள்ள வழுக்குப்பாறை என்கிற

[திரு. சி. ஞானசேகரன்] [2000 மார்ச் 30

கிராமத்திற்கு—நடராசன் என்கிற ஒரு மிராசுதாருடைய தோட்டத்திற்கு—தேனி மாவட்டத்தில் பிழைப்பு இல்லாத காரணத்தினாலே, அங்கே வசதி இல்லாத காரணத்தினாலே ராஜு என்கிறவரும் அவருடைய மனைவி சாந்தியும் கூலி வேலைக்காகச் சென்றிருக்கிறார்கள். அங்கே கூலி வேலைக்குச் செல்கிற இடத்தில், அந்த நிலச் சுவான்தார், அந்த வேலையாளி ராஜுவும் அவருடைய மனைவி சாந்தியும் நிலத்திலே பணியாற்றிக் கொண்டிருக்கிறபோது, முதலிலே சாந்தி அவருடைய வீட்டிற்குச் சென்றபோது, பின் தொடர்ந்து சென்றவர் அந்த சாந்தியிடம் சென்று ஏதோ தவறாக நடந்து கொண்டிருக்கிறார் என்று சொல்லப்படுகிறது. அலறல் சத்தம் கேட்டு கணவன் ராஜு நிலத்திலிருந்து ஓடோடி, அங்கு சென்று பார்த்தபோது அங்கே தன்னுடைய மனைவி சாந்தி முகம் எல்லாம் வீங்கி இறந்த நிலையில் இருந்தார். பிறகு அந்த நிலச் சுவான்தாருடைய மகன் முரளி என்பவன் ஒரு மோட்டார் சைக்கிளில் உடனடியாகப் பறந்து ஓடியவர், பிறகு ஒருவரை அழைத்து வந்து அந்தப் பெண் சாந்தியை மோட்டார் சைக்கிளில் அங்கே தனியார் மருத்துவமனைக்குக் கொண்டு சென்றதாகவும், பின்னர் அங்கிருந்து கோவை அரசு மருத்துவமனைக்குச் சென்றதாகவும் அங்கே postmortem செய்யக்கூடிய இடத்தில் "10,000 ரூபாய் கொடுத்து விடுகிறேன்; ஆகவே வழக்கையெல்லாம் நீங்கள் கொடுக்காதீர்கள்" என்று சொன்னதாகவும் சொல்லப்படுகிறது. இந்தச் சம்பவம் நடப்பதற்கு முன்னாலேகூட, 17 வயதிலே உனக்கு ஒரு மனைவி வேண்டுமா என்று கேட்டு அந்த ராஜுவினுடைய ஆண் குறியிலே ஆசிட் எல்லாம் வீசி—ஆசிட்டை அடித்து—அதைப் பங்கப்படுத்தியதாகவும் சொல்லப்படுகிறது. ஆனால், அந்த முதலாளிக்குப் பயந்து அவர் முதலிலே சும்மா இருந்துவிட்டதாகவும், பிறகு முதலாளியே பச்சிலை வைத்தியம் செய்ய பணம் கொடுத்தார் என்றும் சொல்லப்படுகிறது. இப்படி, தேனிப் பகுதியிலிருந்து பிழைப்புக்காக ஒரு இடத்திற்குச் சென்றிருக்கக்கூடிய தொழிலாளர் வர்க்கம் இந்த அளவிற்குப் பாதிக்கப்படுகிறது என்று சொன்னால் காவல் துறையினர் மீது — எங்களுடைய கணக்கெல்லாம் காவல் துறையினர்மீது இப்போது — மக்களுக்கு பயமே இல்லாமல் போய்க் கொண்டிருக்கிறது என்பதை நான் மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன். பல ஆண்டுகளுக்கு முன்னாலே, நாங்களெல்லாம் சிறுவர்களாக இருந்த காலத்தை நினைத்துப் பார்க்கிறேன். அப்போது போலீஸ்காரர் ஒருவர் அரை டிரவுசரைப்



2000 மார்ச் 30] [திரு. சி. ஞானசேகரன்]

போட்டுக் கொண்டு, சிகப்புத் தொப்பியை அணிந்துகொண்டு வந்தாலே நமக்கே அச்சமாக இருக்கும், பேசக்கூட முடியாது. ஆனால், இப்போது S.P.-யே பக்கத்தில் போனாலும்கூட சிலபேர் கல்லை எடுத்துப்போட்டுவிட்டு சார், மன்னித்துக் கொள்ளுங்கள் Sorry Sir அல்லது Sorry Uncle என்று சொல்லி எப்படியாவது தப்பித்துக்கொள்ளக்கூடிய அளவிற்கு இன்று மனோதைரியம் இந்தச் சமுதாயத்தில் வளர்ந்திருப்பது ஒன்று.

இரண்டாவது, இந்தக் காவல் துறை கொஞ்சம் கட்டுக்கோப்போடு செயல்பட்டு இருந்தால் இதுபோன்ற தவறுகள் வராமல் தடுக்க முடியும். ஏனென்று சொன்னால், முதலில் பாதிக்கப்பட்டிருக்கக்கூடிய ராஜு அந்த மதுக்கரை காவல் நிலையத்திற்குப் போனபோது அங்கே இருந்த காவலர்கள், 'நீங்கள் ஏன் இதையெல்லாம் புகார் கொடுத்துக் கொண்டிருக்கிறீர்கள், வேண்டாம், எப்படியாவது பஞ்சாயத்துப் பேசி முடித்துக்கொள்ளுங்கள்' என்று சொன்னதாகவும் சொல்லப்படுகிறது. இப்படி காவல் துறையினரே கட்டைப் பஞ்சாயத்திற்குத் துணை போவார்களேயானால் இதுபோன்ற தவறிழைக்கக்கூடிய ஒரு கூட்டம். விலை கொடுத்து நாம் நீதியை விலைக்கு வாங்கி விடுவோம், யாரும் நம்மை தட்டிக்கேட்க முடியாது என்கிற ஒரு மனநிலை இன்று தமிழக மக்களிடையே சமூக விரோதிகளுக்கு வந்து கொண்டிருக்கக்கூடிய நிகழ்ச்சியை நான் மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வரக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே, காவல் துறையை நாம் கொஞ்சம் முடுக்கிவிட்டு, உடனுக்குடன் வழக்குகளைப் பதிவு செய்து, யாராவது கைது செய்யப்பட்டால்தான் ஒரு பயம் இருக்கும். அந்த பயம் இப்போது குறைந்துகொண்டே போய்க் கொண்டிருக்கிறது. காவல் துறையினுடைய அந்தத் தரத்தை உயர்த்துவதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் நடவடிக்கை எடுத்து, தவறிழைத்த முரளி என்கிற அந்த நபர் மீது இதுவரை என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது? இதுபோன்ற குற்றங்கள் தமிழகத்தில் இனி நடக்காது, இப்படி பாலியல் குற்றங்கள் பெண்கள் மீது வராமல் பார்த்துக்கொள்வதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடந்த பிரச்சினைகள் குறித்து எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள் விரிவாகவே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். நான் இந்தச் சம்பவத்தை மாநில அரசின் கவனத்திற்குக் கொண்டு வரக் காரணம் வேறு ஒரு மாவட்டத்திலேயிருந்து பிழைப்புத் தேடி கோவை மாவட்டத்தில் மதுக்கரை பகுதியிலே வழுக்குப்பாறையிலே வாழ்ந்து கொண்டிருந்த அந்த ஏழை விவசாயத் தொழிலாளியினுடைய குடும்பம் ஈடு செய்ய முடியாத ஒரு பேரிழப்புக்கு ஆட்படுத்தப்பட்டிருப்பதற்குக் காரணம் பாலியல் பலாத்காரத்தால் ஏற்பட்ட அந்த முயற்சியின் விளைவாக நடந்த கொலை என்பதைத்தான் நம்மால் பார்க்க முடிகிறது.

இதிலே இரண்டு விஷயங்களை நான் குறிப்பிட விரும்புவது, ஒரு சாதாரண விவாசாயத் தொழிலாளி குடும்பம் ஒரு பகுதியிலே போய் பிழைக்க போன இடத்திலே அந்த மிராசுதாரர் நடராஜ கவுண்டருடைய மகன் முரளி என்பவர் தொடர்பாக நடைபெற்ற சம்பவங்கள், அவற்றில் வெளிவந்திருக்கிற செய்திகளை வைத்து பார்க்கிறபோது பாலியல் பலாத்கார முயற்சிக்கு அவர் உடன்படவில்லை என்பதால்தான் இத்தகைய தாக்குதல் நடந்திருக்க வாய்ப்பிருக்கிறது என்று உறுதிபட அனுமானிக்க முடிகிறது.

இன்னொரு விஷயம். இத்தகைய முயற்சியை மேற்கொள்வதற்கு முன்னரேயே அவருடைய கணவன் போத்திராஜ் என்பவருடைய உயிர் நிலையில் acid-ஐ ஊற்றிச் சேதப்படுத்த முயற்சித்திருப்பதற்கான உள்நோக்கம் என்ன என்றும் சிந்திக்க வேண்டியிருக்கிறது. அப்படி ஒரு முயற்சி தனக்கு, தன்மீது நடத்தப்பட்டது என்று போலீசாரிடமே, இறந்து போன சாந்தியினுடைய கணவன் போத்திராஜ் report செய்திருக்கிறார். ஒரு தாக்குதல் தொடுத்தவர், குறிப்பாக அந்த சாந்தியினுடைய கணவன் போத்திராஜின் உயிர் நிலையைக் குறி வைத்துச் சேதப்படுத்த முயன்ற முயற்சிக்கான உள்நோக்கம் என்ன என்பதும் விசாரணைக்குட்படுத்தப்பட வேண்டிய விஷயமாகும். அதற்குப் பின்னரும் அவருக்கு அவற்றால் ஏற்பட்ட காயத்தைக் குணப்படுத்துவதற்கு இவரே பச்சிலை வைத்திய முயற்சிகளை எல்லாம் மேற்கொண்டிருக்கிறார் என்றும் செய்திகள் வருகின்றன. இந்த நிகழ்ச்சிகள் எல்லாம் நடந்ததற்குப் பின்னர் இது குறித்து report செய்வதற்கு மதுக்கரை போலீஸ் நிலையத்திற்குப் போனால் — நம் முதலமைச்சர் அவர்களும் பதிலளித்து இந்தப் பிரச்சினையை இதோடு



முடித்துவிட முடியும். ஆனால் நான் கேட்க விரும்புவது, ஒரு கூலித் தொழிலாளி பாதிக்கப்பட்டு போலீஸ் நிலையத்திலே போய் report செய்கிறபோது—குற்றவாளியின் மீது நடவடிக்கை எடுக்க சட்ட ரீதியாக கடமைப்பட்ட காவல் துறை தன்னுடைய கடமைப் பொறுப்பிலே இருந்து முற்றிலும் விலகி குற்றவாளிகளைக் காப்பாற்றுகிற போர்வையாக மாறுகிறது என்றால் இவர்கள் மீது ஈவு இரக்கத்தோடு நாம் அணுகவே கூடாது, முடியாது என்பதைத்தான் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். முதல் குற்றவாளி மீது பாதிக்கப்பட்ட விவசாயத் தொழிலாளி காவல் நிலையத்திலே report செய்ய வந்தால் அந்த report-ஐப் பதிவு செய்து குற்றவாளியைக் கொலை வழக்கின் கீழ் கைது செய்து சட்ட ரீதியாக நடவடிக்கை எடுக்க முற்பட வேண்டிய காவல் துறை அவர்களைப் காப்பாற்ற முயன்றிருப்பது என்பது மன்னிக்கவே முடியாத ஒரு தவறு. அந்தத் தவறை அவர்கள் செய்திருக்கிறார்கள். எனவே, அந்த மதுக்கரை காவல் நிலைய அதிகாரிகளின் மீது—எந்த அதிகாரி என்று எனக்குத் தெரியாது. அந்த அதிகாரியின் மீது—உறுதியான நடவடிக்கையை மாநில அரசு மேற்கொள்ளுமா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

அந்த பாதிக்கப்பட்ட தொழிலாளிக்கு வார்த்தைகள் ஒருபோதும் நிறைவடையாது. மேலும் ஒரு துயரம் என்னவென்றால் அந்த சாந்திக்கு இரண்டு வயதிலே ஒரு குழந்தை இருக்கிறது. இந்த போத்திராஜ்கூட இதற்குப்பிறகு ஒரு வருடம், இரண்டு வருடத்திலே முதல் மனைவியை மறந்துவிட்டு இன்னொரு மனைவியோடு கூடி வாழ்ந்துவிட்டுப் போய்விட முடியும். ஒரு ஆணாதிக்கச் சமூகத்தில் அத்தகைய நிலைதான் நிகழும். நான் இங்கே குறிப்பிட விரும்புவது, அந்தப் பெண்ணுக்குப் பிறந்திக்கிற அந்தக் குழந்தை எதிர்காலத்தில் இரண்டாந்தரக் குடிமகனாக அல்லது வேறு ஒரு பெண்ணை இவர் திருமணம் செய்து கொள்ளும்போது இவர் கவனிக்க முடியாத ஒரு விபத்து அந்தக் குழந்தைக்கு ஏற்பட்டுவிடும் என்பதால் மாநில அரசு இதற்குரிய நிவாரண நிதியை வழங்குவதோடு, அதில் பெரும்பகுதியை அந்தக் குழந்தையின் பெயரிலே deposit செய்வதற்கும் நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன். Post mortem report-லே என்ன வந்திருக்கிறது? அதன்மீது ஏன் போலீஸ் நடவடிக்கை எடுக்கவில்லை எனற விவரங்களை மாநில அரசு அறிவிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

[2000 மார்ச் 30

முற்பகல் 10-40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** யார் பேசப் போகிறீர்கள்? திரு. ஜே. ஹேமசந்திரனா, திரு. டி. மணியா? (குறுக்கீடு) திரு. டி. மணி.

**திரு. டி.மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுக்கரையில் நடந்த இந்த நிகழ்ச்சி குறித்து எனக்கு முன்னால் பேசிய மாமன்ற உறுப்பினர்கள் அதனுடைய விவகாரங்களையெல்லாம் தெளிவுபடுத்தியிருக்கிறார்கள். நான் அது சம்பந்தமாகக் கூற விரும்புவது இப்படியொரு நிகழ்ச்சி — கொலை நிகழ்ச்சி — அதிலே ஒரு பாலியல் பலாத்காரம் நடந்தபின் காவல் துறையில் புகார் செய்யச் சென்றபோது அவர்கள் புகாரை ஏற்றுக்கொண்டு அதற்கு ஒரு F.I.R தயாரித்து குற்றவாளிகளைக் கண்டறிவதற்குப் பதிலாக அதில் ஒரு பஞ்சாயத்து செய்யக்கூடிய அளவில் அந்த மிராசுதாரின் கை ஓங்கியது என்றால் காவல் நிலையம் அவருடைய கட்டுப்பாட்டிலேதான் செயல்படுகின்றதா? அந்த வகையிலே நம்முடைய மாநிலத்தினுடைய காவல் துறை கெட்டுப் போய்விட்டதா என்பதையும் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். அது போல, அதற்குள் வருகின்ற விசாரணை என்பதில் — நம்முடைய மாமன்றத்திலே பல முறை இப்படிப்பட்ட பல்வேறு நிகழ்ச்சிகள் நடந்தது பற்றி, காவல் துறையினுடைய தவறான அணுகுமுறைகளைப் பற்றியெல்லாம் நாம் கூறியிருக்கிறோம். நம்முடைய மண்ணிலே இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் இனி நடைபெறாமல் உரிய வகையில் காவல் துறை அதிகாரிகள் மீது கடுமையான நடவடிக்கையை மேற்கொள்வதன் மூலமாகத்தான், அப்படியொரு, முன்மாதிரியான தண்டனையை வழங்கக்கூடிய நடவடிக்கையின் மூலமாகத்தான் காவல்துறை தன்னுடைய கடமையைச் சரிவர நிறைவேற்றும் — அந்த வகையில் நம்முடைய மாநில அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நான் இறுதியாகச் சொல்வது என்னவென்றால் அந்தக் குடும்பத்திற்கு நாம் என்ன கொடுத்தாலும் சரி, நம்முடைய அரசு என்ன வழங்கினாலும் சரி, ஈடு செய்ய முடியாத ஒரு இழப்பாக அது ஏற்பட்டிருக்கிறது. எனவே, இந்த வகையான துயர நிகழ்ச்சிகள் நடைபெறாமல் இருக்க அரசு உரிய நடவடிக்கையை மேற்கொள்ளுமா என்று கேட்டு என் பேச்சை முடிக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.



2000 மார்ச் 30]

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.....

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கொஞ்சம் இருங்கள். ஒரு நிமிடம். அலுவல் ஆய்வுக் குழுவிலே முடிவு எடுத்தபோது டாக்டர் கிருஷ்ணசாமி, நீங்களும் இருந்தீர்கள். பரீட்சார்த்தமாக 10 நாட்களுக்கு, பிரதான எதிர்க்கட்சிக்கு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுப்பவர்களிலே முன்னுரிமை அளித்து, நேரத்தின் அடிப்படையில் அதாவது யார் முதலிலே கொடுத்திருக்கிறார்களோ அவர்களிலே முதல் இரண்டு பேரை அழைப்பது என்று முடிவு எடுத்திருக்கிறோம். அது பரீட்சார்த்தமாக, அடுத்த அலுவல் ஆய்வுக் குழுவில் இறுதி முடிவு எடுக்கும்வரை நடைமுறைப்படுத்தப்படும். மேலும், நாடாளுமன்றத்திலே நடைபெறுகிற மாதிரி ballot system கொண்டு வருவதுபற்றி அப்பொழுது முடிவு செய்யப்படும். 17 பேர் பேசுவதற்கு இனிமேல் நேரம் கொடுக்க முடியாது என்கிற முடிவு அலுவல் ஆய்வுக் குழுவிலே எடுக்கப்பட்டது. இது டாக்டர் கிருஷ்ணசாமி அவர்களுக்குத் தெரியும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினை குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் ஞானசேகரன் அவர்களும், சுப்பராயன் அவர்களும், மணி அவர்களும் தங்களுடைய கருத்துகளை எடுத்துக் கூறியிருக்கின்றார்கள். இந்த மூவருடைய பேச்சிலும் போலீஸ்காரர்கள்தான் குற்றம் சாட்டப்பட்டிருக்கிறார்கள். நான் பல முறை இங்கே கூறியிருக்கிறேன். நம்முடைய தமிழ்நாட்டிலே இருக்கின்ற போலீஸ்காரர்களுடைய எண்ணிக்கை ஏறத்தாழ 80 ஆயிரம்தான். 6 கோடி மக்கள் வாழ்கிறோம். இந்த 6 கோடி மக்கள் வாழ்கின்ற மாநிலத்தில் எங்கேயாவது ஒரு தோட்டத்திலே நடைபெறுகின்ற கற்பழிப்புச் சம்பவம், ஒரு வீட்டிற்குள்ளே ஒரு வில்லன் புகுந்து நடத்துகின்ற கற்பழிப்புச் சம்பவம் இவை எல்லாம் இந்த 80 ஆயிரம் பேர்களின் கவனத்திற்குச் சென்று அவர்கள் வந்து தடுத்துவிடுவது என்பது இயலாத காரியம். ஆனால் ஒன்று, அது நடைபெற்ற பிறகு அதிலே அலட்சியம் காட்டப்பட்டதா என்பது கேள்விக்குரிய பிரச்சினை.

ஞானசேகரன் இன்னொன்றையும் சொன்னார். "நான் எல்லாம் சின்னப் பிள்ளையாக இருந்தபோது போலீஸ்காரர்கள் என்றால் பயம் இருந்தது; இன்றைக்கு போலீஸ்காரர்கள் என்றால் பயமே இல்லை" என்று சொன்னார். அந்த பயத்தைப் போக்கியதும் காங்கிரஸ்காரர்கள்தான் என்பதை நான் ஞானசேகரன் அவர்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) இது ஏதோ குற்றஞ்சாட்டுவதாக அல்ல.

முற்பகல் 10-45

போலீஸ்காரர்கள் நம்முடைய நண்பர்களாக இருக்க வேண்டும். காவல் துறையும், நாமும், பொதுமக்களும் நட்போடு இருக்க வேண்டும்; நட்புணர்வோடு பழக வேண்டும் என்றெல்லாம் காங்கிரஸ் சார்பிலே ஆட்சி நடந்தபோது படம் எல்லாம் எடுக்கப்பட்டு, நண்பர் பரமகுரு அவர்களுடைய முயற்சியால் அந்தப் படம் வெளியிடப்பட்டது காங்கிரஸ் ஆட்சியிலே. ஆனால், நண்பர்களாக இருப்பதிலே தவறில்லை. நண்பர்களாக ஆக்கிவிட்டு, அதைத் தவறு என்று ஞானசேகரன் அவர்கள் சொல்வது பழைய காங்கிரஸ் ஆட்சியைக் குறை கூறுவதாக இருக்கக்கூடும். ஒரு காலத்தில் போலீஸ்காரர்களைப் பார்த்து நெருப்புக் குச்சி என்றே சொல்லி அவர்களைக் கிண்டல் செய்ததும் நான்தான். இது ஒரு காலத்திலே நடந்தது. இன்றைக்கு அதுமாதிரியா என்றால், அவர்கள் தங்களுடைய கடமையைத் சரிவரச் செய்யவேண்டும் என்பதிலே எனக்கு வேறுபட்ட கருத்தே கிடையாது. ஆனால் இதுபோன்ற சில சம்பவங்களிலே, போலீஸ்காரர்களுக்கு எந்த அளவுக்குப் பங்கு இருக்கிறது என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். இந்த நிகழ்ச்சியைப் பொறுத்தவரையில், பத்திரிகைகளிலே வந்த செய்திகளை மாத்திரம் வைத்துத்தான் நமது மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே பேசியிருக்கின்றார்கள்; பேச முடியும். இதற்கு மேற்பட்ட தகவல்களை அறிந்து கொள்வது என்பது இயலாத காரியம். ஏனென்றால், தகவல்களை அறிந்து கொள்ளக்கூடிய சகல சாதனங்களையும் படைத்துள்ள அரசுக்கே முழுமையான தகவல்கள் வந்து சேரவில்லை; குழப்பமான தகவல்கள்தான் வந்திருக்கின்றன. வந்துள்ள தகவல்களை இங்கே நான் எடுத்துக் காட்ட விரும்புகின்றேன்.

கோவை மாவட்டத்தில் மதுக்கரை காவல் நிலைய எல்லையில் நடைபெற்ற இந்தச் சம்பவம் குறித்து இரண்டுவிதமான கருத்துகள்





வந்துள்ளன. உண்மையான முழு விவரம் தீவிரப் புலன் விசாரணைக்குப் பிறகுதான் தெரியவரும். என்றாலும் இதுவரை கிடைத்துள்ள விவரங்களை அவையிலே தெரிவிக்க விரும்புகின்றேன். இச்சம்பவம் குறித்து, கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் நேற்று நள்ளிரவில் கொடுத்த அறிக்கை வருமாறு:

இந்த மரணம், திருமணமாகி ஏழு ஆண்டுகளுக்குள் நடைபெற்றது என்பதால், உட்கோட்ட நீதிபதி மற்றும் வருவாய்க் கோட்டாட்சியரின் விசாரணைக்காக உட்படுத்தப்பட்டு, குற்றவியல் பிரிவு 174-ன் கீழ் 28-3-2000 அன்று பிரேத விசாரணை மேற்கொண்டுள்ளார்கள்.

தேனி மாவட்டத்தைச் சேர்ந்த ஆங்கத் தேவர் மற்றும் பேச்சியம்மாள் ஆகிய தம்பதியினர், தங்களது மகள் சாந்தியை அவர்களது உறவினருடைய மகன் போத்திராஜன் என்பவருக்கு மூன்று ஆண்டுகளுக்கு முன்பு திருமணம் செய்து வைத்துள்ளனர். இவர்களுக்கு இப்போது இரண்டு வயதில் ஒரு ஆண் குழந்தை இருக்கின்றது. இவர்கள் கோவை தெற்கு மாவட்டத்தில் வழுக்குப்பாறை கிராமத்தைச் சேர்ந்த முரளி என்பவருடைய தோட்டத்தில் வேலை செய்து, அங்கேயே குடிசை போட்டுக்கொண்டு குடியிருந்து வருகின்றார்கள். இதற்குப் பக்கத்துத் தோட்டத்தில், சாந்தியின் பெற்றோர் தோட்ட வேலை செய்து, குடியிருந்து வருகின்றார்கள்.

சம்பவம் நடைபெற்ற 27-3-2000 அன்று காலையில் சாந்தி தனது பெற்றோர் வசிக்கும் தோட்டத்துக்கு வந்து, தனது குழந்தையை வழக்கம்போல் தன் தாயாரிடம் ஒப்படைத்துவிட்டுச் சென்றிருக்கிறார்.

சாந்தியின் கணவர் போத்திராஜன், தனது வாக்குமூலத்தில் தானும் சாந்தியும் தோட்டத்தில் களை எடுத்துக் கொண்டிருந்ததாகவும், சாந்தி தண்ணீர் குடிக்க குடிசைக்குச் சென்றதாகவும், அதன்பின் முரளி அங்கே வந்து, சாந்தி குடிசைக்குச் சென்றிருப்பதைத் தன்னிடம் விசாரித்துத் தெரிந்து கொண்டு சென்றதாகவும், சிறிது நேரத்தில் 'மாமா' என்ற சாந்தியின் அலறல் கேட்டு குடிசைக்கு ஓடியதாகவும், அப்போது முரளி அங்கிருந்து வெளியேறி வந்ததைப் பார்த்ததாகவும், குடிசைக்குள் சாந்தி தலைகுப்புற மூச்சுபேச்சு இல்லாமல் கிடந்ததாகவும், சாந்தியின் மரணத்துக்கும் முரளிக்கும் தொடர்பு இருக்கிறது என்றும் தெரிவித்திருக்கிறார். இவ்வாறே சாந்தியின் பெற்றோர்களும் பிரேத விசாரணையில் உட்கோட்ட நிர்வாக நடுவரிடம் கூறியுள்ளனர்.

பிரேதப் பரிசோதனையில் இடதுபுற நெற்றியில் காயம், இடதுகாலில் முட்டிக்குக் கீழ் காயம், வலது காலில் முட்டிக்குக் கீழே காயம், இடதுகால் பாதத்தில் காய வடு, வலது தோளில் சிராய்ப்பு, வலது கண்ணின் வலதுபுறம் காயம், இடது கை முட்டிக்கு மேல்புறம் கறுப்பு நிற வடு முதலான சிறு சிறு காயங்கள் காணப்படுகின்றன. கோவை வருவாய் உட்கோட்ட நிர்வாக நடுவர் (R.D.O.) தனது அறிக்கையில், இந்தப் பெண்ணின் மரணம் குறித்து, தீவிரப் புலன் விசாரணை மேற்கொள்ள வேண்டுமென்று தெரிவித்திருக்கின்றார். ஆனால், காவல் துறையின் முன்னால் போத்திராஜன் கொடுத்த வாக்குமூலங்கள் மாறுபாடாக உள்ளன. அவர் கொடுத்த வாக்குமூலங்கள் மாறுபாடாக இருக்கின்றன. அதுபற்றி அவரிடம் கேட்டபோது, மனைவி இறந்த துக்கத்தில் மாறி மாறிப் பேசுவதாகவும், தனக்குப் பயந்த சுபாவம் இருப்பதால் காவல் துறையினர் விசாரிக்கும்போது அச்சம் ஏற்படுவதாகவும் தெரிவித்திருக்கிறார். மேலும் முரளி அவராகவே முன்வந்து, சாந்தி மருந்து குடித்திருக்கலாமென்று சொல்லியதாலும், மருத்துவமனைக்கு அவரே அழைத்துச் சென்றதாலும், மேலும் கூலியையே சரிவரத் தராத முரளி சம்பவத்திற்குப் பின் எவ்வளவு பணம் வேண்டுமானாலும் தர முன்வந்துள்ளதாகவும், அவர் மீது தனக்குச் சந்தேகம் இருப்பதாகவும் கூறுகிறார். அதேசமயம், பணியாற்றுபவர்களிடம் கடுமையாக வேலை வாங்கும் தன்மையை முரளி எப்போதுமே கொண்டிருந்ததாலும், போத்திராஜனைப் பலமுறை அதட்டி, அடித்து வேலை வாங்கியிருப்பதாலும், அவருடைய மர்ம ஸ்தானத்தில் ஆசிட் ஊற்றப்பட்டது என்று வருவாய்க் கோட்டாட்சியரின் விசாரணையில் தெரிவிக்காததை உறவினர்களின் வற்புறுத்தலின்பேரில் பத்திரிகையாளர்களிடம் தெரிவித்ததாக இவரே ஒப்புக்கொள்வதாலும், இவரது கூற்றை அப்படியே ஏற்றுக்கொள்ள முடியாத நிலை உள்ளது.

முற்பகல் 10-50

மேலும் சம்பவம் நடைபெற்ற அன்று காலையில் போத்திராஜனுக்கும் சாந்திக்கும் இடையே, சாந்தி ஊரில் இல்லாதபோது கூலி பாக்கியில் 200 ரூபாயை முரளியிடம் பெற்றது குறித்து, வாக்குவாதமும் நடைபெற்றுள்ளது. பிரேதப் பரிசோதனை அறிக்கை இன்னும் பெறப்படவில்லை. எனவே, இந்த நிலையில் காவல் துறையினுடைய சம்பவ அறிக்கையும் நிர்வாக நடுவரின் விசாரணை அறிக்கையும்





மாறுபாடாக உள்ள நிலையில் இச்சம்பவத்தில் தீவிர விசாரணை தேவைப்படுகிறது. இந்த ஏழைப் பெண்ணின் மரணம் குறித்து பெற்றோருக்கும் கணவனுக்குமே சந்தேகம் இருப்பதாலும், இதனை ஒரு சிறப்பு நேர்வாகக் கருதி குற்றப் புலனாய்வுத் துறை (C.B., C.I.D.) விசாரணைக்கு இந்த வழக்கு மாற்றப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 3. தகவல் கோரல்

### (அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

(திரு. பி.ஆர். சுந்தரம், டாக்டர் க. கிருஷ்ணசாமி ஆகியோர் எழுந்து நின்றனர்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம், உட்காருங்கள், டாக்டர் க. கிருஷ்ணசாமி.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் நேற்று காலையிலே 9 மணிக்கே கொண்டு வந்து உங்கள் அறையிலே கொடுத்துவிட்டேன். நான்தான் முதலில் கொடுத்தது. அப்படியிருக்கும்போது என்னை ஏன் கூப்பிடவில்லை? நான்தான் முதலில் கொடுத்தேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்னிடத்தில் இருக்கிற நேரப்படி நீங்கள் முதலில் கொடுக்கவில்லை.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** நான்தான் முதலில் கொடுத்தேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எனக்குக் கொடுத்த விவரப்படி நீங்கள் முதலில் இல்லை.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** நான்தான் முதலில் கொடுத்தேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அப்படியிருந்தால் அதை மாற்றிக்கொள்கிறேன். ஆனால் இங்கே பாருங்கள். திரு. டி. மணி, திரு. ஜே. ஹேமச்சந்திரன் - 8-49, திரு. கே. சுப்பராயன், 8-45, டாக்டர் க. கிருஷ்ணசாமி - 9-13.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** உங்களுடைய அறைக்கு வந்து நீங்கள் வந்த பிறகு கொடுத்தது. நான் பேரவைத் தலைவர் அறைக்கு 9 மணிக்கு முன்பாகவே வந்துவிட்டேன். பேரவைத் தலைவர் அவர்கள் 9-12 மணிக்கு வந்தீர்கள். அதற்கு நான் எப்படிக் காரணமாக இருக்க முடியும்? நான் 9 மணிக்கு முன்பு வந்துவிட்டேன். அறையில் பேரவைத் தலைவர் இல்லை, அதனால் நான் கொடுக்கவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது என்னிடம் கொடுத்த நேரம் இல்லை. இது செயலரிடம் கொடுத்த நேரம்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** பேரவைத் தலைவரிடம் கொடுக்க வேண்டுமென்பதற்காக....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்னிடம் கொடுத்த குறிப்பின்படி, நீங்கள் நான்காவதாகக் கொடுத்திருக்கிறீர்கள். நீங்கள் இல்லையென்று சொன்னால், என்னுடைய அறைக்கு வாருங்கள், நான் விசாரித்துச் சொல்கிறேன். திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த செவ்வாய்க்கிழமை அன்று கரும்பு விவசாயிகள் தங்களுடைய கோரிக்கைகளை வலியுறுத்திக் கோட்டை முன்பு....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான்தான் அனுமதி இல்லை என்று சொல்லிவிட்டேனே, அதற்குப் பிறகு ஏன் திரும்பப் பேசுகிறீர்கள்?

**திரு. பி.ஆர். சுந்தரம்:** போலீஸ் தடியடி....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான்தான் அனுமதி இல்லை என்று சொல்லிவிட்டேன். நான்தான் அனுமதி கிடையாது என்று சொல்லிவிட்டேன். (குறுக்கீடு) பேசவிடமாட்டேன் என்று சொல்லிவிட்டேன். (குறுக்கீடு) முடியாது என்று சொல்லிவிட்டேன். பிறகு, எப்படி mike கொடுப்பார்கள்? நான் அனுமதி கொடுக்கவில்லை என்று சொன்னால் mike எப்படி உங்களுக்குக் கொடுப்பார்கள்?

**திரு. பி.ஆர். சுந்தரம்:** இது விவசாயிகளுடைய....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உங்களுடைய எதிர்ப்பைக் காட்ட வேண்டுமென்றால் "வெளிநடப்புச் செய்கிறேன்" என்று சொல்லுங்கள். "பேரவைத் தலைவர் உத்தரவை எதிர்த்து வெளிநடப்புச்



செய்கிறேன்" என்று சொல்லுங்கள். எனக்கு ஒன்றும் ஆட்சேபணை இல்லை. நீங்கள் எப்படி அனுமதி மறுத்தீர்கள் என்று என்னைக் கேட்கக்கூடாது.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** Request-தான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நானும் Request-ஆகத்தான் சொல்கிறேன், அனுமதி மறுத்துவிட்டேன் என்று. நான் ரொம்ப சாந்தமாகச் சொல்கிறேன். (குறுக்கீடு) சரி, சொல்லுங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** விவசாயிகள்மீது போலீஸார் தடியடி நடத்தியிருக்கிறார்கள். அவர்களுடைய நியாயமான கோரிக்கையைத்தான் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, அந்த விவசாயிகள்மீது நடவடிக்கை எடுத்து அடித்த அந்த போலீஸ்மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். அந்த விவசாயிகள் விடுதலை செய்யப்பட்டுவிட்டார்களா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

## (ஆ) பேரவை புறவாரத்தில் உளவுத் துறையினர் அமர்தல்

**திரு. சி. ஞானசேகரன்:** Point of Order. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையினுடைய இறையாண்மை குறித்த ஒரு பிரச்சினையை நான் கிளப்ப விரும்புகிறேன். இங்கே அவை கூடிய பிறகு, சட்டமன்ற உறுப்பினர்கள் லாபியிலே இருக்கக்கூடிய இடத்தில் காவல் துறையைச் சார்ந்த உளவுத் துறை நபர்கள் எல்லாம் அமர்ந்து கொண்டு, நடமாடிக் கொண்டிருப்பது என்பது சரியல்ல. இது இந்த அவையினுடைய உறுப்பினர்களுடைய உரிமையைப் பொறுத்த விஷயம். ஆகவே, தங்களுடைய ஆளுகைக்கு உட்பட்ட இந்த அவையினுடைய வளாகத்திற்குள்ளே உளவுத் துறையைச் சார்ந்தவர்கள், அவை கூடிய பிறகு, அவை முடிகிற வரையில் யாரும் அங்கே லாபி இருக்கையிலே அமர்ந்து பேசக்கூடாத ஒரு நிலையைத் தாங்கள் உருவாக்கித் தரவேண்டும் என்கிற பணிவன்பான வேண்டுகோளைத் தங்கள் முன்னாலே பதிய வைக்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது உண்மையாக இருக்கும் பட்சத்தில் நான் நடவடிக்கை எடுப்பேன். முதலமைச்சருடைய பாதுகாப்புத் துறை அதிகாரிகள் பக்கத்திலே உட்காருவதில் ஒன்றும் தவறில்லை. அவர்கள் ஒன்றும் உளவுக்காக வரவில்லை. முதலமைச்சரின்

[பேரவைத் தலைவர்] [2000 மார்ச் 30

பாதுகாப்புக்காக, ஒன்றிரண்டு அதிகாரிகள் வருவார்கள். அவர்கள் இருக்க இடமில்லையென்று சொன்னால் உட்காருவார்கள். அங்கு உட்காரக்கூடாது என்றால்கூட நான் வேறு இடம் கொடுக்கிறேன். இதிலே வேறு ஒன்றும் உளவு பிரச்சினை கிடையாது.

**திரு. இரா. தாமரைக்கனி:** இல்லை, லாபியிலே உட்கார்ந்து இருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** லாபியிலே இருந்தால் நடவடிக்கை எடுக்கிறேன் என்று நான் சொல்லியிருக்கிறேன். (குறுக்கீடு) லாபியிலே இருந்தால் நடவடிக்கை எடுக்கிறேன் என்று சொல்லியிருக்கிறேன். உட்காருங்கள்.

## 4. அறிக்கைகள் அளித்தல்

### பொதுக் கணக்குக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, பொதுக் கணக்குக் குழுவினுடைய அறிக்கைகளை அளித்தல். திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1999-2000 ஆண்டிற்கான 223 முதல் 227 வரையிலான பொதுக் கணக்குக் குழுவின் ஐந்து அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கின்றேன்.

*முற்பகல் 10-55*

## 5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)

### (அ) தமிழ்நாடு நிதி ஒதுக்க (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு, 2000

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்). 2000 ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்க (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 2/2000). மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,



2000 மார்ச் 30] [கலைஞர் மு. கருணாநிதி]

"2000 ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்க (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 2/2000) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்".

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2, 3 மற்றும் இணைப்புப் பட்டியல், திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2, 3 மற்றும் இணைப்புப் பட்டியல், சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

---

@ 28-3-2000 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2000 ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்க (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 2/2000) நிறைவேற்றப் பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

### (ஆ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, 2000

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2000 ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 4/2000). மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2000 ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 4/2000)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

---

@ 29-3-2000 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவு 2 மற்றும் இணைப்புப் பட்டியல், திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 மற்றும் இணைப்புப் பட்டியல், சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

[2000 மார்ச் 30

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2000 ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 4/2000) நிறைவேற்றப் பெற வேண்டும்" எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## 6. வரவு-செலவுத் திட்டம், 2000-2001, பொது விவாதம்— தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, 2000-2001 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தின் மீதான பொது விவாதம் — தொடர்ச்சி, டாக்டர் தே. குமாரதாஸ். மணி இப்போது 10-58.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** அது இருக்கட்டும் தலைவரே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இருக்கட்டுமா? எங்கு இருக்கட்டும்?

**டாக்டர் தே. குமாரதாஸ்:** நீங்கள் சொன்னது correct-தான். நேரம் 10-58 என்று சொன்னேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** correct-தானே. நான் உட்காரச் சொல்லும் நேரமும் correct-ஆக இருக்கும். அப்போது உட்கார்ந்துவிட வேண்டும்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிற



2000-2001 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின் மீது பேசுகின்ற வாய்ப்பினைத் தந்ததற்காக முதலாவது உங்களுக்கும், தமிழ் மாநில காங்கிரஸ் பேரியக்கத்திற்கும் நான் நன்றியைச் சொல்லி, சில கருத்துகளை இங்கே கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

தொடர்ச்சியாக நான்கைந்து நாட்களாக நடைபெறுகின்ற விவாதத்தில் ஆளும் கட்சியைச் சார்ந்தவர்கள் 'பட்ஜெட்டில் விஷயம் இருக்கிறது' என்றும், எதிர்க்கட்சியில் இருக்கிறவர்கள், 'இல்லை' என்றும் விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஆனால் நான் சாமானியன் என்கிற பார்வையில், தந்தை பெரியார் அவர்களுடைய சீடர்களாகிய நீங்கள் அளித்திருக்கிற பட்ஜெட்டில் பார்க்கிறபோது, தந்தை பெரியார் அவர்களுடைய பாஷையில் சொல்வதாக இருந்தால், இது ஒரு வெங்காய பட்ஜெட் என்றுதான் சொல்ல முடியும். வெங்காயம் என்று சொன்னால் ஒரு பொருள் இருக்கிறது. உரித்துப் பார்த்தால் ஒன்றும் இருக்காது. அதைப்போல 53 பக்கம் இருக்கிறது, படித்துப் பார்த்தால் ஒன்றும் இல்லை.

முற்பகல் 11-00

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, உரித்துப் பார்த்தால் ஒன்றும் இல்லை. சாப்பிட்டுப் பார்த்தால் இருதயத்திற்கு ரொம்ப நல்லது. வெங்காயத்தைப் போன்ற சிறந்த மருந்து இருதயத்திற்கு வேறு இல்லை என்று டாக்டர்கள் எல்லாம் சொல்லி இருக்கின்றார்கள். (சிரிப்பு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குமாரதாசே ஒரு டாக்டர். நீங்களே டாக்டர் பட்டம் வைத்திருக்கிறீர்கள். என்ன டாக்டர் என்று தெரியவில்லை.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** வெங்காயத்தினுடைய தன்மையை அதிகமாக அறிந்த டாக்டர்; சித்த டாக்டர். ஆக, வெங்காயத்தை உரிக்கிறபோது எப்படி நம்முடைய கண்களிலே கண்ணீர் வருகிறதோ, அதேபோல, தமிழக மக்களுடைய கண்களிலே கண்ணீர் வந்துகொண்டிருக்கிறது. அதைத்தான் நான் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** கொஞ்சம் தொலைநோக்கோடு அதை உரிக்க வேண்டும். பக்கத்திலே வைத்து உரித்தால் கண்களில் கண்ணீர் வரும்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** இதிலே தொலைநோக்கே இல்லை என்பதுதான் என்னுடைய குற்றச்சாட்டு. 2000-2001 ஆம் ஆண்டு வரவு-செலவு திட்டத்தை 21,564 கோடி ரூபாய்க்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் தந்திருக்கிறார்கள். முந்தைய அரசு அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அரசு 10,543 கோடி ரூபாய்க்கு வரி போட்டிருக்கிறார்கள். இந்த நான்கு ஆண்டுகளில் சரியாக 100 சதவீதம் 10,500 கோடி ரூபாய்க்கு புதியதாக வரிகளை நீங்கள் போட்டிருக்கிறீர்கள். இந்த 10,500 கோடி ரூபாய்க்கு நான்கு ஆண்டுகளில் வரி விதித்திருக்கிற நீங்கள், ஆட்சிக்கு வருவதற்கு முன்பாகச் சொன்னது என்ன? வருமானம்; ஆட்சிக்கு வருவதற்கு முன்பாக நீங்கள் சொன்னது என்ன? வரி.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வரி வேறு, வருமானம் வேறு.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** வரியைப் போட்டுத்தானே வருமானம் வரும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது எப்படி நீங்கள் சொல்ல முடியும்?

**டாக்டர் தே. குமாரதாஸ்:** அந்த வழியில்தான் வரும், வேறு எப்படி வர முடியும்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** த.மா.கா. ஆட்சிக்கு வந்தால் நீங்கள் நிச்சயமாக நிதியமைச்சராக இருக்க முடியாது. (சிரிப்பு)

**டாக்டர் தே. குமாரதாஸ்:** ஆக, இந்த 10,500 கோடி ரூபாய் என்று சொல்கிறபோது வளர்ச்சித் திட்டங்கள் என்ன இருக்கின்றன? அதே சத்துணவுத் திட்டம்; அதே இலவச மின்சாரம்; அதே இலவச வேட்டி, சேலைத் திட்டம்; அப்படித்தான் இருக்கிறதே தவிர, பல்லாயிரக்கணக்கான இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புக் கொடுக்கிற விதத்தில் ஏதாவது ஒரு திட்டம் உண்டா? அறிவித்திருக்கிறீர்களா? இல்லை. இங்கே அன்றைக்கு சொன்னீர்கள். "கூலி உயர்வு கேட்டான் அத்தான், குண்டடிப்பட்டு செத்தான் அத்தான்" என்று 1967-லே சொன்னீர்கள். இப்போது கரும்புக்கு விலை கேட்டால் தடியடி, பட்டதாரி ஆசிரியர்கள் வேலைவாய்ப்பு வேண்டுமென்று கேட்டால் தடியடி, இதெல்லாம் உங்களுடைய ஆட்சியிலே தொடர்ச்சியாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறதே, இதெல்லாம் நியாயம்தானா என்று நான் கேட்க ஆசைப்படுகிறேன். அன்றைக்கு தலைவர் காமராஜர் தமிழகத்தினுடைய முதலமைச்சராக இருந்தபோது, தமிழகத்திலேயிருந்து



தேர்வு செய்யப்படக்கூடிய I.A.S., I.P.S. அதிகாரிகளின் எண்ணிக்கை அதிகமாக இருந்தது. ஆனால், இப்போது வேதனையான செய்தி என்ன என்று சொன்னால், சுமார் ஒரு மாதத்திற்கு முன்பாக India Today பத்திரிகையிலே ஒரு புள்ளிவிவரக் கணக்கைப் போட்டிருக்கிறார்கள். இந்தியாவில் இருப்பதில் 21 முதல் 22 சதவீதம் I.A.S., I.P.S. அதிகாரிகள் ஊழல் புரிபவர்கள் தமிழ்நாட்டிலே இருக்கிறார்கள் என்று ஒரு புள்ளிவிவரத்தைச் சொல்லி Internet-லே அறிவித்துக் கொண்டிருக்கிறார்கள். எவ்வளவு கேவலமான சூழ்நிலை? (குறுக்கீடுகள்) தவறு யார் செய்தாலும், ஜெயலலிதா செய்தாலும் தவறுதான். கலைஞர் அவர்கள் செய்தாலும் தவறுதான். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைதியாக இருங்கள்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** தவறைப் பற்றித்தான் சொல்வேன். எந்த அரசாங்கமாக இருந்தாலும் தவறு நடக்கக் கூடாது என்பதுதான் என்னுடைய வாதம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, உங்களுடைய வாதத்தை முறையாகச் சொல்லுங்கள். இங்கே இருக்கக் கூடியவர்களில் 1/4 பங்கு அதிகாரிகள் ஊழல் குற்றச்சாட்டுக்கு உள்ளானவர்கள் என்று ஒரு செய்தி வந்திருக்கிறது. அதை வைத்து உங்களுடைய கருத்து என்ன? அதை வைத்து அரசை எப்படிக் குறை சொல்ல முடியும்? I.A.S. அதிகாரிகளை எடுக்கிற பொறுப்பு இந்த அரசுக்குக் கிடையாது.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** அதாவது ஆட்சியிலே இருப்பவர்கள் சரியாக இருப்பார்கள் என்று சொன்னால், இப்படிப்பட்ட அலங்கோலங்களைத் தடுத்து நிறுத்துவிட முடியும் என்பதுதான் என்னுடைய வாதம். எனவே, I.A.S., I.P.S. தேர்விலே, இப்போது பார்ப்பீர்கள் என்று; சொன்னால், 5 பேர், 6 பேர் தான் I.A.S., I.P.S. அதிகாரிகள் தேர்வில் தமிழ்நாட்டில் இருந்து வருகிறார்கள். ஆகவே, percentage குறைந்து வருகிறது. அவற்றையெல்லாம் நீங்கள் கருத்திலேகொண்டு வருங்காலத்தில் அதிகமானவர்கள் மேலதிகாரிகளாக வருகிற விதத்திலே, இவர்களை உருவாக்குவதற்கான முயற்சிகளைச் செய்ய வேண்டும். சொன்னதைச் செய்வோம். செய்வதைச் சொல்வோம் என்று சொன்னீர்கள். நான் கேட்கிறேன், மரியாதைக்குரிய முதல்வர் அவர்கள் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு வந்திருக்கின்ற நேரத்திலே சொன்னார்கள். கன்னியாகுமரி மாவட்டத்திற்கு ஒரு மருத்துவக் கல்லூரி

தருவோம் என்று சொன்னார்கள், செய்தார்களா? கன்னியாகுமரி மாவட்டத்திற்கு வருகை தந்திருக்கின்ற நேரத்திலே கனரக ரப்பர் தொழிற்சாலை 300 கோடி ரூபாய்க்குத் தருவோம் என்று சொன்னார்கள். செய்தார்களா? கடந்த பட்ஜெட் கூட்டத்தொடரிலே சொன்னார்கள், பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட 5 ஆயிரம் மாணவர்களுக்குக் கணினிப் பயிற்சி கொடுப்போம் என்று சொன்னார்கள். ஓராண்டு ஆயிற்றே செய்தார்களா? சொன்னதை எதைச் செய்திருக்கிறார்கள்? ஆக, இந்த விவாதம்.....

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, 666 மேல்நிலைப் பள்ளிகளில் மாணவர்களுக்குக் கணினிப் பயிற்சி தரப்பட்டிருக்கிறது இப்போது. மீதமுள்ள பள்ளிகள் கிட்டத்தட்ட 500. 500 பள்ளிகளுக்கு இந்த ஆண்டு தரப்படும் என்று பட்ஜெட்டிலே எழுதப்பட்டிருக்கிறது. அதைப் படித்துப் பார்க்காமலே வெங்காயத்தையே உரித்துக் கொண்டிருந்தால் அப்படித்தான் ஆகும்.

*முற்பகல் 11-05*

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்த ஆண்டு சொல்லி இருக்கிறீர்கள்?

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, போன ஆண்டே கொடுத்தாகிவிட்டது.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** இதுவரைக்கும் படித்தவர்கள் பட்டியலைச் சொல்லுங்கள் பார்ப்போம்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் என்னோடு வந்தால் இன்றைக்கே அந்த மேல்நிலைப் பள்ளிகளை எல்லாம் அவருக்குக் காட்டத் தயாராக இருக்கிறேன். எப்படி இந்த அறைகூவலை அவர் ஏற்றுக்கொள்கிறார் என்பதை தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** ஆரம்பித்து இருந்தால் நன்றி.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** பக்கத்திலே உட்கார்ந்து இருக்கிற அருமை நண்பர் சுதர்சனம் அவர்கள் என்னோடு வந்து பூந்தமல்லியிலே பள்ளிகளை எல்லாம் பார்வையிட்டு இருக்கிறார்; அவரே சாட்சி; அவர் எழுந்து சொல்லட்டும், உண்டா, இல்லையா என்று.



**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைப்போல சுகாதாரத் துறை என்று வருகிறபோது, இந்த பட்ஜெட்டிலேயே சொல்லி இருக்கிறார்கள், சுகாதாரத் துறையின் மூலம் வருமுன் காப்போம் திட்டத்திலே ஒன்றாவது வகுப்பு முதல் 12-வது வகுப்பு வரை படிக்கிற பிள்ளைகள் 59 இலட்சம் பேரைப் பரிசோதனை செய்து பார்த்தோம்.....

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது வாழ்வொளித் திட்டத்தின்கீழ்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** சரி; அந்த வாழ்வொளித் திட்டத்திலே தந்து இருக்கிற report என்ன தெரியுமா? 29 இலட்சத்து 67 ஆயிரம் பிள்ளைகள் பல்வேறுவிதமான நோய்களால் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள் என்று இருக்கிறது. இது என்னது? (குறுக்கீடு) சரி பாதிக்கும் அதிகமானவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசாங்கம் அந்தத் திட்டத்தை அறிவித்து மாணவர்களைச் சோதனை செய்யும்போதுதான் ஏழை வீட்டுப் பிள்ளைகளின் பல் சொத்தையாக இருப்பது, கண் மங்கி இருப்பது, உடலிலே சொரி சிரங்கு இருப்பது மற்றும் இதுபோன்ற நோய்கள் இருப்பதெல்லாம் கண்டுபிடிக்கப்பட்டு, இத்தனை குழந்தைகளுக்கு இன்னின்ன நோய்கள் இருக்கின்றன என்று கண்டுபிடிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இதற்கு முன்னாலே தமிழ்நாட்டிலே இப்படிப்பட்ட முயற்சியை யாரும் எடுக்கவில்லை. அந்த ஏழைக் குழந்தைகளுக்கும் நல்வாழ்வு கொடுக்க வேண்டும் என்பதுதான் முதல்வருடைய திட்டம்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** Point of Order.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்றைக்கு நீங்கள் பேசுகிறீர்கள். அப்புறம் என்ன உங்களுக்கு Point of Order. டாக்டர் குமாரதாஸ் பேசுங்கள்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்ன நோய் என்று நீங்கள் அதிலே குறிப்பிடவில்லை. நான் ஒட்டுமொத்தமாகச் சொல்கிறேன். படிக்கிற பிள்ளைகள், இளைஞர் சமுதாயம், உருவாகி வருகிற சமுதாயத்தில் மிகச் சரியாக பாதிக்கும்

அதிகமானவர்கள் நோயாளிகளாக தமிழகத்திலே வாழ்ந்து கொண்டிருக்கிற சூழ்நிலை இப்போது ஏற்பட்டு இருக்கிறது என்பதுதான் என்னுடைய குற்றச்சாட்டு.

அதைப்போல உங்களுடைய பார்வை சிங்காரச் சென்னைக்கு மாத்திரம்தான். சென்னை நகரைவிட்டு வெளியே புறநகர்களுக்கு இது செல்வதாக எங்களுக்குத் தெரியவில்லை. நாங்கள் வளமான தமிழகத்தைக் காண வேண்டுமென்று ஆசைப்படுகிறோம். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர் திரு. காந்தி, அமைதியாக இருக்க வேண்டும். டாக்டர் குமாரதாஸ் பேசுங்கள்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** என்னுடைய தொகுதிதான் தமிழகத்திலே 234-வது தொகுதி; குமாரதாஸினுடைய தொகுதி. அங்கிருந்து சென்னை வருவதற்கு 750, 800 கிலோமீட்டர் வர வேண்டியிருக்கிறது. பஸ்ஸிலேதான் வருகிறோம். வருகிற வழியில் எல்லாம் பார்த்துத்தான் வருகிறோம். எனவே, உங்களைவிட அதிகம், வாரத்திற்கு ஒருமுறை அந்த சாலைகளில் சென்று வருகிறோம் என்கிற காரணத்தினாலே சொல்கிறேன். ஒன்றும் சரியில்லை.

அதேபோல புறநோக்குப் பார்வை என்று சொல்கிறீர்கள். பட்டதாரி ஆசிரியர்கள் கிட்டத்தட்ட ஒரு இலட்சத்துக்கும் அதிகமானவர்கள் படித்து வேலை இல்லாமல் 20 ஆண்டு, 25 ஆண்டு Employment Exchange-ல் காத்திருக்கிறார்கள். ஆனால், ஒன்றாவது வகுப்பு முதல் 5-வது வகுப்பு வரைக்கும் நீங்கள் Secondary Grade Teacher-களைப் போட்டு, 6, 7, 8 ஆம் வகுப்புகளுக்கு Graduates, B.A., B.Ed., முடித்தவர்களை எல்லாம் பணியிலே நியமிப்பீர்கள் என்று சொன்னால், ஒரு இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். Plus 2-வுக்கு மேலே Post Graduates-ஐ நியமிக்க வேண்டும். ஆக, நீங்கள் Secondary Grade Teachers-ஐ நியமிக்கும்போது, அவர்களே படித்து பட்டங்களைப் பெற்று மேல்நிலைகளுக்கு வந்துவிடுகிறார்கள். எனவே, degree முடித்தவர்களுக்கு வேலைவாய்ப்பு இல்லாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. இவற்றை எல்லாம் நீங்கள் கருத்திலே கொண்டு திட்டங்களைப் போட வேண்டும். அப்படிப் போடுகிறபோது கல்வியினுடைய தரமும் உயருவதற்கான வாய்ப்பு உண்டு என்பதை உங்களுடைய கவனத்திற்கு நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.



அதேபோல கடந்த 1, 1½ மாத காலத்திற்கு இடையில் தமிழகத்தினுடைய வனப் பகுதியில் 5 யானைகள் சுட்டுக்கொல்லப்பட்டு இருக்கின்றன. 5 யானைகள் தந்தத்திற்காகச் சுட்டுக்கொல்லப்பட்டு இருக்கின்றன. ஒரு யானை அவரையே விரட்டிக் கொன்று இருக்கிறது. ஆக, நாட்டிலே வனத்துறை அதிகாரிகள் இல்லையா? யானையே விரட்டி தண்டனை கொடுக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டு இருக்கிறதே! வனப் பகுதியிலே இன்னும் அதிகமான வன அலுவலர்களை நியமித்து காட்டுப் பகுதிகளிலே வேட்டையாடுபவர்களை வன்மையாக நீங்கள் தடுத்து நிறுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-10

அதுபோல வீரப்பன் என்கிற ஒரு நபர், அவரை இதுவரைக்கும் பிடித்ததாகத் தெரியவில்லை. அவரைப் பிடிப்பதற்கான முயற்சியை மேற்கொண்டதாகவும் தெரியவில்லை. ஆகவே, அதையும் நீங்கள் கவனத்திலே கொண்டு, தமிழ்நாட்டிலே சட்டம் ஒழுங்கைப் பாதுகாக்க இப்படிப்பட்ட கொள்ளையர்களைத் தடுப்பதற்கு முயற்சி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுபோல, தமிழக அரசு மின்சார வாரியத்தில் கடந்த ஆண்டு 1,250 பேர்களை நாங்கள் வேலையிலே நியமிக்கிறோம் என்று சொல்லி, தேர்வு செய்வதற்காக நேர்முகத் தேர்வுகள் நடத்தப்பட்டு இன்னும் கணக்கீட்டாளர்களாகப் பணியில் நியமிக்காத ஒரு சூழ்நிலை இருந்துகொண்டிருக்கிறது. அவர்களையும் வெகுவிரைவிலே வேலையில் நியமிப்பதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதுபோல, கன்னியாகுமரி மாவட்டத்தில் இடைக்கோடு என்கிற பேரூராட்சியில் சில ஊழல் தவறுகள் நடந்திருப்பதாக, போராட்டங்கள் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் சொன்னேன். அவர்கள் என்னிடம் விவரங்களைக் கேட்டிருக்கிறார்கள். நான் அவர்களிடம் கேட்டு இன்றைக்கு அல்லது நாளை வாங்கிக் கொடுப்பேன். அதைத் தனிப்பட்ட முறையிலே— ஏனென்று சொன்னால் அங்கே உள்ள அதிகாரிகளே உடந்தையாக இருந்து ஊழல் நடைபெற்று இருக்கிறது. அதைத் தனியாக நீங்கள் மேலிருந்து, வேறு மாவட்டத்திலிருந்து ஆட்களைப்போட்டு

விசாரித்தால்தான் சரியாக இருக்கும். எனவே, நீங்கள் தனியாக இடைக்கோடு பேரூராட்சியிலே விசாரணை நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல, கயிற்றுக்கு 4 சதவீதம் விற்பனை வரி இருந்து கொண்டு இருக்கிறது. கேரள மாநிலத்திலே ஒட்டுமொத்தமாக விற்பனை வரி இல்லை. கன்னியாகுமரி மாவட்டத்தில் கயிற்றுத் தொழில் செய்கிறவர்கள் அதிகமாக இருக்கிறார்கள். அந்த ஏழை எளிய மக்களுடைய தொழில் நலிந்து போகக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஏனென்று சொன்னால் கேரளத்திலே வரியில்லாத காரணத்தால் இங்கே கன்னியாகுமரி மாவட்டத்தில் உற்பத்தி ஆகின்ற கயிற்றுக்குப் பாதிப்பு ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. எனவே, 4 சதவீத விற்பனை வரியை நீங்கள் ரத்து செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல, சத்துணவு அமைப்பாளர்களில் பட்டதாரிகளுக்கு நீங்கள் தனியாக, பிற இலாக்காக்களில் வேலைவாய்ப்பு வருகிறபோது அவர்களுடைய கோரிக்கையைப் பரிசீலித்து அவர்களைப் பணியில் அமர்த்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல தமிழகத்திலே சுமார் 700, 800 ஆரம்ப சுகாதார நிலையங்களில் சித்தா, ஆயுர்வேதா, யுனானி மருத்துவர்கள் நியமிக்கப்பட வேண்டியிருக்கிறது. அங்கேயும் இந்திய முறை மருத்துவர்களை நீங்கள் நியமிப்பதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று நான் இந்த முறை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல கன்னியாகுமரி மாவட்டத்தில் எஸ்.டி. மங்காடு பகுதியில் ஒரு பால வேலை ஆரம்பிக்கப்பட்டு, ஏற்கெனவே இருந்த பாலத்தை உடைத்து, புதியதாக வேலை ஆரம்பித்தார்கள். தமிழ்நாடு கட்டுமானப் பிரிவு என்ற ஒன்று இருக்கிறது. அப்படி ஒரு துறை உங்களுக்குத் தேவைதானா, உங்களுடைய பெயரைக் கெடுப்பதற்கு என்றே இருக்கிறது என்று கருதுகிறேன். பாலம் ஆரம்பிக்கப்பட்டு, மீண்டும் அது உடைக்கப்பட்டு போக்குவரத்து வசதியில்லாமல், மக்கள் தினசரி 1,000 பேர், 2,000 பேர் நடந்து போகிற பகுதி பாதிக்கப்பட்டிருக்கிறது. நாங்கள் பல்வேறு போராட்டங்களை நடத்தியவுடனே வேலை ஆரம்பித்தார்கள். பிறகு வேலை கிடப்பிலே போடப்பட்டது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அங்கே திருவள்ளுவருடைய சிலைத் திறப்பு விழாவிற்கு வருகிற நேரத்திலே, மீண்டும் போராட்டம் நடத்துவோம்



என்று சொன்னவுடன், மீண்டும் அங்கே கொஞ்சம் கல், ஜல்லி இவற்றைப் போட்டுவிட்டுப் போய் இருக்கிறார்கள். அங்கே இப்படி ஒரு கண்ணாம்பூச்சி விளையாட்டு நடத்திக் கொண்டிருக்கிறது தமிழ்நாடு கட்டுமானப் பிரிவு.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கட்டுமானக் கழகத்திடம் அந்தப் பாலம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது என்பது உண்மைதான். ஆனால் அதேநேரத்தில் அந்த வாய்க்காலில் அடிக்கடி தண்ணீர் போவதும் அதற்கு ஓர் இடைஞ்சல்; இன்னொன்று அந்தப் பாலம் உடைக்கப்பட்டு புதிய பாலம் கட்டுகிறபோது அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய மக்களும் எங்களுக்கு மாற்றுப்பாதை அமைத்துக் கொடுத்தால்தான் பாலம் கட்ட வேண்டுமென்று, அப்படி ஒரு போராட்டம்; அதற்குப் பிறகு நடைபாதைக்காக ஒரு பாலம் அமைப்பதற்கு கால அவகாசம் தேவைப்பட்டது. நடைபாதைப் பாலம் அமைக்கப்பட்டிருக்கிறது. மீண்டும் பணி தொடர்ந்திருக்கிறது. மறுபடியும் நீங்கள் போராட்டத்தை ஆரம்பிக்கிறீர்கள். கட்டப் போகிறோம் என்று தெரிந்தவுடன் போராட்டம்; அதுதான் உங்களுடைய வாடிக்கையாக இருக்கிறது.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** அங்கே நாங்கள் போராட்டத்தில் இறங்கினால், களம் இறங்கினால் வெற்றி காணாமல் திரும்பியது கிடையாது. அந்தப் போராட்டத்திலே, நாங்கள் போராடித்தான் அந்தப் பாலத்தை.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் வெற்றிதான் அந்தப் பாலம் கட்டப்படாமல் இருக்கிறது.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** அது உங்களுடைய இயலாமை. அப்படித்தான் நான் எடுத்துக்கொள்ள முடியும். ஏனென்று சொன்னால் இரண்டாண்டுகளாக ஆரம்பிக்கப்பட்ட பாலத்தை இவ்வளவு நாளும் இழுத்தடித்து, "உங்களுடைய போராட்டத்தினால்தான் நடைபெறவில்லை" என்று சொல்லிக் கொண்டிருந்தால், அதை நான் ஏற்றுக்கொள்வதற்குத் தயாராக இல்லை.

***மாண்புமிகு திரு. துரைமுருகன்:** தலைவர் அவர்களே, இரண்டு ஆண்டு காலம் நீர்ப்போக்குவரத்து உள்ள இடத்திலே பாலம் கட்டுவதில் இவ்வளவு குறை சொல்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினரை நான்

நேரடியாகக் கேட்டுக் கொள்கிறேன். இதே தலைவர் வள்ளுவர் சிலைக்கு முதலிலே அடிக்கல்நாட்டு விழாவிற்கு வருகிறபோது, அங்கே மணவாளக்குறிச்சி பாலம் எத்தனை ஆண்டுகாலம் கட்டப்படாமல் இருந்தது? அன்றைக்குப் பேசினீர்கள். "3 மாதத்திலே முடிக்கப்படும்" என்று சொல்லி, கட்டிக்கொடுக்கவில்லையா? — 11 ஆண்டுகள் அந்தப் பாலம் கட்டுவதற்கு, அதுமாதிரி பாம்புரி பாலம் கட்ட 9 ஆண்டு காலம், கடந்தகால ஆட்சியில் — ஆகையினால் 2 ஆண்டு காலத்திலே ஒரு பாலம் கட்டுவதில் பல்வேறு சிக்கல்கள் இருக்கலாம். அதைப் பெரியதாக எடுப்பதைவிட, மணவாளக்குறிச்சி பாலத்தை நினையுங்கள், இதை மறந்துவிடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சருக்கு ஒரு விளக்கம். அவருடைய நிலை கொஞ்சம் மாறியிருக்கிறது. அதனால்தான். (சிரிப்பு)

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களைப் பொறுத்தவரைக்கும் எந்த நிலையிலே இருந்தாலும், தவறு யார் செய்தாலும் தட்டிக் கேட்பதற்கு ஒருகாலும் நாங்கள் தயங்கப்போவது கிடையாது. அதை மாத்திரம் உறுதியாக நான் சொல்லிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தட்டிக் கேட்க வேண்டாம் என்று சொல்லவில்லை. பாராட்டுச் சொல்ல வேண்டிய இடத்திலே பாராட்டுச் சொன்னால்தான் அது ஒரு நல்ல மரபாக இருக்கும் என்று சொல்கிறேன்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** பாராட்ட வேண்டிய விஷயங்களை நாங்கள் பாராட்டாமல் இருப்பது கிடையாது.

*முற்பகல் 11-15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதுதான் மணவாளக்குறிச்சி பாலத்தை காலா காலத்தில் செய்தார்களா இல்லையா என்று கேட்கிறார் மாண்புமிகு அமைச்சர்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** அது குளச்சல் தொகுதிக்கு உட்பட்ட பகுதி. செய்து இருக்கிறார்கள், நன்றிதான். அது என்னுடைய தொகுதிக்கு உட்பட்ட பகுதியல்ல. குளச்சல் தொகுதிக்கு உட்பட்ட பகுதி.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நேரத்தைக் கொஞ்சம் பாருங்கள். இன்னும் இரண்டு நிமிடங்களில் உரையை முடித்துவிடுங்கள்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** முடித்துவிடுகிறேன். ஆங்கில முறை மருத்துவத்தில் சுமார் 300-க்கும் அதிகமான ஆரம்ப சுகாதார நிலையங்களில் Pharmacist பல ஆண்டுகளாக நியமிக்கப்படவில்லை. அவர்கள் வேலை இல்லாமல், வேலை வேண்டும், வேலை வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். நீங்களும் வேலை கொடுக்கலாம் என்று சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள். ஏற்கெனவே, இதைப்பற்றி நான் சட்டமன்றத்திலே பேசியபோது, அந்தந்தப் பகுதியிலே D.M.O. அவர்களே இண்டர்வியூ வைத்து எடுத்துக்கொள்ளலாம் என்று சொல்லிவிட்டோம், அதனால் பிரச்சினை இல்லை என்று சொன்னீர்கள். ஆனால், அப்படியும் அது நிவர்த்தி செய்யப்படாத ஒரு சூழ்நிலையில்தான் இருந்து கொண்டிருக்கிறது என்பதை நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரிலே மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் "ஒரு தொகுதிக்கு ஒரு ஏரியை 10 இலட்ச ரூபாயிலே நாங்கள் மேம்படுத்தித் தருகிறோம்" என்று சொன்னார்கள். ஆனால், இதில் ஒரு காசுகூட செலவழிக்கப்படவில்லை. எங்களுடைய மாவட்டத்தில் எந்தச் சட்டமன்றத் தொகுதிக்கும் பயன்படுத்தப்படவில்லை. இதிலே இன்னும் ஒன்றை நான் தெளிவாகச் சொல்கிறேன். இந்த ஆண்டு ஓரளவுக்கு நிச்சயமாகத் தருவீர்கள் என்று நம்புகிறேன். அப்படித் தருகின்றபோது அதிகாரிகளிடம் சொல்லிவிட வேண்டும் — ஒரே குளத்திற்குத்தான் 10 இலட்ச ரூபாய் செலவிடப்பட வேண்டும் என்று சொல்கிறார்கள், அப்படியல்ல. ஒரு தொகுதிக்கு நீங்கள் 10 இலட்ச ரூபாய் தந்தால், எங்களுடைய பகுதியில் எல்லாம் பெரிய ஏரிகள் கிடையாது. சின்ன ஏரிகள், குட்டைகள், குளங்கள்தான் இருக்கின்றன — இந்த 10 இலட்ச ரூபாயில் இரண்டு குளங்களையோ, 3 குளங்களையோ எடுத்து, இந்த 10 இலட்ச ரூபாய்க்கு உட்பட்டு அந்தப் பகுதியிலே செலவு செய்திட வேண்டும் என்ற ஆணையினையும் நீங்கள் அவர்களுக்கு வழங்கி, அறிவுரையையும் வழங்கிட வேண்டுமென்று இந்த நல்ல சந்தர்ப்பத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, விளவங்கோடு தொகுதிக்கு உட்பட்ட, தாலுகாவுக்கு உட்பட்ட கடையாலுமூடு, களியல் கிராமத்திலே வலிய ஏலா என்ற பகுதி இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் ஒரு நிமிடம். நீங்களாக உட்கார வேண்டும். அப்படி இல்லையென்றால் நான் அடுத்த உறுப்பினரை அழைப்பேன்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** நானே உட்கார்ந்து விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 10-58-க்கு ஆரம்பித்தீர்கள். 11.18-க்கு முடிப்பேன்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** முடித்துவிடுகிறேன். அந்த வலிய ஏலா பகுதியிலே சுமார் 200 குடும்பங்கள் 60 ஆண்டுகளாகக் குடியிருந்து வருகிறார்கள். அவர்கள் பட்டாவுக்காகத் தொடர்ச்சியாக பல ஆண்டுகளாகப் போராடி வருகிறார்கள். ஆனால் பட்டா கொடுக்கப்படவில்லை. அவர்கள் பல்வேறுவிதமான போராட்டங்களை நடத்தினார்கள். அந்தப் பட்டா கிடைக்காத காரணத்தாலே அந்தப் பகுதியிலே தெருவிளக்குகளை அமைக்க முடியவில்லை, சாலைகளை அமைக்க முடியவில்லை. அவர்கள் பல்வேறு இன்னல்களுக்கு — பணக்காரர்களால் கஷ்டங்கள் ஏற்பட்டு பல இன்னல்களுக்கு — ஆளாகிக் கொண்டிருக்கிறார்கள். எனவே, அந்த வலிய ஏலா பகுதியிலே இருப்பவர்களுக்கு பட்டா வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இது ஒரு முக்கியமான சமாச்சாரம். என்னுடைய தொகுதிக்கு உட்பட்ட நல்லூர் பேரூராட்சியில் ஒரு கொக்ககோலா கம்பெனி இருக்கிறது. பெரிய கோடீஸ்வரர். Multi millionaire company அங்கே இருக்கிறது. அதற்குப் பக்கத்திலே ஒரு குளம் இருக்கிறது. நல்லூர் குளம் என்பது அந்தக் குளத்தினுடைய பெயர். அந்தக் கம்பெனியினுடைய கழிவுநீர் ஒட்டுமொத்தமாக அந்தக் குளத்தில்தான் பாய்கிறது. இதனால் அந்த நல்லூர் பேரூராட்சிக்கு உட்பட்ட பகுதியிலே பாதிக்கும் அதிகமானவர்கள் கடும் தொற்று நோய்க்கு ஆளாகியிருக்கிறார்கள். அவர்களிடம் அந்தக் கழிவுநீரை விடக்கூடாது என்று சொன்னால், அவர்கள் காதிலே வாங்கிக் கொள்ளாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. எனவே, சுற்றுப்புறச்சூழல் துறை மூலமாக



அவர்களுக்கு அறிவுரை செய்து அந்தத் தண்ணீர் அங்கே வராமல் பார்த்துக்கொள்ள வேண்டும். அந்தப் பகுதி மக்கள் குடிப்பதற்கும், குளிப்பதற்கும், ஆடு, மாடுகளை எல்லாம் குளிப்பாட்டுவதற்கும், இப்படி எல்லாவற்றுக்கும் அந்தப் பகுதியிலே மிகப்பெரிய குளமாக இருப்பது அது ஒன்றுதான். கிராமப் பகுதி மக்கள் வெளிப் பகுதிக்குச் செல்ல முடியாது. எனவே, அந்தக் குளத்திலே, அந்த Coco-Cola கம்பெனியின் கழிவுநீர் வராமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, கால்நடை மருத்துவர்கள் வெகுநாட்களாக ஒரு கோரிக்கை வைத்திருக்கிறார்கள். மத்திய அரசுக்கு இணையான ஊதியத்தை வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வள்ளுவர் கோட்டத்திலே நடைபெற்ற நிகழ்ச்சியிலே (மணியடிக்கப்பெற்றது) இரண்டு நிமிடங்களிலே முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டு நிமிடங்கள், இரண்டு நிமிடங்கள் என்று எத்தனை தடவை கேட்பீர்கள்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** அந்தக் கால்நடை மருத்துவர்கள் மத்திய அரசுக்கு இணையான ஊதியத்தைக் கேட்கிறார்கள். அந்த ஊதியத்தில் கிட்டத்தட்ட 2 ஆயிரம் ரூபாய் வரை வித்தியாசம் வருகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்தக் கால்நடை மருத்துவர்கள் மாநாட்டிலே பேசியபோது, 'இது நிராகரிக்கப்படவில்லை. ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது' என்று 1998-லே சொல்லியிருக்கிறார்கள். நான் சொன்னதனாலே — குமாரதாஸ் சொல்லிவிட்டார் என்று — நீங்கள் அவர்களை ஏமாற்றிவிடாமல் இந்த இரண்டாயிரம் ரூபாயைக் கனிவோடு அந்தக் கால்நடை மருத்துவர்களுடைய வேண்டுகோளுக்கு இணங்க நீங்கள் வழங்கிட முன்வர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, முன்னாள் கிராம அலுவலர்களுக்கு, [Ex.V.A.Os.] 1998-ல் G.O. எண். 124-ல் 21-4-1998-ன்படி, அவர்களுடைய ஓய்வூதியத்தை 1275 ரூபாயாகக் கொடுக்கலாம் என்று பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறது. ஆனால், அரசு அதை நிராகரித்து அவர்களுக்கு அது கொடுக்கப்படவில்லை. எனவே, அதையும் நீங்கள் கருத்திலே கொண்டு, அவர்களுக்கு ஓய்வூதியத்தை வழங்குவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மொத்தத்திலே, தமிழகம் தொழில் துறையில் மிக மிகப் பின்தங்கிய சூழ்நிலையில் இருந்து கொண்டிருக்கிறது. நமக்கு வருகின்ற பணம் எத்தனை ஆயிரம் கோடிகள் வந்தாலும், அவை வீண் விரயமாகச் சென்று கொண்டிருக்கின்றனவே தவிர, மக்களுக்குப் பயன்படுகிற விதத்திலே இல்லை. அவர்கள் உழைத்து, அந்த உழைப்பின் மூலமாக அவர்கள் வாழ்கின்ற ஒரு சூழ்நிலையை நீங்கள் உருவாக்கிட வேண்டும். தமிழ் வாழ்க, தமிழ் வாழ்க என்று சொல்கிறோம். தமிழனுடைய பொருளாதாரம் வளருவதற்கான முயற்சிகளை நீங்கள் மேற்கொள்ள வேண்டும்.

முற்பகல் 11-20

இன்றைக்கு சென்னை மாநகரை எடுத்துக் கொண்டால்கூட, தமிழர்களுடைய தலைநகராக இருக்கக்கூடிய சென்னை மாநகரில் 50 சதவிகிதத்திற்கும் அதிகமானவர்கள், பிற மாநிலங்களிலேயிருந்து இங்கே வந்து, இன்றைக்கு சென்னை குஜராத்தியின் கையிலும், இராஜஸ்தான்காரன் கையிலும், மார்வாடிகள் கையிலும், அதேபோல, கர்நாடகக்காரன் கையிலும், கேரளாக்காரன் கையிலும்தான் சிக்கி சீரழிந்து கொண்டு இருக்கிறதே தவிர, தமிழகத்தினுடைய தலைநகரிலே தமிழன் வாழவில்லை; அவனை வாழவைக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுந்தர்.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் அனுமதி கொடுக்கவில்லையே. நீங்கள் நினைத்தால் எழுந்து பேசுகிறீர்கள். இதைத்தான் மரபு மீறிப் பேசுகிறீர்கள் என்று சொல்கிறேன். (குறுக்கீடு) நான் அனுமதி கொடுக்கவில்லை, உட்காருங்கள்.

**திரு. ச. அழகிரி:** Point of Order, Sir.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன Point of Order சொல்லுங்கள்.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு முறையும் ஆளுங்கட்சிக்கும், எதிர்க்கட்சிக்கும் இடையே வாக்குவாதம் நடைபெறுகிறபோது, இராணிப்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு காந்தி அவர்கள், தரக்குறைவான, மலிவான,



கீழ்மையான வார்த்தைகளை இந்தச் சபையிலே உபயோகிக்கிறார். ஆளுநர் உரையின்போது இரண்டுமுறை அவர் அவ்வாறு நடந்துகொண்டார். இப்போதும் அவர் அவ்வாறு நடந்து கொண்டிருக்கிறார். அவரை நீங்கள் இப்படியேதான் வளர்ப்பீர்களா; அல்லது, அவரைத் திருத்துவீர்களா? இதை மரபு என்று நீங்கள் கருதுகிறீர்களா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள். உறுப்பினர் காந்தி சத்தம் போட்டது உண்மை. நான் அவரை அமைதியாக இருக்கச் சொன்னதும் உண்மை. ஆனால் அவர் தரக்குறைவான வார்த்தை சொன்னதாக என் காதிலே விழவில்லை. நிச்சயமாக என் காதிலே விழுந்திருந்தால் நடவடிக்கை எடுத்திருப்பேன். அப்படி ஒருவேளை அவர் பேசியிருந்தால், இனிமேல் பேசக்கூடாது என்று கண்டிப்பாகச் சொல்கிறேன். திரு. கே. சுந்தர்.

***திரு. இரா. தாமரைக்கனி:** ஆளுங்கட்சி உறுப்பினர்கள் சொன்னால் "என் காதில் விழவில்லை" என்கிறீர்கள். ஆனால், எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சொன்னால் "நடவடிக்கை எடுப்பேன், வெளியேற்றுவேன்" என்கிறீர்கள். இந்த மாதிரி partiality இருக்கலாமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எனக்குக் கேட்கவில்லை என்று சொன்னேன். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) நான் அனுமதி கொடுக்கவில்லை, உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் சட்டமன்றத்திற்கு தினமும் வருவதற்கு அடையாளமாக ஒரு துணை வினா கேட்க வாய்ப்பு கொடுங்கள் என்று சொன்னீர்கள். அதற்காகக் கொடுத்துக் கொண்டு இருக்கிறேன். அதற்கு மேலே திரும்ப என்ன அடையாளம்? உட்காருங்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** துணை வினா கேட்பது தப்பா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தப்பில்லை. அதுதான் கொடுக்கிறேன் என்கிறேன். (குறுக்கீடு) அதுதான் கொடுக்கிறேன் என்கிறேன். கொடுக்க வேண்டும் என்ற கட்டாயம் கிடையாது. இருந்தாலும் கொடுக்கிறேன் என்கிறேன்.

**திரு. இரா. தாமரைக்கனி:** துணை வினா கொடுப்பதை என்னவோ, பிச்சை போடுவது மாதிரிச் சொல்கிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அப்படி நீங்கள் நினைத்தால் அதற்கு நான் பொறுப்பு இல்லை.

**திரு. இரா. தாமரைக்கனி:** இது உங்கள் தகுதிக்கு நன்றாக இருக்கிறதா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என் தகுதி நன்றாகத்தான் இருக்கிறது, நீங்கள் உட்காருங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் ஏன் எழுந்து நிற்கிறீர்கள்? உட்காருங்கள். திரு. கே. சுந்தர், நீங்கள் பேசுங்கள்.

***திரு. கே. சுந்தர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2000-2001 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை மீது பேசுகின்ற வாய்ப்பை வழங்கிய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், தங்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். 1999-2000 ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை 20 ஆம் நூற்றாண்டிற்கான இணையற்ற குறிஞ்சி மலர் என்றால், 2000-2001 ஆம் ஆண்டிற்கான இந்த நிதிநிலை அறிக்கை புத்தாயிரம் ஆண்டின் புதுமை மணம் வீசும் தங்க மலர் என விளங்குகிறது. பசுமைப் புரட்சிக்கும், வெண்மைப் புரட்சிக்கும் வித்திட்ட நம் மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த நிதிநிலை அறிக்கையை வழங்கி பொருளாதாரப் புரட்சிக்கு வித்தூன்றியிருக்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே எனக்கு முன்னர் பேசிய மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் குமாரதாஸ் அவர்கள், மூன்று ஆண்டுகளாக இந்த அரசையும், நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களையும் பாராட்டிப் பேசியவர், இன்றைக்குக் காலத்தின் கட்டாயம் காரணமாக குறைகூறி அமர்ந்திருக்கிறார். பாவம், அவருக்குத் தந்தைப் பெரியாரைப் பற்றித் தெரிந்திருக்க வாய்ப்பு இல்லை. அவருக்குத் தெரிந்திருந்தால், இப்படிப் பேசியிருக்க மாட்டார். தந்தை பெரியார் அவர்கள் பெண் உரிமைக்காக ஒரு மாநாடு நடத்தியவர். அதுமட்டுமல்ல; பெண் என்பவள் வெறும் பிள்ளை பெறும் இயந்திரம் அல்ல. அவர்களுக்குச் சம உரிமை வழங்க வேண்டும் என்ற வகையிலே, அந்தக் கருத்திற்கு ஒப்ப, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள்



இன்றைக்கு பெண்களுக்குச் சொத்துரிமையில் சமபங்கு வழங்கியது மட்டுமல்ல, சமூகப் பொருளாதாரத் துறைகளிலே அதிகாரம் பெற்றவர்களாக மாற்றுகின்ற வகையிலேயும் அனைத்து மகளிர் திட்டங்களையும் ஒருங்கிணைத்து, "வாழ்ந்து காட்டுவோம்" என்ற திட்டத்தையும் இப்போது ஏற்படுத்தி அதற்காக 120 கோடி ரூபாய் நிதி ஒதுக்கியிருப்பது, தந்தை பெரியாரினுடைய கனவை நனவாக்கியிருப்பதாகும்.

*முற்பகல் 11-25*

அதுமட்டுமல்ல; சுதந்திரம் வாங்கியவுடனே, காங்கிரஸ் கட்சியைக் கலைக்க சொன்ன நம்முடைய தேசத் தந்தை காந்தியடிகள், "இன்றைக்கு நாட்டினுடைய பொருளாதாரம், கிராமங்களினுடைய வளர்ச்சியிலேதான் இருக்கிறது" என்று குறிப்பிட்டார். அந்த வகையிலே, நம்முடைய முதலமைச்சர் அவர்கள், 'அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்' கொண்டுவந்து, கிராமங்களினுடைய நிலையை உயர்த்தியிருக்கிற நிலையையும் நாம் இப்போது காண்கிறோம்.

அனைவருக்கும் ஆரம்பக் கல்வி என்ற நம்முடைய பெருந்தலைவர் காமராஜருடைய கனவை, அனைவருக்கும் 'கம்ப்யூட்டர் கல்வி' என்ற வகையிலே, இப்போது நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், நனவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். அந்த வகையிலே, நம்முடைய தேசத் தந்தை காந்தியடிகள் அவர்களுடைய எண்ணத்தையும், தந்தை பெரியார் அவர்களுடைய எண்ணத்தையும் நிறைவேற்றுகிற வகையிலேயும், நம்முடைய பெருந்தலைவர் காமராஜர் அவர்களுடைய வழியிலேயும், நம்மையெல்லாம் ஆளாக்கிய பேரறிஞர் அண்ணா அவர்கள் வழியிலேயும், அய்யன் திருவள்ளுவன் குறள்நெறிக்கேற்பவும் ஆட்சி நடத்துகின்ற கலைஞர் அரசினுடைய சாதனைகளை, நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள். அதனாலேதான், நடந்து முடிந்த நெல்லிக்குப்பம், திருச்சி, அறந்தாங்கி சட்டமன்ற இடைத் தேர்தல்களிலே அமோகமான வெற்றியை இந்த அரசு பெற்றது என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் குமாரதாஸ் அவர்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது திட்டமிட்ட ஒரு பொய்ப் பிரச்சாரத்தை இந்த அவைக்கு உள்ளேயும் சரி, வெளியிலேயும் சரி, சிலர் செய்து வருகிறார்கள். அதாவது, அவர்கள்

எல்லாம் சொல்வது, விவசாயிகளுக்கு இந்த அரசு ஒன்றுமே செய்யவில்லை என்பது. 1989-90 ஆம் ஆண்டிலே, இதேபோன்ற ஒரு கோரிக்கை வைத்தபோது, விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கப்பட்டது. கடந்த 4 ஆண்டுகளிலே, 763 கோடி ரூபாய், வரும் நிதியாண்டிலே 218 கோடி ரூபாய், ஆக மொத்தம் 981 கோடி ரூபாயிலே பாசனத் திட்டங்களை நவீனப்படுத்தவும், கால்வாய்களை மேம்படுத்தவும், 9 அணைக்கட்டுத் திட்டங்களை நிறைவேற்றவும் திட்டமிடப்பட்டிருக்கிறது. ஏரிகளைத் தூர் வாருகின்ற திட்டத்தின் கீழ் கடந்த 2 ஆண்டுகளிலே ஏறத்தாழ 300 ஏரிகள் தூர் வாரப்பட்டிருக்கின்றன. ஆக, இந்தச் சாதனைகள் எல்லாம் விவசாயப் பெருங்குடி மக்களுக்காகத்தானே? அதனால்தானே, கடந்த ஆண்டிலே, 94 இலட்சம் டன் என்றிருந்த உணவு தானிய உற்பத்தி, இப்போது 103 இலட்சம் டன்னாக உயர்ந்துள்ளது.

அதுபோல, இரண்டாண்டுகளுக்கு முன்பு, நெல்லின் விலை மிகவும் மோசமான நிலையிலே இருந்தபோது, நாங்கள் எல்லாம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம், 'நேரடி நெல் கொள்முதல் நிலையம் திறக்கப்பட வேண்டும்; அப்போதுதான் விவசாயிகளைக் காப்பாற்ற முடியும்' என்று சொன்னபோது, உடனடியாக நாடு முழுவதும் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு, விவசாயிகளிடம் நெல் வாங்கப்பட்டு, விவசாயிகளுடைய கண்ணீர் துடைக்கப்பட்டது. இப்போதும் நெல் பயிரிடும் விவசாயிகளுக்கு உரிய விலை கிடைக்கிறது. வெளிச் சந்தையிலே நல்ல விலை இருப்பதால், நெல் பயிரிடும் விவசாயிகள் எல்லாம் இப்போது மகிழ்ச்சியாக இருக்கிறார்கள்.

**(மாண்புமிகு மாற்றுத் தலைவர் திரு. அ.லெ. சுப்பிரமணியன் தலைமை)**

அதுபோலவே, காய்கறி பயிரிடும் விவசாயிகள் எல்லாம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய 'உழவர் சந்தை' திட்டத்தின் காரணமாக, அவர்களுக்குரிய விலை உடனடியாகக் கிடைத்து, இடைத்தரகர்கள் இன்றி, அவர்களும் இப்போது மகிழ்ச்சியாக இருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல; இந்த நிதிநிலை அறிக்கையைத் தயாரிப்பதற்கு முன்பாக, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தமிழக வரலாற்றிலேயே முதன்முறையாக விவசாய சங்கப் பிரதிநிதிகளையெல்லாம் அழைத்துப் பேசியதன் வாயிலாக, இப்போது



புதிய வேளாண் கொள்கை உருவாக்கப்பட்டிருக்கிறது. அதனைக் கண்காணிக்கின்ற உயர்நிலைக் குழுவும் அமைக்கப்பட்டிருக்கிறது.

அதுமட்டுமல்ல; கடந்த ஆண்டு, விவசாயிகளுக்கு ஆறே கால் சதவிகிதம் ஊக்கத் தொகை வழங்கப்பட்டது. அபராத வட்டி, கடன் தொகை என்றெல்லாம் அனைத்திற்கும் சேர்த்து அந்த ஆறே கால் சதவிகிதம் ஊக்கத் தொகை வழங்கப்பட்டது. அது விவசாயிகளுக்கு திருப்திகரமாக இல்லாத காரணத்தை இந்த ஆண்டு விவசாயப் பிரதிநிதிகள் மூலமாகத் தெரிந்து கொண்டு, நம்முடைய முதலமைச்சர் அவர்கள், அபராத வட்டியை முழுவதுமாகத் தள்ளுபடி செய்திருக்கிறார்கள். ஆகவே, அபராத வட்டியைத் தள்ளுபடி செய்ததே விவசாயிகளுக்கு ஒரு பெரிய மகிழ்ச்சி.

அதுமட்டுமல்லாமல், 7 சதவிகித ஊக்கத் தொகை; அதாவது, 'நபார்டு' தருகிற 12 சதவிகித கடனிலே, அரசாங்கமே 7 சதவிகித வட்டியைக் கட்டியுள்ள காரணத்தினாலே, நாம் 'நபார்டு' வங்கிக்குத் தருகிற அதே 5 சதவிகிதத்தை, விவசாயிகள் திருப்பிச் செலுத்தினால் போதுமானது என்ற அந்தச் செய்தி, விவசாயிகளுக்கெல்லாம் மகிழ்ச்சியைத் தரக்கூடிய ஒரு செய்தியாகும். விவசாயப் பெருங்குடி மக்கள் எல்லாம், இப்போது இதுகுறித்து மகிழ்ச்சியிலே இருக்கிறார்கள். ஆகவே, ஏறத்தாழ 85 சதவிகிதம் விவசாயிகள் இப்போது மகிழ்ச்சியாகத்தான் இருக்கிறார்கள். ஆனால், எதிர் வரிசையில் உள்ளவர்கள் விவசாயிகள் என்று ஒட்டுமொத்தமாகச் சொல்வது, கரும்பு விவசாயிகளினுடைய குறையைத்தான். கரும்பு விவசாயிகளினுடைய குறையை மட்டும்தான் சொல்கிறார்கள். அதைப்பற்றியும் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இந்த நிதிநிலை அறிக்கையிலே தெரிவித்திருக்கிறார்கள்.

தனியார் கரும்பாலைகளில், விவசாயிகளுக்குக் கிடைக்க வேண்டிய பாக்கியைத் தீர்த்திட, ஆலை அதிபர்களை அழைத்துப் பேசப்படும் என்ற உத்தரவாதத்தினை இப்போது தெரிவித்திருக்கிறார்கள். நிச்சயமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அவர்களுடைய குறையையும் தீர்த்து வைப்பார்கள் என்பதை இந்த நேரத்திலே தெரியப்படுத்திக்கொள்கிறேன்.

அதைப்போலவே, 1974-75-ல் ஏறத்தாழ கால் நூற்றாண்டுக்கு முன்பாக, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், ஆதிதிராவிடர் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நலனுக்கு ஒதுக்கிய நிதி, 16 கோடி ரூபாய்;

அப்போது, இரண்டும் சேர்ந்த இலாகா, 1990-91-லே, 121 கோடி ரூபாய். ஆனால், இப்போது, 2000-2001-லே, ஆதிதிராவிடர், பழங்குடியினர் நலனுக்கு 626 கோடி ரூபாய்; பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் ஆகியோர் நலனுக்காக 175 கோடி ரூபாய்; ஆக மொத்தம் 801 கோடி ரூபாய், வரலாறு காணாத அளவுக்கு ஒதுக்கி, தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுடைய வாழ்க்கையிலே ஒளி ஏற்றப் பாடுபடும் முதலமைச்சர் அவர்களைப் பற்றி எண்ணும்போது,

> "முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
> இறையென்று வைக்கப் படும்."

என்ற குறள்தான் எனக்கு நினைவுக்கு வருகிறது.

முற்பகல் 11-30

அதுமட்டுமல்லாமல், ஆதிதிராவிடர் பெண் கல்வி ஊக்குவிப்புத் திட்டத்தின் மூலம். 60,000 மாணவிகள் இப்போது பலன் அடைகின்றார்கள்.

இந்த நிதிநிலை அறிக்கையின் மூலம், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் பெண் கல்வி ஊக்குவிப்புத் திட்டத்தின் மூலம் 60,000 பெண்கள், ஆக 1,20,000 பெண்கள் இந்த வகையிலே பலன் அடைகின்றார்கள். இதிலே, பிற்படுத்தப்பட்ட சமூகத்தைச் சார்ந்த மாணவிகளுக்கும், இந்த ஊக்கத் தொகை வழங்கப்படவேண்டுமென்பதை, மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குக் கனிவோடு தெரியப்படுத்திக்கொள்கிறேன்.

எல்லாவற்றிற்கும் மேலாக, புறம்போக்கு நிலங்களிலே 20 ஆண்டுகளாக, வீடுகட்டி அனுபவித்து வருபவர்களுக்கு, அரசுக்கு அந்த நிலம் தேவையில்லாதபட்சத்திலே, பட்டா வழங்குவதற்குள்ள வழிமுறைகள் வகுக்கப்படுமென ஆளுநர் உரையிலே தெரிவிக்கப்பட்டது. அது இந்த நிதிநிலை அறிக்கையிலே, 10 ஆண்டுகளாகக் குறைக்கப்பட்டதன் மூலம், நாட்டில் பல ஏழைக்குடும்பங்களின் வாழ்விலே படர்ந்திருந்த இருள் விரட்டியடிக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பட்டாக்களை எல்லாம் விரைவிலே வழங்குகின்ற வகையிலே, மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையிலே, ஒரு குழு அமைக்கப்படும் என்று தெரிவித்திருக்கிறார்கள். அந்தக் குழுவிலே, நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்களையும் இணைக்க வேண்டுமென்பதை மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு தெரியப்படுத்திக் கொள்கின்றேன்.



இப்போது மாதந்தோறும் மக்கள் தொடர்புத் திட்டம், வருமுன்காப்போம், கால்நடை பாதுகாப்புத் திட்டம் ஆகிய இந்தத் திட்டங்களின் மூலம் — பொதுமக்கள் அதற்குமுன்பு எல்லாம், அலுவலகங்களைத் தேடி, மருத்துவமனைகளை நாடிச் செல்கின்ற, அந்தச் சூழ்நிலையை மாற்றி—மக்கள் வாழ்கின்ற கிராமத்திற்கே, அவர்களுடைய வீட்டிற்கே சென்று, குறைகளைத் தீர்ப்பது என்பது, இந்த அரசினுடைய மிகப்பெரிய சாதனை. அதிலேயும், குறிப்பாக வாய் பேச முடியாத கால்நடைகளினுடைய பாதுகாப்புத் திட்டம், இவற்றிலே தலையாயது என்பதை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

1989-90-ஆம் ஆண்டு, இந்த அவையிலே நான் உறுப்பினராக இருந்தபொழுதும், கடந்த நான்கு ஆண்டுகளிலேயும், இந்தச் சட்டமன்றத்திலே நான் வைத்த கோரிக்கைகளையெல்லாம் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களும், நம்முடைய மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும் நிறைவேற்றித் தந்திருக்கிறார்கள், ஒன்றே ஒன்றைத்தவிர. உத்திரமேரூர் ஊராட்சி ஒன்றியம், தமிழ்நாட்டிலே மிகப் பெரிய ஊராட்சி ஒன்றியம். அது இரண்டாக பிரிக்கப்படவேண்டுமென்ற அந்தக் கோரிக்கை மட்டும்தான் இங்கே நிறைவேறவில்லை. அதுவும் இடையிலே மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் காரணமாக, நிலுவையிலுள்ளது. ஆக, கேளுங்கள் தரப்படும், தட்டுங்கள் திறக்கப்படும் என்ற ஏசுவின் பொன்மொழிகளுக்கு ஏற்ப நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், நமது அமைச்சர் பெருமக்களும் வாரிவழங்கி உத்திரமேரூர் சட்டமன்றத் தொகுதி மக்களை மகிழ்ச்சியிலே ஆழ்த்தியுள்ளார்கள். அதற்காக, என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சமீபத்திலேகூட, நீண்டகாலக் கோரிக்கையான—30 ஆண்டுகால கோரிக்கை — அந்த உத்திரமேரூர் வட்டம், காஞ்சிபுரம் வட்டம் இரண்டையும் இணைக்கின்ற வகையிலே, திருமுக்கூடல்-பழையசீவரம் இரண்டையும் இணைக்கின்ற வகையிலே, பாலாற்றின் குறுக்கே ஓர் உயர்மட்டப் பாலம் வழங்கவேண்டுமென்ற அந்தக் கோரிக்கையையும் நிறைவேற்றி, அந்தப் பகுதி மக்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தியிருக்கின்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களுக்கும், அதற்காகப் பாடுபட்ட அத்தனை பேருக்கும் என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

இந்த அரசின் வேகம் நான்கு ஆண்டுகளாக செயல்பட்ட இந்த அரசினுடைய வேகம் அசுர வேகம் என்பதை இந்த நாடே அறியும். மாநிலம் முழுவதும் இந்தச் சூழ்நிலை. எல்லா இடங்களிலேயும் பணிகள் செய்து முடிக்கப்பட்டிருப்பது ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினருக்கும் தெரியும். இங்கேகூட, எப்படியாவது இந்த நிதிநிலை அறிக்கையை எதிர்த்துப் பேச வேண்டுமென்று வந்தவர்கள்கூட, இந்த நிதிநிலை அறிக்கையைப் பாராட்டிப் பேசுகின்ற காட்சியை நாம் தொடர்ந்து கண்டு கொண்டு வருகிறோம். ஆக, ஜனவரி, பிப்ரவரி என்று வந்தால் பட்ஜெட்டிலே புதுவரியும் கூடவே வந்துவிடும் என்ற பொதுவான எண்ணத்தை உடைத்து, வரியே இல்லாமல், ஏன், உள்ள வரியையும் குறைத்து நிதிநிலை அறிக்கை வழங்கப்படும் என்ற அளவில், பொருளாதாரப் புரட்சிக்கு வித்திடப்பட்டிருக்கின்ற இந்த நிதிநிலை அறிக்கையை வரவேற்று விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. அ.லெ. சுப்பிரமணியன்):** மாண்புமிகு உறுப்பினர் திரு. லா. சந்தானம்.

***திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, 2000-2001-ஆம் ஆண்டிற்குரிய நிதிநிலை அறிக்கையின் மீது எங்களது இயக்கத்தின் சார்பிலே கருத்தினைச் சொல்வதற்கு அனுமதி அளித்தத் தங்களுக்கு என்னுடைய உள்ளப்பூர்வமான பாராட்டுதலைத் தெரிவித்து, காலத்தினுடைய அருமையைக் கருதி, என்னுடைய தொகுதிக்கு வேண்டிய திட்டங்களைப் பற்றி முதலிலே குறிப்பிட்டுவிட்டு, அதற்குப்பின்னால், இந்த நிதிநிலை அறிக்கையைப் பற்றிய என்னுடைய கருத்துக்களைச் சொல்லலாம் என்று கருதுகின்றேன்.

என்னுடைய சோழவந்தான் தொகுதியிலே கடந்த ஆண்டு ஏற்பட்ட வெள்ளப் பெருக்கின் காரணமாக, வைகை ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டிருந்த பாலம் உடைபட்டு, வெள்ள நீர் நகருக்குள் புகுந்து பல்வேறு சேதங்களை ஏற்படுத்தியது. இதன் காரணமாக ஆற்றின் குறுக்கே இருந்த குடிநீர் ஆதாரங்கள் எல்லாம் அடித்துச் செல்லப்பட்ட நிலையில் இந்த அரசு அந்த உடைந்த பாலத்தைப் புதுப்பித்து புதியதொரு பாலம் அமைத்துத் தருவதற்கு ஏற்பாடு செய்து, அந்த பணிகள் தற்போது நடைபெற்று வருவதை நான் பாராட்டுகிறேன்.



மேலும், சீரழிக்கப்பட்ட குடிநீர் ஆதாரங்களையெல்லாம் சீர்செய்து நகருக்குள் குடிநீர் வழங்கப்பட்டு வருவதற்கும் என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக் கொள்கிறேன். அந்த வெள்ளச் சேதத்தினால் நகரின், ஆற்றின் ஓரங்களிலே கட்டப்பட்டிருந்த தடுப்புச் சுவர்கள் அடித்துச் செல்லப்பட்டிருந்தன. இதனால் மழைக் காலங்களிலே வெள்ள நீர் நகருக்குள் புகும் நிலை இருக்கின்ற காரணத்தினால், அதற்குத் தடுப்புச் சுவர் கட்டித் தர வேண்டும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

*முற்பகல் 11-35*

என்னுடைய தொகுதியிலே உள்ள சாத்தியாறு அணை விவசாயத்திற்குப் பயன்படும் அணையாக உள்ளது. அந்த அணையை சுற்றி இருக்கின்ற பகுதியைத் தவிர மற்ற மூன்று புறங்களிலும் நிறைய இடம் இருக்கின்ற காரணத்தினால் அதை ஆழப்படுத்திக் கொடுத்தால் விவசாயம் செய்வதற்குப் பயனுள்ளதாக இருக்கும்.

அடுத்து வளையப்பட்டி என்கின்ற இடத்திலே திண்டுக்கல் மாவட்டத்தை இணைக்கும் சாலையிலே ஒரு பாலம் அமைத்துத் தர வேண்டுமென்று பலமுறை நான் வற்புறுத்தியிருக்கிறேன். எனவே, இந்த முறையாவது அந்தப் பாலத்தை அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சித்தாலங்குடி கிராமத்திலே ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்காக ரூ.10,000 ஏற்கெனவே ஐந்து ஆண்டுகளுக்கு முன்னதாகவே செலுத்தப்பட்டுள்ளது. அந்த ஆரம்ப சுகாதார நிலையத்தினை இந்த ஆண்டு தொடங்குவதற்கு வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அலங்காநல்லூரிலே ஒரு தீயணைப்பு நிலையம் அமைக்க வேண்டுமென்று நான் பலமுறை வற்புறுத்தி வந்திருக்கிறேன். இந்த முறையாவது அதனை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எங்களது பகுதி கடந்த எட்டு, ஒன்பது மாதங்களாக பெரியாறு பாசனத்தின் மூலம் தண்ணீர் பெறுகின்ற பகுதியாக உள்ளது. இந்தப் பகுதியினை மத்திய அரசு சர்வே செய்தபோது, நிலத்தடி நீரற்றப் பகுதி கறுப்புப் பகுதி என்று அறிவித்து, மின்சார இணைப்புகள்

பெறுவதற்குத் தடை விதித்து இருக்கிறார்கள். ஆண்டில் 9 மாத காலம் தண்ணீர் பெறுகின்ற பகுதி எப்படிக் கறுப்புப் பகுதியாக ஆக்கப்பட்டிருக்கிறது என்பது எனக்குப் புரியவில்லை. எனவே இந்த அரசு.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** தலைவர் அவர்களே, மத்திய அரசு ஆய்வு நடத்தி, அந்தப் பகுதியைக் கறுப்புப் பகுதி என அறிவிக்கவில்லை. இதற்கு முன்னால் இருந்த ஆட்சியிலேதான் அது ஆய்வு செய்யப்பட்டு 1992 ஆம் ஆண்டிலே, இது கறுப்புப் பகுதியாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

**திரு. லா. சந்தானம்:** அந்தப்பகுதி ஏறக்குறைய பாசனப் பகுதியாக இருக்கின்ற காரணத்தினால், நிலத்தடிநீர் கண்மாய்களில் நிரம்பியிருக்கின்ற ஒரு சூழ்நிலை இருக்கின்றது. எனவே, அந்த நிலத்தடி நீர் 9 மாதங்கள் கண்மாய்களில் நிறைந்து இருக்கின்றபோது எப்படிக் குறைந்து இருக்க முடியும் என்பதுதான் என் கேள்வி. எனவே, நீங்கள் மறுஆய்வு செய்து, மீண்டும் survey செய்து நிலத்தடி நீர் உள்ள பகுதியா இல்லையா என்பதை ஆய்வு...

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** தலைவர் அவர்களே, 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை இப்படி ஆய்வு நடத்துகிறார்கள். ஒரு முறை கறுப்புப் பகுதியாக இருப்பது-அடுத்த முறை சாம்பல் பகுதியாக மாறக்கூடிய வாய்ப்புண்டு. சாம்பல் பகுதியாக இருப்பது கறுப்புப் பகுதியாகக்கூட மாற வாய்ப்புண்டு. எனவே, ஒரு வட்டமாக எடுக்கின்ற ஆய்வில், நீங்கள் சொல்கின்ற பகுதியிலே தண்ணீர் இருக்கலாம். இது குறித்து அடுத்த ஆய்வில் ஆராயப்படும்.

**திரு. லா. சந்தானம்:** தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி.

மற்றொன்று பெரியாறு அணை என்பது மதுரை, திண்டுக்கல், தேனி, இராமநாதபுரம், சிவகங்கை ஆகிய ஐந்து மாவட்டங்களுக்குப் பாசனத்தைத் தருகின்ற உயிர்நாடியாகும். அதனுடைய நீர்மட்டத்தினை 152 அடியாக உயர்த்துகின்ற முயற்சியிலே இந்த அரசு ஈடுபட்டிருக்கிறது. அதற்கு கேரள அரசும் பேச்சுவார்த்தை நடத்துவதற்குரிய காலத்தை நிர்ணயித்து இருக்கின்றது. எனவே, அந்தப் பேச்சுவார்த்தையிலே நமது அரசு மிகுந்த கவனத்துடன் செயல்பட்டு, 152 அடி நீர் தேங்குகின்ற நிலையினை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.



முற்பகல் 11-40

இந்த நிதிநிலை அறிக்கையிலே சத்துணவு உண்கின்ற குழந்தைகளுக்கான தொகையை 18 பைசாவிலிருந்து 23 பைசாவாக உயர்த்தி இருப்பதை நான் பாராட்டுகிறேன். நேற்றைக்குக் கூட முதலமைச்சர் அவர்கள் சத்துணவுக் கூடங்களிலே பணியாற்றுகின்ற அத்தனை ஊழியர்களையும் அரசு ஊழியர்களாக ஆக்குகின்ற வாய்ப்பு இல்லை என்று சொன்னார்கள். இருந்தாலும், பட்டப் படிப்பு பெற்று, அதோடு ஆசிரியர் பயிற்சி எல்லாம் பெற்றிருக்கின்ற ஒரு சில பட்டதாரிகள் அந்த சத்துணவுத் திட்டத்திலே வேலை செய்கிறார்கள். அவர்களுக்காவது அரசுத் துறையிலே வேலைவாய்ப்புகள் வருகின்ற நேரத்திலே வாய்ப்பு அளிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, கிராமக் குடிநீருக்கு மிகுந்த நிதி ஆதாரத்தைத் தந்து கிராமங்களிலே குடிநீர்ப் பற்றாக்குறையே இருக்கக் கூடாது என்கின்ற நிலையை இந்த அரசு எடுத்திருக்கிறது. இப்போது அடி குழாய்கள் மூலமாக, ஆழ்துளைக் கிணறுகள் மூலமாகத்தான் பெரும்பகுதியான கிராமங்கள் குடிநீரைப் பெறுகின்றன. அந்த ஆழ்துளைக் கிணற்றைப் பராமரிக்கின்ற பொருத்துநர்கள், உதவியாளர்களாக ஏறக்குறைய மாநில அளவிலே 1,100 பேர் வேலை பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் கடந்த 15 ஆண்டுகளாக தினக் கூலி அடிப்படையிலே வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள்தான் முக்கியப் பணிகளை கிராமங்களிலே குடிநீருக்காகச் செய்து கொண்டிருக்கிறார்கள் என்கின்ற முறையிலே அவர்களுக்கு ஒரு தொகுப்பு ஊதியத்தைக் கொடுத்து, பணி உறுதியளிப்பு செய்ய வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு, சீர்மரபினர் பெண்களுக்காக ஊக்கத் தொகை அளிக்கப்பட்டிருக்கிறது. அதை நான் வரவேற்கிறேன். அதோடு, கிராமப்புறங்களிலே இருக்கின்ற ஏழை எளிய மக்கள், ஓய்வூதியம் பெறுகின்றவர்கள், பெற்று வந்த 150 ரூபாயை 200 ரூபாயாக ஆக்கியிருப்பதற்கு என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. அ.லெ. சுப்பிரமணியன்):** ஒரு நிமிடத்தில் பேசி முடித்துக் கொள்ளுங்கள்.

**திரு. லா. சந்தானம்:** *5 நிமிடங்களாவது தாருங்கள்.*

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. அ.லெ. சுப்பிரமணியன்):** நிறையப் பேர் பேச வேண்டியிருக்கிறது.

**திரு. லா. சந்தானம்:** நான் இன்னும் பட்ஜெட்டுக்கே வரவில்லை.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. அ.லெ. சுப்பிரமணியன்):** நிறையப் பேர் பேச வேண்டியிருக்கிறது. பேரவைத் தலைவர் அவர்கள் நேரத்தை வரையறுத்துத் தந்திருக்கிறார்கள்.

**திரு. லா. சந்தானம்:** இந்த நிதி நிலை அறிக்கையிலே கடந்த காலத்திலே அளிக்கப்பட்டு வந்த அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு சற்று குறைக்கப்பட்டிருக்கிறது. அந்த நிதி ஒதுக்கீட்டை அதிகப்படுத்தித் தர வேண்டும்.

அதோடு, இப்போது கிராமப்புறங்களில் போக்குவரத்து வசதிதான் மிகவும் அவசியம் என்று கருதுகின்றார்கள். இப்போது பள்ளிகளிலே படிக்கின்ற மாணவர்களுக்கெல்லாம் இலவச பஸ் பாஸ் அளித்து போக்குவரத்திற்கு வழிவகை செய்திருக்கிறோம். ஆனால், அந்தப் போக்குவரத்துத் துறைக்கு இந்த நிதிநிலை அறிக்கையிலே எந்தவிதமான நிதி ஒதுக்கீடும் செய்யப்படவில்லை. சென்ற ஆண்டுகளிலே போக்குவரத்திற்குப் புதிய பேருந்துகள் வாங்கியதாகக் காட்டப்பட்டிருக்கிறதே தவிர இந்த ஆண்டு வாங்கப்படுவதற்கான சூழ்நிலை இல்லை என்கின்ற நிலை இருப்பதை மாற்றி போக்குவரத்துத் துறைக்குப் புதியதாக பேருந்துகள் வாங்குவதற்குரிய நிதியினை அளிக்க வேண்டும். ஏற்கெனவே, பல்வேறு கிராமங்களுக்கு ஓடிக்கொண்டிருந்த பேருந்துகளை எல்லாம் வருவாய் சரியாக ஈட்டவில்லை என்கின்ற காரணத்திற்காக இப்போது நிறுத்தியிருக்கிறார்கள். அது மக்கள் மத்தியிலே பல்வேறு பிரச்சினைகளை உருவாக்கியிருக்கிறது. எனவே, போக்குவரத்தை மேம்படுத்துவதற்காக நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மத்தியிலே இருக்கின்ற அரசு அன்றாடம் மக்கள் உபயோகிக்கின்ற அரிசி, மண்ணெண்ணெய், கேஸ், விவசாயிகள் பயன்படுத்துகின்ற யூரியா ஆகியவற்றுக்கெல்லாம் விலையை உயர்த்தியிருக்கிறார்கள். எங்களது கிராமங்களிலே ஒரு முதுமொழி உண்டு. 'எய்தவன் இருக்க அம்பை நோவானேன்' என்று சொல்வார்கள். எய்தவர்கள் அவர்களாக இருந்தாலும்கூட, நாம் அம்பாகச் செயல்பட்டுவிட்டோமோ என்கிற



நிலையை மக்கள் எடுத்துக்கொண்டிருக்கின்ற ஒரு சூழ்நிலையை நான் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். எனவே, அவர்கள் அப்படி அத்தியாவசியப் பொருட்களின் விலையை உயர்த்தியதன் காரணமாக, இப்போது விவசாயிகள் எல்லாம் மிகுந்த துயரத்திலே ஆழ்ந்திருக்கிறார்கள். நமது அய்யன் திருவள்ளுவர் குறிப்பிடுகின்ற நேரத்திலேகூட,

> **"சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் அதனால்**
> **உழந்தும் உழவே தலை."**

என்று குறிப்பிடுகின்றார்கள். இன்று சுழன்று கொண்டிருக்கின்ற இந்த உலகம் உழவன் பின்னே நிற்கின்ற காரணத்தினால் உழவுத் தொழில் மிகக் கடுமையான தொழிலாக இருந்தாலும் உழந்தும் உழவே தலை என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

அவர்களே அந்த நாளில் உழவு என்பது கஷ்டத்தை மேற்கொண்டு செய்கின்ற ஒரு பணி, துயரங்கள் நிறைந்த பணி என்பதை ஒப்புக்கொண்டிருக்கின்றார்கள். இப்போது உழவர்கள் எல்லாம் கடன் சுமையால் மிகுந்த துயரத்திலே ஆழ்த்தப்பட்டிருக்கிறார்கள். இப்போது நமது அரசு "அவர்களுக்கு அபராத வட்டியை மட்டும் தள்ளுபடி செய்கிறேன்" என்று சொல்லியிருப்பது நூற்றிலே ஒரு சதவீதம் அளவுக்குத்தான் உழவர்களுடைய பிரச்சினைகளைத் தீர்த்திருக்கிறது. அவர்களுடைய உண்மையான எண்ணம் முழுமையான கடன் தள்ளுபடி வேண்டும் என்பதே. அப்படி இல்லையென்றாலும்கூட, அவர்கள் பெற்றிருக்கின்ற தொகைக்கான வட்டியையாவது தள்ளுபடி செய்ய வேண்டுமென்று நினைக்கிறார்கள். எனவே அரசு அதற்குரிய நடவடிக்கைகளை எடுத்து அந்த உழவர்களுடைய சுமையைக் குறைப்பதற்கு முழுமையாக வட்டியையாவது தள்ளுபடி செய்ய வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-45*

தென் பகுதியிலே ஏற்கெனவே இனக்கலவரங்கள் நடந்த பகுதிகளிலே வேலைவாய்ப்பினை உருவாக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு நீங்கள் அத்தனை முயற்சிகளையும் செய்துகொண்டிருந்தாலும்கூட, இப்போது பொதுத் துறையிலே இயங்கிக்கொண்டிருக்கின்ற அத்தனை நிறுவனங்களும்-பஞ்சாலைத் துறையாக இருந்தாலும் சரி, சர்க்கரைத் துறையாக இருந்தாலும் சரி, அது போல சிமெண்ட் உற்பத்தி செய்கின்ற ஆலைகளாக இருந்தாலும் சரி, அத்தனையும்—இப்போது நலிந்து கொண்டிருக்கின்ற சூழ்நிலையில் இருந்துகொண்டிருக்கின்றன.

தென் பகுதியில் இருக்கின்ற ஆலை மற்றும் அரியலூரிலே இருக்கின்ற சிமெண்ட் ஆலைகளிலே உற்பத்தியாகின்ற சிமெண்ட்டை முன்பெல்லாம் அரசுத் துறைகளிலே நடக்கின்ற வேலைகளுக்காக வாங்குகின்ற நிலை இருந்தது. ஆனால் இப்போது அரசுத் துறைகளிலே நடக்கிற வேலைகளுக்கு தனியார் சிமெண்ட் ஆலைகளிலேயிருந்து சிமெண்ட்டை வாங்குகின்ற ஒரு நிலை ஏற்பட்டிருக்கின்ற காரணத்தினால் இந்த ஆலைகளில் உற்பத்தியாகின்ற சிமெண்ட் எல்லாம் தேங்குகின்ற நிலையிலே, அங்கு பணியாற்றிக்கொண்டிருக்கின்ற தொழிலாளர்கள் எல்லாம் பாதிப்பிற்குள்ளாக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே அரசு...

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சந்தானம் அவர்கள் சொல்வது போன்று அரியலூர் சிமெண்ட் ஆலையிலே உற்பத்தியாகின்ற சிமெண்ட்டை அரசாங்கம் பயன்படுத்தாமல் இல்லை. அரசாங்கத்தில் உள்ள இலாகாக்கள், அரசாங்கத்திற்குச் சொந்தமான அரியலூர் சிமெண்ட் ஆலையில் உற்பத்தியாகின்ற சிமெண்ட்டையும் வாங்குகிறார்கள்; சில நேரங்களிலே அவர்கள் கொடுக்க முடியாத சூழ்நிலையில் தனியாரிடத்திலேயும் வாங்குகிறார்கள். அப்படி வாங்கும் போதும் யார் குறைந்த விலைக்குக் கொடுக்கிறார்களோ அந்த விலைக்குத்தான் அவர்களிடமிருந்து அரசாங்க இலாகாக்கள் சிமெண்ட்டை வாங்கிக்கொண்டிருக்கின்றன.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. அ.லெ. சுப்பிரமணியன்):** டாக்டர் க. கிருஷ்ணசாமி.

***டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, விருதுநகர் மாவட்டம், ஆலங்குளம் சிமெண்ட் ஆலை, அரசுத் துறை ஆலை. அந்த ஆலையிலே உற்பத்தியாகக் கூடிய சிமெண்ட் இப்போது பிற சிமெண்ட் ஆலைகளிலே உற்பத்தி செய்து விற்கக்கூடிய அதே விலையைத்தான் கொண்டு இருக்கிறது. இருந்தாலும்கூட, அரசு நிறுவனங்களை ஊக்குவிக்கின்ற அடிப்படையிலேயும், அரசு நிறுவனங்களை வாழ வைக்க வேண்டுமென்ற அடிப்படையிலேயும், அரசினுடைய நிறுவனங்கள் அத்தனைக்கும் அரசு ஆலைகளில் உற்பத்தியாகக்கூடிய சிமெண்ட்டைத்தான் பயன்படுத்த வேண்டுமென்ற உத்தரவைப் பிறப்பிப்பதற்கு அரசுக்கு என்ன தயக்கம் என்பதுதான் எங்களுடைய கேள்வி.



**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** தலைவர் அவர்களே, அரசாங்கத்திற்கு எந்தவிதமான தயக்கமும் இல்லை. ஏற்கெனவே அரசாங்க இலாகாக்களுக்கு அப்படிப்பட்ட ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. (குறுக்கீடு)

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. அ.லெ. சுப்பிரமணியன்):** போதும். அமைச்சர் பதில் சொல்லிவிட்டாரே. சீக்கிரம் முடியுங்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** அப்படியென்றால், ஆலங்குளத்திலே உற்பத்தியாகக்கூடிய அத்தனை சிமெண்ட்டையும் பயன்படுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா? அதன் மூலமாக அந்த அரசு ஆலையின் உற்பத்தியைப் பெருக்க முடியுமா என வினவுகிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. அ.லெ. சுப்பிரமணியன்):** மாண்புமிகு உறுப்பினர் திரு. சந்தானம், அதிகமாக, 5 நிமிடங்கள் பேசிவிட்டீர்கள். விரைவில் பேசிமுடிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் தன்னுடைய விளக்கத்திலே அரசு ஆலைகளிடத்திலேயிருந்து சிமெண்ட்டை வாங்க அரசு அனுமதி அளித்திருந்தாலும்கூட, குறைவான விலைக்கு யார் தருகிறார்களோ, அவர்களிடமிருந்து அதை வாங்குகின்ற ஒரு சூழல் இருக்கிறது என்பதையும் எடுத்துச்சொல்லியிருக்கிறார்கள். நமது அரசு ஆலைகளிலே உற்பத்தி செய்யப்படுகின்ற சிமெண்ட்டினுடைய விலை சற்று அதிகமாக இருக்கின்ற சூழ்நிலை இருக்கிறது. அதற்குக் காரணம் அந்த ஆலைகள் எல்லாம் புனரமைக்கப்பட்டு, சீர் செய்யப்படவில்லை. அப்படிப் புனரமைக்கப்பட்டால் அந்த விலையைச் சற்றுக் குறைத்துக் கொடுப்பதற்குரிய வாய்ப்பு இருக்குமென்று அங்கிருக்கின்ற அதிகாரிகளும், தொழிலாளிகளும் சொல்கிறார்கள். எனவே அந்த ஆலைகளைச் சீரமைப்பதற்கு, புனரமைப்பதற்கு அரசு நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்றும், அங்கு தேங்கியிருக்கின்ற சிமெண்ட் எல்லாம் வாங்குவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமென்றும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-50*

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. அ.லெ. சுப்பிரமணியன்):** நீங்கள் 6 நிமிடங்கள் அதிகமாகப் பேசியிருக்கிறீர்கள். சீக்கிரம் பேசி முடித்துவிடுங்கள்.

**திரு. லா. சந்தானம்:** நெசவுத் தொழிலை மேற்கொண்டு இருக்கின்றவர்கள், அதுவும் நமது நண்பர் ஞானசேகரன் ஊரிலிருந்துதான் ஒருவர் என்னிடத்திலே கோரிக்கை வைத்திருக்கிறார். நெசவுத் தொழிலை மேற்கொள்வதற்காக அவர்கள் எல்லாம் தங்களுடைய வீடுகளைக்கூட அடமானம் வைத்து அந்தத் தொழிலை மேற்கொண்டிருக்கின்ற நிலையில் இப்போது அவர்களுடைய அந்தத் தொழில் நசிந்துபோய் அடமானம் வைக்கப்பட்ட வீடுகளை எல்லாம் கூட்டுறவு சங்கங்களிலிருந்து நடவடிக்கை எடுத்து ஜப்தி செய்து அவர்களை எல்லாம் வெளியேற்றுகின்ற ஒரு நிலை இருக்கிறது. ஆகவே தயவு செய்து, அந்த வீட்டை அடமானம் வைத்துத் தொழில் செய்தவர்கள் எல்லாம் அந்தக் கடனைக் கட்டுவதற்குச் சற்றுத் தவணையாவது கொடுத்து அவர்கள் குடியிருக்கின்ற வீட்டைக் காலி செய்யாத அளவிற்கு அவர்களுக்கு அரசு ஒரு அங்கீகாரம் கொடுக்க வேண்டும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உரையாற்றுகின்ற போது ஓடிக்கொண்டிருந்த பேருந்துகள் எல்லாம் நிறுத்தப்பட்டு இருப்பதாகக் குறிப்பிட்டிருந்தார்கள் நிச்சயமாக அவ்வாறு நிறுத்தக் கூடாது என்று எல்லா இயக்குநர்களுக்குமே ஆணையிடப்பட்டிருக்கிறது. அப்படி ஏதேனும், எந்த கிராமப் பேருந்துகளாவது நிறுத்தப்பட்டு இருக்கும் என்று சொன்னால் நிச்சயமாக அதைத் திரும்ப விடுவதற்கு ஏற்பாடு செய்யப்படும். எல்லாப் போக்குவரத்து நிர்வாக இயக்குநர்களுக்கும் ஓடிக்கொண்டு இருக்கின்ற எந்தப் பேருந்தையும் நிறுத்தக் கூடாது என்று ஆணையிடப்பட்டு இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. அ.லெ. சுப்பிரமணியன்):** திரு. என்.எஸ். ராஜ்குமார் மன்றாடியார்.

***திரு. என்.எஸ். ராஜ்குமார் மன்றாடியார்:** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, 2000-2001 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை பொது விவாதத்தில் பங்குகொள்ள வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்த தங்களுக்கு முதற்கண் என்னுடைய அன்பான வணக்கங்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



*'வானோக்கி வாழும் உலகெல்லாம் மன்னவன்*
*கோனோக்கி வாழுங் குடி.'*

உலகத்து உயிர்கள் எல்லாம் மேகம் பெய்யும் மழையை எதிர்பார்த்து வாழுகின்றமைபோல், நாட்டு மக்கள் எல்லாம் அரசனது செங்கோல் ஆட்சியால் உண்டாகும் நன்மையை எதிர்பார்த்து வாழ்கின்றனர் என்று அய்யன் திருவள்ளுவர் 2000 ஆண்டுகளுக்கு முன்பு சொல்லியுள்ளார். எனவே, செங்கோல் ஆட்சி நடத்திவரும் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களுடைய 2000-2001 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை அனைத்துத் தரப்பு மக்களுக்கும் நன்மை பயக்கக்கூடியதாக அமைந்துள்ளது எதிர்பார்த்த ஒன்றுதான்.

தொலைநோக்குப் பார்வையுடன் தயாரிக்கப்பட்டுள்ள இந்த நிதிநிலை அறிக்கையில் பாராட்டப்பட வேண்டிய அம்சங்கள் நிறைய உண்டு. ஆனால் நேரத்தின் அருமையைக் கருதி நானும் ஒரு விவசாயி என்ற முறையில் இவ்வறிக்கையில் விவசாயிகளுக்குப் பயன்தரும் முடிவுகள் பற்றியும் அவர்களுக்காகத் தொடர்ந்து எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் என்னுடைய கருத்துக்களை அவைமுன் வைக்க விரும்புகிறேன்.

*'சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்*
*உழந்தும் உழவே தலை.'*

என்று பயிரிடும் தொழிலின் சிறப்பைப்பற்றி உலகப் பொதுமறையாக விளங்கும் திருக்குறள் சொல்கிறது. அத்தகைய விவசாயிகளின் விழி நீரைத் துடைத்திட விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் கொடுத்த சொல்லேர் உழவன் டாக்டர் கலைஞர் அவர்கள் வியத்தகு திட்டங்களை இவ்வாண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் தந்துள்ளார்கள். புதிய வேளாண் கொள்கை ஒன்றை உருவாக்க உயர்நிலைக் குழு அமைத்தல், காய்கறிகள், பழங்கள் போன்ற பொருட்களைப் பாதுகாக்க குளிர்பதனக் கூடங்கள் அமைத்தல், கிராமப்புறங்களில் சிமென்ட் தளங்கள் நிறுவுதல், பாசனத்தை இயக்கவும், பராமரிக்கவும் பயன்படுத்தும் விவசாயிகளையே கொண்ட குழுக்கள் உருவாக்குதல், பாசன ஏரிகளைச் சீர்படுத்துதல், அனைத்து விவசாயிகளுக்கும் நில உரிமைப் பதிவேடுகளை வழங்குதல், தவணை தவறிய வேளாண்மை சார்ந்த கடன்களுக்கு சிறிய, பெரிய விவசாயிகள் என்ற பாகுபாடு இல்லாமல், அபராத வட்டித் தள்ளுபடி மற்றும் 25 இலட்சம் ஏக்கர் தரிசு நிலங்களை 10 ஆண்டுகளில் மேம்பாடு செய்வதற்கான தொலைநோக்குத் திட்டம் போன்றவை பாராட்டுக்குரியவை.

மேலும் பாசன நீரை எடுத்துச் செல்ல அரசு நிலங்களில் பதிக்கும் குழாய்களுக்காக இதுவரை விதிக்கப்பட்டு வந்த பாதைக் கட்டணம் ரத்துச் செய்யப்படும் என்ற அறிவிப்பு விவசாயிகளுடைய நீண்ட நாளைய கோரிக்கையை நிறைவேற்றுவதாக அமைந்துள்ளது.

*முற்பகல் 11-55*

கீழ் பவானி பகுதி விவசாயிகளின் நீண்ட நாளைய நியாயமான கோரிக்கை ஒன்று உள்ளது. அதை முதல்வர் கலைஞர் அவர்கள் நிச்சயமாக நிறைவேற்றித் தருவார்கள் என்று அவர்கள் எதிர்பார்த்த வண்ணம் உள்ளனர். கீழ் பவானி பாசனத் திட்டமானது ஆரம்பத்தில் புன்செய்ப் பயிர் சாகுபடி செய்வதற்காக வருடம் முழுவதும் தண்ணீர் கொடுக்க ஏற்படுத்தப்பட்ட திட்டம். பிற்காலத்தில் அது இரண்டு போகமாக மாற்றியமைக்கப்பட்டு முதல் போகத்தில் நன்செய்ப் பயிர் சாகுபடி செய்யவும் இரண்டாம் போகத்தில் புன்செய்ப் பயிர் சாகுபடி செய்யவும் அனுமதிக்கப்பட்டது.

இரண்டாம் போகத்தில் புன்செய்ப் பயிர் தவிர வேறு பயிர்கள் சாகுபடி செய்தால் தண்டத் தீர்வை விதிக்கப்படுகிறது. இது, பயிர்க் கட்டுப்பாட்டின் காரணத்தால் விதிக்கப்படும் தீர்வையாகும். இரண்டாம் போகத்திற்குத் தண்ணீர் விடும்போது தானாகவே உரம் எடுத்த பூமிகளில் நெற்பயிர் போன்ற நன்செய்ப் பயிர்கள் சாகுபடி செய்தாலும், கிணற்று நீர் வசதிகொண்ட கீழ்பவானிப் பாசன பூமிகளில், ஏற்கெனவே பயிர் செய்யப்பட்டிருக்கும் வருடாந்திரப் பயிர்களான கரும்பு, வாழை மற்றும் மஞ்சள் போன்ற பயிர்களானாலும் அல்லது பல வருடங்கள் பலன் தரும் தென்னை மரங்கள் போன்ற perennial crops சாகுபடி செய்திருந்தாலும், இவற்றுக்குத் தண்டத் தீர்வை வசூலிக்கப்படுகிறது. இந்தத் தண்டத் தீர்வை முறையாக விதிக்கப்படுகிறதா என்றால் அதுவும் இல்லை. 300 முதல் 1900 விழுக்காடுவரை அதிகமாக தண்டத் தீர்வை விதிக்கப்படுவதால் விவசாயிகள் பெரும் சிரமத்திற்கு உள்ளாகிறார்கள். கிராம நிர்வாக அதிகாரிகளைக் கவனிக்க மறந்த விவசாயிகளே பெரும்பாலும் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவேதான் 1996 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகத் தேர்தல் அறிக்கையில் 'பயிர் கட்டுப்பாட்டின் காரணமாக விதிக்கப்படும் தண்டத் தீர்வையை மறு பரிசீலனை செய்து அதிலுள்ள குறைபாடுகள் களையெடுக்கப்படும்' என்று உறுதி கொடுக்கப்பட்டுள்ளது. எனவே, அந்த உறுதியினை நிறைவேற்றும் வகையிலும், விவசாயிகளை அதிகார



துஷ்பிரயோகத்திலிருந்து காப்பாற்றும் வகையிலும் இரண்டாம் போகப் பாசனத்தில் பயிர் செய்யப்படும் புன்செய் அல்லாத பயிர்களுக்குத் தண்டத் தீர்வைக்குப் பதிலாக அரசு நிதியிழப்பும் ஏற்படாத வண்ணம் ஏக்கர் ஒன்றுக்கு இவ்வளவு என—பயிர் வாரியாக அல்ல—தீர்வை நிர்ணயம் செய்து, கிராம நிர்வாக அதிகாரியிடமிருந்து, அவர்களுடைய பிடியிலிருந்து விவசாயிகளை விடுவிக்க வேண்டுமென்று விவசாயிகளின் நலனில் அக்கறை கொண்டுள்ள முதல்வர் கலைஞர் அவர்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாநில எங்கும் நிலத்தடி நீர் மட்டும் வேகமாகக் குறையும் நிலையை அறிந்து, வருமுன் காப்பதைக் கடமையாகக் கொண்ட தமிழக அரசு, ஒரு நிபுணர் குழுவை அமைத்து, மாநிலம் முழுவதும் மழை நீரை, வீணாகாமல் சேமித்து வைத்து உபயோகப்படுத்தவும், நிலத்தடி நீரைப் பாதுகாத்து அதிகரிக்கவும் முயற்சிகள் எடுக்கப்படும் என்று நிதிநிலை அறிக்கையில் சொல்லப்பட்டுள்ளது. அரசின் இந்தத் தொலைநோக்குப் பார்வையை எதிர்க்கட்சிகளும் பாராட்டாமல் இருக்க முடியாது.

ஈரோடு மற்றும் கோவை மாவட்டங்களில் இந்தப் பிரச்சினை பூதாகரமாக உருவெடுத்துள்ளது. இந்த இரண்டு மாவட்டங்களுக்கும் உட்பட்ட மேட்டுப்பாளையம், அவினாசி, பவானிசாகர், திருப்பூர், கோபி, பெருந்துறை, காங்கேயம் ஆகிய 7 சட்டமன்றத் தொகுதிகளில் உள்ள சென்னிமலை உள்ளிட்ட 10 ஊராட்சி ஒன்றியப் பகுதிகள் மிகவும் வறட்சிக்கு உள்ளாகிய பகுதிகள் ஆகும். வானத்தையே நம்பியிருக்கும் இப்பகுதிகளில் நிலத்தடி நீர் நாளுக்குநாள் கீழே போய்க்கொண்டிருக்கிறது. ஏற்கெனவே 450 அடி முதல் 500 அடிவரை போடப்பட்டுள்ள ஆழ்குழாய் கிணறுகள் எல்லாம் தண்ணீரின்றி அறவே வறண்டு ஆயிரம் அடிக்குக் கீழேதான் தண்ணீர் கிடைக்கும் என்ற ஒரு அவலநிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன. எதிர்காலத்தில் குடிநீர்கூட அறவே கிடைக்காத சூழ்நிலை ஏற்படும் அபாயம் உள்ளது. இதையெல்லாம் உணர்ந்துதான்

*நீரின்றி அமையாது உலகு எனினும்*
*அதனை வகைப்படுத்த ஆறு இன்றி*
*இயலாது என உணர்ந்தார் ஆறு கண்டார்*
*அதனாலே சோறு கண்டார் - என்று*

வையகத்திற்கு உணர்த்திய மாண்புமிகு முதல்வர் அவர்கள் பவானி ஆற்றில் வெள்ளப் பெருக்குக் காலங்களில் கிடைக்கும் உபரி நீரைக்

கொண்டு திறந்த கால்வாய் மூலமாக மேற்சொன்ன வறட்சிப் பகுதிகளில் உள்ள 85 குளங்கள் மற்றும் 220 குட்டைகளுக்குத் தண்ணீர் நிரப்பிக் கொடுத்து நிலத்தடி நீர் மட்டத்தை உயர்த்திக் கொடுக்க அவினாசி-அத்திக்கடவுத் திட்டத்தை 1998-99 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் விரிவான ஆய்விற்கு எடுத்துக்கொள்வதாக அறிவித்தார்கள். அதற்கான ஆய்வு அறிக்கை அடுத்த மாதம் இறுதியில் பெறப்பட்டவுடன் அதனைப் பரிசீலித்து உரிய முடிவுகள் எடுக்கப்படும் என்று இவ்வாண்டுக்கான நிதிநிலை அறிக்கையிலும் தெரிவித்திருக்கிறார்கள். அவினாசி-அத்திக்கடவுத் திட்டம் நிறைவேறும் பட்சத்தில் கோவை, ஈரோடு ஆகிய இரண்டு மாவட்டங்களில் வாழும் சற்றொப்ப 20 இலட்சம் மக்கள் குடிநீர் பெற்றுப் பயனடைவார்கள். இதனை நிறைவேற்ற இருக்கும் மாண்புமிகு கலைஞர் அவர்களுக்கு முன்கூட்டியே என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பாசமிகு தலைவர் முதல்வர் அவர்களே, இத்திட்டத்தைத் தங்களால் நிறைவேற்ற முடியாவிட்டால் எந்நாளும், யாராலும் இதை நிறைவேற்ற முடியாது என்பதுதான் உண்மையான நிலை. எனவே, 2000 ஆண்டு ஏப்ரல் மாதத்தில் ஆய்வு அறிக்கையைப் பெற்று, பின் மாநில அரசின் பங்காகத் தேவைப்படும் நிதியினை ஒதுக்கிக் கொடுத்து, மத்திய அரசின் கட்டுப்பாட்டில் இயங்கும் Water Resources Organisation-னிடமிருந்து போதிய நிதி ஆதாரமும் பெற்று அவினாசி-அத்திக்கடவு குடிநீர்த் திட்டத்தை விரைவில் நிறைவேற்றிக் கொடுக்குமாறு தங்களை அன்புடன் கேட்க விழைகின்றேன்.

நண்பகல் 12-00

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், பரம்பிக்குளம் ஆழியாறு பாசனத் திட்டப் பகுதியில் மடை விட்டு மடை மூலம் ஒவ்வொரு பாசனப் பருவத்திலும் தண்ணீர் விட எடுத்துள்ள முடிவு பாராட்டுக்குரியது. மேலும் 50 ஆண்டுகளாக P.A.P. பாசனக் கால்வாய்கள் செப்பனிடப்படாமல் இருந்ததை பல கோடி ரூபாய் மதிப்பீட்டில் கடந்த ஆண்டு மேம்படுத்தி கடைக்கோடி பகுதிகளுக்கும் தடங்கலில்லாமல் தேவைக்கேற்ப பாசனத்திற்கு நீர் கிடைக்கச் செய்துள்ளீர்கள். இப்பாசனத் திட்டத்தை என்னுடைய காங்கேயம் தொகுதியில் குண்டடம் ஊராட்சி ஒன்றியத்தில் மிகவும் வறட்சிப் பகுதிகளான குறுக்கப்பாளையம், எல்லப்பாளையம்புதூர், புங்கந்துறை, செங்கோடம்பாளையம், சிறு கிணறு, பெருமாள்பாளையம், ஆரத்



தொழுவு, முதலிபாளையம் ஆகிய ஊராட்சிகளுக்கும் விரிவுபடுத்தி பாசனத்திற்கு நீர் கொடுக்குமாறு நான் 1998-99 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை பொது விவாதத்தில் கலந்து கொண்டு பேசியபோது கேட்டிருந்தேன். இந்தப் பாசனத் திட்டத்தின்கீழ் ஏற்கெனவே பயன்பெற்றுக் கொண்டிருந்த சற்றொப்ப 15,000 ஏக்கர் நிலங்கள் வீட்டு மனைகளாகவும், தொழிற்சாலைகளாகவும், காற்றாலைகளாகவும் மாறிவிட்ட நிலையில், இந்த நிலங்களுக்காக ஒதுக்கப்பட்ட நீரைக் கொண்டு என்னுடைய கோரிக்கையை நிறைவேற்றிக் கொடுக்குமாறு நான் கேட்டிருந்தேன். அதே அடிப்படையில்தான் கீழ்பவானி பாசனத் திட்டமும் சமீபத்தில் விரிவாக்கப்பட்டுள்ளது. எனவே, நான்காவது முறையாக இந்தப் பேரவையில் நான் வைக்கும் இந்தக் கோரிக்கையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிச்சயம் நிறைவேற்றிக் கொடுப்பார்கள் என்று உளமார நம்புகின்றேன். (மணியடிக்கப்பெற்றது)

இறுதியாக, 10 ஆண்டு காலமாக அரசு புறம்போக்கு நிலங்களில் வீடுகட்டி அனுபவித்து வருபவர்களுக்கு அந்த இடங்களுக்கான வீட்டு மனைப் பட்டாக்களை வழங்க அரசு முன்வந்திருப்பது மிகவும் வரவேற்கத்தக்க ஒரு திட்டம். குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால் 2-4-1997 அன்று கேள்வி நேரத்தில் "ஓடைப் புறம்போக்கில் நீண்ட நாட்களாக வீடுகட்டிக் குடியிருந்து வரும் ஏழையெளிய மக்கள் மகிழத்தக்க வகையில் அவர்களுக்கு வீட்டு மனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா" என என்னால் கேட்கப்பட்ட கேள்வியில் தொடங்கி இன்று இந்த அளவிலே ஒரு நல்ல முடிவை அரசு அறிவித்திருக்கிறது என்று சொன்னால், உண்மையிலேயே ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்கின்ற அரசாக தானைத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய அரசு உள்ளது என்று பெருமைப்படுகின்றேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, தங்களைத் தலைவராகக் கொண்டு இந்த மாமன்றத்தில் என்னுடைய உயிரினும் மேலான தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களின் சீரிய தலைமையில் இயங்கி வரும் இந்த தி.மு.கழக ஆட்சியில் சட்டப் பேரவை உறுப்பினராக நான் சேவை செய்யக்கூடிய வாய்ப்பினைப் பெற்றுள்ளதை பெரும் பாக்கியமாகக் கருதுகின்றேன். இந்தச் சந்தர்ப்பத்தை எனக்கு ஏற்படுத்திக் கொடுத்த என்னுடைய ஒப்பற்ற தலைவர் அவர்களுக்கும், காங்கேயம் தொகுதி மக்களுக்கும் என்னுடைய நன்றியை இந்த அவையின் வாயிலாகத் தெரிவித்து அமர்கின்றேன். நன்றி. வணக்கம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. அ.லெ. சுப்பிரமணியன்):** டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, தமிழக முதல்வருடைய 13-வது பட்ஜெட் மீதான தமிழ் மாநில காங்கிரசினுடைய கருத்துகளை நான் எடுத்து முன்வைக்க விரும்புகின்றேன். தமிழக முதலமைச்சர் அவர்கள், சட்டப் பேரவையில் இருக்கின்ற எதிர்க்கட்சியினுடைய பிரதான தலைவர், நிறுவனர் என்ற வகையிலே எங்கள் அன்புத் தலைவர் ஐயா மூப்பனார் அவர்களுக்கு நிதிநிலை அறிக்கையினுடைய பிரதியைக் கொடுத்து அனுப்பினார். அதற்கு எங்களுடைய தலைவர் மூப்பனார் அவர்கள் சம்பிரதாயமாக நன்றியைக் கூறினார்கள் என்பதை நான் இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன்.

இந்த பட்ஜெட்டைப் பார்க்கிறபோது முதலிலே நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகின்றேன். மிகுந்த முதிர்ச்சியும் பட்டறிவும் உள்ள தமிழக முதலமைச்சர் அவர்கள் சாதாரண விஷயத்தைக்கூட சுவையாகச் சொல்லக்கூடியவர் என்பதிலே இருவேறு கருத்துக்கு இடமில்லை. இந்த பட்ஜெட்டைப் பொறுத்தவரையிலே எனக்கு ஒரு சம்பவம்தான் நினைவிற்கு வருகிறது. திருமண நிகழ்ச்சியின்போது மிக நெருங்கிய நண்பர்கள் அன்பளிப்பாக மிகப் பெரிய பார்சலைக் கொடுப்பார்கள். அந்தப் பார்சலைப் பிரிக்கின்றபோது, பிரித்துக் கொண்டேயிருக்கிறபோது காகிதம் எல்லாம் வந்துவிடும். கடைசியாக பல்வேறு லேயர் என்று சொல்லப்படுகிற அந்தக் காகிதங்களுக்கு மத்தியிலே இரண்டு சாக்லெட் தான் கடைசியில் தென்படும். அப்படித்தான் இந்த பட்ஜெட் இருக்கிறது என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். பொதுவாகவே...

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, அவ்வளவு பெரிய பார்சலைப் பிரித்துக்கொண்டே போனால்கூடக் கடைசியில் விலைமதிப்புள்ள பொருள்தான் அதில் இருக்கும்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** கடைசியில் இருப்பது இரண்டு சாக்லெட்தான். ஏற்கெனவே போட்டிருக்கிற திட்டங்களை எல்லாம் ஒன்று சேர்த்து 'வாழ்ந்து காட்டுவோம்', 'பூமாலை' போன்ற பல்வேறு தலைப்புகளிலே தனக்கே உரிய பாணியிலே முதல்வர் அவர்கள் அளித்திருக்கிறார்கள். இந்தப் பூமாலை உண்மையிலேயே கழுத்துக்குப் போட்ட பூமாலையா? அல்லது காதிற்குக் கொடுக்கப்பட்ட பூமாலையா என்று நான் இங்கே கேட்க விரும்புகின்றேன்.



பிற்பகல் 12-05

Tax free budget என்று பத்திரிகைகளிலே தலைப்பைப் போட்டிருக்கிறார்கள். வரிகள் இல்லாத பட்ஜெட். தேர்தலுக்கு முன்பாக இருக்கின்ற பட்ஜெட் என்பதால் வரிகள் இல்லாத பட்ஜெட் என்று பல பத்திரிகைகள் பேனரிலே போட்டிருக்கிறார்கள். நான் கேட்கின்றேன், ஒரு ஒட்டகத்தைச் செலுத்துகின்றபோது பல பொதிகளை, சுமைகளை அதன் முதுகிலே ஏற்றிவிட்டு அது நகர மறுக்கின்றபோது கடைசியாக வைத்த ஒரு பொதியை இறக்கிவிட்டு 'உன்னுடைய சுமையை நான் இறக்கிவிட்டேன், நீ செல்' என்று சொன்னால் அந்த ஒட்டகம் சென்றுவிடும். அப்படித்தான் இந்த பட்ஜெட் அமைந்திருக்கிறது. ஏற்கெனவே பால் விலை உயர்வு, பஸ் கட்டண உயர்வு, அரிசி விலை உயர்வு, மண்ணெண்ணெய் விலை உயர்வு என்று பல்வேறு விலை உயர்வுகளை அறிவித்துவிட்டு ஒப்புக்கு சில சலுகைகளை அளித்து இன்றைக்கு பட்ஜெட்...

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன்கூட இதே கருத்தைச் சொன்னார்கள். அனுபவம் வாய்ந்த உறுப்பினர்கள் வரிக்கும் கட்டணத்திற்கும் இருக்கக்கூடிய வித்தியாசத்தை முதலிலே புரிந்து கொள்ள வேண்டும். கட்டண உயர்வு என்பது, ஆண்டாண்டுதோறும் மின்சாரக் கட்டணமாக இருந்தாலும், பஸ் கட்டணமாக இருந்தாலும், அந்த இலாகாவிற்கு ஏற்படுகின்ற செலவை அடிப்படையாக வைத்து இந்தியா முழுவதும் உயர்த்தப்படுகிறது. வரிகள் என்பது ஆண்டுதோறும் ஒவ்வொரு பொருளுக்கும் இத்தனை சதவீதம் வரி என்று போடுவது. இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் இந்த ஆண்டு வரி உயர்த்தவில்லை.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, நான் பேசுகிறபோது ஏற்கெனவே Property Tax சொத்து வரியை உயர்த்தி விட்டீர்கள் என்றும் Road Tax உயர்த்திவிட்டீர்கள் என்றும், அதே நேரத்தில் பேருந்து கட்டணம், பால் விலை, மின் கட்டணம் ஆகியவற்றையும் உயர்த்திவிட்டீர்கள் என்றும் சொன்னேன். ஏற்கெனவே நீங்கள் அவற்றையெல்லாம் உயர்த்திவிட்ட காரணத்தாலே இனி உயர்த்துவதற்கு எதுவும் இல்லை. ஆகவேதான் தந்திரமாக இப்படிப் பட்ட ஒரு பட்ஜெட்டை மாண்புமிகு முதல்வர் அவர்கள் படைத்திருக்கிறார்கள் என்பதை என்னுடைய கருத்தாக நான் அப்போது சொன்னேன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, என்னுடைய வாதம் எல்லாம் we have taxed enough; what is there to tax? இதுதான் என்னுடைய கேள்வி. இன்றைக்கு பொதிகளைச் சுமப்பவர்கள் மிகுந்த கஷ்டத்தோடு இருக்கிறார்கள். செல்போன் வைத்திருப்பவர்கள்தான் இன்றைக்குச் சவாரி செய்கிறார்கள் என்பதுதான் யதார்த்தமான உண்மை என்பதை நான் இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையிலே பற்றாக்குறையாக 668 கோடி ரூபாய் காட்டப்பட்டிருக்கிறது. நிகரப்பற்றாக்குறையாக 668 கோடி ரூபாய் காட்டப்பட்டிருக்கிறது. இதை எப்படிச் சரி செய்யப்போகிறீர்கள் என்பதைப் பற்றிய விளக்கம் நிதிநிலை அறிக்கையிலே இல்லை. ஒரு பிரபல பத்திரிகையிலே தகுதிவாய்ந்த ஒரு பாரம்பரிய பத்திரிகையிலே, கள்ளுக்கடையைத் திறக்கலாமா என்ற வகையிலே முதல்வர் அவர்கள் ஆலோசித்துக்கொண்டிருப்பதாக தகவல் வந்திருக்கிறது. அண்மையிலே மறைந்த திரு. கோவை செழியன்...

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாற்றுத் தலைவர் அவர்களே, அந்தத் தகவலை மாண்புமிகு உறுப்பினர் நம்புகிறாரா அல்லது அந்தத் தகவல் உண்மையாக வேண்டும் என்று எண்ணுகிறாரா? எண்ணமாட்டார் என்றே கருதுகிறேன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** எனக்கு இருக்கிற ஆதங்கம் எல்லாம் அப்படிப்பட்ட செய்திகள் உண்மையாகி விடக்கூடாது என்பதுதான். மறைந்த திரு. கோவை செழியன் அவர்கள்கூட குறிப்பிட்டிருக்கிறார்கள். ஒவ்வொரு விவசாயியிடத்திலேயும் ஒரு பொதுவான கருத்தைத் திரட்டி உருவாக்கி, அதன் மூலமாக வருவாயை உருவாக்க தமிழக அரசு நினைக்கிறது என்று அவர் குறிப்பிட்டதாக நண்பர்கள் சொன்னார்கள். தமிழக முதல்வர் அந்த எண்ணத்தில் இல்லையென்றால் எங்களுடைய பாராட்டை நாங்கள் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம். ஆனால், ஒரு நிதி நெருக்கடி உருவாகின்றபோது அப்படிப்பட்ட நிலைமையை தமிழகத்திலே உருவாக்கிவிடக்கூடாது என்பதை தமிழ் மாநில காங்கிரஸ் கடுமையாக வலியுறுத்த விரும்புகிறது. அதேபோல் பற்றாக்குறை. சென்ற ஆண்டு பற்றாக்குறை 790 கோடி ரூபாயாக இருந்தது. அது 668 கோடி ரூபாயாகக் குறைந்திருக்கிறது. இது எந்தவகையிலே குறைக்கப்பட்டிருக்கிறது? சிக்கனத்தின் மூலமாகச் சரிசெய்யப்பட்டதா அல்லது வேறு வருவாய்களின் மூலமாகவா என்பதை நாங்கள் அறிய விரும்புகிறோம்.



பொதுவாகவே, ஓய்வு பெறுகின்ற வயதை உயர்த்தி, DCRG என்று சொல்லப்படுகின்ற அந்தப் பணிக்கொடை ஊதியத்தைக்கூட வழங்காமல் நிதிநிலைமையைச் சரி செய்யலாம் என்றெல்லாம் சில பத்திரிகைகளிலே செய்திகள் வருகின்றன. தமிழகத்தினுடைய நிதிநெருக்கடியைக் குழப்புகின்ற விதத்திலே செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன. அதனாலேதான் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்படாமல் இருக்கின்றன என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

குறிப்பாக ஒரு M.L.A. தொகுதிக்கு ஒரு ஏரி என்ற வகையில் தூர் வாரச் செய்யலாம்; இரண்டு பஸ்கள் விடலாம் என்பது போன்ற பல்வேறு அறிவிப்புகள் தொடக்கத்திலே வந்தன. அவையெல்லாம் இப்போது நிறைவேற்றப்படவில்லை. ஏன் நிறைவேற்றப்படவில்லை என்பதுதான் என்னுடைய கேள்வி, ஆகவே, தொடர்ச்சியாக ஒரு consistency இந்த அரசிடம் இல்லை என்பதை நான் இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன். தமிழகத்தை 11 ஆண்டுகாலம் ஆண்ட தமிழக முன்னாள் முதல்வர் மாண்புமிகு எம்.ஜி.ஆர். அவர்கள் அடிப்படை விஷயம் ஒன்றிலே தெளிவாக இருந்தார்.

குறிப்பாக அரிசி விஷயத்தில் அவர் மிகவும் தெளிவாக இருந்தார். அவர்கள் ஆண்ட காலத்திலே அரிசி எப்போதும் ஏறவில்லை. ஆனால் இப்போது என்ன நிலைமை? தமிழகத்தில் அரிசி விலை உயர்த்தப்பட்டிருக்கிறது. பொது விநியோக முறையில் 2.00 ரூபாய் விலையில் 3 கிலோ கொடுக்கப்பட்டுவந்த அரிசி இப்போது விலக்கிக் கொள்ளப்பட்டிருக்கிறது. நான் ஒன்றைச் சொல்வேன். நம்முடைய தமிழக முதலமைச்சர் அவர்கள் பட்ஜெட் தாக்கல் செய்த அன்று, B.J.P. அரசு வேண்டுமென்றே ஒரு செய்தியை வெளியிட்டு நெருக்கடியைத் தந்திருக்கிறது என்றுதான் நான் எண்ணுகிறேன். சாதாரண மக்கள் பயன்படுத்தக்கூடிய சமையல் எரிவாயு, (L.P.G.) மண்ணெண்ணெய் போன்றவற்றின் விலையை பல மடங்கு உயர்த்தி மிகப் பெரிய unpleasant situation என்று சொல்லப்படுகின்ற மகிழ்ச்சியற்ற சூழ்நிலையை அன்றைக்கு மத்திய அரசு உருவாக்கியிருக்கிறது.

பிற்பகல் 12-10

தமிழக முதல்வர் அவர்கள் 17-3-1999 அன்று தாக்கல் செய்த நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிட்டிருப்பதை நான் இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன்.

அன்றைக்கு நிதிநிலை அறிக்கையிலே வணக்கத்திற்குரிய தமிழக முதலமைச்சர் அவர்கள் "இன்றியமையாப் பொருட்களின் விலைவாசி உயர்விலிருந்து மக்கள் மீளாத நிலையில், மத்திய அரசு அண்மையில் அரிசி, கோதுமை, சர்க்கரை, யூரியா, சமையல் எரிவாயு போன்றவற்றின் விலையை உயர்த்தியுள்ளது, ஏழை எளிய, நடுத்தர மக்களையும் விவசாயப் பெருங்குடி மக்களையும் தண்டிப்பதாகவே இருக்கிறது" என்று அவர்கள் கூறியிருக்கிறார்கள். 'தண்டிப்பதாக' என்ற கடுமையான வார்த்தையை அவர்கள் 1999 ஆம் ஆண்டு இங்கே பதிவு செய்திருக்கின்றார்கள். அன்றைக்கு, தண்டிப்பதாக என்று கூறிய முதலமைச்சர் அவர்கள், இன்றைக்கு அதை நியாயப்படுத்துவது எந்த வகையில் நியாயமாகும் என்பதை இந்த மாமன்றத்தின் மூலமாகக் கேட்க விரும்புகிறேன்.

ஒன்றை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஆந்திர மாநிலத்தினுடைய முதலமைச்சர் திரு. சந்திரபாபு நாயுடு அவர்கள் மத்திய மந்திரிசபையில் பங்கேற்காமல், தன்னுடைய ஆதிக்கத்தை மத்திய அரசின் மீது மிகச் சிறப்பாகச் செலுத்துகின்றார் என்பதை நான் கூறவிரும்புகிறேன். மத்திய அரசின் மந்திரிசபையில் பங்கேற்காமல் வெளியிலிருந்து ஆதரவு தருவதன் மூலமாக, தான் நினைத்த காரியங்களை அவர்கள் தெளிவாக முடிக்கக்கூடிய அளவுக்கு மிக அருமையாகச் செய்து முடித்துக்கொண்டிருக்கிறார்கள். மத்திய அரசின் எந்த மக்கள் விரோதக் கருத்துக்களுக்கும் மக்கள் விரோதச் செயல்களுக்கும் அவர்கள் தனது எதிர்ப்பைக் கடுமையாகப் பதிவு செய்கிறார்கள். ஆனால் அந்த நிலையில் தமிழக அரசு இல்லை என்பதுதான் எங்களுக்கெல்லாம் வருத்தம் தரக்கூடிய விஷயம் என்பதை இங்கே நான் முதலிலேயே கூறிக்கொள்ள விரும்புகிறேன். சந்திரபாபு நாயுடு அவர்கள் பல்வேறு திட்டங்களை அறிவித்து, அதை இப்போது வெற்றிகரமாக செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். மத்திய அரசில் அவர் பங்கேற்காமல் இருப்பதே அவருக்கு ஒரு பலத்தைத் தந்திருக்கிறது என்பதை நான் இங்கே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல், நேற்றுமுன்தினம், பாரதிய ஜனதா கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. வேலாயுதன் அவர்கள் இங்கே பேசுகின்றபோது...

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, சந்திரபாபு நாயுடு அவர்களைப் பாராட்டுவதைக்



குறித்து எங்களுக்கு எந்தவிதமான கோபமும் இல்லை. ஆனால் சந்திரபாபு நாயுடு அவர்கள் மத்திய அமைச்சரவையில் சேரவில்லை, ஆகவே அவர் நினைத்தது எல்லாம் நடக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் சொல்கிறார். சந்திரபாபு நாயுடு அவர்களின் கட்சியைச் சேர்ந்தவர்தான் நாடாளுமன்றத்திற்கே சபாநாயகராக இருக்கிறார். அமைச்சரைவிட பெரிய இடத்திலே இருக்கிறார். அது ஒன்று. இரண்டாவது, சந்திரபாபு நாயுடு அவர்கள் அங்கே சேராத காரணத்தினால் அரிசி விலையை உயர்த்தியதைக் கண்டித்தார் என்கிறார்கள். அதற்காக மத்திய அரசாங்கம் அரிசி விலையைக் குறைத்துவிட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** குறைக்கவில்லை என்றால்கூட endangering என்கிற அபாய நிலையை அவர் கையில் வைத்திருக்கிறார். ஆயுதத்தைக் கையில் வைத்திருக்கிறார். ஆகவே அவருக்கு அஞ்ச வேண்டிய நிலையில் மத்திய அரசு இருக்கிறது என்பதுதான் உண்மை. *(மணியடிக்கப் பெற்றது)*

நேற்று முன்தினம், பாரதிய ஜனதா கட்சியை சேர்ந்த உறுப்பினர். நம்முடைய அன்புக்குரிய வேலாயுதன் அவர்கள் சொல்கிறபோது, இந்த அவையை ஆர்.எஸ்.எஸ்.—சினுடைய சங்கப் பலகையாகவே பயன்படுத்திவிட்டார்கள். கழகம் கழகம் என்று நீங்கள் கூறுவதைப் போல, சங்கம் சங்கம் என்ற சொல்லை அவர் பயன்படுத்தி இந்தச் சபையை சங்கப் பலகையாகவே அவர் ஆர்.எஸ்.எஸ்.-சுக்குப் பயன்படுத்தியிருக்கிறார். அதைப் பார்த்துக் கொண்டு, பகுத்தறிவுப் பாதையிலே வந்த நம்முடைய ஆளுங்கட்சி உறுப்பினர்கள், தமிழகத்தினுடைய முதல்வர் உள்பட, அனைவரும் அமைதி காத்தார்கள் என்பதுதான் எங்களுக்கு வேதனை தரக்கூடிய செய்தியாக இருக்கிறது.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. அ.லெ. சுப்பிரமணியன்):** திரு. சி. வேலாயுதன்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, முதலில் ஆர்.எஸ்.எஸ். பற்றியோ, பாரதிய ஜனதா கட்சி பற்றியோ எதுவும் நான் பேசாமல்தான் இருந்தேன். அது மட்டுமல்ல, அவையில் என் நிமித்தம் எந்தவிதமான சலசலப்பும் வரக்கூடாது என்பதிலேயும் நான் ரொம்ப கவனம் செலுத்தித்தான், ஒவ்வொரு வார்த்தையையும் ஆலோசித்து நான் பேசுகிறேன். ஆனால் இந்த

அவைக்குள், ஆர்.எஸ்.எஸ். பற்றி, B.J.P. பற்றி மற்றவர்கள் எல்லாம் மிக மோசமாகப் பேசும்போது நான் அதற்குப் பதில் சொல்லாமல் எப்படி இருக்கமுடியும்? ஆகவே என்னைப் பேசக்கூடிய அளவுக்குக் கட்டாயப்படுத்தக்கூடிய அளவில் அவர்கள் பேசியதால்தான் நான் பேசினேன். அப்படியும் தப்பாக எதுவும் பேசிவிடவில்லையே?

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நண்பர் திரு. வேலாயுதன் அவர்களுக்கு ஒருவிதத்தில் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். வாஜ்பாய் அவர்கள் வெறும் முகமூடிதான். உண்மையான முகம் ஆர்.எஸ்.எஸ்.தான் என்பதை அவர்கள் மிக அழுத்தமாக, தெளிவாக இந்த சட்டப்பேரவையின் மூலமாகப் பதிவு செய்திருக்கிறார்கள். வெளியுலகத்திற்கும் காட்டியிருக்கிறார்கள். அந்த வகையில் நான் அவர்களுக்கு நன்றிகூறக் கடமைப்பட்டிருக்கிறேன். பொதுவாக, நேற்றைக்கு எங்களுடைய தலைவர் மூப்பனார் அவர்கள் வெளியிட்ட அறிக்கையிலே ஒரு மிகப்பெரிய விஷயத்தை அவர்கள் கூறியிருக்கிறார்கள். (மணியடிக்கப்பெற்றது) ஒரு நிமிடம்.

உயர்தர அதிகாரிகளை எல்லாம் reservation அடிப்படையிலே நியமனம் செய்கிறபோது உயர்நீதிமன்ற நீதிபதிகளை S.C., S.T., பிரிவுகளைச் சேர்ந்தவர்களை நியமிக்காததில் என்ன நியாயம் இருக்கிறது என்பதை அவர்கள் வலியுறுத்தியிருக்கிறார்கள். அந்தக் கருத்திலே ஆளும் கட்சியாக இருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கருத்து என்ன என்பதை உங்கள் மூலமாக நான் அறிய விரும்புகிறேன். தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் கிடைக்கக்கூடிய பிரதிநிதித்துவம் குறிப்பாக நீதிமன்றத் துறையிலே இருக்கவேண்டும் என்பதிலே . . .

*பிற்பகல் 12-15*

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** 1925 ஆம் ஆண்டுக்கு முன்பே திராவிட இயக்கங்கள் ஏற்றுக்கொண்ட பழைய கருத்தைத்தான் இப்போது நீங்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறீர்கள்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மத்திய அரசிலே பங்கேற்றிருக்கிற திராவிட முன்னேற்றக் கழகம் அதை வலியுறுத்தி சாதிக்க வேண்டுமென்பதுதான் எங்களுடைய கோரிக்கை. அன்புத் தலைவர் மூப்பனார் விடுத்த கோரிக்கையை மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஏற்றுக்கொண்டு அதை வலியுறுத்தி சாதிப்பாரேயானால் நிச்சயமாக தமிழ் மாநில காங்கிரஸ் சார்பாக நாங்கள் பாராட்டக்



கடமைப்பட்டிருக்கிறோம். பொதுவாக ஒன்றைச் சொல்லி நான் நிறைவு செய்ய விரும்புகிறேன்.

நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள், 17-7-1996 அன்று நிதிநிலை அறிக்கையைச் சமர்ப்பிக்கிறபோது சொல்லிய அந்த வாசகங்களை நான் திரும்பவும் சொல்ல விரும்புகிறேன். "பொதுவாக எல்லாப் பிரிவு மக்களுக்கும் அள்ளிக் கொடுக்க முடியாமல் கிள்ளிக் கொடுக்கும் அளவிற்கு மட்டுமே உள்ள வெண் பொங்கல் என்பதை நான் அறிவேன். எனினும் என்னரும் தமிழ் மக்கள், எங்களால் அவர்களின் தேவையின் பள்ளத்தை நிரப்ப முடியவில்லை என்பதற்காக சினம் கொள்ளாமல் எங்கள் உள்ளத்தில் அவர்களுக்காக எதிர்காலத் திட்டங்கள் நிறைய இருக்கின்றன" என்று 1996 ஆம் ஆண்டு அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். நிறைய திட்டங்களை, என்னென்ன திட்டங்களை அவர்கள் நிறைவேற்றினார்கள், அந்தப் பள்ளங்கள் நிரப்பப்பட்டு விட்டனவா? என்று நான் இங்கே கேட்க விரும்புகிறேன். கிள்ளிக் கொடுக்கக்கூடிய வெண் பொங்கல் இன்றைக்கு அள்ளிக் கொடுக்கக்கூடிய அளவிற்கு வந்திருக்கிறதா என்பதையும் நான் அறிய விரும்புகிறேன். அப்படி அள்ளிக் கொடுக்கக்கூடிய அளவிற்கு பொங்கலை நீங்கள் சமைப்பீர்களேயானால், நிச்சயமாக தமிழ் மாநில காங்கிரஸ் அதைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறது என்பதைக் கூறி, வாய்ப்புக்கு நன்றி கூறி நிறைவு செய்கின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. அ.லெ. சுப்பிரமணியன்):** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. லி. அய்யலுசாமி அவர்கள்.

**திரு. லி. அய்யலுசாமி:** மாண்புமிகு சட்டப் பேரவை மாற்றுத் தலைவரவர்களே, இந்த 2000-2001 ஆம் ஆண்டு பட்ஜெட்டில் பேச வாய்ப்பளித்த தங்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே நம்முடைய மாநிலத்தில், விவசாயிகளுடைய நிலை மிகவும் அபாயகரமான நிலையில் சென்று கொண்டிருக்கிறது. ஆகவே, அந்த விவசாயிகளுக்காக மாநிலத்தின் தென் பகுதியை, தென் மாவட்டங்களை வறட்சிப் பகுதியாக அறிவிக்க வேண்டும். வறட்சிப் பகுதியாக அறிவித்து, வேலைவாய்ப்புகளை உருவாக்க வேண்டும். விவசாயிகள் படக்கூடிய துயரத்தில், உர விலையையும் ஏற்றியிருக்கிறார்கள். அவர்களுக்குக் கொடுக்கக்கூடிய மானியத்தையெல்லாம் மத்திய அரசு குறைத்திருக்கிறது. ஆகவே, விவசாயிகள் பட்ட பயிர்க்கடனை



222726

முழுவதுமாக, நம்முடைய அரசு, மாண்புமிகு முதல்வர் அவர்கள், கவனமாகப் பரிசீலித்துத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, என்னுடைய தொகுதி விஷயங்களைச் சொல்ல முற்படுகிறேன். எட்டயபுரம் தாலுகாவில் பாரதி பிறந்த மண்ணில், தொழில்நுட்பப் பூங்கா அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சங்கரன்கோவில் வட்டத்தில் இருக்கக்கூடிய இளையரசனேந்தல் பிர்காவை கோவில்பட்டி தாலுகாவுடன் இணைக்க வேண்டுமென்று கேட்டு நீண்ட நாட்களாக அனைத்துக் கட்சிகளும், பொது மக்களும், பஞ்சாயத்துத் தலைவர்களும் போராடிக் கொண்டு இருக்கிறார்கள். அந்த இளையரசனேந்தல் பிர்காவை சங்கரன்கோவில் வட்டத்திலிருந்து பிரித்து, கோவில்பட்டி தாலுகா பக்கத்தில் இருப்பதால் அதோடு இணைக்கும்படியாக அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கடலையூர் மிகப் பெரிய கிராமமாக இருப்பதால் நாலாட்டின்புத்தூர் போலீஸ் நிலையத்திற்குச் சென்றுதான் வழக்குகளைப் பதிவு செய்ய வேண்டியிருக்கிறது. அந்தக் கடலையூரில் புதிய காவல் நிலையத்தை உருவாக்கித் தரும்படியாக மாண்புமிகு முதலமைச்சரைக் கேட்டுக்கொள்கிறேன். சமத்துவபுரத்தைத் திறந்து வைத்தார்கள். அதேபோல காவல் நிலையத்தையும் கொடுத்து, அந்த சமத்துவபுரத்தில் கடலையூரில் ஒரு புதிய காவல் நிலையத்தை ஆரம்பித்து, சமத்துவபுரத்தில் ஓர் ஆரம்ப சுகாதார நிலையத்தையும் அமைத்துக் கொடுக்கும்படியாக அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-20

எட்டயபுரம் காவல் நிலையம் நீண்டநாட்களாக வாடகைக் கட்டடத்தில் இயங்குவதால் புதிய கட்டடத்தைக் கட்டிக் கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று, எட்டயபுரம் காவல் நிலையக் காவலர்கள் குடியிருப்பு மிகவும் மோசமான நிலையில் ஓட்டு வீட்டில் பழுதடைந்து இருப்பதால், அடுக்குமாடிக் குடியிருப்பு, காவல் நிலைய ஊழியர்களுக்குக் கட்டிக் கொடுக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

குருவிக்குளத்தில் புதிதாகக் காவல் நிலையம் தந்த முதலமைச்சர் அவர்களைப் பாராட்டி, அந்தக் காவல் நிலையத்திற்கு ஒரு தொலைபேசி இணைப்பை உடனடியாக வழங்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.



அடுத்து, கோவில்பட்டி மேற்கு காவல் நிலையத்திற்கு, 1999-2000 ஆண்டு நிதிநிலை அறிக்கையில், நம்முடைய முதல்வர் அவர்கள் புதிய கட்டடம் கட்டப்படும் என்று சொன்னார்கள். அது, இதுவரைக்கும் கட்டப்படவில்லை. அதை இந்த ஆண்டு கட்டிக் கொடுக்கும்படியாகக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கோவில்பட்டிக்கு மூன்று மேம்பாலங்கள். இரயில்வே கேட் அருகே மேம்பாலம் கட்டிக் கொடுக்கும்படியாக அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூன்று மேம்பாலங்களும் வருவதாகச் சொல்கிறார்கள். அதற்கு நன்றி. அந்தப் பணியை உடனடியாக இந்த ஆண்டே ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், கோவில்பட்டியில் பாரதி நூலகம் நல்ல முறையில் செயல்படுகிறது. அந்த நூலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டுவதற்கு நகராட்சியில் பணம் எல்லாம் இருப்பதாகச் சொல்கிறார்கள். இடம் தேர்வு செய்வதில் சிக்கல் இருக்கிறது. அதில் இந்த அரசு கவனம் செலுத்தி அந்த இடத்தைத் தேர்வு செய்து கொடுத்து புதிய கட்டடம் கட்ட ஆவன செய்யும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பாளையங்கோட்டை, மானூர், சங்கரன்கோவில், குருவிக்குளம் கூட்டுக் குடிநீர்த் திட்டம். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் என் கோவில்பட்டி தொகுதியில் குடிநீருக்கான எல்லாத் திட்டங்களையும் உருவாக்கித் தந்திருக்கிறார்கள். அவர்களை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதேநேரத்தில் மானூர், பாளையங்கோட்டை, குருவிக்குளம், சங்கரன்கோவில் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில், என்னுடைய தொகுதியைச் சார்ந்த 21 பஞ்சாயத்துகளும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. அதில் 388 கிராமங்கள் வருகின்றன. ஆகவே, அந்தத் திட்டத்தை இந்த ஆண்டே தொடங்க வேண்டுமென்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் சமத்துவபுர விழாவில் கோவில்பட்டி மருத்துவமனை, மாவட்ட மருத்துவமனையாக உயர்த்திக் கொடுக்கப்படும் என்று அறிவித்தார்கள். அந்தப் பணி இதுவரைக்கும் தொடங்கப்படவில்லை. அங்கு நாள் ஒன்றுக்கு வெளி நோயாளிகளாக 2500 பேரும், உள்நோயாளிகளாக 400 பேரும் இருக்கிறார்கள். 116 படுக்கை வசதிகள்தான் உள்ளன. அந்த 116

படுக்கை வசதிகளை 200 படுக்கை வசதிகளாக உருவாக்கிக் கொடுக்கவேண்டும். அதற்குள்ள டாக்டர்களையும், செவிலியர்களையும் ஒதுக்கித் தரும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்று சொன்னால், நிதிநெருக்கடி இருப்பதால், நான் என்னுடைய சட்டமன்றத் தொகுதி மேம்பாட்டுத் திட்ட நிதியிலிருந்து கோவில்பட்டி அரசு மருத்துவமனைக்கு 5 இலட்சம் ரூபாய் தந்திருக்கிறேன். எனவே அந்த மருத்துவமனையை 200 படுக்கை வசதிகள் கொண்டதாக உருவாக்கி, சிறப்பான ஒரு மருத்துவமனையாகச் செயல்பட எல்லா வசதிகளையும் செய்து கொடுக்கும்படி சம்பந்தப்பட்ட மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய கோவில்பட்டி தொகுதியில் கிராமச் சாலைகளில் ஒரு பகுதி செப்பனிடப்பட்டுள்ளது. இன்னொரு பகுதி, பகுதி பகுதியாகச் செப்பனிடப்படுகின்றது. இந்த ஆண்டே முழுவதும் செப்பனிட்டு அந்த கிராமச் சாலைகளை தார்ச் சாலைகளாக மாற்றிக் கொடுக்கும்படி சம்பந்தப்பட்ட உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

இன்று நம்முடைய மாநிலத்தில் விவசாயிகள் உபதொழிலாக பால் உற்பத்தியைச் செய்து வருகிறார்கள். அந்த விவசாயிகளுக்கு இன்று பல இன்னல்கள் ஏற்பட்டிருக்கின்றன. பால் பணம் முறையாக 3, 4 மாதங்களாக பட்டுவாடா செய்யப்படவில்லை என்ற பிரச்சினை இருக்கிறது. சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்கள் அதில் தலையிட்டு, அந்தப் பால் பணம் பட்டுவாடா உடனடியாகச் செய்வதற்கும், விவசாயிகள் பால் உற்பத்தி செய்வதில் இன்று அதன் இடுபொருட்கள் எல்லாம் விலையேறி இருப்பதால் அதனுடைய கொள்முதல் விலையை உயர்த்திக் கொடுக்கவும் ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-25

அடுத்து, பால் பண்ணையில் பால் சேகரிக்கக்கூடிய ஊழியர்களுக்கு சம்பளம் உயர்த்துவதற்கு, தணிக்கையை முடித்துத்தான் உயர்த்த வேண்டுமென்று சொல்கிறார்கள். நீண்ட நாட்களாகக் கிடப்பிலே இருக்கக்கூடியது அந்த ஊழியர்களுடைய பிரச்சின்னை; புதிய நிர்வாக Board வந்த பிறகு அவர்களுக்கு அந்த உரிமையை வழங்கி, இலாபத்தோடு இயங்கக்கூடிய பால் உற்பத்தியாளர் சங்கத்தினுடைய



ஊழியர்களுக்கு சம்பளத்தை உயர்த்துவதற்கு அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கோவில்பட்டி ஒரு மிகப் பெரிய, விவசாயிகள் நிறைந்த பகுதி. அந்தப் பகுதி மானாவாரிப் பகுதியாக இருப்பதால், தேசிய நதிகளை இணைக்க முடியாவிட்டாலும், தென்னக நதிகளையாவது இணைத்து, மேற்கு நோக்கி செல்லக்கூடிய நதிகளைத் திருப்பி வறண்ட பகுதிகளான கோவில்பட்டி தாலுகா, சங்கரன்கோவில் தாலுகா, விளாத்திகுளம் தாலுகா, ஓட்டப்பிடாரம் தாலுகா ஆகியவற்றுக்கு அந்த நீர்வளத்தைக் கொண்டு வந்து சேர்க்க வேண்டுமென்று நான் சம்பந்தப்பட்ட நீர்வள அமைச்சரைக் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

கோவில்பட்டியில் Loyal Textile Mill தொழிலாளிகள், 15 வருடங்களாக, 20 வருடங்களாக வேலை செய்யக்கூடியவர்கள்; அங்கே ஒரு 18(I) ஒப்பந்தத்தைப் போட்டிருக்கிறார்கள். அதை அமலாக்காத காரணத்தால் போராடிக்கொண்டிருக்கிறார்கள். 90 நாட்களாகியும், இன்னும் போராட்டம் முடிவு பெறவில்லை. அந்த நிர்வாகத்தில் வேலை செய்யக்கூடியவர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அவர்களுக்கு நிவாரணம் வழங்கி மீண்டும் அந்த மில்லில் தொழிலாளர்கள் வேலைக்குப் போவதற்கும், 18(I) ஒப்பந்தத்தை அமல்படுத்துவதற்கும் ஆவன செய்ய வேண்டும். அங்கே போலீசார் தகாத முறையில் நடந்து, சாதாரணமாக ஜனநாயக முறையில் போராடக்கூடிய அந்தத் தொழிலாளர்களை arrest செய்து பாளையங்கோட்டை சிறையிலிருந்து கோர்ட்டுக்குக் கொண்டு வரும்போது விலங்கிட்டுக்கொண்டு வந்தார்கள். அந்த போலீஸ் ஆய்வாளர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். முதலமைச்சரிடத்தில் நான் விண்ணப்பம் கொடுத்துள்ளேன். முதலமைச்சர் நடவடிக்கை எடுப்பதாகச் சொல்லியிருக்கிறார். அப்படிப்பட்ட தவறான போலீஸ் அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, 2000-2001 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் பேசுவதற்கு வாய்ப்பு அளித்த அவைத் தலைவருக்கும் மற்றும் இந்த அரசுக்கும் நன்றி கூறி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. அ.லெ. சுப்பிரமணியன்):** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. கிணத்துக்கடவு ம. சண்முகம்.

***திரு. ம. சண்முகம்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, 2000-2001 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின் மீது என்னுடைய கருத்துகளை வழங்குவதற்கு வாய்ப்பளித்த தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*"வாரி பெருக்கி வளம்படுத் துற்றவை*
*ஆராய்வான் செய்க வினை"*

பொருள் வருவாய் தரும் துறைகளை முன்பைவிட கூடுதலாகப் பெருக்கி அவற்றால் ஆகக்கூடிய செல்வ வளத்தை வளர்த்து, இடையூறுகளை ஆராய்ந்து நாள்தோறும் நீக்க வல்லவனே அமைச்சன் ஆவான் என்ற அய்யன் திருவள்ளுவர் குறள் அமுதுக்கேற்ப இந்த நிதிநிலை அறிக்கையைத் தயாரித்து அர்ப்பணித்திருக்கின்ற மாண்புமிகு முதலமைச்சரை தமிழகத்தினுடைய நல்ல மனம் படைத்த அரசியல் தலைவர்களும், நடுநிலையாளர்களும், பத்திரிகையாளர்களும் பாராட்டி மகிழ்கின்றனர். ஆனால், இந்த அவையிலே இந்த நிதிநிலை அறிக்கையைக் குறை கூறிப் பேசியவர்கள், எந்த வகையில் இந்த நிதிநிலை அறிக்கையில் குறை கண்டார்கள் என்று எங்களால் புரிந்து கொள்ள முடியவில்லை.

நான் ஒருசில பொதுவான கருத்துகளைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த அவையிலே அங்கம் வகிக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்களுக்கு, இந்த நிதிநிலை அறிக்கையின் காரணமாக பொதுமக்கள் மத்தியிலே மிகப் பெரிய மரியாதை ஏற்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட அறிக்கையைத் தயாரித்து அளித்திருக்கிற அந்த அவையிலே நீங்கள் உறுப்பினர்களா என்று நம்மையெல்லாம் பாராட்டுகின்ற அளவுக்கு இந்த நிதிநிலை அறிக்கை அமைந்திருக்கிறது. இந்த நிதிநிலை அறிக்கை வெளியிடப்பட்ட பின்னர் தொகுதிக்குள்ளே சென்ற போது, அங்கே இருக்கிற விவசாயப் பெருங்குடி மக்களும், வியாபாரப் பெரு மக்களும், நெசவாளர்களும், இன்ன பிற அனைத்துத் தரப்பு மக்களும் பாராட்டி மகிழ்கின்றார்கள். அப்படிப்பட்ட நல்ல நிதிநிலை அறிக்கையைப் பற்றி இங்கே குறை கூறிப் பேசியவர்களை எல்லாம் நினைத்துப் பார்க்கிறபோது, கண்டிப்பாக அவர்களுக்கு வாக்களித்த மக்கள் அதை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்.

இந்த நிதிநிலை அறிக்கையில் வறட்சியைப் பார்க்கிறோம் என்று இங்கே பேசியவர்கள் சொல்கிறார்கள். கண்டிப்பாக நீங்கள்



வறட்சியைத்தான் பார்க்கமுடியும்; இந்த நிதிநிலை அறிக்கையைப் பற்றிக் குறை சொல்லும் உங்களுடைய கருத்துகளில்தான் வறட்சி ஏற்பட்டு இருக்கிறது. அந்த வகையிலே பல்வேறு துறைகளுக்கு அளிக்கப்பட்டு இருக்கிற சலுகைகளைச் சுட்டிக்காட்டினாலே போதும் என்னைப் பொறுத்தவரையில் விவசாயிகளுக்கு அறிவித்து இருக்கிற சில சலுகைகளை, முக்கியமான அறிவிப்புகளை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழக வரலாற்றிலே இல்லாத அளவுக்கு, நிதிநிலை அறிக்கையைத் தயாரிப்பதற்கு முன்பாக விவசாயப் பிரதிநிதிகளை அழைத்துக் கருத்துகளைக் கேட்டபோது, எதிர்க்கட்சியினர் "இது ஒரு கண் துடைப்பு" என்று சொன்னார்கள். ஆனால், நிதிநிலை அறிக்கையைப் பார்த்ததற்குப் பிறகு அவர்கள் உணர்ந்து கொண்டிருப்பார்கள், தமிழக முதல்வர் வெறும் கண் துடைப்புச் செய்பவர் அல்ல; விவசாயிகளுடைய கண்ணீரைத் துடைக்கின்ற தலைவர் என்பதை.

*பிற்பகல் 12-30*

எங்களுடைய பகுதியில் சுமார் 1½ இலட்சம் ஏக்கர் பயன்பெறுகின்ற P.A.P. ஆயக்கட்டுத் திட்டமானது விரிவுபடுத்தப்பட்டு, சுமார் 4¾ இலட்சம் ஏக்கர் பாய வேண்டிய சூழ்நிலை இருந்து வந்தது. அந்த விவசாயிகளுக்கு முழுமையாகத் தண்ணீர் கிடைக்க வேண்டுமென்று சொன்னால், அந்தப் பாசன முறைகளை மாற்றி அமைக்க வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலேயும், பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களிடத்திலேயும் எடுத்துச் சொன்னபோது, கண்டிப்பாக அதைக் கவனிக்கிறோம் என்று சொன்னார்கள். தொடர்ந்து நாங்கள் வலியுறுத்தியதன் அடிப்படையிலே, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் ஒரு கருத்தரங்கை பொள்ளாச்சியில் ஏற்பாடு செய்து, அந்தக் கருத்தரங்கிலே விவசாயத் துறை அமைச்சர் அவர்களும், எங்கள் மாவட்ட அமைச்சரான விளையாட்டுத் துறை அமைச்சர் அவர்களும் கலந்து கொண்டு விவசாயிகளுடைய கருத்துக்களை எல்லாம் கேட்டார்கள். அப்போது பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் ஓர் அழுத்தமான கருத்தைச் சொன்னார்கள். அந்தக் கருத்தை விவசாயிகள் எல்லாம் வரவேற்றார்கள். இவ்வளவு பொருட் செலவில் கொண்டுவரப்பட்ட அந்த P.A.P திட்டமானது, விவசாயிகளுக்குப் பயன்படவில்லை என்றால், அது முறையல்ல. எந்த வகையிலே அந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டால் அது விவசாயிகளுக்குப் பயன்படுமோ, அந்த வகையிலே இந்த அரசு

கண்டிப்பாக அதை நிறைவேற்றிக் கொடுக்கும் என்று சொன்னார்கள். அதன் அடிப்படையிலே ஒரு குழு அமைக்கப்பட்டது. அந்தக் குழுவின் பரிந்துரை வந்திருக்கிறது. நாங்கள் கூட இந்தத் தொடரிலே கண்டிப்பாக கவன ஈர்ப்பு அறிவிப்பு கொண்டு வந்தோ, அல்லது வேறு வகையிலோ வலியுறுத்தினால்தான் இந்தத் திட்டம் நிறைவேறும் என்று நினைத்தோம். ஆனால், சற்று விரிவான வகையிலே நிதிநிலை அறிக்கையில் அந்த அறிவிப்பு வந்தபோது நான் என்னை மறந்துவிட்டேன்; மெய் மறந்து போனேன். இந்தத் திட்டத்தை நிறைவேற்ற முடியுமா என்று கேட்டவர்களுக்குப் பதில் அளிக்கும் வகையிலே, இவ்வளவு பெரிய திட்டம் நிறைவேற்றபட இருக்கிறது என்று சொன்னால், அதை என்னுடைய பகுதி மக்கள், விவசாயிகள் எல்லோரும் ஒட்டுமொத்தமாகப் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். அங்கே விழா எடுப்பதற்குத் தயாராகிக் கொண்டிருக்கிறார்கள். நாளேடுகள் மூலம் விளம்பரப்படுத்தியும், செய்திகள் மூலமாகவும் முதலமைச்சருக்கும், பொதுப் பணித் துறை அமைச்சருக்கும், எங்களுக்கும் பாராட்டுத் தெரிவித்துக்கொண்டிருக்கிறார்கள். இதெல்லாம் விவசாயிகளுக்குக் கிடைத்த சலுகை அல்லவா? ஒரு மடை விட்டு ஒரு மடை பாசனம் என்று சொன்னால், அது பற்றி இங்கே இருக்கிற மற்ற உறுப்பினர்களுக்குத் தெரிய வாய்ப்பில்லை. இந்தத் திட்டத்தின் மூலமாகத் தொடர்ந்து அந்த வாய்க்கால்களில் தண்ணீர் செல்கின்ற வாய்ப்பினை நாங்கள் பெறுவோம். அப்போது அங்கே நிலத்தடி நீர் அதிகமாக உற்பத்தியாகும்; குடிநீர்க் கிணறுகள் எல்லாம் அங்கே நிறைந்து வழியும். அந்த நிலையை ஏற்படுத்தத்தான் நாங்கள் இந்தத் திட்டத்தைக் கேட்டோம். இந்த அரசு அதைத் தந்து இருக்கிறது. அதற்காக விவசாயப் பெருங்குடி மக்கள் என்றென்றைக்கும் நன்றிக்கடன்பட்டிருக்கிறார்கள். உண்மையைச் சொல்ல வேண்டுமென்றால், 1989 ஆம் ஆண்டு இலவச மின்சாரத் திட்டம் அறிவித்தபோது இருந்த மகிழ்ச்சியை விட, இன்று இரட்டிப்பு மகிழ்ச்சியை விவசாயிகள் அடைந்து இருக்கிறார்கள். ஆகவே, அந்த ஒரு காரணத்திற்காக, நான் இந்த அவையிலே சட்டமன்ற உறுப்பினராகப் பொறுப்பேற்றதன் முழுப்பயனை அடைந்துவிட்டேன் என்று கூடச் சொல்கின்ற அளவுக்கு நாங்கள் எல்லாம் மகிழ்ச்சி அடைந்து இருக்கிறோம்.

அதேபோன்று, இன்னும் பல்வேறு சலுகைகளை விவசாயிகளுக்கு அளித்து இருக்கிறார்கள். விவசாயக் கடன்களுக்கு அபராத வட்டி தள்ளுபடி; கடனையே தள்ளி வைக்கலாம் என்று எதிர்க்கட்சி உறுப்பினர் சொன்னார்; அந்தக் கடனை எப்படித் தள்ளமுடியும்? உலக வங்கியிடமிருந்து வாங்கிய கடனை நாம் தள்ளுவதற்கான சாத்தியக்கூறு இருக்கிறதா என்று எண்ணிப் பார்க்க வேண்டும். என்னைப் பொறுத்தவரையிலே, இந்த அபராத வட்டி தள்ளுபடி செய்வதே மிகப் பெரிய சலுகையாகும். யாரும் சற்றும் எதிர்பாராத வகையிலே, அந்தச் சலுகையை அறிவித்து இருக்கிறார்கள்.



அதேபோல, ஏரிகளில் தூர் எடுக்கின்ற திட்டத்திற்கு நிதி ஒதுக்கீடு; உயர்மட்டக் குழு முதலமைச்சர் தலைமையிலே நியமித்து இருப்பது; தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தை வரும் ஆண்டிலே 75 ஆயிரம் ஏக்கரும், எதிர் வரும் 10 ஆண்டுகளிலே 25 இலட்சம் ஏக்கரும் பயன்படும் வகையிலே அறிவித்து இருப்பது, இப்படி எண்ணற்ற சலுகைகளை விவசாயிகளுக்கு அளித்து இருக்கின்ற இந்த நிதிநிலை அறிக்கையைக் குறை கூறுபவர்கள் ஒரு கணம் எண்ணிப்பார்க்க வேண்டும்.

*பிற்பகல் 12-35*

அதுபோல, இன்றையதினம் நடைபெற்றுக்கொண்டிருக்கிற உழவர் சந்தை, வருமுன் காப்போம், கால்நடை சிகிச்சை முகாம் போன்ற திட்டங்களில் எல்லாம் குறை கண்ட உறுப்பினர்கள் தயவுசெய்து அந்த முகாம்களுக்கு நேரடியாகச் செல்லவேண்டும்; மக்களை நேரடியாகச் சந்திக்கவேண்டும். அவர்களுடைய கருத்தைக் கேளுங்கள். அதற்குப் பிறகு இந்த அவையிலே நீங்கள் அந்தத் திட்டங்கள் பற்றி குறைகளைச் சொன்னால், குறை இருக்கின்றபட்சத்தில் கண்டிப்பாக அந்தக் குறைகளை இந்த அரசு களைவதற்குத் தயங்காது என்பதிலே யாருக்கும் மாறுபட்ட கருத்து இருக்க முடியாது.

வருமுன் காப்போம் திட்டம். என்னுடைய பொள்ளாச்சி, கிணத்துக்கடவு தொகுதியிலே, வடக்கு ஒன்றியத்திலே 21 முகாம்கள் நடைபெற்றன. நான் அங்கே உள்ளூரிலே இருக்கின்ற காலத்திலே கிட்டத்தட்ட 14 முகாம்களுக்குச் சென்று இருந்தேன். அந்த முகாம்களில் வந்து பயனடைகின்ற மக்களைப் பார்க்கின்றபோது, நாம் அளப்பரிய உவகை அடைகிறோம். குறிப்பாக ஏழையெளிய மக்கள்தான் அங்கே வருகிறார்கள். அதிலும் பெண்கள் மிக அதிகமாக அதிலே கலந்து கொள்கிறார்கள். சின்னச்சின்ன மாணவ மாணவிகள் எல்லாம் கலந்து கொள்கிறார்கள். அந்த முகாம்களில் நோய்கள் கண்டறியப்படுகின்றன. சில நோய்களைக் கண்டறியும்போது உண்மையிலேயே வேதனையாக

இருக்கிறது. இருதயப் பரிசோதனை முகாம்கள் மூலமாக அங்கே நடைபெறும் இருதயப் பரிசோதனையின் போது இதயத்தில் அடைப்பு இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டபோது, அவர்கள் எல்லாம் இந்த அரசைப் பாராட்டி அந்த நோயை எப்படியாவது தீர்த்துக்கொள்ள வேண்டுமென்ற முறையிலே பயன்பெற்று வருகிறார்கள்.

அதுபோல, கால்நடை சிகிச்சை முகாம். விவசாயிகள் இயற்கைச் சீற்றத்தினால் பாதிக்கப்படுகின்றபோது அவர்களுக்கெல்லாம் ஒரு நிலையான வருமானம் தருவது கால்நடைச் செல்வம்தான். அந்த கால்நடைகளுக்கும் கருணையோடு சிகிச்சை அளிக்க வேண்டுமென்பதற்காக கால்நடை சிகிச்சை முகாம்களை, ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் மாதம் ஒரு முகாம் நடத்தப்பட்டு விவசாயிகளுக்குப் போதுமான வருமானத்தை நாம் ஏற்படுத்தித் தந்திருக்கிறோம்.

அதுபோல, உழவர் சந்தை உழவர் சந்தையைப் பற்றி நான் சொல்கிறபோது, அது உழவர்களுக்கும் பயன் அளிக்கக்கூடிய திட்டம்; நுகர்வோர்களுக்கும் அங்கே பயன் கிடைக்கிறது. ஆகவே, உழவர் சந்தையிலே நாள்தோறும் நுகர்வோரின் திருவிழாவினை நாம் பார்த்துக்கொண்டிருக்கிறோம். கோவையில் இருக்கிற உழவர் சந்தைக்கு வாய்ப்புக் கிடைக்கிறபோதெல்லாம் நான் போவதுண்டு. காலையிலே 6.00 மணிக்கு அங்கே சென்று பார்த்தால், மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் அதிகாரிகள் அங்கே நடைபெறுகிற உழவர் சந்தையில் எந்தவிதமான குறைபாடும் இருக்கக்கூடாது என்று முயற்சி எடுத்து இருப்பதையும், முதலமைச்சருடைய ஆலோசனையின்பேரில் அங்கே பணியாற்றுகிறவர்களையும் பார்க்க முடிகிறது. அங்கே ஏழையெளிய மக்கள் மட்டுமல்லாமல் மிக வசதி படைத்தவர்கள் எல்லாம்கூட வருவதைப் பார்க்கிறோம். இன்னும் சுவைபடச் சொல்லவேண்டுமானால், அங்கே பென்ஸ் காரிலே வந்து பீன்ஸ் வாங்குகிறார்கள்; கோவையில் இருக்கிற பழமுதிர்ச்சோலைகளில் எல்லாம் விலை வீழ்ச்சி ஏற்பட்டிருக்கிறது. 40 சதவீதம் குறைவான விலைக்குக் காய்கறிகள் கிடைக்கின்றன. இப்படி ஒவ்வொரு திட்டமாக நான் சொல்லிக்கொண்டே போகலாம். இந்த அரசு ஏழையெளிய மக்களுக்காக எந்த அளவுக்குச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை நாம் ஒரு கணம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். *(மணியடிக்கப்பெற்றது)*



அதுபோல, எங்கள் பகுதியில் விவசாயிகள், அவர்களுடைய சந்தோஷத்திற்கிடையிலே துயரத்திற்கும் ஆளாகியிருக்கிறார்கள். அவற்றையும் நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். தேங்காய்களை உரித்து சந்தைக்கு லாரியிலே அனுப்பும்போது அத்தியாவசியப் பொருள் சட்டத்திலே லாரிகளைச் சோதனை செய்வதாக லாரிகளை சரக்கோடு பிடித்து நாள் கணக்கில் நிறுத்திவிடுகிறார்கள். அதிலே தேங்காய்கள் உள்ளதால், இதுபோன்ற கட்டுப்பாட்டை நீக்க வேண்டும்.

அதுபோல தேங்காய், ஈரியோபைட் என்ற நோயினால் தாக்கப்பட்டு, உற்பத்தி குறைந்திருக்கிறது, தரமும் குறைந்திருக்கிறது. அந்தவகையிலே தேங்காய்க்குக் கட்டுபடியான விலை கிடைப்பதற்கு நாம் முயற்சிக்க வேண்டும். உணவுக்குப் பயன்படுத்தும் எண்ணெய்களை நாம் இறக்குமதி செய்யாதிருக்க வேண்டும். அந்தவகையிலே தேங்காய்க்கு support price-ஆதார விலை நிர்ணயித்து குறைந்தபட்சம் 1 கிலோ பருப்புக்கு 31 ரூபாய் கிடைக்கிற அளவுக்கு மத்திய அரசோடு பேசி விரைவில் பதில் பெற்று அதை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதுபோலச் சொட்டுநீர்ப் பாசனக் கருவிக்கு, 4 சதவீதம் வரிச் சலுகை அளித்திருக்கிறோம். 1997-98 நிதிநிலை அறிக்கையிலே 4 சதவீதம் வரிதான் வசூலிக்கப்பட்டது. ஆனால், சொட்டுநீர்ப் பாசனக் கருவி என்பது தனியாகக் கிடையாது. பல்வேறு உபகரணங்கள் — P.V.C. pipe, Lateral Pipe, Tap and Tipper போன்றவற்றின் தொகுப்புத்தான் அந்தச் சொட்டுநீர்ப் பாசனக் கருவி என்பது. ஆனால், சொட்டுநீர்ப் பாசன உபகரணங்களைக் கடைகளில் வாங்குகிறபோது, வியாபாரிகள் 12 சதவீதம் வரி வசூலிக்கிறார்கள். ஆகவே, விவசாயிகள் பயன்படுத்துகிற சொட்டுநீர் பாசன உபகரணங்களுக்கு விதிக்கப்படும் அந்த 12 சதவீத வரியை 4 சதவீதமாகக் குறைக்க வேண்டுமென்ற என்னுடைய அன்பான வேண்டுகோளை வைத்து, இந்த நிதிநிலை அறிக்கையை வரவேற்று எனது உரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. அ.லெ. சுப்பிரமணியன்):** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் அ. மணி.

**டாக்டர் அ. மணி:** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, என் அன்புத் தலைவர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களே,

நீங்கள் சங்கத் தமிழ் தந்த தங்கத் தமிழ் புதல்வர்; குறளோவியம் தீட்டிய உயிரோவியம்; வள்ளுவன் புகழை வானுயரச் செய்து நெஞ்சுக்கு நீதி தந்த அஞ்சுகச் செல்வர்; கண்ணொளி வழங்கிய திருவாரூர் தீபம்; சமத்துவபுரம் கண்ட சமகால நாயகன்; உன்னுடைய தொலைநோக்குப் பார்வையின் தீட்சண்யம் தாங்காமல் தொலைந்துபோனவர்கள் ஏராளம்; மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு என்றார் பேரறிஞர் அண்ணா. மணம் வீச உரிமையுண்டு என்கின்ற தம்பியல்லவா நீ; மணம் வீசும் இந்த 13-வது நிதிநிலை அறிக்கையிலே நான் மனம் திறந்து பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களை வணங்கி என்னுடைய உரையைத் தொடங்குகிறேன்.

இது ஒரு மலிவுப் பதிப்பு என்று இங்கே பலர் கூறினார்கள். இது ஒரு சாதாரண வெள்ளைத் தாளிலே எழுதப்பட்ட நிதிநிலை அறிக்கை அல்ல. வெள்ளை உள்ளத்தோடு, தமிழகத்திலுள்ள பலதரப்பட்ட மக்களையும், குறிப்பாக விவசாயிகள், வணிகர்கள் இவர்களது உள்ள உணர்வுகளை முன்கூட்டியே அறிந்து, அந்த உணர்வுகளைப் புரிந்துகொண்டு தீட்டப்பட்ட ஒரு நிதிநிலை அறிக்கை என்பதை நான் இங்கே திட்டவட்டமாகத் தெளிவுபடக் கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

*பிற்பகல் 12-40*

மலிவுப் பதிப்பு, வெங்காயம் என்றெல்லாம் இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள், குறிப்பாக நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் குமாரதாஸ், டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் போன்றவர்கள் எல்லாம் கூறினார்கள். முதல்வர் அவர்கள் கூட வெங்காயம் சாப்பிடுவது இதயத்திற்கு ஆரோக்கியமானது என்று கூறினார்கள். நானும் ஒரு மருத்துவன் என்பதனாலே கூறுகின்றேன் — வெங்காயத்தைச் சாப்பிட்டாலே நன்மைதான். வெங்காயத்தை உரிக்கும்போது கண்ணிலே நீர் வந்தாலும் கூட அது கண்ணைச் சுத்தப்படுத்துவதற்கு உதவும் என்பதை நான் இந்த நேரத்திலே கூறிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதோடு மட்டுமல்லாமல், மலிவுப் பதிப்பு என்று முன்னாள் முதலமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். இங்கே எனக்கு முன்னால் பேசியவர்கள், கிட்டத்தட்ட மூன்று பேர் மருத்துவர்கள் என்பதால், அவர்களுக்குத் தெரியும். கிட்டத்தட்ட 25 ஆண்டுகளுக்கு முன்னால்,



நாங்கள் எல்லாம் மருத்துவக் கல்லூரியிலே படிக்கின்றபோது, மருத்துவப் பாடப் புத்தகங்கள் எல்லாம் வாங்குவதை நினைத்துப் பார்க்கவே முடியாது. காரணம், அந்த அளவுக்கு விலை இருக்கும். ரூபாய் ஐயாயிரம், பத்தாயிரம் ரூபாய் என்று இருக்கும். அந்தக் காலத்திலே மலிவுப் பதிப்பு Low priced edition என்று சொல்வார்கள். அந்தக் காலத்திலே அப்படி வந்த காரணத்தாலேதான் அதையெல்லாம் நாங்கள் 500, 600 ரூபாய்க்கு வாங்கிப் படித்து, இன்றைக்கு மருத்துவர்களாக இருக்கின்ற ஒரு நிலை இருக்கிறது என்பதை அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

அதோடு மட்டுமல்லாமல், இந்த நிதிநிலை அறிக்கை மலிவானவர்களுக்குப் போடப்பட்ட, குறிப்பாக ஏழைகள், எளியவர்கள், நசுக்கப்பட்டவர்கள், நலிந்தவர்கள், ஆதிதிராவிடர்கள், மிகவும் பிற்படுத்தப்பட்டவர்கள் என இப்படிச் சமூகத்திலே நலிவடைந்த பிரிவினருக்காக ஒரு நல்ல உள்ளத்தோடு, வெள்ளை உள்ளத்தோடு தீட்டப்பட்ட நிதிநிலை அறிக்கை என்பதை மீண்டும் இங்கே அறுதியிட்டுக் கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

இந்த நிதிநிலை அறிக்கை, அதாவது மண் பாண்டத்திலே சமைத்தாலும், பொன் பாண்டத்திலே சமைத்தாலும் சோறு சோறுதான். காழ்ப்புணர்ச்சியை மறந்து இதை மனதாரப் பாராட்டியுள்ள நம்முடைய முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா அவர்களுக்கு நான் என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இன்னொன்றும் அவர்களே கூறியிருக்கிறார்கள். அதாவது, இது ஏதோ தேர்தலை முன்னிறுத்திப் போடப்பட்ட பட்ஜெட் என்று. நான் ஒன்று இங்கே கூறிக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன். 'எண்சாண் உடம்புக்கு சிரசே பிரதானம்' என்பார்கள்; அதுபோல, மனிதனுடைய உடல் உறுப்புகளை எல்லாம் இயக்குகின்ற மூளை, உடல் உறுப்புகளிலே ஒரு சிறு குண்டூசி குத்தினால் கூட, அந்த வலியை உணர்ந்து செயல்படுகின்றது. ஆனால், அந்த மூளையைக் கத்தியால் வெட்டுகின்றபோது, அது வலியை உணர்வது இல்லை. அதைப்போலத்தான், இந்த நிதிநிலை அறிக்கையிலே டாக்டர் கலைஞர் அவர்கள் ஏழை எளிய மக்களை மனதில் கொண்டு தீட்டியிருக்கிறார்களேயன்றி, அவர்கள் வருகின்ற தேர்தலை முன்னிறுத்தி இந்த பட்ஜெட்டைப் போட்டிருக்கிறார்கள் என்றால், அதை இந்தத்

தமிழ்நாட்டிலே உள்ள மக்கள் எல்லாம் ஒத்துக்கொள்வதற்குத் தயாராக இல்லை என்பதையும் நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

நம்முடைய பொருளாதார மேதை அம்ருதியா சென் அவர்கள் கூறுகின்றபோது, பட்ஜெட் என்பது வெறும் வரவு-செலவுக் கணக்குகளை மட்டும் படிப்பது அல்ல. அது ஒரு தேசத்தின் ஆத்மாவை வருடுகின்ற, தடவிக் கொடுக்கக்கூடிய வகையிலே இருக்கவேண்டுமென்று கூறியிருக்கிறார்கள்.

இந்த பட்ஜெட்டிலே புதிய வரிகள் இல்லை. பழைய வரிகள் பாதிக்கு மேல் குறைப்பு. ஏழையெளிய மக்கள் பயன்படுத்துகின்ற பொருட்களுக்கு எல்லாம் முழு வரி விலக்கு. இப்படி வரிகளே இல்லாத இந்த பட்ஜெட்டை, தமிழக மக்கள் வரவேற்று மகிழ்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே கூறிக்கொள்கிறேன். இந்த பட்ஜெட்டிலே ஒன்றுமே இல்லை, இது வெங்காயம், உரிக்க உரிக்க வெறும் தோல் மட்டும்தான் வருகிறது என்று நம்முடைய குமாரதாஸ் அவர்கள் கூறினார்கள். அவர்களுக்கு நான் ஒன்றை, இந்த வெங்காயம் விற்கப்படுகின்ற உழவர் சந்தையைப் பற்றிக் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன். இவர்களுக்கு எல்லாம், இன்றைக்கு எதிர்க்கட்சி வரிசையிலே அமர்ந்திருக்கின்ற இவர்களுக்கு எல்லாம் பாராட்டுவதற்கு மனம் இல்லை என்றாலும் கூட, நம்முடைய பக்கத்து மாநிலத்திலுள்ள கர்நாடகத்திலுள்ள பெங்களூரைச் சேர்ந்த "Deccan Herald" என்ற ஆங்கிலப் பத்திரிகையிலே ஒரு வாசகர் எழுதியுள்ளதை சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அவர் இந்த உழவர் சந்தையைப் பற்றிப் பெருவாரியாகப் புகழ்ந்துவிட்டு, கடைசியில், "Why can't the Karnataka Government emulate the noble Tamil Nadu experiment here and explore the possibility of introducing it here with the intention it deserves." என்று முடித்துள்ளார்.

இதை நான் ஏன் சொல்கிறேன் என்றால், இப்படிப் பல மாநிலங்களிலே உள்ளவர்கள், அதாவது அந்த மக்கள் எல்லாம் தங்களுடைய மாநிலத்திலே இதுபோன்ற உழவர் சந்தைகளை ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்கிறபோது, நம்முடைய மாநிலத்திலே உள்ளவர்கள் இதையெல்லாம் மறந்துவிட்டு, ஏதோ ஒரு கூடாத உறவை



வைத்துக்கொண்டிருக்கின்ற காரணத்தாலே எதிர்க்க வேண்டுமென்ற நோக்கத்திலே அவர்கள் எதிர்த்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு நான் ஒன்றை மட்டும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

*பிற்பகல் 12-45*

ஒரு மிருகக்காட்சி சாலையைப் பார்ப்பதற்கு ஒரு சாதாரண மனிதர் சென்றார். அங்கே சென்றபோது அவர் மிருகக்காட்சி சாலையைப் பற்றி விளக்கிக் கூறிக்கொண்டிருந்தவரிடத்திலே பல கேள்விகளைக் கேட்டார். அதாவது மனிதனைப்போல, மிருகங்கள் தங்களுடைய உணர்வுகளை வெளிப்படுத்துகின்றனவா என்று கேட்டபோது, அதற்கு அவர் மிருகங்கள் மனிதர்களைப்போல, அதாவது தங்களுடைய முகபாவங்களாலே உணர்வுகளை வெளிப்படுத்துகின்றன. குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால், நாய் வாலை ஆட்டுவதுகூட ஒரு வகையிலே அதனுடைய உணர்வைக் காட்டுவதுதான், நன்றி உணர்வைக் காட்டுவதுதான் என்று கூறிக்கொண்டே வந்தார். கடைசியாக ஒரு புலிக் கூண்டு. அங்கே அந்தப் புலிக்குப் பக்கத்திலே ஒரு ஆடு நின்று கொண்டிருந்தது. அதைப் பார்த்த அந்த ஆசாமி, 'புலிக் கூண்டிலே ஆட்டுக் குட்டியா? இது நடக்குமா, இது எப்படி உசிதமாகும்' என்று கேட்டார். அதற்கு அந்த மிருகக்காட்சி சாலையைச் சார்ந்தவர் கூறினார், புலிக் கூண்டிலே ஆட்டுக் குட்டி இருப்பது உண்மைதான். ஆனால், இதில் ஒவ்வொரு நாளும் புதிதாக ஒரு ஆட்டுக் குட்டியை நாங்கள் வைத்துவிடுவோம். புலி அந்த ஆட்டுக் குட்டியைத் தின்று விடும். அடுத்த நாள் புது ஆட்டுக் குட்டியை அங்கே வைக்கின்றபோது ஏதோ புலியும், ஆடும் உறவோடு இருப்பதைப்போல் தெரியும் என்ற நிலையைச் சொன்னபோது, அந்த ஆசாமி வியந்து போனார். அதேபோல, இன்றைக்கு எதிர்க்கட்சியாக, அதாவது நம்முடைய எதிர்க்கட்சியாக இருக்கின்ற தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவர்கள் புலியோடு சேர்ந்து இருக்கிறார்கள். அந்தப் புலி ஏற்கெனவே பல குட்டிகளைத் தின்ற புலி என்பதை அவர்கள் மறந்துவிட்டு இங்கு பேசுகிறார்கள் என்பதை நான் அவர்களுக்கு உணர்த்தக் கடமைப்பட்டுள்ளேன்.

அதேபோன்று, தரிசு நில மேம்பாட்டுத் திட்டம்; இன்றைக்கு நம்முடைய தமிழ்நாட்டிலே விவசாயிகள் மட்டுமன்றி, தமிழகத்திலே உள்ள அத்தனை மக்களும் பாராட்டுகின்ற ஒரு நல்ல திட்டம்.

நான்கூட, என்னுடைய தொகுதியிலே, சமீபத்திலே சுற்றுப்பயணம் மேற்கொண்டபோது, ஒருவன் கேட்டான், இது என்ன தரிசு நிலத்திற்கா தலைவர் இந்த அளவுக்கு importance கொடுத்து செய்து கொண்டிருக்கிறார்; நம் நாட்டிலே நிலமே இல்லையா என்று கேட்டான். அதற்கு பக்கத்திலே இருந்த ஒருவன் சொன்னான், நான் கேட்டுக்கொண்டிருந்தேன், "நம்முடைய நாட்டிலே இருந்த நிலத்தை எல்லாம் முன்னாள் முதல்வர் அவர்களுக்குச் சொந்தமாக்கி, சென்னையிலே இருந்து மகாபலிபுரம் வரையிலே பங்களாக்களாகக் கட்டியதோடு மட்டுமல்லாமல், அரசு நிலத்தைக்கூட தன் நிலமாக்கி, நிலங்களை எல்லாம் அபகரித்துக்கொண்ட காரணத்தினாலே இன்றைக்குத் தரிசு நிலங்களையாவது இந்த மக்களுக்குப் பயன்படுகின்ற வகையிலே மாற்றிக் காட்டுகின்ற ஒரு நல்ல முயற்சியிலே நம்முடைய தலைவர் ஈடுபட்டிருக்கிறார்" என்று. (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. அ.லெ. சுப்பிரமணியன்):** திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் பேசும்போது முன்னாள் முதலமைச்சர் எல்லா நிலங்களையும் தனதாக்கிக் கொண்டார் என்று கூறியிருக்கிறார். எந்த விதத்திலே இது நியாயம்? எந்த ஆதாரத்தை வைத்துச் சொல்லுகின்றார்?

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. அ.லெ. சுப்பிரமணியன்):** டான்சி நிலத்தை வைத்துச் சொல்லுகின்றார்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** டான்சி நிலம் தொடர்பாக அதிலே எந்தத் தவறும் இல்லை என்று தீர்ப்பு சொல்லிவிட்டார்கள். அதற்கு மேல் எதை வைத்துச் சொல்கிறார். அதை அவைக் குறிப்பிலிருந்து நீங்கள் எடுக்க வேண்டும். (குறுக்கீடு) ஏன் அவைக் குறிப்பிலிருந்து எடுக்கக்கூடாது என்பதற்கு நீங்கள் விளக்கம் சொல்லுங்கள்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. அ.லெ. சுப்பிரமணியன்):** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் மணி பேசியதை உறுப்பினர் கவனிக்கவில்லை என்று கருதுகிறேன். சென்னையிலே இருந்து மகாபலிபுரம் போகின்ற வரையில் எல்லா நிலங்களையும்



வாங்கி பங்களாக்களாகக் கட்டியிருக்கிறார்கள் என்று சொன்னார். இதெல்லாம் அரசாங்கத்திற்கு மட்டுமல்ல மக்களுக்கே தெரியும்; நீதிமன்றத்திலே இருக்கிறது. எந்தத் தீர்ப்பிலும் அவர்கள் விடுவிக்கப்படவில்லை. அது appeal-லே இருக்கிறது. இன்னும் தீர்ப்புகள் வந்துகொண்டே இருக்கும். அப்போது சுந்தரம் புரிந்துகொள்வார். கொடைக்கானல், கொடநாடு போன்ற எஸ்டேட்டுகளை எல்லாம் சொந்தமாக்கிக் கொண்டது பற்றித்தான் மாண்புமிகு உறுப்பினர் சொல்லிக்கொண்டிருக்கிறார்.

**டாக்டர் அ. மணி:** மாண்புமிகு மாற்றுத்தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒரு வெள்ளை அறிக்கையை இட ஒதுக்கீடு சம்பந்தமாக சட்டமன்றத்திலே, இந்தக் கூட்டத் தொடரிலே வைப்பதாகக் கூறியிருக்கிறார்கள். நான் ஒன்றை இங்கே குறிப்பிட்டுக்கூறக் கடமைப்பட்டுள்ளேன். இன்றைக்கு யார் யாரோவெல்லாம் ஆதிதிராவிட மக்களுக்கு நீதித் துறையிலே இட ஒதுக்கீடு வேண்டுமென்று பேசினாலும்கூட, உண்மையாக ஆதிதிராவிடர்களுக்காக உழைக்கின்ற ஒரேயொரு உத்தமத்தலைவர் டாக்டர் கலைஞர் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

"சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்."

இன்றைக்கு இந்தியாவில் மட்டுமல்ல; உலகத்திற்கே நான் சவாலிட்டுக் கூற ஆசைப்படுகிறேன். எந்தவொரு தலைவனாவது, சொன்னதைச் செய்கின்ற வகையிலே ஆதிதிராவிட மக்களுக்குச் சம்பந்தியாகி இருக்கின்றானா? நம்முடைய எதிர்க்கட்சி வரிசையிலுள்ள தலைவர் அவர்களுடைய தலைவர்கூட ** அவரெல்லாம் கேட்கின்றார் . . .

பிற்பகல் 12-50

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, ** என்று சொன்ன அந்த வாசகத்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். ஏற்கெனவே சில பேருக்குப் பழகிவிட்ட அந்தப் பெயர்களை மாற்றுவது இயலாது. எப்படி, ஜி.டி. நாயுடு என்றால், ஜி.டி. நாயுடுவைத்தான் குறிப்பிடும். அவரை ஜி.டி.என்.

---

** மாண்புமிகு மாற்றுத் தலைவர் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

என்று சொன்னால், யாருக்கும் தெரியாது. அதைப்போல -- சில பேருடைய பெயர்களோடு ஒட்டிக் கொண்டு பழக்கத்திலே வந்து popular ஆன பெயர்களை மாற்றுவது என்பது இயலாத காரியம். இருந்தாலும்கூட, இப்போது அவர் சொன்ன அந்த வாசகத்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. அ.லெ. சுப்பிரமணியன்):** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய வேண்டுகோளை ஏற்று அவைக் குறிப்பிலிருந்து அந்த வாசகம் நீக்கப்படுகிறது. திரு. மணி, சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**டாக்டர் அ. மணி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அந்த வாசகத்தை நீக்கும்படியான மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அறிவுரையை நான் ஏற்றுக்கொள்கிறேன். இன்று ஆதிதிராவிட மக்கள் — ஒரேயொரு பெருமை, இந்தச் சபையிலே நான் கூறுவதற்குக் காரணம் — இதை புரிந்துகொள்ள வேண்டும். முதலமைச்சர் அவர்கள் இந்த நாட்டிலே உள்ள எல்லா சாதிகளுக்கும் சமமாக நடந்துகொண்டாலும்கூட, பொருளாதார ரீதியாக ஆதிதிராவிட மக்களை உயர்த்துவதற்கு அவர் எடுக்கின்ற நடவடிக்கைகள் மற்ற சாதிகளோடு ஒத்துப்போனாலும்கூட, சமூகரீதியாக இந்தச் சமுதாயத்தை உயர்த்துவதற்காக அவர் இந்தச் சமுதாயத்தினுடைய சம்பந்தியாகி இருக்கிறார் என்பதை இந்த நாட்டு மக்கள் புரிந்துகொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

ஆதிதிராவிட மக்களுக்காக என்னுடைய ஒரேயொரு சிறிய வேண்டுகோள். தாட்கோ மூலம் கடைகள் கட்டப்பட்டு ஆதிதிராவிட மக்களுக்குக் கொடுக்கப்படுகின்றன. அதைத் திறந்தவெளி ஏலத்தின் மூலமாக விடுகின்ற காரணத்தினாலே, பினாமிகளெல்லாம் பல ஆயிரம் ரூபாய், வாடகை வருகின்ற வகையிலே ஏலம் கேட்பதனாலே—என்னுடைய தொகுதியிலேகூட கிட்டத்தட்ட 20, 40 கடைகள் இருக்கின்றன.-அவர்கள் அந்தக் கடைகளை உபயோகப்படுத்த முடியாத ஒரு நிலை இப்போது இருக்கிறது. காரணம், அந்த ஏலத் தொகை ஏற்றப்பட்டுவிட்டதோடு மட்டுமல்ல; அந்த advertisement வந்த சமயத்திலே மூன்று மாத வாடகையை முன்பணமாகச் செலுத்தினால் போதும் என்று கேட்டிருந்தார்கள். ஏலம் எடுத்த பிறகு, 10 மாத வாடகையைச் செலுத்தச் சொல்லியிருக்கிறார்கள். 10 மாத வாடகை என்பது, கிட்டத்தட்ட 30, 40 ஆயிரம் ரூபாய் வருகிறது.



இதை மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கவனத்தில் கொண்டு அதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, ஆதிதிராவிட மக்களுக்கு . . . (மணியடிக்கப்பெற்றது.)

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. அ.லெ. சுப்பிரமணியன்):** திரு. சி. அன்பரசன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் மணி அவர்கள் பேசும்போது, ஒரு புலிக் கதையையும், அதேபோல, ஒரு ஆட்டுக் கதையையும் சொன்னார்கள். பொதுவாக சட்டமன்றத்திலே, விமானக் கதை, புலிக் கதை என்றெல்லாம் வர ஆரம்பித்துவிட்டது. எங்களுக்கு இருக்கிற ஆதங்கமெல்லாம், B.J.P. புலியாகவும், திராவிட முன்னேற்றக் கழகம் ஆடாகவும் வந்து விடக்கூடாதே என்பதுதான். (குறுக்கீடு)

**திரு. ப. மோகன் கந்தசாமி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, Ring Master சரியாக இருந்தால், ஆடுகூட புலிமேல் ஏறி சவாரி செய்வதைப் பார்த்திருக்கிறோம். எங்களுடைய Ring Master அதற்கு மயங்க மாட்டார் என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** இந்தப் பதிலை திரு. ஞானசேகரனுக்காகத் தரப்பட்ட பதில் என்று நாங்கள் எடுத்துக் கொள்கின்றோம். (சிரிப்பு)

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. அ.லெ. சுப்பிரமணியன்):** திரு. சி. அன்பரசன்.

பிற்பகல் 12-55

***திரு. சி. அன்பரசன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, வரி இல்லாத இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க நிதிநிலை அறிக்கையை எம்.ஜி.ஆர். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் பாராட்டுவதற்குக் கடமைப்பட்டிருக்கின்றேன். நாடாளுமன்ற உறுப்பினர் திரு. திருநாவுக்கரசு அவர்கள் "நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு நிதிநிலை அறிக்கையை தயாரிப்பதற்கு இரண்டு மூன்று வாரங்களை எடுத்துக்கொண்டு முழு நேரமும் அதையே சிந்தித்து மக்களுக்கு நலன் தருகின்ற வகையில் அவர் ஒவ்வொரு வாக்கியத்தையும் அமைப்பார்கள். வாக்கியம் மட்டுமல்ல, ஒவ்வொரு வார்த்தையையும் வலிமையோடு சேர்ப்பார்கள். அதுமட்டுமல்ல ஒவ்வொரு எழுத்திற்கும்

எழுச்சி தருவார்கள்," என்று அடிக்கடி சொல்லுவார்கள். இந்த நிதிநிலை அறிக்கையைப் படிக்கின்றபோது அது எவ்வளவு நிதர்சனமான உண்மை என்பதை நான் உணர்ந்து பார்க்கின்றேன்.

நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஒரு முறை சொன்னார்கள். நேற்று என்பது நரம்பு அறுந்த வீணை. நாளை என்பது மதில் மேல் பூனை. இன்று என்பது நாண் ஏற்றிய கணை என்று சொன்னார்கள். சொன்னதை இப்போது அவர்கள் எடுத்துக் காட்டியிருக்கின்றார்கள். இந்த நிதிநிலை அறிக்கையில் செம்புலபெயல்நீர் என்று சொல்கின்றபோது அவருடைய இலக்கிய ஆற்றலைப் பார்க்கின்றேன். இளைஞர்களுக்கு அவர் திட்டம் தீட்டுகின்றபோது நன்னடைநல்குவது வேந்தர்க்குக் கடனே என்ற இலக்கிய வரியிலே அவர்கள் தன்னுடைய இலட்சிய வேட்கையை வெளிப்படுத்தி இருக்கிறார்கள். இந்த நிதிநிலை அறிக்கை மூலமாக சங்க கால மக்களின் பண்பாட்டிலே இருந்து இன்றைக்கு Software சமுதாயத்தை உருவாக்குவதற்காக அவர் நல்ல திட்டங்களை மக்களுக்காகத் தீட்டி இருக்கின்றார்கள். அதைப்போல் ஒவ்வொரு திட்டத்தையும் பாராட்ட முடியும்.

சிறப்பாக நான் சிந்தித்துப் பார்ப்பது பாவேந்தர் பாரதிதாசன் அவர்கள் "கல்வியில்லாத பெண்கள் களர் நிலம். களர் நிலத்தில் புல் முளைக்கலாம். நல்ல புதல்வர்கள் முளைப்பதில்லை" என்று அன்று சொன்னார்கள். அதை எண்ணிப் பார்த்து எதிர்காலச் சமுதாயத்திற்காக, குறிப்பாக, மிகவும் பின்தங்கிய சமுதாயத்திற்காக, அந்த சமுதாயத்திலே இருக்கின்ற பெண்கள் உயர்கல்வியைப் பெறவேண்டும், ஆரம்பக் கல்வி பெறவேண்டும் என்ற உணர்வோடு, திட்டங்களைத் தீட்டி, ஆண்டிற்கு ரூ.500, அதற்குப் பின்னால் தொடர்ந்து மாதத்திற்கு ரூ.100 என்ற திட்டத்தைத் தீட்டி பாரதிதாசன் அவர்களுடைய கனவை நனவாக்கியிருக்கிறார்கள். அந்த வகையில் நம்முடைய கலைஞர் அவர்கள் பெண் அடிமையைத் தீர்ப்பதற்கு இதுபோன்ற திட்டங்களைத் தீட்டியிருக்கிறார்கள். தொடர்ந்து அவர் அடுத்த நிதிநிலை அறிக்கையை, புதிய முதலமைச்சராக, புதிய நிதியமைச்சராக இங்கே வழங்க இருக்கிறார்கள் என்ற நம்பிக்கையைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையை தட்டும் ஒலி)

இங்கே பேசியவர்கள், "மரியாதைக்குரிய திரு. மூப்பனார் அவர்கள் 13-வது பட்ஜெட் என்பதற்காக ஒரு சம்பிரதாயமாக வாழ்த்தினார்கள்"



என்று சொன்னார்கள். நான் அதை எண்ணிப் பார்க்கின்றேன். ஒரு பேட்ஸ்மேன் கிரிக்கெட் விளையாட்டிலே (match) 50 ஓவர்கள் நின்றதற்காக யாரும் பாராட்ட மாட்டார்கள். 5 பவுண்டரிகள் அடித்துவிட்டு ஆறாவது சிக்ஸரையும் அடித்து 100, 200 என்று ரன்களைக் குவிக்கின்றபோதுதான் பாராட்டுவார்களே தவிர, சம்பிரதாயத்திற்காகப் பாராட்டமாட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

நம்முடைய மூப்பனார் அவர்கள் உளமாறப் பாராட்டி இருக்கிறார்கள் என்று நம்புகிறேன். மாற்றுக் கட்சியைச் சேர்ந்தவர்கள் உதட்டளவிலே விமர்சனம் செய்கின்றார்கள். ஆனால் அவர்களுடைய உள்ளத்திலேயே பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். அதனாலேதான் அவர்கள் நம்முடைய முதலமைச்சரைப் பார்த்து, "கிட்டப்பார்வை, தொலைநோக்குப் பார்வை இல்லை" என்று சொன்னார்கள். உண்மை தான். அவருக்குக் கிட்டப்பார்வைதான். மக்களுக்கு நன்மை கிட்டவேண்டும் என்ற உயரிய நோக்கப் பார்வை. (மேசையைத் தட்டும் ஒலி) ஆக தேர்தல் பட்ஜெட் என்று சொன்னால் ஒரு தலைவர் தன்னுடைய கட்சிக்கு வெற்றி கிட்டவேண்டும் என்று எதிர்பார்ப்பதிலும் தவறு இல்லை. அந்த வகையிலும் அது தேர்தல் பட்ஜெட். தேறுதலைத் தருகின்ற பட்ஜெட் என்ற வகையிலே இதைப் பாராட்டுவதற்குக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அடுத்து, என்னுடைய புதுக்கோட்டை மாவட்டம், சரித்திர காலத்திலேயிருந்து ஒரு சிக்கலான மாவட்டம். வெண்ணாற்றங்கரையிலே இருக்கின்ற எங்கள் மாவட்டம், சோழ நாட்டோடும் சேராது; பாண்டிய நாட்டோடும் சேராது. இரண்டு நாடுகளும் எங்களைக் கைவிட்டுவிட்ட சூழ்நிலையைப் பார்த்திருக்கிறீர்கள். இப்போதுகூட, தென் மாவட்டங்களின் வளர்ச்சிக்கு, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், நீதியரசர் இரத்தினவேல் பாண்டியன் அவர்கள் தலைமையிலே ஒரு குழுவை நியமித்தார்கள். அந்தக் குழுகூட எங்களை மறந்து விட்டதோ என்று நாங்கள் ஆதங்கப்படுகிறோம்.

பிற்பகல் 1-00

நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இரண்டாவது முறையாக முதலமைச்சராக இருந்தபோது, அறந்தாங்கியிலே, திராவிட முன்னேற்றக்

கழகத்தின் மாநாடு நடந்தது. அந்த மாநாட்டிலே, அன்றைக்கு மாவட்டச் செயலாளராக இருந்த மறைந்த திரு. பெரியண்ணன் அவர்கள் ஒரு தீர்மானத்தை முன்மொழிந்தார்கள். அதை மரியாதைக்குரிய திரு. சிதம்பரம் அவர்கள் வழிமொழிந்தார்கள். அது என்ன தீர்மானம் என்றால், வானம் பார்த்த பூமியான புதுக்கோட்டைக்குக் காவிரித் தண்ணீர் வேண்டுமென்பதுதான். அந்தத் தீர்மானம் அப்போது ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது. இப்போது நாங்கள் காவிரித் தண்ணீரைக் கேட்கவில்லை. அதிலே உள்ள சட்டச் சிக்கலும், நடைமுறைச் சிக்கலும் எங்களுக்குத் தெரியும். ஆனாலும், வானம் பார்த்த பூமியான எங்கள் தொகுதியின் கோரிக்கையாக கொள்ளிடத்தின் உபரி நீரைக் கேட்கிறோம். காவிரியிலே வெள்ளம் வருகிறபோது, அந்த உபரி நீரைக் கொள்ளிடத்திலே தேக்கி திருப்பிவிடுகிறார்கள். கொள்ளிடத்திலே உபரி நீர் வருகிறபோது, அது கடலிலே கலக்கிறது. நம்முடைய மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்கூட இந்த ஆண்டு காவிரியிலே, வெள்ளப் பெருக்கு அதிகமாக இருந்தது என்பதைச் சூசகமாகச் சொன்னார்கள். நாங்கள் கேட்பது உரிமை அல்ல. எப்போதாவது வெள்ளம் வருகிறபோது, அது திருச்சியைப் பாதிக்கிறபோது, தஞ்சை மாவட்ட விவசாயிகளைப் பாதிக்கிறபோது, எங்களையும் கருத்திலே வைத்துக்கொண்டு, எப்போதாவது வருகின்ற அந்த வெள்ளத்தை எங்களுக்குக் கொடுத்தால், எங்கள் வானம் பார்த்த பூமியிலே நிலத்தடி நீராவது கிடைக்கும் என்ற உணர்வோடு, எல்லா இயக்கங்களும் சேர்ந்து கொடுத்த கோரிக்கையை, நீதியரசர் அவர்கள் விரைவிலே எடுத்துச் சொல்வார்கள் என்று நம்புகிறேன்.

நம்முடைய கலைஞர் அவர்கள் எதையும் கொடுப்பதிலே தயங்காதவர். அவராலே கொடுக்க முடியவில்லை என்றால், வேறு யாராலும் கொடுக்க முடியாது. தயவுசெய்து எங்களுடைய பிரச்சினையை, கட்சிக்கு அப்பாற்பட்ட பிரச்சினையை, சட்டங்களுக்கு அப்பாற்பட்ட பிரச்சினையை கருணையோடு கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், என்னுடைய அறந்தாங்கி தொகுதி, சென்ற ஆட்சியிலே, மரியாதைக்குரிய * செல்வி ஜெயலலிதா அவர்களால் திட்டமிட்டுப்

* மாண்புமிகு மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.



புறக்கணிக்கப்பட்டது. (சிரிப்பு) இங்கே பேசியவர்கள், அவைக்குறிப்பிலே இருந்து நீக்க வேண்டும் என்கிறார்கள். நான் சொல்கிறேன், மக்களின் மனக் குறிப்பிலேயிருந்து யார் நீக்குவது? அந்த மக்களுடைய மனக் குறிப்பின் கொதிப்பு; அதன் விளைவுதான் நான் இங்கே பேசிக்கொண்டிருக்கிறேன். (சிரிப்பு) (மேசையைத் தட்டும் ஒலி)

அறந்தாங்கி தொகுதியில், மாண்புமிகு திரு. திருநாவுக்கரசு அவர்கள் அமைச்சராக இருந்தபோது, ஒவ்வொரு சாலையையும் போட்டார்கள்; கல்லூரியைக் கொண்டு வந்தார்கள்; நூற்பாலையைக் கொண்டு வந்தார்கள்; எவ்வளவோ செய்தார்கள். ஆனால், மரியாதைக்குரிய * செல்வி ஜெயலலிதா அவர்கள் திட்டமிட்டு ....

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே....

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. அ.லெ. சுப்பிரமணியன்) :** என்ன? சொல்லுங்கள், திரு. சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** * என்பதை எடுத்துவிட்டு, செல்வி ஜெயலலிதா என்று மாற்றிவிடுங்கள்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. அ.லெ. சுப்பிரமணியன்):** செல்வி ஜெயலலிதா என்று மாற்றப்படுகிறது.

**திரு. சி. அன்பரசன்:** நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், செல்வி என்று திருத்திக்கொள்ளச் சொன்னார்கள். ** துடித்த அந்த மாபெரும் தலைவியை.... (குறுக்கீடுகள்) (கூச்சல், குழப்பம்).

(உறுப்பினர்கள் திரு. பி.ஆர். சுந்தரம், திரு. இரா. தாமரைக்கனி, திரு. சொ. கருப்பசாமி, திரு. இரா. விசுவநாதன். திரு. கே சுப்பராயன், திரு. சி. ஞானசேகரன் ஆகியோர் எழுந்து நின்றனர்.)

**திரு. இரா. தாமரைக்கனி**: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, தனிப்பட்ட முறையிலே நாங்களும் விமர்சனம் செய்வோம். அதை அவைக்குறிப்பிலே இருந்து நீக்குங்கள். (குறுக்கீடுகள்)

* மாண்புமிகு மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.
** மாண்புமிகு மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. அ.லெ. சுப்பிரமணியன்):** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ** எடுத்து விடலாம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. அ.லெ. சுப்பிரமணியன்):** அதை அவைக் குறிப்பிலிருந்து எடுத்துவிடுகிறேன். உறுப்பினர் சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. சி. அன்பரசன்:** ஆகவே, அந்தத் தொகுதியைப் பொறுத்தவரையில் அண்மையில் நடந்த இடைத்தேர்தலின்போது, நம்முடைய அமைச்சர் பெருமக்கள், அங்கே சாலைகள் எல்லாம் எப்படியிருந்தன என்பதை பார்த்தார்கள். அந்த உணர்வோடு, அங்கே இருக்கின்ற சாலைகளை, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களும், முதலமைச்சர் அவர்களும் சீர்த்திருத்தம் செய்ய வேண்டும், செப்பனிடவேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்....

*பிற்பகல் 1-05*

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. அ.லெ. சுப்பிரமணியன்):** சீக்கிரம் பேசி முடித்துகொள்ளுங்கள். இன்னும் இரண்டு சட்டமுன் வடிவுகளை எடுத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது.

**திரு. சி. அன்பரசன்:** அங்கே வீரமங்கலம் என்ற பாலத்தையும், நிலையூர் என்ற ஊரிலேயுள்ள பாலத்தையும், இராமசாமிபுரம், பாலகிருஷ்ணபுரம் என்ற பகுதியிலுள்ள பாலத்தையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கட்டித்தர ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, பொதுப் பணித் துறையின்மூலம் அங்கே பல ஏரிகளை தூர்வார, அவர் ஆணையிடவேண்டுமென்று விரும்பி வேண்டி கேட்டுக்கொள்கின்றேன்.

என்னுடைய தொகுதியில் 37 கிலோமீட்டருக்குக் கடற்கரை இருக்கிறது. அங்கே ஒரு மீனவர் அங்காடியை உருவாக்கித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். கல்வியிலும் அது பின்தங்கியிருக்கின்ற தொகுதி என்ற காரணத்தினாலே,

** மாண்புமிகு மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



அவற்றையெல்லாம் சீர்த்திருத்தம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, மாவட்டத் திட்டக் குழுவிலே, மாவட்ட ஊராட்சிமன்ற, ஊராட்சித் தலைவரை அங்கே தலைவராக நியமிப்பதிலே, எங்களுக்குக் கருத்து வேறுபாடு இல்லையென்றாலும் அந்தக் குழுவிற்கு, ஒரு நிபுணர் தலைமை தாங்குவதுதான் சிறப்பாக இருக்கும். மாவட்ட ஆட்சித் தலைவரோ அல்லது ஒரு நிபுணரோ, அதிலே தலைமை ஏற்றிருப்பது சிறப்பாக இருக்கும் என்று கருதுகின்றேன். நான் இறுதியாக, சாமி சிதம்பரனார் அவர்களுடைய நூல்களையும் சரித்திர பேராசிரியர் வெங்கடசாமி அவர்களுடைய நூல்களையும், மரபுக் மரியாதைக்குரிய செட்டிநாட்டு கவியரசர், முடியரசன்—அவர்கள் கவிதையிலே மாண்போடு விளங்கியவர்கள்—அவர்கள் நூல்களையும் ஆக இந்த மூன்று பேர்களுடைய நூல்களையும், நாட்டுடைமையாக்கிய முதல்வர் அவர்களைப் பாராட்டி, மீண்டும் அடுத்த நிதிநிலை அறிக்கையை வழங்கவிருக்கின்ற டாக்டர் கலைஞர் அவர்களை (மேசையைத் தட்டும் ஒலி) வாழ்த்துவதற்கு—அவருடைய— வார்த்தைகளிலே சொல்லவேண்டுமென்றால், வாழ்த்துவதற்கு—வயது தேவையில்லை, வாழ்த்துவதற்கு வளமான உள்ளம் தேவையென்ற உணர்வோடு, வளமான உள்ளத்தோடு அவரை வாழ்த்தி, வாய்ப்பிற்கு நன்றி கூறி அமர்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. அ.லெ. சுப்பிரமணியன்):** மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. பொன்னார்டு.

***திரு. இரா. பொன்னார்டு:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, குறள் ஓவியம் தந்துள்ள முதல்வர்—அய்யன் குறளாருக்கு, குமரியில் சிலை அமைத்து, இங்கே நிதிநிலை அறிக்கையைத் தந்துள்ளார்கள். அதன்மீது கருத்துச் சொல்ல வாய்ப்பளித்த தங்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவருக்கும், முதலமைச்சருக்கும், அரசு தலைமைக் கொறடா அவர்களுக்கும், என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

குறள் எல்லோருக்கும் பொதுவானதைப்போல, தலைவர் தந்திருக்கின்ற, இந்த நிதிநிலை அறிக்கையும் அனைத்துத் தரப்பினருக்கும் பொதுவாக இருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

ஏழைகளுக்கு இரங்குகின்றவன் பாக்கியவான். அந்தவகையில், இந்த நிதிநிலை அறிக்கையில் ஏழையெளியவர் வாழ்வுக்கு மறுவாழ்வு அளித்திருப்பதைக் குறித்து, மிகப்பெரு மகிழ்ச்சியடைகிறேன்.

*"செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்*
*செயற்கரிய செய்கலா தார்"*

*"பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்*
*கருமமே கட்டளைக் கல்"*

என்பது வள்ளுவர் வகுத்த குறள். அந்தக் குறளுக்கு இலக்கணமாக விளங்குகிறவர்தான் தமிழகத்தின் முதலமைச்சர் டாக்டர் கலைஞர் என்று சொன்னால் மிகையாகாது. பத்திரிகைகள் பாராட்டியிருக்கின்றன. தமிழகத்தில் மூத்த தமிழ் ஏடாம், தினமணி பாராட்டியிருக்கிறது. இன்றைக்குக்கூட தமிழர் பூமி பாராட்டி இருக்கிறது. இதைவிட வேறு பாராட்டு இந்த நிதிநிலை அறிக்கைக்குத் தேவையில்லையென்றே கருதுகிறேன்.

*"கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு*
*புண்ணுடையர் கல்லா தவர்"*

தமிழகத்திலே வாழ்கின்றவர்கள் அனைவரும் கண்ணுடையவர்களாக இருக்க வேண்டும் என்பதை அடிப்படையாகக் கொண்டுதான், அவர்களைக் கற்க வைத்து, கண்ணுடையவர்களாக ஆக்கிடத்தான், இந்த ஆட்சி ஆரம்பக் கல்வியைக் கட்டாயப்படுத்தியுள்ளது. ஆரம்பக் கல்வி இல்லாத கிராமங்களே இருக்கக்கூடாது என்று அரசு அறிவித்திருப்பது மிக்க வரவேற்கத்தக்கதாகும். இந்த நிலையில், கல்வியின் கட்டாயத் தேவையைக் கருதிதான் கல்வி மான்யத்திற்காக 4949 கோடி நிதி ஒதுக்கி இருப்பது வரவேற்கத்தக்கது, பாராட்டத்தக்கது.

இங்கே பேசியவர்கள் இளைஞர்களுக்கு வாழ்வில்லை என்று சொல்வார்கள். இதன்மூலம் 6,000 ஆசிரியர்கள் வாழ்வு பெறுகிறார்கள். 4,000 சீருடைப் பணியாளர்கள் வாழ்வு பெறுகிறார்கள். இது அவர்களுக்கு வாழ்வு இல்லையா என்ற வினாவை நான் எழுப்ப விரும்புகிறேன்.

உள்ளாட்சி அமைப்பு மூலம் கிராமங்களுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர், சாலை வசதி, மின்சார வசதி வழங்க இந்த அரசு 2,401 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பது பெருமகிழ்ச்சியைத் தருகிறது. குமரி



மாவட்டத்தில் குளச்சல் துறைமுகம் அமைக்க ஏற்பாடு செய்வதற்கு நன்றி கூறுவதோடு, அதில் மீனவர்கள் மீன் பிடிக்கிற துறைமுகப் பகுதியையும் ஏற்படுத்தித் தரவேண்டுமென்று மெத்தப் பணிவோடு வேண்டுகிறேன். மீனவர்களுக்கு 20,000 வீடுகள் கட்டிக் கொடுப்பதோடு உள்நாட்டு மீனவர்களுக்கு இதுவரை எந்த அரசும் செய்யாத ஒரு நற்பணியை, 1,000 வீடுகள் உள்நாட்டு மீனவர்களுக்கு வழங்கியிருப்பதைப் பாராட்டுகிறேன். மீனவர்களுக்கு ஏலக் கடன் வசதி செய்திருப்பதைப் பாராட்டுகிறேன். தமிழகத்தில் மீனவர் அங்காடி 10 என்று அறிவித்திருப்பதை வரவேற்று, இல்லாத பகுதிகளுக்கும் கொடுக்க வேண்டுமென்று பணிவோடு வேண்டுகிறேன்.

பிற்பகல் 1-10

மீனவர்கள் விபத்தினின்று காப்பாற்றப்பட அதி விரைவு விசைப் படகுகள் ஏற்படுத்திக் கொடுத்த முதல்வருடைய கருணை உள்ளத்தைப் பாராட்டுகிறேன்.

கச்சத்தீவு. இந்தத் தீவை இந்தியாவிற்கும், இலங்கைக்கும் பொதுத் தீவாக வைத்திருக்க வேண்டும். இந்தத் தீவைத் தாரை வார்க்கும்போது தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் மத்திய அரசோடு எப்படியெல்லாமோ போராடினார்கள். அது பலன் அளிக்காத காரணத்தால், இன்று தமிழகத்தில் வாழ்கின்ற, குறிப்பாக, நம்முடைய இராமேஸ்வரம் மண்டபம் பகுதியில் வாழ்கிற, மீனவர்கள், திசை மாறிச் செல்கிறபோது, பெரும் சிரமத்திற்கு ஆளாகிறார்கள். நேற்றுகூட, தூத்துக்குடியைச் சார்ந்த ஒருவர் அங்குள்ள சிறைச்சாலையிலே மரணம் அடைந்திருக்கிறார். ஆகவே, மீனவ மக்கள் மீது மிகுந்த பற்றோடு செயல்படுகிற மாண்புமிகு முதல்வர் அவர்கள் மத்திய அரசோடு தொடர்பு கொண்டு அந்தத் தீவை இருநாடுகளுக்கும் பொதுவான தீவாக அறிவிக்க பெருமுயற்சி செய்ய வேண்டுமென்று மீனவ மக்களின் சார்பில் மெத்த பணிவன்போடு வேண்டிக்கொள்கிறேன்.

பாகிஸ்தான் சிறையில் அடைப்பட்டிருக்கிற 19 மீனவர்களையும் மீட்பதற்கு நீங்கள் எடுத்திருக்கிற பெரு முயற்சிக்கு நன்றி பாராட்டுகிறோம். விரைந்து அவர்களை தமிழகத்திற்குக் கொண்டு வந்து சேர்ப்பதற்குத் தொடர்ந்து உங்கள் பணி தொடர வேண்டுகிறோம். மீனவர்கள் மீன்களைப் பிடிப்பதற்கு வலைகளை வீசுவார்கள். இதுபோன்ற சில நிகழ்வுகளை மனதில் வைத்துக் கொண்டு

மீனவர்களுக்கு சிலர் வலை வீசுகிறார்கள். அந்த மீனவர்கள் அந்த வலையிலே விழமாட்டார்கள். நீங்கள் வீசியிருக்கிற பாச வலை, நேச வலையிலே இருக்கிறார்கள். ஆகவேதான், அதன் எதிரொலியாகத்தான் கன்னியாகுமரி மாவட்டத்தில் கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் மீனவர் பகுதி அதிகமாக வாக்குகளைக் கொடுத்திருக்கிறது என்பதையும், நடந்து முடிந்த சட்டமன்ற இடைத்தேர்தலில் மீனவர் பகுதிகள் அதிகமாக வாக்குகளைக் கொடுத்து நன்றியைத் தெரிவித்துள்ளார்கள் என்பதையும் மகிழ்ச்சியோடு நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆசாரிப்பள்ளத்திலே மருத்துவக் கல்லூரி வேண்டும் என்பது அந்த மாவட்டத்தினுடைய ஒட்டுமொத்தக் கருத்து. கருணையுள்ளத்தோடு நீங்கள் மறுபரிசிலனை செய்து அதைக் கொடுத்துதவ வேண்டுமென்றும் பணிவன்போடு வேண்டுகிறேன். தொழிற்சாலை வேண்டுமென்ற அடிப்படையில் வெள்ளமடி, அம்மாண்டிவளையில் ஒரு தொழிற்பேட்டை அமைத்துத்தர மெத்தப் பணிவன்போடு வேண்டுகிறேன். மக்கள் நல்வாழ்விற்காக 1,263 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பது, வருமுன் காப்போம் திட்டத்திற்கு பெரும் முன்னுரிமை வழங்கியிருப்பது வரவேற்கத்தக்கது. வரும்முன் காப்போம் திட்டம் நல்ல வகையில் செயல்படுவதால் அதற்கு மேலும் தொகை ஒதுக்கிட வேண்டுமென்று வேண்டுகிறேன்.

அடுத்து வாழ்ந்து காட்டுவோம் என்பது. பெண்கள்தான் இந்த நாட்டின் கண்கள். ஆகவே, அவர்கள் கல்வி அறிவு பெற்று பொருளாதார மேம்பாடு பெறுவதற்கு வாழ்ந்து காட்டுவோம் என்ற வைர வரிகள் மிகப் பயன் உள்ளதாக இருக்கிறது. தாய்க் குலம் இதை வரவேற்கிறது. நாங்கள் நன்றியும், பாராட்டையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

அடுத்து பசுமைப் புரட்சி; வங்கிகளைத் தேசியமயமாக்கியும் மன்னர் மானியத்தை ஒழிக்க வேண்டுமென்ற நல்லெண்ணத்தோடு முன்னாள் பிரதமர் அன்னை இந்திரா அம்மையார் அவர்கள் கொண்டு வந்த திட்டத்திற்கு, தமிழகத்தினுடைய முதலமைச்சர் ஆக்கமும், ஊக்கமும் கொடுத்து நிறைவேற்றிய காரணத்தால் இன்று இந்திய துணைக்கண்டத்தில் பசுமைப் புரட்சி ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னால், தமிழகத்தின் முதல்வர், டாக்டர் கலைஞருக்கு அதில் பெரும் பங்குண்டு என்பதை நன்றியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.



(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

இன்று கால்நடை பராமரிப்புத் திட்டத்தின் மூலம் பசுமைப் புரட்சிக்குப் பிறகு வெண்மை புரட்சி உருவாகியிருக்கிறது. இந்த அருமையான திட்டத்தைத் தமிழகத்திற்குத் தந்த முதல்வருக்கும், அரசுக்கும் பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்கிறேன். அடுத்து, வீட்டு மனைப் பட்டா; வருவாய்த் துறையின் மூலம் இலவச வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. தாழ்த்தப்பட்டவர்களுக்கு 2 இலட்சத்து 70 ஆயிரம் இலவச பட்டாக்களும், பழங்குடியினருக்கு ஏறத்தாழ 8 ஆயிரம் பட்டாக்களும், பிற்படுத்தப்பட்டவருக்கு ஏறத்தாழ 4 இலட்சத்து 80 ஆயிரம் பட்டாக்களும், நலிந்தவர்கள் ஏறத்தாழ 7 இலட்சத்து 50 ஆயிரம் பேருக்கு நிலப்பட்டாக்களும் வழங்கியிருக்கிற அரசு இந்த அரசு. இது ஏழைகளுக்குப் பலன் அளிக்கவில்லையா என்பதை மாற்றுத் தரப்பிலே கேள்வி கேட்பவர்களுக்குப் பதிலாக வைக்கின்றேன்.

தென் மாவட்ட வளர்ச்சிக்கு நாங்குநேரியில் உயர் தொழில்நுட்ப பூங்கா அமைப்பது குறித்தும், கன்னியாகுமரிக்கு இரப்பர் பூங்கா தந்திருப்பதற்கும் நன்றி தெரிவிப்பதோடு, வேலைவாய்ப்பில் தூத்துக்குடி, திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களுக்கும் முன்னுரிமை வழங்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து கணினிக் கல்வி; உலக அற்புத நிகழ்வுகளையும், அறிவியல், பொறியியல் தொழில்நுட்பங்களையும் தமிழக மாணவர்கள் தெரிந்துகொள்வதற்கான கணினிக் கல்வியை வரவேற்கிறேன். தமிழ்நாட்டில் 666 பள்ளிகளில் இக்கல்வி கற்றுத்தரப்படுகிறது. வரும் ஆண்டுகளில் தொடர்ந்து கொடுக்க இருப்பது தமிழக மக்களுக்கு எதிர்காலத்திலே வாழ்விக்க வழி வகுப்பதில்லையா என்ற வினாவையும் எழுப்புகிறேன். அதற்கு என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-15

உழவர் சந்தை. நாட்டின் முதுகெலும்பான உழவர்க்கு மகிழ்ச்சி தருகிறது இந்தத் திட்டம் என்பதால் உழவர்கள் விரும்புகிறார்கள்; ஏற்கிறார்கள். குறைந்த விலையில் மரக்கறி பொருள்களை வாங்கி

வருகிறார்கள். வெங்காயத்தை உரித்துப் பார்க்கிறபோது கண்களிலிருந்து கண்ணீர் வருவதாகச் சொன்னார்கள். ஆம். அதில் வருகின்ற கண்ணீர் ஆனந்தக் கண்ணீர். எப்படி என்று சொன்னால், தரமான, நல்ல பொருள்களைக் குறைந்த விலைக்கு வாங்கி வருகிறபோது, வெங்காயத்தை உரிக்கிறபோது, அதில் வருகின்ற ஆனந்தக் கண்ணீர், தலைவரைப் பாராட்டுகிற ஆனந்தக் கண்ணீர் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே, இந்த நல்ல திட்டத்தை வட்ட அளவில், ஒன்றிய அளவில் முடியாத நிலையில், குறைந்தபட்சம் தொகுதி அளவிலாவது தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாவட்ட அளவில் அனைத்துத் துறைகளிலும் கருத்தரங்கு நடத்த வேண்டுமென்பது என்னுடைய பணிவான வேண்டுகோள். காரணம், நீர்ப்பாசனக் கருத்தரங்கு, உள்ளாட்சித் துறை கருத்தரங்கு, நெடுஞ்சாலைத் துறையினுடைய கருத்தரங்கு, சமூக நலக் கருத்தரங்கு, இப்படி கருத்தரங்குகள் நடத்துகிறபோது மாவட்ட அளவிலுள்ள அனைவரும் கலந்துகொண்டு கருத்துக்களைச் சொல்ல நல்ல வாய்ப்பினை உருவாக்கும். அந்த மாவட்டத்திலுள்ள அனைத்துத் துறைகளின் சார்பில் கருத்தரங்கு நடத்த முயற்சிக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

மத நல்லிணக்கம் பேணுகின்ற வகையில் மாவட்ட அளவில் கிருத்துவத் தேவாலயங்கள், இஸ்லாமியப் பள்ளிகள், இந்து திருக்கோவில்கள் புதியன அமைப்பதற்கும், பழையனவற்றைப் புதுப்பிப்பதற்கும் விண்ணப்பிக்கிறபோது ஆட்சித் தலைவர்கள் இந்த அரசினுடைய சமூகநீதியான தத்துவத்தை எண்ணத்திலே கொண்டு, மத நல்லிணக்கத்தைப் பேணுகின்ற வகையில் விதிமுறைகளுக்குட்பட்டு, விரைந்து செய்து கொடுக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவுறுத்த வேண்டுமென்று மெத்த பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

புறம்போக்கு நிலங்களில் வாழ்கின்றவர்களுக்கு, 20 ஆண்டுகள் என்றிருந்ததை 10 ஆண்டுகளாக ஆக்கி, அவர்களுக்குப் பட்டாக்கள் வழங்க முன் வந்திருப்பதை ஏழைகளின் சார்பில் நன்றியோடு பாராட்டுகிறேன்.

மாநிலம் முழுவதிலும் குடிநீர்ப் பஞ்சத்தை ஒழிப்பதற்கு ஏறத்தாழ ரூ.500 கோடி நிதி வழங்கி, செய்கின்ற முயற்சிகளுக்கு என்னுடைய வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.



பாசன வசதிக்கான குளங்களைத் தூர் வாரவும், சீர் செய்யவும், செம்மைப்படுத்தவும் ரூ.50 கோடி ஒதுக்கியிருப்பது பாராட்டுக்குரியது. தடையின்றி மின்சாரம் கிடைக்க ரூ.1,034 கோடி ஒதுக்கியிருப்பதை யாராலும் வரவேற்காமல் இருக்க முடியாது. வரவேற்கிறேன்.

தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளில் பணியாற்றும் செயலாளர்களை இட மாற்றம் செய்வது வரவேற்கத்தக்கது.

நெடுஞ்சாலைத் துறையின் சார்பாக ஏறத்தாழ நபார்டு உதவியோடு 150 பாலங்கள் அமைத்து, இரயில்வேயின் மூலம் 52 பாலங்கள் கட்டி முடித்து, மேலும் 24 பாலங்கள் அமைக்க இருப்பதற்கு பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்னையைச் சிங்காரச் சென்னையாக்க வேண்டுமென்று நம்முடைய வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் நடவடிக்கை எடுத்து, மேம்பாலங்கள் அமைத்து வருவது அனைவராலும் பராட்டுதற்குரியது. அதற்கு அரசு மேலும் ஊக்கம் அளிக்க வேண்டுமென்று மெத்த பணிவன்போடு வேண்டுகிறேன்.

140 கிராமங்களுக்கு இணைப்புச் சாலைகளுக்காக ரூ.90 கோடி ஒதுக்கியிருப்பதை வரவேற்கிறேன். நெசவாளர்கள் இறந்தால் அவர்களுடைய குடும்பத்திற்கு வழங்கப்படும் உதவித் தொகையை ரூ.40,000-லிருந்து ரூ.50,000 ஆக உயர்த்தியதை வரவேற்கிறேன்.

பத்திரிகையாளர்களுக்கு அவர்கள் இறக்க நேர்ந்தால் அவர்களது குடும்பத்திற்கு வழங்கப்படும் உதவித் தொகையை ரூ.40,000-லிருந்து ரூ.50,000 ஆக உயர்த்தியதை வரவேற்கிறேன்.

மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் இயங்கி வந்த திட்டக் குழுக்கள் மக்களாட்சி சிறப்புறும் வண்ணம் மாவட்ட ஊராட்சித் தலைவர் தலைமையில் செயல்பட அறிவித்திருப்பதைப் பாராட்டுகிறேன்.

நமக்கு நாமே திட்டத்திற்கு ரூ.30 கோடி ஒதுக்கியிருப்பதை மேலும் உயர்த்துமாறு கேட்டுக்கொள்கிறேன்.

போக்குவரத்து வசதிகளை மேலும் திறம்படச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். செய்திருக்கும் பணிகளுக்காக நன்றி தெரிவித்து, பாராட்டுகிறேன். (மணியடிக்கப்பெற்றது) ஒரே ஒரு நிமிடத்தில் முடித்துவிடுகிறேன்.

ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன் பிள்ளை தானே வளரும் என்பது எல்லோருடைய நம்பிக்கை. அந்த வகையில் சில நேரங்களில் ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்க்கிறபோது, அவர்கள் ஈட்டியாகப் பாய்கிறார்கள். அந்த வகை துரோகங்களையும், சதிகளையும் முறியடித்து இமயமாக நிற்கும் தலைவர் தாங்கள். எல்லாவற்றையும் சரிக் கட்டுவீர்கள், அதற்குத் துணையாக நாங்கள் வருவோம் என்று சொல்லி, நிதிநிலை அறிக்கையின் மீதான என்னுடைய உரையை மகிழ்ச்சியோடு நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. மணிவர்மா.

***திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2000-2001 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின் மீது பேசுவதற்கு வாய்ப்புத் தந்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கை வரவேற்கத்தக்க வகையில் இருக்குமென்று மிகுந்த நம்பிக்கையோடு எதிர்பார்த்திருந்தோம். ஆனால் தமிழகத்திலே விவசாயத்தை நம்பி வாழ்கின்ற 80 சதவீத மக்களுக்கு எந்தவிதமான நலத் திட்டமும், உதவியும் இல்லாமல் அறிவித்தது மிகுந்த ஏமாற்றத்தை அளிக்கிறது.

*பிற்பகல் 1-20*

விவசாயிகளுக்குக் கடந்த நான்கு நிதிநிலை அறிக்கைகளிலே கரும்புக்கு டன் ஒன்றுக்கு ரூ.1,000 என்றும், நெல்லுக்கு குவிண்டால் ஒன்றுக்கு ரூ.650 என்றும் கொடுக்கவில்லை என்றாலும், இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையிலாவது மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவிப்பார்கள் என்று அவர்கள் பெரிய ஏக்கத்தோடு ஏங்கியிருந்து, இப்போது ஏமாந்து விட்ட நிலையிலே இருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அவரது பதிலுரையிலாவது, விவசாயப் பெருங்குடி மக்களைக் காப்பாற்றுகின்ற வகையிலே, அவர்களுடைய வாழ்விலே நல்ல வளம் சேர்க்கின்ற வகையிலே, இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கின்ற வகையிலே கரும்புக்கு டன் ஒன்றுக்கு ரூ.1,000 என்றும் நெல்லுக்குக் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.650 என்றும் அறிவிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

மத்திய அரசினர், ஒருபுறம் விவசாயத்திற்குத் தேவையான உரம், டீசல் மற்றும் மண்ணெண்ணெய் ஆகியவற்றின் விலைகளை எல்லாம் ஏற்றி, விவசாயிகளை நசுக்கி இருக்கிறார்கள். மத்திய அரசு



ஏற்றியிருக்கின்ற உரம் மற்றும் டீசல் விலை உயர்வுக்குண்டான மானியத்தை தமிழக அரசு தந்து விவசாயப் பெருங்குடி மக்களைக் காப்பாற்ற வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயிகளைக் காப்பாற்ற இப்போதுள்ள ஒரே வழி, அவர்கள் கடன்களுக்குண்டான முழு வட்டியினையும் தள்ளுபடி செய்வதுதான். எனவே அதைச் செய்து விவசாயிகளைக் காப்பாற்ற வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கரும்பு விவசாயிகள், கரும்புகளை ஆலைகளுக்கு அனுப்பினால் அதற்குண்டான பணத்தை ஒரே தவணையில் கொடுப்பதில்லை, விவசாயிகள் இரண்டு மூன்று தவணைகளாகத்தான் பெறுகிறார்கள், ஏற்கெனவே கடனாளியாக இருக்கின்ற விவசாயிகள் கரும்புக்குண்டான விலையைப் பெறுவதற்கு ஆறு மாதங்களுக்கு மேல் ஆகிறது. எனவே, கரும்புக்கான கிரயத்தொகையை அரசே காலநிர்ணயம் செய்து 15 நாட்களுக்குள்ளாக விவசாயிகளுக்கு பட்டுவாடா செய்யும்படி கரும்பு ஆலைகளுக்குத் தெரிவித்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இலவச மின்சாரம் வேண்டி முன்பதிவு செய்து சுமார் 20 ஆண்டுகள் ஆகியும் இன்று வரையிலே விவசாயிகளுக்கு இலவச மின்னிணைப்பு வழங்கப்படவில்லை. 40, 45 வயதிலேதான் அவர்கள் மின்னிணைப்பு வேண்டி மனு செய்கிறார்கள். அவர்கள் 60, 70.... (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** தலைவர் அவர்களே, 20 ஆண்டுகளுக்கு முன்னாலே பதிவு செய்தவருடைய பெயரும், அந்த எண்ணும் இருந்தால், தயவு செய்து உறுப்பினர் அவர்கள் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1984 ஆம் ஆண்டு வரையிலேதான், இலவச மின்சார இணைப்பு வழங்கியிருக்கிறார்கள். 15 ஆண்டுகளாக..

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, இலவச மின்சாரம் அறிமுகமானதே 1989 ஆம் ஆண்டுதான். 20 ஆண்டுகளுக்கு முன்பு என்று சொல்கிறார். எது சரியானது?

**திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆட்சியிலே இலவச மின்சாரம் வந்தாலும், இலவச மின்சார இணைப்பு இப்பொழுது ரூ.25,000/-

கட்டினால்தான் கொடுக்கப்படுகிறது. ஆகவே, பம்ப் செட்டுகளுக்கு மின்னிணைப்பு இலவசமாக வழங்குவது 20 ஆண்டுகள் ஆகியும் இன்று வரையிலே கிடைக்கவில்லை என்ற நிலையை விவசாயப் பெருங்குடி மக்கள் தெரிவித்திருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

விவசாயிகள் இந்த அளவிற்குக் கஷ்டப்படுகின்ற இந்த நேரத்திலே கூட்டுறவுக் கடன் வசூல் என்ற பெயரில் ஜப்தி நடவடிக்கை மேற்கொண்டு இருக்கிறார்கள். என்னுடைய தொகுதியிலே செங்கம் எஸ்.எம். கள மேலாளர் திரு. மணிப்பால் என்பவர், வீட்டில் ஆண்கள் இல்லாத நேரத்திலே பெண்களைத் தாறுமாறாகப் பேசி, நகைகளைக் கழற்றச் சொல்லி, டி.வி., கிரைண்டர் போன்ற பொருட்களையெல்லாம் ஜப்தி செய்துள்ளார். இந்த அரசு விவசாயிகளிடம் எந்த அளவிற்கு நடந்து கொள்கிறது என்பதற்கு இந்த உதாரணம் போதும் என்று இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஒவ்வொரு கிராமத்திலேயும் குடும்ப அட்டை கொடுத்த விவகாரம் வெறும் குளறுபடியாகப் போய்விட்டது. எந்த கிராமத்திற்குச் சென்றாலும் சுமார் 15, 20 சதவிகிதம் மக்கள் குடும்ப அட்டை இல்லாமல் எந்தப் பொருளையும் வாங்க முடியாமல் இருக்கிறார்கள். மேலும் பல்வேறு அரசுப் பணிகள் மற்ற நிலைகளை அவர்கள் தேடிச் செல்கின்றபோது குடும்ப அட்டை இல்லையென்று, அவர்களை ஒதுக்கித் தள்ளி விடுகிறார்கள். குடும்ப அட்டை அறிவிப்புத் திட்டம் வெறும் குளறுபடியாக ஆகிவிட்டது. சாதாரணமாக TSO, DSO அளவிலேயே வாங்க வேண்டிய குடும்ப அட்டையை மாநில அளவிலே அரசுக்கு அனுப்பப் பெறுகின்ற நிலையில் கிராமப்புறங்களிலே இருக்கின்ற மக்கள் எவ்வாறு பெறுவார்கள் என்பதை அரசு உணர வேண்டும்.

கிராமப்புறங்களுக்கு சட்டமன்ற உறுப்பினர்கள் செல்கின்றபோது அவர்கள் பெறுகின்ற மனுக்களில் பெரும்பாலானவை குடும்ப அட்டைகள் வேண்டித்தான், பெரும்பாலும் அத்தகைய மனுக்களைத்தான் நீட்டுகிறார்கள். கடந்த மூன்று ஆண்டுகளாக நான் கிராமப்புறங்களுக்கு சென்று மனுக்களைப் பெறும்போது, அவர்கள் குடும்ப அட்டை வேண்டுமென்று கொடுத்த மனுக்களைப் பொறுத்தவரையிலே, இன்றுவரை பரிசிலனை செய்யாமல் அரசுக்கு அனுப்பியிருப்பதாக அதிகாரிகள் சொல்லுகிறார்கள். குடும்ப அட்டைகளை மாவட்ட அளவிலே மாவட்ட அதிகாரிகள் வழங்குவதற்கு



அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ரேஷன் கடைகளிலே இப்போது 75 முதல் 80 சதவிகிதம்தான் அரிசி மற்றும் உணவு தானியங்கள் கொடுப்பதாக அதிகாரிகள் சொல்கிறார்கள். கிராமப்புறங்களிலே இருக்கின்ற குடும்ப அட்டைகளுக்கு 15 கிலோ அரிசிதான் வழங்கப்படுகிறது. உடனடியாக 20 கிலோ அரிசி வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குடிநீர்ப் பிரச்சினையைப் பொறுத்தளவிலே இப்போது கிராமப்புறங்களில் இருக்கின்ற மக்களுக்கு நன்றாகக் குடிநீர் கொடுத்துக்கொண்டிருக்கிறீர்கள். அதற்காக மாண்புமிகு முதலவர் அவர்களுக்கும், அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துகொள்கிறேன். மேலும் கிராமப்புறங்களில் குடிநீர் இணைப்பு கொடுக்கப்படுகின்ற மக்களிடம் ஆயிரம் ரூபாய் முன் பணமும், வைப்புத் தொகையும், மாதம் 30 ரூபாய் வரிப் பணமும் கேட்கின்றார்கள். நகர்ப்புறங்களிலே ஒரு குடிநீர் இணைப்புக்கு மாதம் 25 ரூபாய்தான் வாங்குகிறார்கள். கிராமங்களிலே விவசாயிகள், விவசாய கூலித் தொழிலாளர்கள்தான் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். ஊராட்சிகளிலே இருக்கின்றவர்களிடம் ஊராட்சித் தலைவர்கள் எல்லாம் வசூலுக்குச் செல்கின்றபோது....

பிற்பகல் 1-25

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்த நகராட்சியிலே 25 ரூபாய் வாங்குகிறார்கள் என்ற தகவல் எனக்குத் தெரியவில்லை. அப்படி இருந்தால், தெரிவித்தால் நலமாக இருக்கும்.

**திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதி முழுக்க ஊராட்சிகள் நிறைந்த தொகுதி. ஊராட்சிகளைப் பொறுத்த அளவிலே மாதம் ஒன்றுக்கு 30 ரூபாய் வாங்குகிறார்கள். நகராட்சிகளிலே எனக்குச் சொல்லிய வார்த்தையை வைத்துச் சொன்னேன். அப்படி எந்த அளவுக்குக் கட்டணம் வந்தாலும் அதை ஏற்றுக்கொள்ள வேண்டியுள்ளது. ஆக ஊராட்சிகளில் குடிநீர் இணைப்புக்கு 500 ரூபாய் முன் வைப்புத் தொகையாகவும் மாதம் 15 ரூபாயாகவும் குறைத்து நிர்ணயிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாதாரண ஏழை மக்களுக்கு பொதுவாக ஆங்காங்கே தெருக்களில் எல்லாம் புது Tap வைத்திருக்கிறோம். ஆனால் விரும்பி வீட்டிற்குள்ளேயே தண்ணீர் பிடிக்க வேண்டும் என்பவர்கள் ஒரு நாளைக்கு ஒரு ரூபாய் தரக்கூடாதா? அதுகூட நியாயம் இல்லையா என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அப்பாவு, முறையாக நடந்துகொள்ள வேண்டும்.

**திரு. க. மணிவர்மா:** ஒரு நாளைக்கு ஒரு ரூபாய் கொடுப்பது கிராமங்களிலே ரொம்ப கஷ்டம்; ரொம்ப சிரமமான வேலை அது. எல்லா ஊராட்சித் தலைவர்களுக்கும் தெரியும். நிச்சயமாக எல்லா ஊராட்சித் தலைவர்களும் அதைக் கடுமையாக எதிர்க்கிறார்கள். அவர்களால் வசூல் பண்ண முடியவில்லை.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரை எந்த ஊராட்சி மன்றத் தலைவரும் எதிர்ப்புத் தெரிவித்து எனக்கு எந்தத் தகவலும் தெரிவிக்கவில்லை.

**திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சித் தலைவர்கள் கொடுத்திருக்கின்ற மனுக்களை மாண்புமிகு அமைச்சருக்குத் தெரிவிக்கிறேன். மாண்புமிகு அமைச்சருக்கும் நான் கடிதம் எழுதச் சொல்கிறேன் என்று இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். மாதாந்திர தொகை 15 ரூபாயாகவும், முன் வைப்புத் தொகை 500 ஆகவும் குறைக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தின் மூலம் நடைபெறுகின்ற பணிகளுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் ஒப்புதல் அளித்தால் போதும் என்ற நிலை இப்போது இருக்கிறது. சட்டமன்ற உறுப்பினர்களும் பரிந்துரை செய்ய வேண்டும்; ஒப்புதல் அளிக்க வேண்டும் என்ற நிலையை அரசு சிபாரிசு மூலம், பெற்றுத்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயிகளுடைய துணைத் தொழிலாக இருக்கின்ற பால் உற்பத்தியில் கடந்த 2, 3 மாதங்களாக எங்களுடைய மாவட்டத்திலே கடுமையான பிரச்சினை; ஒரு மாதத்திற்கு முன்பாக பால் கொள்முதலை "வாரத்திற்கு 2 நாள் தேவையில்லை; நிறுத்து" என்று சொல்லி பால்



கொள்முதலே செய்யாமல் இருந்தார்கள். அந்த நிலை எதற்காக வந்தது என்று கேட்கின்றபோது ஆந்திராவிலிருந்து அதிகமான பால் வருவதால் தமிழகத்திலே இருக்கின்ற பாலை நாம் கொள்முதல் செய்ய முடியவில்லை என்ற நிலையைப் பால் உற்பத்தியாளர்கள் எங்களிடத்திலே எடுத்துச் சொன்னார்கள். ஆக வெளி மாநிலங்களிலிருந்து வருகின்ற பாலைத் தடுத்து நிறுத்த வேண்டும். தமிழகத்திலே விவசாயிகளுடைய துணைத் தொழிலாக இருக்கின்ற பாலுக்கு லிட்டர் ஒன்றுக்கு ரூ.8 முதல் 8.50 வரை இப்போது கொடுக்கின்றார்கள். சாதாரணமாக மினரல் வாட்டர்கூட 12 லிருந்து 15 ரூபாய் வரை விற்பனை ஆகின்றது. ஆகவே பாலுக்கு ஒரு லிட்டருக்கு 12 ரூபாயாகக் கொள்முதல் விலையை நிர்ணயம் செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும், மாண்புமிகு முதல்வர் அவர்களை கடந்த 4, 5 ஆண்டுகளாக இந்த மாமன்றத்திலே மற்றும் பல்வேறு கூட்டங்களிலே, "என்னுடைய தொகுதி மிகவும் பின்தங்கிய தொகுதி. என்னுடைய தொகுதியிலே இருக்கின்ற மக்கள் தாலுக்கா அலுவலகம் செல்ல வேண்டுமென்றால் பலர் 3 பேருந்துகள் மாறி 70 கிலோமீட்டர் செல்லுகின்ற நிலையிலே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்"என்று எடுத்துச் சொல்லியும் இந்த நிதி நிலை அறிக்கையிலேயும் தாலுகா பிரிப்பு இல்லை என்று கூறியுள்ள நிலையைப் பார்க்கின்றபோது எனக்கு மிகவும் வருத்தமாக இருக்கிறது. செங்கம் வட்டத்தை இரண்டாகப் பிரித்து தண்டராம்பட்டைத் தலைமையிடமாகக் கொண்ட புதிய வட்டத்தை உருவாக்க வேண்டும். செலவுத் தொகை அதிகமாக இருந்தால் சட்டமன்ற உறுப்பினருக்கு ஒதுக்கப்படுகின்ற தொகையை - இப்போது 50 இலட்சம் கொடுத்து இருக்கிறீர்கள் - 60 இலட்சம் ஆக்குவீர்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது. அந்த 60 இலட்சத்தை அந்த தாலுகா அலுவலகம் தொடங்குவதற்கு நீங்கள் எடுத்து, தண்டராம்பபட்டைத் தனித் தாலுக்காவாக நீங்கள் அமைத்துத் தரவேண்டுமென்று இந்த நேரத்திலே அன்போடு நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 1-30

அடுத்தபடியாக, சாத்தனூர்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரேயொரு நிமிடம்தான்.

**திரு. க. மணிவர்மா:** தலைவர் அவர்களே, ஒரேயொரு நிமிடத்தில் பேச்சை முடித்துவிடுகிறேன். சாத்தனூர் அணையைத் தாங்கி நிற்கின்ற

சாத்தனூர் கிராம மக்கள் மிகுந்த குடிதண்ணீர் பஞ்சத்திலே கஷ்டப்படுகிறார்கள். 2, 3 கிலோமீட்டர் சென்றுதான் குடிதண்ணீர் பெறுகின்ற நிலைமை இருக்கிறது. சாத்தனூரையும் அதைச் சுற்றியுள்ள கிராமங்களுக்கும் சேர்ந்தாற்போல் சாத்தனூர் கூட்டுக்குடிநீர்த் திட்டத்தை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றியத்தை இரண்டாகப் பிரித்து தச்சம்பட்டைத் தலைமையிடமாகக் கொண்ட புதிய ஊராட்சி ஒன்றியம் தொடங்க வேண்டும்.

விருதுவிளங்கினான் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைத் தொடங்கித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தண்டராம்பட்டு ஊராட்சி ஒன்றியத்தை இரண்டாகப் பிரித்து, தாணிப்பாடி ஊராட்சியைத் தனி ஊராட்சியாக அறிவிக்க வேண்டுமென்று கேட்டு நன்றி கூறி விடைபெறுகின்றேன். நன்றி.

## 5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—தொடர்ச்சி

### (இ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து அரசினர் சட்டமுன்வடிவுகளை ஆய்வு செய்தல். 2000 ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 3/2000), மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2000 ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்டமுன்வடிவு எண் 3/2000) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

---

@ 29-3-2000 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை. பிரிவு 2 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

[திரு. ஆலடி அருணா] [2000 மார்ச் 30

"2000 ஆண்டு பொது விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 3/2000) நிறைவேற்றப் பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

**(ஈ) தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து 2000 ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 1/2000), மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2000 ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 1/2000) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவை நான் எதிர்க்கிறேன். காரண நோக்க விளக்கத்திலே "இந்த ஊராட்சிகளுக்கு யாரும் மனு போடுவதற்கு முன்வரவில்லை. ஆகவே, தேர்தல் நடத்தமுடியவில்லை. ஆகவே, இந்தத் தனி அதிகாரிகள் நியமிக்கப்படுகிறார்கள்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. நான் விசாரித்த அளவிற்கு, இந்த ஊராட்சிகள் தலித் மக்களுக்காக ஒதுக்கப்பட்ட பகுதி என்று தெரிகிறது. இந்த மாமன்றத்திலே இருக்கிற அனைவருக்கும் நன்றாகத் தெரியும். ஏற்கெனவே, மதுரை மாவட்டத்திலே, மேலூருக்கு அருகே, மேலவளவு என்ற இடத்திலே மேல் ஜாதிக்காரர்கள்,

@ 28-3-2000 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.



2000 மார்ச் 30] [திரு. ஜே. ஹேமச்சந்திரன்]

தாழ்த்தப்பட்ட தலித் மக்கள் பஞ்சாயத்துக்களிலே பொறுப்புக்கு வரக்கூடாது என்ற முறையில் அவர்கள் இப்படி மனுக்கள் போடுவதற்குக்கூட அனுமதிக்கப்படாமல் தடுத்து நிறுத்தப்பட்டதையொட்டி தகராறுகள் ஏற்பட்டன. இந்த முறையில் தலித் மக்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிற பஞ்சாயத்துகளிலே தலித்துகள் உறுப்பினர்களாக வருவது என்பதை மேல் ஜாதிக்காரர்களால் ஆட்சேபகரமானதாகக் கருதப்படுவதால் அவர்களை மனுக்கள் போடுவதற்குக்கூட, ஜனநாயகபூர்வமாகத் தேர்தலிலே கலந்துகொண்டு அவர்களுடைய ஜனநாயக உரிமைகளை நிறைவேற்றுவதற்குக்கூட அனுமதிக்கப்படாமல் தடுத்து நிறுத்தப்படுகிற நிகழ்ச்சிகள் இந்தத் தமிழ் நாட்டினுடைய பல பகுதிகளில் நடப்பதாகத் தெரிகிறது. இதனை, அங்கே யாரும் நாமினேஷன் போடுவதற்கு வரவில்லை என்ற காரணத்தைச் சொல்லி தனி அலுவலர் பதவிகளை இப்போது நீட்டிப்பது என்பது செப்டம்பர் மாதம் 2001 வரை; என்னுடைய தாழ்மையான வேண்டுகோள் என்னவென்றால், 3 மாத காலத்திற்கு வேண்டுமானால் தனி அதிகாரியை வைக்கட்டும். அதற்குள்ளே—இந்தத் தேர்தலைப் பொறுத்த அளவிலேகூட இந்திய நாடே ஏற்றுக்கொண்டிருக்கிற ஒரு கொள்கை சுயேட்சைகளே வரக்கூடாது என்பதுதான். இதைக் கட்சிகளுடைய ஆட்சி என்ற முறையிலே develop செய்ய வேண்டும். அமைச்சர் அவர்களோ அல்லது அரசோ அரசியல் கட்சிகளுடைய பிரதிநிதிகளைக் கூட்டிவைத்து மதுரை மாவட்டத்தில் இருக்கிற அல்லது அந்தப் பகுதியில் இருக்கிற அரசியல் கட்சிகளுடைய பிரதிநிதிகளைக் கூட்டி வைத்து ஜனநாயகபூர்வமாக தலித் மக்கள் இந்த உரிமைகளை அனுபவிக்கக்கூடிய முறையிலே ஒரு நிலையை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கமுடியும். அப்படி இந்த அரசியல் கட்சிகளுக்குள்ளேயே ஒரு understanding-லே இந்தத் தேர்தல்களிலே கலந்துகொள்வதற்கு ஆட்களை உருவாக்குவதற்கு நம்மால் முடியும். அந்த முறையிலே ஒரு நிலையை எடுக்காமல், எடுத்த எடுப்பிலேயே 2001 செப்டம்பர் வரை நீட்டிப்பு கொடுப்பதென்பது சரி என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கருதவில்லை. ஆகவே, எங்களுடைய தாழ்மையான வேண்டுகோள் அரசு அதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்பதுதான். ஜனநாயகபூர்வமான உரிமைகளை தலித் மக்கள் அனுபவித்துக்கொள்வதற்கான வாய்ப்பு ஏற்படக்கூடிய முறையிலே நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமேயல்லாமல் தனி அதிகாரிகளே ஆட்சி நடத்திக்கொள்ளட்டும் என்ற முறையிலே இந்த மாதிரி இடங்களிலே விட்டுக்கொடுப்பதென்பது நியாயம் அல்ல; சரியல்ல; சமூக நீதிக்கு அது உகந்ததல்ல என்று தெரிவித்து நான் இந்தச் சட்டத்தை ஆட்சேபிக்கிறேன்.

[2000 மார்ச் 30

பிற்பகல் 1-35

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய உறுப்பினர் திரு. ஹேமச்சந்திரன் அவர்களுடைய கருத்தை நூற்றுக்கு நூறு அப்படியே நான் ஒப்புக்கொள்கிறேன். ஆதரிக்கிறேன். ஆனால் ஒன்றை மறந்துவிடக்கூடாது. 12,000-க்கும் மேற்பட்ட ஊராட்சி ஒன்றியங்கள் இருக்கின்ற தமிழகத்தில் இரண்டே இரண்டு இடங்களில் -- பாப்பாபட்டி, கீரிப்பட்டி என்கின்ற இரண்டு இடங்களில் — இந்தச் சூழ்நிலை இருக்கின்றது. இவை இரண்டு இடம்தானே என்று எண்ணினாலும்கூட, ஒரு குடம் பாலில் ஒரு துளி விஷம்தான் என்பதைப் போலத்தான் இந்த இரண்டு இடங்களில் இந்தச் சூழ்நிலை இருக்கிறது என்பதை நான் மறக்கவில்லை; மறுக்கவும் இல்லை. இருந்தாலும்கூட, ஆதிதிராவிட மக்கள் யாருமே வேட்பு மனு தாக்கல் செய்யக்கூட செல்லாமல் இருப்பதுதான் எனக்கும் விந்தையாகத் தோன்றுகின்றது. ஓராண்டு காலத்திற்கு அதிகாரி என்று அதிலே குறிப்பிட்டிருந்தாலும்கூட, திரு. ஹேமச்சந்திரன் அவர்கள் சொன்னதைப்போல 3 மாத காலத்திற்குள்ளாக அந்த அளவை நாம் சுருக்கலாம். ஆனால் அந்தக் காலத்தை இப்போது குறிப்பிடத் தேவையில்லை. ஓராண்டு காலம் என்றே இருக்கட்டும். அவர் குறிப்பிடுகிற யோசனையைப் போல் நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அல்லது அந்தப் பகுதியிலே உள்ள அமைச்சர்கள், அங்குள்ள கட்சி, எல்லாக் கட்சி நண்பர்களையும், பிரதிநிதிகளையும் அழைத்து, அவர்களிடத்திலே பேசி, ஒரு சுமூகமான சூழ்நிலையை அங்கே உருவாக்கி, அங்கே தாழ்த்தப்பட்ட மக்களும் ஆதிதிராவிட மக்களும் வேட்பு மனு செய்வதற்கான வசதி வாய்ப்பை உருவாக்குவதற்கு 3 மாத காலமோ, 4 மாத காலமோ ஆகக்கூடும். அதற்குள்ளாக ஒரு நல்ல சூழ்நிலையை உருவாக்கலாம் என்பதை எடுத்துக்கூறி அதை இப்பொழுது ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. ஹேமச்சந்திரன் சொன்னதை நான் முழுமையாக ஏற்றுக்கொள்கிறேன். காரணம் ஒரு வருடம் என்று சொன்னால், தேர்தலே அப்போது வந்துவிடும்; ஒரு வருடம் தான் இன்னும் இருக்கும் பஞ்சாயத்துகளுக்கு. அதனாலே 3



2000 மார்ச் 30]

மாதம் என்று அவர் சொல்வது முழுக்க, முழுக்க சரியானது. அதை அந்த மாதிரி திருத்தி அமைக்குமாறு நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, இப்போது திருத்தத் தேவையில்லை. நானே 3 மாத கால அவகாசத்திற்குள்ளாக முடிவு செய்து அதற்கு ஒரு வழி பிறக்கச் செய்யலாம் என்பதுதான் என்னுடைய கருத்து.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 3 மாதம் கழித்ததற்குப் பின்னர் ஒரு பிரச்சினை என்னவென்றால் மீண்டும் யாரும் வேட்பு மனு தாக்கல் செய்யமுடியாத ஒரு சூழ்நிலையை அங்கே நிர்பந்தமாக ஏற்படுத்திவிடுவார்களேயானால் தொடர்ந்து அதை நீட்டிக்க வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டுவிடும். ஆனால் இப்போது அரசுக்கு முன்னர் இருக்கிற மிகமுக்கியமான பிரச்சினை வெறும் தனி அதிகாரிகளின் காலத்தை நீட்டிப்பது மட்டுமல்லாமல் அங்கு சமூகத்தில் மனித மனதை பண்படுத்துவதற்குரிய சில வேலைகளையும் எல்லாத் தரப்பினரையும் இணைத்து 3 மாதங்கள் கழித்தாவது தேர்தல்கள் நடைபெறுவதற்குரிய உத்தரவாதத்தை, வேட்பு மனு தாக்கல் செய்வதற்கான உத்தரவாதத்தை ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை நான் அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, அதில் திரு. ஹேமச்சந்திரன் அவர்கள் பேசும்போது அதைத்தான் நான் குறிப்பிட்டேன். அதற்கான நடவடிக்கையை நிச்சயமாக அரசு எடுக்கும். அந்தச் சூழ்நிலையை உருவாக்க என்னால் முடிந்த எல்லா முயற்சிகளையும் மேற்கொள்வேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

[பேரவைத் தலைவர்] [2000 மார்ச் 30

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவு 2 திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2000 ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 1/2000) நிறைவேற்றப் பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.



2000 மார்ச் 30]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

பிற்பகல் 1-40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (31-3-2000) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-41 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்.

122. 6-3-1996 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்ட உள்துறையின் SROA-36/96 ஆம் எண் அறிவிக்கையில் திருத்தம் செய்தது குறித்தும் மற்றும் 1957 ஆம் ஆண்டு தமிழ்நாடு திரைப்படங்கள் (ஒழுங்குமுறை) விதிகளில் திருத்தம் செய்தது குறித்தும் உள் துறையின் 15-12-1999 ஆம் நாளிட்ட 1654 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். [1955 ஆம் ஆண்டு தமிழ்நாடு திரைப்படங்கள் (ஒழுங்குமுறை) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 9/1955) 10 (3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

123. சென்னை, திருவாளர்கள் திரிவேணி டிம்பர் டெப்போ நிறுவனம், (Thiruvalargal Triveni Timber Depot) 1994-95 ஆம் ஆண்டில், அரசுத் துறைக்கு விற்பனை செய்த மர விற்பனை வகையில் 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் செலுத்த வேண்டிய எட்டு சதவீதத்திற்கும், நான்கு சதவீதத்திற்கும் இடையேயான

வேறுபாட்டு வரித் தொகையினை தள்ளுபடி செய்வது குறித்து வணிக வரிகள் துறையின் 30-11-1999 ஆம் நாளிட்ட 400 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.

124. தமிழ்நாடு மூலிகைப்பண்ணைகள் மற்றும் மூலிகை மருந்துக் கழகத்தின் பதினாறாவது ஆண்டறிக்கை (1998-99). [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்).

## ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

43. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று இருபத்து மூன்றாவது அறிக்கை, 1999-2000.

44. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று இருபத்து நான்காவது அறிக்கை, 1999-2000.

45. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று இருபத்து ஐந்தாவது அறிக்கை, 1999-2000.

46. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று இருபத்து ஆறாவது அறிக்கை, 1999-2000.

47. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று இருபத்து ஏழாவது அறிக்கை, 1999-2000.

222776

அரசு மைய அச்சகம், சென்னை - 600 079